# புரட்சிகர மக்களை ஆயுதபாணியாக்கலும் மக்கள் படையும்



## ஜெனரல் கியாப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெனரல் கியாப்

# புரட்சிகர மக்களை ஆயுதபாணியாக்கலும் மக்கள் படையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு: இல. 1
முதற் பதிப்பு 1985

தமிழீழ மக்களின் விடுதலைக்காக
அயராது போராடிய
தோழர் சந்ததியாருக்கு (வசந்தன்)
இந் நூல் சமர்ப்பணம்

வெளியீட்டாளர்கள்:
**ஆய்வகம்**
தமிழீழம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்பாளர் குறிப்பு

1975இல் அயல் மொழிப் பதிப்பகம் - ஹனோய் இனரால் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட

**"TO ARM THE REVOLUTIONARY MASSES TO BUILD THE PEOPLE'S ARMY"**

என்ற ஜெனரல் கியாப்பினுல் எழுதப்பட்ட நூலின் தமிழாக்கமே இந் நூல். தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் சரியான இராணுவ அமைப்பு ஒன்று கட்டவேண்டியதன் இன்றைய அவசிய தேவைக்கு உதவும் என்ற வகையில் எமது முதல் வெளியீடாக இந் நூலை வெளியிடுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்:

1) பாட்டாளி வர்க்கத்தின் இராணுவ அமைப்பு பற்றிய மார்க்சிய - லெனினிய ஆய்வுரைகள்.

2) ஆயுதப்படைகளைக் கட்டியமைப்பதில் நம் மக்களுக்குள்ள மரபும் அனுபவமும்.

3) புரட்சிகர மக்கள் திரளினரை ஆயுதபாணியாக்கியதிலும், மக்கள் சேனையை உருவாக்கியதிலும் நம் கட்சியும், மக்களும் ஆற்றிய ஆக்கபூர்வப் பணி.

4) புரட்சிகர மக்களை வலுவாகவும் விரிவாகவும் ஆயுதபாணியாக்குவதும், நவீன கிரம மக்கள் சேனையைக் கட்டியெழுப்புவதும் அவசியமாகும்.

5) அடிக்குறிப்புகள்.

6) கலைச்சொற்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரம் மிக்க வியட்நாம் மக்கள் அந்நிய ஆக்கிரமிப்பை எதிர்த்து போராடிய தீரமிக்க வரலாறு கொண்டவர்கள். அவர்கள் பல நூற்றுண்டுகளுக்கு முன்பே தங்களை விடப் பெரிய வலிமையான ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து நாடு தழுவிய எழுச்சியையும், மக்கள் யுத்தத்தையும் நடத்திய செழுமையான அனுபவத்தைப் பெற்றிருந்தார்கள்.

வியட்நாமிய பாட்டாளி வர்க்கம் உருவான பின்னர், நம் கட்சியின் தலைமையில், சுதந்திரம், ஜனநாயகம், சோஷலிசம் ஆகிய புரட்சிகர இலக்குகளுக்காக, நமது நாட்டின் அந்நிய ஆக்கிரமிப்பை எதிர்த்த செழுமைமிக்க பாரம்பரியத்தை மேலும் வளர்த்தெடுத்து தேசந்தழுவிய எழுச்சியையும், மக்கள் யுத்தத்தையும், மிக உயர்ந்த மட்டத்திற்கு வளர்த்தெடுத்தார்கள். ஜப்பானிய பாசிஸ்டுகளையும், பிரெஞ்சு காலனியவாதிகளையும் அவர்கள் முறியடித்தார்கள். அமெரிக்க ஏகாதிபத்தியத்தை முறியடித்தார்கள்; முறியடித்துக் கொண்டிருக்கின்றார்கள். தங்கள் நாட்டின் வரலாற்றை சிறப்புமிக்க பக்கங்களால் நிரப்பிக் கொண்டுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளார்கள். இந்தோசீனு, தென் கிழக்காசியா மற்றும் உலக மக்களின் புரட்சிக்கான தனது பங்களிப்பை தந்து கொண்டிருக்கின்றது.

ஏகாதிபத்தியம் மற்றும் காலனியாதிக்கத்தை எதிர்த்த, இருபதாம் நூற்றுண்டின் காட்டுமிராண்டித்தனமான ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்த வியட்நாம் தனது வெற்றிகரமான போராட்டத்தின் மூலமாக, முறியடிக்க முடியாத போர்க்குணத்திற்கும், ஆக்கபூர்வமான அறிவிற்கும், இராணுவ வலிமைக்கும், மக்கள் யுத்த முறையின் மேன்மைக்கும் அடையாளமாக விளங்குகின்றது. இருபதாம் நூற்றுண்டின் மிகச் சிறந்த அம்சமாக வியட்நாமிய மக்கள் யுத்தம் விளங்குகின்றது. வியட்நாம் மக்கள் பின்வரும் ஒளிரும் உண்மையை உலக மக்களுக்குப் புலப்படுத்துகிருர்கள். அதாவது ஒரு சிறிய, பரந்த பரப்பில்லாத, மக்கள் தொகை அதிகமில்லாத, பொருளாதார வலிமை இல்லாத நாடு திடமனதுடன் ஒன்றுபட்டு, சரியான புரட்சிகர மார்க்கத்தைக் கொண்டு, நாடு தழுவிய ஆயுத எழுச்சி மற்றும் மக்கள் யுத்தம் பற்றிய மார்க்சிய-லெனினிய கோட்பாட்டை தங்கள் நாட்டுக்குரிய வகையில் பிரயோகித்து, முற்போக்கான மனித இனம் மற்றும் சகோதர சோஷலிச நாடுகளின் ஒத்துழைப்பு ஆகியவற்றுடன் முதன்மையான ஏகாதிபத்திய அரசான அமெரிக்கா உள்ளிட்ட வலுமிக்க ஆக்கிரமிப்பாளர்களை முறியடிக்க முடியும்.

வியட்நாம் நாட்டுக்குரிய புரட்சிக்கும், புரட்சிப் போருக்குமான சரியான மற்றும் ஆக்கபூர்வமான மார்க்கத்தை நமது கட்சியானது வகுத்தெடுக்க, நமது சமூக வளர்ச்சியின் விதிகளையும், நமது நாட்டின் புரட்சிப் போரின் வளர்ச்சி விதிகளையும், புரட்சிகர வன்முறையின் வளர்ச்சி விதிகளையும் கண்டறிந்து அவற்றைக் கற்றுத் தேர்ந்து புரட்சிகர வன்முறை என்ற விதியின் சாரம்: அரசியல் சக்திகளை ஆயுதப் படைகளுடன் இணைப்பதும், அரசியல் போராட்டங்களை ஆயுதப் போராட்டங்களுடன் இணைப்பதும், ஆயுத எழுச்சியை புரட்சிப் போருடன் இணைப்பது மாகும்.



நாடு தழுவிய ஆயுத எழுச்சியையும், மக்கள் யுத்தத்தையும் வழிநடத்திச் செல்கையில் நம் கட்சி, பாட்டாளி வர்க்கத் தலைமையில் பாட்டாளி-விவசாயி கூட்டின் அடிப்படையிலமைந்த ஒரு தேசிய ஐக்கிய முன்னணியை அமைத்துள்ளது. நம் கட்சி பரந்துபட்ட மக்களின் அரசியல் சக்திகளை ஒழுங்கமைத்துள்ளது; மக்களின் வலிமையான ஆயுதப்படைகளைக் கட்டியுள்ளது. இவற்றுள் புரட்சிச் சேனை, பரந்துபட்ட மக்களின் ஆயுதப் படை இரண்டும் அடங்கும். எதிரியை முறியடிக்கவும், அதிகாரத்தைக் கைப்பற்றிப் பாதுகாக்கவும், காலனியாதிக்கத்தையும் அதன் அடிவருடிகளையும் தூக்கியெறியவும், ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புப் போரை முறியடிக்கவும், நமது மக்கள் ஆக்கபூர்வமான அனைத்துப் போராட்ட வடிவங்களையும் கையாண்டார்கள்; தாக்குதல்களையும், எழுச்சிகளையும் இணைத்தார்கள்; மலைப்பகுதி, சமவெளிப் பகுதி, நகரப் பகுதி ஆகிய மூன்று விதமான யுத்த முக்கியத்துவம் வாய்ந்த கேந்திரங்களிலும் போர்த் தந்திர ரீதியான தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

இந்தக் கட்டுரை, நம் நாட்டில், எழுச்சிக்கும் புரட்சிப் போருக்கும் பயன்படக்கூடிய, மக்களின் ஆயுதப் படைகளைக் கட்டுவது எப்படி என்பதை விளக்குகின்றது. இது நமது கட்சியின் இராணுவ மார்க்கத்தின் முக்கியமான அம்சமாகும்.

நம் கட்சியின் தலைமையில் நடத்தப்பெற்ற தேசந் தழுவிய எழுச்சி, மக்கள் யுத்தம், அனைத்து மக்களும்

பங்குபெறும் வகையில் கட்டப்பட்ட தேசப் பாதுகாப்பு ஆகியவற்றினூடே மக்களின் ஆயுதப் படைகள் தோன்றின; வேகமாக முதிர்ச்சியடைந்தன; பல வெற்றிகளைப் பெற்றன. எதிரியை முறியடித்து நாட்டைப் பாதுகாக்க ஒவ்வொரு வியட்நாமிய தேசபக்தனும் எழுந்தான். 'ஒவ்வொரு குடிமகனும் போராளியாவது' என்ற நம் பழம் மரபு புதிய வடிவம் பெற்றது. மக்கள் சேனையும் நாடெங்கிலும் போராடும் மக்களின் ஆயுதம் தாங்கிய படைகளும் கட்டப்பட்டன. தற்போது மக்களின் ஆயுதம் தாங்கிய அமைப்புகளில் இலட்சக் கணக்கான போராளிகள் இருக்கின்றனர்கள்; பல்லாயிரக் கணக்கானோர் மக்கள் சேனையில் இருக்கின்றனர்கள்; பின் தங்கிய, நவீனமான, அரைகுறை நவீனமான பல்வேறு விதமான ஆயுதங்களை அவர்கள் ஏந்தி நிற்கின்றனர்கள்; துணிவான, நல்லறிவு கொண்ட, திறமையான போராளிகள் இரவும் பகலும் தன்னலமின்றி சுதந்திரத்துக்காய் போராடுகின்றனர்கள்; நாட்டை ஒன்றுபடுத்தவும், சுதந்திரத்திற்காகவும், ஜனநாயகத்திற்காகவும், சோஷலிசத்திற்காகவும் நம் காலத்திய முதன்மையான ஏகாதிபத்தியமான அமெரிக்க ஏகாதிபத்தியத்தை முறியடிக்க அவர்கள் உறுதி பூண்டிருக்கின்றனர்கள்.

ஜப்பானிய பாசிஸ்டுகள், பிரெஞ்சு காலனிய வாதிகள், அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் ஆகியோருக்கெதிரான போராட்டத்தில், பொதுவாக நம் மக்களும் குறிப்பாக மக்களின் ஆயுதமேந்திய படைகளும் அடைந்துள்ள வேகமான வளர்ச்சியையும் புகழ்மிக்க வெற்றிகளால் தூவப்பட்டுள்ள பாதையையும் ஆராய்கையில், **தேசந் தழுவிய எழுச்சியையும் மக்கள் யுத்தத்தையும் நடத்தும் சக்திகள் (இவற்றுள் அரசியல் படைகள், ஆயுதப் படைகள் இரண்டும் அடங்கும்) புரட்சிகர மக்கள் சக்திகளை, புரட்சிகர வன்முறைச் சக்திகளை ஒன்றிணைத்து ஒழுங்கமைப்பதில் நமது கட்சி அடைந்த வெற்றியின் அடையாளங்களே என்று நம்மால் கூற முடியும்.**

**நமது கட்சியால் ஒழுங்கமைக்கப்பட்டு வழிநடத்தப்படும் நமது மக்களின் ஆயுதப் படைகளும், புரட்சிச் சேனையும், நமது மக்களின் இராணுவப் படைகளை ஒழுங்கமைப்பதில் நமது கட்சி அடைந்துள்ள வெற்றியின் அடையாளமே என்றும் நம்மால் கூறமுடியும். நம் காலத்தில் மூன்று ஏகாதிபத்தியச் சக்திகளை ஒன்றுக்குப் பின் ஒன்றாகத் தோற்கடித்துள்ள சிறிய நாட்டினரே எமது மக்கள்.**

இவ் வெற்றி கைகூடியதற்கான காரணங்கள்:- ஆயுத எழுச்சிக்கும் புரட்சிப் போருக்கும் வேண்டிய, இராணுவ அமைப்புப் பற்றிய மார்க்சிய-லெனினிய தத்துவம் முழுவதையும் நம் கட்சி கற்றுத் தேர்ந்துள்ளது; முன்னைய கால கட்டங்களில் நடந்தேறிய மக்களின் தேசந் தழுவிய எதிர்ப்புப் போராட்ட மரபையும் தேசிய எழுச்சிகளிலும் தேசியப் போர்களிலும் ஆயுதப் படைகளைக் கட்டியமைப்பதில் அவர்கள் பெற்றிருந்த அனுபவத்தையும் சுவீகரித்து அவற்றை புதியதொரு மட்டத்திற்கு கொண்டு வந்துள்ளது; உலக மக்களின் அனுபவங்களில் இருந்து தனக்கு வேண்டியதைக் கற்றுக் கொண்டுள்ளது; இத்தகைய தத்துவத்தையும் நடைமுறையையும் நமது நாட்டின் எழுச்சிக்கும் போருக்கும் ஆக்கபூர்வமாகப் பிரயோகித்துள்ளது; அதாவது, நமது கட்சியால் வகுக்கப் பட்டுள்ள புரட்சி இலக்குகளை சாதிக்கும் பொருட்டு ஏகாதிபத்தியத்தினதும், காலனியாதிக்கத்தினதும் வலுமிக்க ஆக்கிரமிப்புச் சக்திகளை ஒரு சிறிய நாடு எதிர்கொள்கின்ற நிலைமைகளுக்குப் பொருந்திய வகையில் அவற்றை ஆக்கபூர்வமாகப் பிரயோகித்துள்ளது.

புரட்சிகர வன்முறையையும் மக்கள் யுத்தத்தையும் மேற்கொள்ளும் எமது கட்சியின் நிலைப்பாடுகள்: **ஆயுத**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேந்திய எழுச்சியிலும் புரட்சிகர யுத்தத்திலும் அதே போல மக்களனைவரும் பங்கு கொள்ளும் தேசியப் பாதுகாப்பிலும், தேசிய விடுதலைப் போரிலும் அதே போல் தாய்நாட்டைக் காப்பதற்கான போரிலும் ஒரு வல்லமிக்க மக்கள் சேனையைக் கட்டும் போதே, பரந்துபட்ட மக்கள் திரளினரையும் ஆயுத பாணிகளாக்கவும் வேண்டும்; மக்களின் ஆயுதப் படைகளை மக்கள் சேனையின் அத்திவாரமாகக் கருத வேண்டும்; மக்கள் சேனையை, மக்கள் படையின் மையக்கூறாகக் கருத வேண்டும்.**

வரலாற்றின் திட்டவட்டமான வளர்ச்சியைக் கவனித்து, நமது கட்சியானது புரட்சிப் போராட்டத்தின் பல்வேறு காலகட்டங்களிலும் மக்களை ஆயுதபாணிகளாக்குதல், மக்கள் சேனையைக் கட்டுதல் என்ற பிரச்சினையை வெற்றிகரமாகத் தீர்த்துள்ளது. நிறைவேற்றப்பட வேண்டிய புரட்சிகரக் கடமைகள், எதிர்த்துப் போராட வேண்டிய எதிரியின் தன்மை, அரசியல் சமூக பொருளாதாரத் துறைகளில் நிலவும் திட்டவட்டமான வரலாற்று நிலைமைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு காலகட்டத்திலும் மேற்கொள்ளப்பட வேண்டிய புரட்சிப் போராட்ட வடிவங்கள் என்பவற்றிற்கு ஏற்பவே மேற்காணும் தீர்வு அமைந்திருந்தது.

தற்போது நிக்சன் நிர்வாகம் கடுந் தோல்விகளைச் சந்தித்த போதிலும், 'போரை வியட்நாமியர் மயமாக்குதல்' என்ற யுத்த தந்திரத்தை விடாப்பிடியாகப் பிரயோகிக்கின்றது. இந்தோசீனு முழுவதும் போரைக் கடுமையாக்கி விரிவாக்குகிறது.

தென் வியட்நாமில் உள்ள நமது மக்கள் புதிய காலகட்டத்தின் புரட்சிப் போர் விதியைக் கற்றுத் தேர்ந்து, ஆயுதப் போராட்டங்களையும், அரசியல் போராட்டத்தையும் ஆழப்படுத்துகின்றுர்கள்; மலைப் பகுதி, சமவெளிப் பகுதி, நகர்ப் பகுதி ஆகிய மூன்று பகுதிகளிலும் எழுச்சிகளையும் தாக்குதல்களையும் இணைத்து நடத்துகின்றுர்கள்; சகோதர நாடுகளான கம்போடியா, லாவோஸ் மக்களுடன் இணைந்து போராடுகிறுர்கள். 'போரை வியட்நாமிய மயமாக்கும்' திட்டத்தை முடியடிக்க உறுதி பூண்டுள்ளார்கள்; இந்தோசீனப் போர்க்களம் முழுவதிலும் நிக்சனின் திட்டத்தை முறியடிக்க உறுதி பூண்டுள்ளார்கள். முன் எப்போதைக் காட்டிலும் இப்போது நாம் 'அரசியல் படைகளை வளர்த்து அரசியல் போராட்டத்தினை முன்னெடுக்கும்போது, ஆயுதப் படைகளைக் கட்டுவதையும் ஆயுதப் போராட்டத்தை நடத்துவதையும் துரிதப்படுத்த வேண்டும். ஆயுதப் போராட்டத்தை மற்றப் போராட்ட வடிவங்களுடன் இணைக்க வேண்டும். அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும், அதன் அடிவருடிகளையும் முற்றுக முறியடிக்க முன்னேறிச் செல்ல வேண்டும்; தென் வியட்நாமை விடுவித்து, வட வியட்நாமைப் பாதுகாத்து, தேசத்தை ஒன்றுபடுத்துவதை நோக்கி முன்னேறி நமது சர்வதேசக் கடமையை நிறைவேற்ற வேண்டும்.

நமது புரட்சியின் இந்த அடிப்படைக் கடமையைப் பூர்த்தி செய்வதற்கான போராட்டத்தின் போதே நீண்ட காலத்துக்கான ஆயுதந் தாங்கிய படைகளைக் கட்டவும் அனைத்து மக்களும் பங்கு பெறுகின்ற தேசப் பாதுகாப்பிற்கு அத்திவாரமிடவும் திட்டத்தை வகுத்துக் கொள்ளவும் வேண்டும். அப்போது தான் எமது மக்களின் அழகான நிலத்தை ஆக்கிரமிக்கவும், நமது சுதந்திரத்தைப் பறிக்கவும் எந்த வலிமையான எதிரி முயன்றுலும் முறியடிக்க முடியும்.

நமது மக்களின் மேற்கூறிய உடனடிக் கடமைகளையும் நீண்ட காலக் கடமைகளையும் நிறைவேற்ற புரட்சிகர மக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை ஆயுதபாணிகளாக்கவும், மக்கள் சேனையைக் கட்டவும் உகந்த சிறந்த வழியைக் கண்டறிய வேண்டும்.

அதைச் சாதிக்க பாட்டாளி வர்க்க இராணுவ அமைப்பு பற்றிய மார்க்சிய-லெனினிய கோட்பாடுகளை நாம் தொடர்ந்து கற்க வேண்டும்; கடந்த காலத்தில் ஆயுதப் படைகளைக் கட்டுவதில் நமது மக்கள் பெற்ற அனுபவத்தை ஆய்வு செய்ய வேண்டும்; அவையெல்லாவற்றையும் விட, குறிப்பாக சேனையைக் கட்டுவதிலும், மக்களை ஆயுதபாணியாக்குவதிலும் நமது கட்சி கடந்த நாற்பதாண்டு காலமாகப் பெற்றுள்ள அனுபவத்தைப் படிப்படியாகத் தொகுத்துக் கொள்ள வேண்டும்.

வன்முறைக் கொள்கைகளையும், குரூரமான போரையும் அமெரிக்காவைத் தலைவனாகக் கொண்டுள்ள ஏகாதிபத்தியங்கள் செய்து வருகின்ற காலகட்டத்தில், நவீன ஆயுதங்களும், நவீனப் போர் முறைகளும் உலகில் இடையறுது வளர்ந்து வருகின்ற காலகட்டத்தில், தேசிய சுதந்திரம், ஜனநாயகம், சோஷலிசம் ஆகியவற்றுக்காகப் போராடி வருகின்ற பல்வேறு மக்களைப் பொறுத்தவரை, மக்களை ஆயுதபாணியாக்குதல், மக்கள் சேனையைக் கட்டுதல் பற்றிய தத்துவமும் நடைமுறையும் மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

○



# பாட்டாளி வர்க்கத்தின் இராணுவ அமைப்பு பற்றிய மார்க்சிய – லெனினிய ஆய்வுரைகள்

மார்க்சிய-லெனினியம், வர்க்கப் போராட்டம் மற்றும் அரசு பற்றிய தத்துவத்துடன் ஒருங்கிணைந்த பிரச்சினையாக பாட்டாளி வர்க்கத்தின் இராணுவ அமைப்பு பற்றிய பிரச்சினையை ஆராய்கிறது.

புராதன பொதுவுடமை சமுதாயத்தின் அழிவிற்குப் பின் சமுதாயம் வர்க்கங்களாகப் பிளவுபடுகின்றது. சமுதாயத்தின் வரலாறு வர்க்கப் போராட்டத்தின் வரலாறுகின்றது. சமுதாயம் நாடுகளாக அமையப் பெற்றவுடன் நாடுகளை ஒடுக்குவதும் அடிமைப்படுத்துவதும் தொடங்கியது. இப்போது வர்க்கப் போராட்டங்கள் தேச விடுதலைப் போராட்டங்களாக மாறின. ஆண்டான்களும் அடிமைகளும், பண்ணையார்களும் கூலி விவசாயிகளும், நாடுகளை அடிமைப்படுத்துபவர்களும் அடிமைப்பட்டவர்களும், ஒன்றுக்கொன்று பகைமை கொண்ட சமுதாயப் பிரிவுகளும் பல்வேறு வடிவமான போராட்டங்களைச் சந்தித்தன. அவை பின்னர் ஆயுத மோதல்களாகவும், போராகவும் பரிணமித்தன. பன்னெடுங்காலமாக வர்க்க சமுதாயத்தில் எண்ணற்ற போர்கள் நடந்துள்ளன. கடந்த ஐயாயிரம் ஆண்டுகளில் ஏறத்தாழ 10,000 போர்கள் நடந்திருப்பதாக மதிப்பிடப்படுகிறது.

போர் நடத்துவதற்கு வேண்டிய மிக முக்கியமான கருவி சேனையாகும். சமுதாயம் பகை வர்க்கங்களாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிளவுபட்டவுடன் அரசு தோன்றுகின்றது. சேனை என்பது அரசின் சிறப்பான கருவியாகும்; ஒரு குறிப்பிட்ட வர்க்கம் தனது அரசியல் மார்க்கத்தை ஆயுதமேந்திய வன்முறை மூலமாக பிரயோகிப்பதற்கு பயன்படுத்தப்படும் கருவியாகும்.

அரசின் வர்க்கத் தன்மை, சேனையின் சமுதாயத் தன்மையையும் அதன் செயல்பாடுகளையும் தீர்மானிக்கிறது. சுரண்டுகிற அரசுகளின் சேனைகள் பின்வரும் அம்சங்களைக் கொண்டிருக்கும்: சுரண்டப்படுகின்ற உள்நாட்டைப் பொறுத்தவரை, பிற வர்க்கங்களைக் கீழ்ப்படுத்தி வைக்கும் ஆளும் வர்க்கங்களின் கட்டளைகளுக்கு அவை அடிபணிய நிர்ப்பந்திக்கும்; வெளி விவகாரங்களைப் பொறுத்தவரை, மற்றைய நாடுகளைப் பிடிக்கக் கூடியதாகவும், வெளியார் தாக்குதலில் இருந்து தற்காத்துக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கும்.

சுரண்டும் அரசுகளில் மூன்று விதமான அரசுகள் வரலாற்றில் தோன்றியுள்ளன. இந்த அரசுகளுக்குப் பொருத்தமான மூன்றுவித சேனைகளும் தோன்றியிருக்கின்றன. அடிமைச் சமுதாய அரசின் சேனை, நிலப்பிரபுத்துவ அரசின் சேனை, முதலாளிய அரசின் சேனை என்பன மூன்று விதமான சேனைகளாகும்.

வரலாற்றின் போக்கில் அச் சேனைகளுக்குப் பல்வேறு பெயர்கள் இடப்பட்டிருக்கின்றன. அவற்றின் அமைப்பு வடிவங்களும் ஆட்களைச் சேர்க்கும் முறைகளும் பல்வேறு சூழ்நிலைகளுக்கேற்ப பல்வேறு விதமாக இருந்திருக்கின்றன. ஆனல் அவற்றின் இயல்பு மட்டும் ஒன்றேயாகும்; அதாவது சுரண்டும் வர்க்க அரசின் சேனையானது ஆளும் வர்க்கத்தின் கருவியாகச் செயல்பட்டு மற்றைய வர்க்கங்களை ஒடுக்குவதும் மற்றைய நாடுகளைக் கொள்ளையடிப்பதும்,



அடிமைப்படுத்துவதுமாகும். இருந்த போதிலும் சுரண்டுவோரின் கீழ் ஒடுக்குவோரின் சேனைகள் மட்டுமே இருந்த தென்பதில்லை. ஆயுதந் தாங்கிய ஒடுக்குமுறையை எதிர்த்து ஒடுக்கப்பட்ட வர்க்கங்களும் தங்களுடைய புரட்சிப் படையை தங்களுடைய புரட்சிகரப் போராட்டங்களுக்காக கட்டியிருக்கின்றன. ரோம் நாட்டில் ஸ்பாட்டகஸ் தலைமையில் அடிமைகள் ஆயிரக்கணக்கில், படை அமைத்து அடிமைப்படுத்தும் அரசை எதிர்த்துப் போராடினர்கள். மார்க்ஸ், ஸ்பாட்டகஸை ''தொன்மைக்கால வரலாற்றில் காணப்படும் மிகச் சிறந்த மனிதன்; போர்த் தளபதி; சிறந்த பண்பாளன்; தொன்மைக் காலப் பாட்டாளி வர்க்கத்தின் மிகச்சிறந்த பிரதிநிதி''[1] என்று பாராட்டியுள்ளார்.

நிலப்பிரபுத்துவக் காலகட்டத்தில் ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் எழுச்சிகளின் போதும், விவசாயப் போரின் போதும், விடுதலைப் போரின் போதும் பல்வேறு நாடுகளில் விவசாயிகளின் படைகள் மிகப் பெரிய அளவிலும், மிகச் சிறந்த தாக்கும் திறனேடும் தோன்றியிருக்கின்றன. நிலப்பிரபுத்துவத்தை எதிர்த்து முதலாளியப் புரட்சி தோன்றி முதலாளியம் உருவாகும் காலத்திலும் விவசாயிகளின் படைகளும், தொழிலாளர்களின் படைகளும் முதலாளிகளின் தலைமையில் தோன்றியிருக்கின்றன.

இருந்த போதிலும் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் ஆயுதப் படைகள் மிகச் சிறந்த வெற்றிகளை ஒரு சில போது ஈட்டியிருந்த போதிலும் அவற்றின் வரலாற்று ரீதியான வரம்புகளாலும், சரியான அமைப்பு, அரசியல், இராணுவ மார்க்கம் இன்மையினாலும் இறுதியில் எதிரியால் நசுக்கப்பட்டிருக்கின்றன; தங்கள் கூட்டாளிகளால் காட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத் துரோகம் முதலாளியப் புரட்சிக் காலகட்டத்தில் தான் மிக முழுமையாகத் தன்னை வெளிப்படுத்தியுள்ளது. ஏங்கெல்ஸ் சுட்டிக் காட்டியது போல, பிரான்சில் உள்ள தொழிலாளர்கள் ஒவ்வொரு புரட்சியின் போதும் ஆயுத பாணிகளாகியிருக்கிறார்கள். அதனால் "அதிகாரத்தைக் கைப்பற்றியவுடன் முதலாளிகள் செய்த முதல் காரியம் தொழிலாளர்களை நிராயுதபாணிகளாக்குவது தான். ஒவ்வொரு புரட்சியும் தொழிலாளர்களின் இரத்தத்தால் வெற்றியடைகின்றது. வெற்றியடைந்ததுடன் மற்றொரு போராட்டம் வெடிக்கிறது. இது தொழிலாளர்களின் தோல்வியில் போய் முடிகிறது."[2]

மார்க்சியமும் பாட்டாளி வர்க்கக் கட்சிகளும் தோன்றியவுடன் வரலாற்றில் புதிய பரிமாணம் தோன்றுகின்றது. அதற்கு முன் 'தன்னெழுச்சி'யாகப் போராட்டங்கள் நடந்த நிலை மாறி "உணர்வுபூர்வமான" சரியான பாதையில் போராட்டங்கள் உருவாக்கப் படுகின்றன. இது பாட்டாளிய புரட்சிகரப் போராட்டத்தில் ஒரு புதிய பாய்ச்சலை உருவாக்குகிறது. அந்த அடிப்படையில் தான் சுரண்டப்படும் மக்களின் இராணுவ அமைப்பு என்ற பிரச்சினை பாட்டாளி வர்க்கத்தின் இராணுவ விஞ்ஞானத்தில் தீர்க்கப்படுகிறது. பாட்டாளி வர்க்கத்திற்கான அரசியல் கட்சிகள்-கம்யூனிஸ்ட் கட்சிகள்-அரசியல் உலகில் தோன்றி அவை பல்வேறு நாடுகளில் புரட்சிக்குத் தலைமை கொடுக்கத் தொடங்கின. அதன் விளைவாக, வெகுஜன ஆதரவு பெற்றதும், புரட்சிகரத் தன்மை வாய்ந்ததுமான ஆயுதமேந்திய அமைப்புகள் தோன்றின. அவை பாட்டாளி வர்க்கப் புரட்சி, முதலாளியப் புரட்சி, பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் நடக்கும் மக்கள் ஜனநாயகப் புரட்சி அல்லது தேசிய விடுதலைப் புரட்சிகள் போன்றவற்றில் தோன்றியவையாகும். குறிப்பாக ரஷ்யாவில் அக்டோபர் புரட்சியின் வெற்றிக்கும் ஐரோப்பா, ஆசியா, லத்தீன் அமெரிக்க நாடுகளில்



தொடர்ச்சியாக நடந்த சோசலிசப் புரட்சிகளின் வெற்றிக்கும் பிறகு உலகிலேயே முதன்முறையாக புதுவிதமான ஆயுதப்படைகள் தோன்றின. இவை தான் மக்களின் உண்மையான ஆயுதப்படைகளாகும். வரலாற்றிலேயே மிக முற்போக்கான அரசான பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் படைகளாகும்.

## 1. மார்க்ஸ், ஏங்கெல்ஸ் ஆகியோரின் ஆய்வுரைகள்

முதலாளியத்துக்குச் சவக்குழி தோண்டி, வர்க்கங்களும் மனிதனை மனிதன் சுரண்டும் நிலையும் இல்லாத கம்யூனிச சமுதாயத்தைக் கட்டுவது தான் சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் வரலாற்றுக் கடமையென வரையறுத்துக் கூறிய மார்க்சும், ஏங்கெல்சும் பாட்டாளி வர்க்கம் தன்னை விடுதலை செய்வதற்குகந்த மிகச் சிறந்த வழியையும் சுட்டிக் காட்டினர். அதாவது, தொழிலாளி வர்க்கம் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையை ஏற்று, விவசாய வர்க்கத்துடன் நெருக்கமான கூட்டேற்படுத்திக் கொண்டு, முதலாளி வர்க்கத்தின் அரசியந்திரத்தை உடைத்து நொறுக்கப் புரட்சிகர வன்முறையைப் பயன்படுத்த வேண்டும்; பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசை நிறுவ வேண்டும்; பாட்டாளிய ஆட்சியைப் பாதுகாக்கவும் கம்யூனிச நெறிகளின் அடிப்படையில் சமுதாயத்தை மாற்றியமைக்கவும் இவ்வரசை ஒரு கருவியாகப் பயன்படுத்த வேண்டும்.

**பாட்டாளி வர்க்கத்தின் இராணுவ அமைப்பானது**, முக்கியமாக, பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரப் போராட்டத்தின் இந்த மாபெரும் இலட்சியத்திற்காகத் தான் உருவாக்கப்படுகிறது. அடிமைத் தளைகளை உடைத்தெறியவும் பழைய உலகைத் தூக்கியெறியவும் கிளர்ந்தெழுகின்ற பாட்டாளி வர்க்கமும், புரட்சிகர மக்களும், புரட்சி இயக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தினூடே, தமது சொந்த இராணுவ அமைப்பைக் கட்டாயம் கட்டியாக வேண்டும். ஏனெனில் ஒரு பௌதீகச் சக்தியை மற்றொரு பௌதீகச் சக்தியினால் தான் வெல்ல முடியும்; முதலாளிகளின் ஆட்சியைத் தூக்கியெறிந்து பாட்டாளி வர்க்க ஆட்சியை நிறுவுதல் என்ற வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற முடியும். ஆளும் வர்க்கமும் வரலாற்று அரங்கத்திலிருந்து தானாக வெளியேறச் சம்மதிக்காது. முடியாட்சி அரசுகளும் தமது கட்டுப்பாட்டின் கீழ் பெரியதொரு ஆயுதப் படைகளை வைத்துக் கொண்டுள்ளன. தமது நாட்டுமக்களை ஒடுக்கவும் உலகைக் கொள்ளையடிக்கவும் பயன்படுகின்ற ஒரு திறமையான கருவியாக அப்படையை அவை இடைவிடாது சீர்படுத்திக் கொண்டே இருக்கின்றன. பாட்டாளி வர்க்கத்தினதும், உழைக்கும் மக்களினதும் சுதந்திர உணர்வுகளை நசுக்கவும், அவர்களது புரட்சிப் போராட்டங்களை இரத்தத்தில் மூழ்கடிக்கவும் ஆளும் வர்க்கங்கள் தமது பிற்போக்கு இராணுவ யந்திரங்களைத் தான் எப்போதும் நம்பியுள்ளன. முதலாளியம் உதயமாகிக் கொண்டிருந்த போதே, முதலாளியம் கீழ்க்காணும் பண்பைக் கொண்டிருந்தது என ஏங்கெல்ஸ் சுட்டிக்காட்டியுள்ளார்:- ''பாட்டாளி வர்க்கம் தனது சொந்த நலன்களுக்காகவும் சொந்தக் கோரிக்கைகளுக்காகவும் தனியொரு வர்க்கமாக நின்று முதலாளி வர்க்கத்தை எதிர்த்துப் போராடத் துணியும் போது முதலாளி வர்க்கம் அதை எவ்வளவு கொடூரமாக ஒடுக்கும் என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளது.''[3] முதலாளியத்தின் வளர்ச்சிகளும் அதன் உள் முரண்பாடுகள் ஆழமடைதலும், முதலாளி வர்க்கத்தின் அரசு எந்திரத்தின் இராணுவ வெறிப் போக்குகள் அதிகரிப்பதற்கும், எதிர்ப்புரட்சி ஆயுதப்படைகள் விரிவடைவதற்கும் வழி கோலுகின்றன. ஏங்கெல்ஸ் எழுதினர்:- ''இராணுவம் அரசின் பிரதான செயல் நோக்கமாகி விட்டது; அதுவே இலட்சியம் என்ருகி விட்டது. இராணுவத்துக்கு வேண்டிய படை வீரர்களை வழங்கி அவர்களுக்கு உண



வளிப்பதற்கு மட்டுமே மக்கள் தேவைப்பட்டனர். இராணுவ வெறி ஐரோப்பாவில் மேலாதிக்கம் செலுத்தி அதை விழுங்கி வருகின்றது.''[4]

இத்தகையதொரு சூழ்நிலை, முதலாளிய அரசின் ஆயுத ஒடுக்குமுறையை எதிர்க்கவும், அவர்களின் இராணுவ யந்திரத்தைத்தகர்த்து அவர்களது எதிர்ப்பை முறியடித்து வெற்றி பெற்று புரட்சிகர அதிகாரத்தைப் பாதுகாக்கவும், தமது சொந்த இராணுவ அமைப்புகளைக் கொண்டிருக்குமாறு பாட்டாளி வர்க்கத்தையும், ஒடுக்கப்பட்ட மக்களையும் நிர்ப்பந்திக்கின்றது.

முதலாளி வர்க்கத்தைத் தூக்கியெறிய பாட்டாளி வர்க்கம் நடாத்தும் போராட்டத்தில் இராணுவ அமைப்பு இன்றியமையாதது என்ருல் எத்தகைய வடிவத்தில் அவ்வமைப்பு கட்டப்பட வேண்டும்?

இப்பிரச்சினையை மார்க்சிய-லெனினியத்தின் ஆசான்கள் முழுமையாகத் தீர்த்துள்ளனர். பாட்டாளி வர்க்கத்தின் இராணுவ விஞ்ஞானத்தை நிறுவியவர்கள் என்ற முறையில் மார்க்சும், ஏங்கெல்சும் தான் முதன் முதலில் பாட்டாளி வர்க்கத்தின் இராணுவ அமைப்பு வடிவம் பற்றிய பிரச்சினைக்குக் கீழ்க்காணும் புகழ் பெற்ற ஆய்வுரையினைக் கொண்டு ஒரு தத்துவார்த்த அடிப்படையை உருவாக்கினர்:- ''தொழிலாளி வர்க்கத்தை ஆயுதபாணியாக்குதல்; நிலையான சேனையை அகற்றி அவ்விடத்தில் ஆயுதமேந்திய மக்களைக் கொணர்தல்.. தொழிலாளிகள் ஆயுதபாணியாக்கப்பட்டு அமைப்புக்குள்ளாக்கப்பட வேண்டும். பாட்டாளி வர்க்கம் முழுவதற்கும் துப்பாக்கிகள், கனத் துப்பாக்கிகள், பீரங்கிகள் மற்றும் ஆயுதங்களை வழங்கி அவர்களை ஆயுதபாணியாக்கும் திட்டம் உடன் நிறைவேற்றப்பட வேண்டும்... அவர்களை நிராயுதபாணிகளாக்குவதற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கான எந்தவொரு முயற்சியையும் முறியடிக்க வேண்டும். அவசியமானுல் இதற்கு பலப் பிரயோகத்தையும் செய்ய லாம்.''[5] பிரெஞ்சுப் பாட்டாளி வர்க்கம் முதலாளி வர்க் கததிற்கெதிராக 1848இல் நடத்திய முதல் பெரும் போராட் டத்தில் ஏற்பட்ட இரத்தக் களரிக்குப் பிறகு 1850இல் மார்க்சும், ஏங்கெல்சும் பாட்டாளி வர்க்கம் ஆயுதம் தாங்க வேண்டும் என்ற இந்த வேண்டுகோளை விடுத்தனர். வளர்ச்சியடைந்த முதலாளிய நாடுகள் சிலவற்றில் எழுச் சிகளும் உள்நாட்டுப் போர்களும் புரட்சியின் உடனடிக் கடமைகளாக இருந்த ஒரு சமயத்தில் பாட்டாளி வர்க் கத்தை ஆயுதபாணியாக்குதல் என்பது பாட்டாளி வர்க் கத்தின் புரட்சிகரச் செயல் திட்டத்தின் முக்கிய கோரிக் கைகளில் ஒன்ருகக் கருதப்பட்டது.

ஐரோப்பாவின் 18ம் நூற்ருண்டின் பிற்பகுதியினதும் 19ம் நூற்ருண்டின் முற்பகுதியினதும் வரலாறு, முதலாளி யப் புரட்சியின் வரலாறுமாகும். அன்றிருந்த நிலைமைக ளில், நிலப்பிரபுத்துவ ஆட்சியாளர்களுக்கும் பிற்போக்கு முதலாளிகளுக்கும் எதிராக பாட்டாளி வர்க்கம் முதலாளிய ஜனநாயக கட்சிகளோடு அணி சேர வேண்டி இருந்தது; புரட்சி வெற்றி பெற்றதும், பல சமயங்களில் முதலாளியக் கட்சிகளை அதிகாரத்துக்குக் கொண்டு வரவும் வேண்டியி ருந்திருக்கின்றது. அத்தகைய சூழ்நிலையில் நிலப்பிரபு வர்க்கத்தினதும், பிற்போக்கு முதலாளி வர்க்கத்தினதும் அரசு யந்திரத்தைத் தகர்ப்பதற்கும் எழுச்சியின் வெற் றியை உத்தரவாதம் செய்து கொள்வதற்கு மட்டுமின்றி, முதலாளிய ஜனநாயகச் சக்திகள் ஆட்சிக்கு வந்த பிறகு அவை தவிர்க்கவியலாதபடி மேற்கொள்ளும் துரோகத் திட்டங்களை முறியடிப்பதற்காகவும் பாட்டாளி வர்க்கம் ஆயுதபாணிகளாக்கப்படுவது இன்றியமையாதது என மார்க்சும், ஏங்கெல்சும் கருதினர்.



போராட்டத்தின் வெற்றியின் பலன்களைக் காப்பாற்றிக் கொள்ளவும், பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் சுயேட்சைத் தன்மையைக் காப்பாற்றிக் கொள்ளவும், அதை மேலும் வலிமைப்படுத்தவும், பாட்டாளி வர்க்கப் புரட்சியை மேலும் வளர்த்தெடுத்து முதலாளிய வர்க்கத்தை வீழ்த்தவும் பாட் டாளி வர்க்கம் ஆயுதபாணியாவது முக்கியமானது.

பாட்டாளி வர்க்கம் ஆயுதபாணியானுல் அதற்கு அள வற்ற வலிமை வருவதாக மார்க்சும், ஏங்கெல்சும் நம்பி ஞர்கள். 1848இல் அதை அவர்கள் பாரிசில் கண்கூடாகக் கண்டார்கள். மார்க்ஸ் பின்வருமாறு எழுதுகிருர்:- ''தலை வர்கள் இல்லாமல், ஒரு பொதுவான திட்டமின்றி, சாத னங்கள் அற்ற நிலையில், பெரும்பாலும் ஆயுதங்கள் கிட் டாமல் எப்படித் தொழிலாளர்கள் முன்னென்றும் கண்டி ராத வீரத்தோடும், மதியூகத்தோடும் அரசு சேனை, நட மாடும் காவற் படை, பாரிஸ் தேசிய காவற் படை மற்றும் மாகாணங்களில் இருந்து வெள்ளம் போல் திரண்டுவந்த தேசியக் காவற்படை ஆகியவற்றை ஐந்து நாட்கள் தடுத்து நிறுத்தினர் என்பது நன்கு தெரிந்ததே.''[6] ஏங் கெல்ஸ் எழுதுகிருர்:- ''40,000 தொழிலாளர்களால் தங் களை விட நான்கு மடங்கு அதிக சக்தியை இந்த அளவிற்கு எதிர்க்க முடியுமானுல், பாரிசின் அனைத்து தொழிலாளர்க ளும் கட்டுப்பாடுடன் ஒரே மனிதனுக ஒன்றிணைந்து செயற்பட்டால் இன்னும் எவ்வளவு சாதிக்க முடியும்.''[7]

மேற்கூறிய கருத்துக்களை மேலும் வளர்த்து, பாரிஸ் கம்யூனின் அனுபவங்களை ஆழமாக ஆராய்ந்து, 1871இல் மார்க்சும், ஏங்கெல்சும் கூறினுர்கள்: பழைய சேனையைத் தகர்த்துக் கலைக்க வேண்டும்; அதனிடத்தில் புதிய சேனையை அமைக்க வேண்டும்; கிரம சேனைக்குப் பதி லாக மக்களை ஆயுதபாணிகளாக்க வேண்டும். மார்க்ஸ் எழுதினுர்:- ''பழைய அரசாங்கத்தின் தலைமைப் பீடமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் அதே நேரத்தில் சமூக ரீதியில் பாட்டாளி வர்க்கத்தின் கோட்டையாகவும் இருந்த பாரிஸ் நகரத்தால் பகைவர்களை எதிர்க்க முடிந்ததென்றால், அதற்குக் காரணம், பாரிஸ் நகரம் முற்றுகை இடப்பட்டிருந்ததன் விளைவாக அது சேனையை ஒழித்துக்கட்டிவிட்டு அதனிடத்தில் தேசிய காவற் படையை உருவாக்கிற்று. இக் காவற் படையில் இருந்தவர்களில் பெரும்பாலோர் உழைக்கும் மக்களாவர். இவ்வுண்மையே இனி நியதியாக்கப்படவிருந்தது.''[8]

முதலாளிய ஆட்சியில், உழைக்கும் மக்கள் மீது தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ள முதலாளி வர்க்கம் பயன்படுத்தும் முக்கிய கருவி நிலையான சேனை தான் என்பதை மார்க்சும், ஏங்கெல்சும் சுட்டிக் காட்டினர். நிலையான சேனையை ஒழித்துக் கட்டுதல் என்பது, முதலாளிய அதிகாரத்தின் பௌதீகக் கருவியை ஒழித்துக் கட்டுதல் என்று பொருள்; முதலாளிய எதிர்ப்பு அபாயத்தையும், எதிர்த் தாக்குதல் அபாயத்தையும் ஒழித்துக் கட்டுதல் என்பது பொருள். அதோடு கூட, பாட்டாளி வர்க்கம் புரட்சிகர மக்களை உறுதியாகச் சார்ந்து நின்று, புரட்சிகர மக்களையும் ஆயுதபாணியாக்குவதன் மூலம் தனது சொந்த இராணுவ அமைப்பை விரைவாகக் கட்டி அதை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். தனது எழுச்சியின் வெற்றியைப் பாதுகாத்து புரட்சியை வளர்த்தெடுக்கும் ஒரே ஆயுதப்படையாக தன்னையும் புரட்சிகர மக்களையும் கருத வேண்டும். பாரிஸ் கம்யூன் உலக பாட்டாளி வர்க்கத்திற்கு உயிர்நாடியான பாடத்தைப் போதித்துள்ளது. ''எனவே பாரிஸ் கம்யூன் பிறப்பித்த முதல் ஆணை நிலையான சேனையை ஒடுக்குதலும் அதற்குப் பதிலாக மக்களை ஆயுதபாணிகளாக்குவதுமாகும்.''[9] இந்த அனுபவத்தில் இருந்து மார்க்சும், ஏங்கெல்சும் மிக முக்கியமான கருத்துக்களை உருவாக்கியுள்ளனர்: பழைய அரசின் அதிகார வர்க்க, இராணுவ யந்திரங்களைத் தகர்த்தெறிந்து அதற்குப் பதிலாக பாட்டாளி வர்க்கத்தின் புதிய அரசு அமைப்பு வடிவத்தை உருவாக்குதல் தொழிலாளி வர்க்கத்தின் கடமையாகும். பாட்டாளி வர்க்க அரசை உருவாக்குதல் என்பதை மகத்தான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக மார்க்சும், ஏங்கெல்சும் கருதினர். அதனால் தான் தங்கள் கம்யூனிஸ்ட் அறிக்கைக்கு 1872இல் எழுதிய முன்னுரையில், அவர்கள் இவ்வறிக்கை முன்வைத்த செயல் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய மிக முக்கியத்துவம் வாய்ந்த திருத்தமாக இவ்விடயத்தை கருதினர்.

ஆயுதபாணியாக்கப்பட்ட மக்கள் என்பதை சோஷலிச அரசின் இராணுவ அமைப்பு வடிவம் என ஏங்கெல்ஸ் கணித்தார். சோஷலிசத்தின் வெற்றி பற்றிய இக் கணிப்பானது மார்க்ஸ், ஏங்கெல்ஸ் ஆகியோர் வகுத்திருந்த கோட்பாட்டில் இருந்து தோன்றியது. சோஷலிசத்தின் வெற்றி வளர்ச்சியடைந்த எல்லா முதலாளிய நாடுகளிலுமோ அல்லது அவற்றின் பெரும்பாலானவற்றிலோ ஏககாலத்தில் மட்டுமே சாத்தியமாகும் என்பதுதான் அக் கோட்பாடு. மேலும், சோஷலிச அரசு, அதன் சோஷலிச இயல்பின் காரணமாக, எந்த ஒரு நாட்டின் மீதும் ஆக்கிரமிப்பைத் தொடுக்காது என்பதால் அதற்கு ஒரு நிலையான சேனை தேவையில்லை என்றும், உள்நாட்டுப் பாதுகாப்பை ஆயுதமேந்திய மக்களே உத்தரவாதம் செய்வர் என்றும் அவர்கள் கருதினர். ஏங்கெல்ஸ் தம் காலத்தில் நிலவிய சேனைகளின் நிலை, 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்த இராணுவக் கலை, தொழில் நுட்பங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தனது ஆய்வைச் செய்திருந்தார். அச் சமயத்தில் வளர்ச்சியடைந்திருந்த முதலாளிய நாடுகளில் பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா ஆகியவை மட்டுமே பெரும் இராணுவ அமைப்புகளைக் கொண்டிருந்தன. இங்கிலாந்து, அமெரிக்கா உள்ளிட்ட பிற முதலாளிய நாடுகளோ அப்போது முக்கியமான ஆயுதப்படைகளை வைத்திருக்கவில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே வளர்ச்சியடைந்த முதலாளிய நாடுகள் அனைத்திலுமோ அல்லது அவற்றில் பெரும்பாலானவற்றிலோ பாட்டாளி வர்க்கப் புரட்சி வெற்றி பெறுமேயானால், இதர அரசுகளில் உள்ள ஆயுதப் படைகள் மிகவும் வலுவானவையாக இரா என ஏங்கெல்ஸ் கருதினார். இத்தகைய நிலைமைகளின் அடிப்படையிலும், பாரிஸ் கம்யூன் அனுபவத்தின் அடிப்படையிலும் தன் கருத்துக்களை உருவாக்கிய ஏங்கெல்ஸ் சோஷலிசத்தின் கீழ் ஆயுதபாணியாக்கப்பட்டு, அமைப்புக்குட்படுத்தப்பட்டு, இராணுவப் பயிற்சி தரப்பட்ட மக்கள் சோஷலிச அரசைப் பாதுகாப்பதற்கான தற்காப்புப் போர்களில் ஆக்கிரமிப்புச் சேனைகளைத் தோற்கடித்து விடுவர் என்று நம்பினார். இந்த ஆய்வின் அடிப்படையில் இருந்து தான், சோஷலிசப் புரட்சியின் போது, முதலாளியத்தின் நிலையான சேனைக்குப் பதிலாக ஆயுதமேந்திய மக்கள் வைக்கப்படுவர் என மார்க்சும், ஏங்கெல்சும் நம்பினர்.

பாட்டாளி வர்க்கத்தின் ஆயுதமேந்திய எழுச்சிகளிலும் சோஷலிச அரசின் இராணுவ அமைப்பிலும் மக்களை ஆயுதபாணியாக்குதல் என்ற பிரச்சினையை மட்டுமல்லாது **தேசியப் போர்களில்** மக்களை ஆயுதபாணியாக்குதல் என்ற பிரச்சினையையும் மார்க்சும், ஏங்கெல்சும் கையாண்டுள்ளனர். அவர்கள் நீதியான போர்கள் என்றும், ஆக்கிரமிப்புப் போர்கள் என்றும் பகுத்துப் பார்த்தனர். ஆக்கிரமிப்புக்குப் பலியான ஒடுக்கப்பட்ட மக்களின் போர்களை, விடுதலைப் போர்களை, தற்காப்புப் போர்களை அவர்கள் எப்போதும் ஆதரித்தனர். சமகால நிகழ்வுகளை ஏங்கெல்ஸ் கூர்மையாக ஆராய்ந்து, அவற்றின் அனுபவங்களைத் தொகுத்து ஒடுக்கப்படும் மக்கள், மக்கள் யுத்தமொன்றை நடத்தி ஆக்கிரமிப்பாளர்களின் தொழில்முறை இராணுவங்களைத் தோற்கடிப்பதற்கான வழிமுறைகளைச் சுட்டிக்காட்டினார். போர் வரலாறு பற்றி ஏங்கெல்ஸ் எழுதிய பல கட்டுரைகளில் **நீதியான போர்களிலும், தற்காப்புப் போர்களிலும் ஆயுதமேந்திய மக்களின் செயல்திறமை பற்றியும், அவர்கள் வகித்த மகத்தான பங்கு பற்றியும்** குறிப்பிடுகின்றார். ஏங்கெல்சின் இக் கருத்து, ஒரு மக்கள் யுத்தத்தை நடத்துவதற்காக அவர் பரிந்துரைத்த புதிய முறையொன்றுடன் நெருக்கமான தொடர்புடையதாகும். ஏங்கெல்ஸ் எழுதினார்:- "தங்களது சுதந்திரத்தை திரும்பப் பெறுவதற்காகப் போராடும் மக்கள், போரை நடத்துவதில் மரபுவழிப்பட்ட முறைகளோடு திருப்தியடைய மாட்டார்கள். வெகுஜன எழுச்சிகள், புரட்சிப் போர்கள், நாடெங்கினும் கெரில்லாத் தாக்குதல்கள் - சிறுபான்மை மக்கள் பெரும்பான்மை மக்களைத் தோற்கடிப்பதற்கான வழி இது ஒன்று தான்; வலுக்குறைவான ஒரு சேனை, வலுகூடுதலானதும், மேலும் சிறப்பாக ஒழுங்கமைக்கப் பட்டதுமான மற்றொரு சேனையை எதிர்ப்பதற்கான வழி இது ஒன்று தான்."[10] பரந்துபட்ட ஆயுதமேந்திய வெகுஜனங்களே இத்தகைய போர்களுக்கான அடிப்படைக் கூறுகளாகும்.

1793இல் பிரான்சும், 1807 - 1812இல் ஸ்பெயினும், நெப்போலியனுக்கெதிராக ரஷ்யாவும் (1812), அவுஸ்திரேலியாவுக் கெதிராக 1849இல் ஹங்கேரியும் நடத்திய எதிர்ப்புப் போர்களை (**Resistance Wars**) ஏங்கெல்ஸ் புகழ்ந்தார். இவை மக்கள் யுத்த முறைகள் பிரயோகிக்கப்பட்ட எதிர்ப்புப் போர்கள் என்றும், சிலவற்றில் நிலையான சேனைகளின் நடவடிக்கைகளுடன் ஆயுதமேந்திய மக்களின் போராட்ட நடவடிக்கைகள் இணைக்கப்பட்டன என்றும், இதன் காரணமாக, மிக வலிமையான ஆக்கிரமிப்புச் சேனைகளைத் தோற்கடிக்க தேசத்தின் மாபெரும் சக்திகளின் திறமை முழுவதும் வெளியிடப்பட்டது என்றும் அவர் புகழ்கிறார்.

ஆஸ்திரியர்களுக்கு எதிராக தாம் நடத்திய தற்காப்புப் போரில், வட இத்தாலியைச் சேர்ந்த பியேட் மொன்சே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Pied Montse) அடைந்த தோல்விக்கான காரணங்களை ஆராய்கையில் ஏங்கெல்ஸ் சுட்டிக்காட்டினர்:- ''பியேட் மொன்சே செய்த பெருந்தவறு என்னவென்றால், அவர்கள் ஆஸ்திரியர்களை எதிர்க்க நிலையான சேனையை மட்டுமே பயன்படுத்தினர். மிகவும் மரபு வழிப்பட்ட, முதலாளியத் தன்மை வாய்ந்த, மிகவும் கிரமமான போர் நடத்தவே அவர்கள் விரும்பினர்.''[11] நோவாரா என்னுமிடத்தில் பியேட் மொன்சே அடைந்த தோல்வி பற்றி குறிப்பிடும் ஏங்கெல்ஸ் கூறுகிறர்:- ''இத் தோல்விக்குப் பிறகு, ஒரு உண்மையான புரட்சிப் போர் வெடித்திருக்குமேயானல், இத்தாலியச் சேனையில் எஞ்சியிருந்தவர்கள், ஒரு தேசந் தழுவிய பொது எழுச்சியை தாங்கள் துவங்கி வைப்பதாக உடனடியாகப் பிரகடனப் படுத்தியிருந்தால், சேனைகள் நடத்திய மரபு வழிப் போர் 1793இல் பிரெஞ்சுக் காரர்கள் நடத்தியது போன்ற மக்கள் யுத்தமாக மாற்றப் பட்டிருக்குமேயானல் புரட்சிகரப் போர் புரிய டூரின் அரசாங்கத்திற்கு துணிவிருந்திருக்குமேயானல், இத் தோல்விக்கு எதுவித முக்கியத்துவமும் இருந்திருக் காது.''[12] ஏங்கெல்ஸ் முடிவு கட்டியது போல இத்தாலியின் சுதந்திரம் பறி போகக் காரணம் ஆஸ்திரிய நாட்டு ஆயுதங்களின் வலிமையல்ல; மாருக இத்தாலிய அரசாங்கத்தின் கோழைத்தனமேயாகும்.

1871ல் பிரான்சிற்கும் பிரஷ்யாவிற்கும் நடந்த போர் பற்றி எழுதுகையிலும் ஏங்கெல்ஸ் இதே முடிவுக்குத்தான் வருகின்றர். பிரெஞ்சுப் பகுதியின் ஆறில் ஒரு பகுதியை ஜேர்மனியர்கள் கைப்பற்றியிருந்தனர்; மெட்ஸ், பாரிஸ் ஆகிய நகரங்களில் இருந்த கோட்டைகள் இரண்டை முற்றுகையிட்டிருந்தனர். அப்படியிருந்தும், பிரெஞ்சுக்காரர்கள் இத் தோல்வியை வெற்றியாக மாற்றியிருக்க முடியும். அத்தகைய வாய்ப்புகள் பிரான்சுக்கு இருந்ததாக ஏங்கெல்ஸ் கருதினர். ஜேர்மனியப் படைகளில் மிகப் பெரும் பகுதி ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலேயே நிலை கொண்டிருக்க, எஞ்சியிருந்த ஆறில் ஐந்து பகுதிப் பிரதேசமெங்கிலும் பிரான்ஸ் ஆயுதமேந்திய குழுக்களை உருவாக்கி எதிரிக்குத் தொல்லை கொடுத்திருக்க முடியும்; தகவல் தொடர்புகளைத் துண்டித்து, தளங்களை அழித்து, துண்டிக்கப்பட்ட ஜேர்மன் படைப் பிரிவுகள் மீது தாக்குதல் தொடுத்து, ஜேர்மானியப் படைகள் கலைந்து செல்லுமாறும், மேலே குறிப்பிட்ட கோட்டைகளில் இருந்து பின் வாங்குமாறும் நிர்ப்பந்தம் செய்திருக்க முடியும். நிலைமையைச் சமாளிக்க மெட்ஸியில் இருந்து பாடென் வெளியேற முயற்சித்திருப்பான்; பாரிஸ் முற்றுகையோ 'கிலி' பிடித்தால் போலிருந்திருக்கும். ''1808இல் ஸ்பானியர்களுக்கு இருந்த அதே ஆழ்ந்த தேசப்பற்று பிரெஞ்சுக்காரர்களுக்கு இருந்திருக்குமேயானல், ஒவ்வொரு நகரமும், ஒவ்வொரு கிராமமும் கோட்டையாக மாற்றப் பட்டிருக்குமேயானல், ஒவ்வோரு விவசாயியும், ஒவ்வொரு குடிமகனும் போராளியாகியிருந்தால் ஜேர்மனியர்களின் கதி என்னவாகியிருக்கும்''[13] என ஏங்கெல்ஸ் வினவுகிறர்.

ஆயுதமேந்திய மக்களின் எழுச்சி பற்றியும், கிரமப்படி அமைந்திராத ஆயுதமேந்திய ஆசியர்கள் பற்றியும், மக்கள் யுத்தம் நடத்துவதில் அவர்கள் கையாளும் வகை வகையான முறைகள் பற்றியும் ஏங்கெல்ஸ் கூறுகிறர். ஐரோப்பிய ஆக்கிரமிப்புச் சேனைகள் அஞ்சி நடுங்கிய பகைவர்களாக அவர்கள் இருந்தது பற்றி கூறுகின்றர். ''அவர்கள் (சீனர்கள்) ரொட்டியில் விஷம் கலக்கின்றனர்... சிறிதும் தயக்கமின்றி நிதானமாகச் செயற்படுகின்றனர்... ஆயுதங்களை மறைத்து வைத்துக் கொண்டு நீராவிப் படகுகளில் பயணம் செய்கின்றனர். பயணத்தின் போது படகோட்டிகளைப் படுகொலை செய்கின்றனர்... படகைக் கைப்பற்றுகின்றனர்... அந்நிய நாடுகளுக்கு வேலை தேடிச் செல்லும் அதே சீனக் கூலிகள் தான், அவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றிச் செல்லும் ஒவ்வொரு கப்பலிலும் கலகம் செய்கின்றனர்; அதைக் கைப்பற்றப் போராடுகின்றனர். முடியா விட்டால், சரணடையாது கப்பலை மூழ்கடித்து அவர்களும் கடலில் மூழ்கி விடுகின்றனர்; அல்லது அதற்கு நெருப்பு வைத்து தாங்களும் மடிந்து சாம்பலாகி விடுகின்றனர். சீனாவிற்கு வெளியிலும் கூட, சீனக் குடியேறிகள் திட்டமிட்டு, திடீரென பெரும் எழுச்சிகளை நடத்துகின்றனர். இத்தகைய போர் முறைகளைக் கையாளும் மக்களை எதிர்த்து ஒரு சேனை என்ன செய்ய முடியும்?''[14]

பாட்டாளி வர்க்கத்தினதும், ஒடுக்கப்படும் மக்களினதும் இராணுவ அமைப்பு வடிவம் பற்றி விஞ்ஞான ரீதியான கம்யூனிசத்தைத் தோற்றுவித்த ஆசான்களின் கருத்து இது தான்: தொழிலாளி வர்க்கத்தை ஆயுதபாணியாக்குதல்; மக்களை ஆயுதபாணியாக்குதல், புரட்சிகர மக்கள் திரளினரை ஆயுதபாணியாக்குதல்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவதற்கான எழுச்சி, சோஷலிச அரசைப் பாதுகாப்பதற்கான போர் ஆகியவற்றில் மட்டுமல்லாது, முதலாளிய ஆட்சியின் கீழிருப்பதும் ஆக்கிரமிப்புக்குப் பலியாகி இருப்பதுமான ஒடுக்கப்பட்ட நாடுகளினதும், மக்களினதும் விடுதலைப் போர்கள், தற்காப்புப் போர்கள் ஆகியவற்றிலும் கூட இராணுவ அமைப்பு பற்றிய பிரச்சினைகளுக்கான தத்துவார்த்த அடிப்படையை மார்க்சும் ஏங்கெல்சும் உருவாக்கிச் சென்றனர்.

**இது ஒரு மிக அடிப்படையான கருத்து** என்பது வெளிப்படை. பாட்டாளி வர்க்கத்தினதும், ஒடுக்கப்பட்ட மக்களினதும் இராணுவ அமைப்பைக் கட்டுதல் என்ற பிரச்சினைக்கு, வர்க்கங்கள், மக்கள் திரளினர், புரட்சிகர வன்முறை ஆகியன பற்றிய வரலாற்றுப் பொருள் முதல்வாதக் கண்ணோட்டத்தைப் பிரயோகிப்பதில் மார்க்சும், ஏங்கெல்சும் பெற்ற மகத்தான வெற்றியே இது. ஆயுதமேந்திய எழுச்சியையும், புரட்சிப் போரையும் நடத்தும் மக்கள் திரளின் தீர்க்கமான பாத்திரம் பற்றிய சரியான கணிப்பிற்கு இது ஒரு முன்மாதிரியாகும். இந்த ஆய்வுரையின் மதிப்பு பாட்டாளி வர்க்கமும், ஒடுக்கப்படும் மக்களும் தமது சொந்த அமைப்பை உருவாக்கிக் கொள்ள சரியான வழியையும், திசையையும் உலகிலேயே முதன்முறையாக அவர்களுக்குக் காட்டுகிறது என்ற உண்மையில் தங்கியுள்ளது; இந்த அமைப்பு முற்றிலும் புதிய அமைப்பு; பாட்டாளி வர்க்கமும் உழைக்கும் மக்களும் மக்களுக்காகவும், தங்கள் வர்க்கத்திற்காகவும் நடத்தும் போராட்டத்தில் பிறந்த அமைப்பு.

சரியான புரட்சிகர மார்க்கத்துடன், தனது ஆயுதமேந்திய அமைப்பைக் கட்டி அதை வளர்த்தெடுக்க புரட்சிகர மக்கள் திரளையும், தொழிலாளர்களையும், விவசாயிகளையும் புரட்சிகரக் கட்சி உறுதியாகச் சார்ந்திருக்குமேயானால், வெல்லப்பட முடியாத ஆயுதப் படையை அக் கட்சியினால் உருவாக்க முடியும்.

**மார்க்சிய - லெனினிய இராணுவ விஞ்ஞானத்தில், ஆயுதப் படைகள் கட்டுவதற்கான தத்துவார்த்த அடிப்படையாக இருப்பது இக் கருத்தே.** இது, உலகில் உள்ள பாட்டாளி வர்க்கத்தினதும், எல்லா ஒடுக்கப்பட்ட வர்க்கத்தினதும் மிகச் சக்தி வாய்ந்த ஆயுதமாகும்; பழைய உலகைத் தூக்கியெறிந்து புதிய உலகைப் படைப்பதற்கான ஆற்றல்களை வழங்குவது இக் கருத்துத் தான்.

## 2. லெனினிய ஆய்வுரை

மார்க்ஸ், ஏங்கெல்ஸ் ஆகியோரின் இந்த ஆய்வுரைகளை லெனின் தலைமையில் இருந்த ரஷ்ய மார்க்சிஸ்டுகள், ஏகாதிபத்தியக் காலக்கட்டத்தில் சோஷலிசப் புரட்சியும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாளிய ஜனநாயகப் புரட்சியும் நடத்தப்பட்டு வந்த புதிய வரலாற்று நிலைமைகளுக்குப் பிரயோகித்தனர்.

முதலாளியம் ஏகாதிபத்திய கட்டத்திற்குச் சென்று கொண்டிருந்த சமயத்தில், சோஷலிசம் எல்லா நாடுகளிலும் ஏககாலத்தில் வெற்றியடைய முடியாது, மாறாக அது ஒரு நாட்டில் அல்லது ஒரு குறிப்பிட்ட சில நாடுகளில் முதலில் வெற்றியடையும் என்ற தனது புகழ்பெற்ற புதிய ஆய்வுரையை உருவாக்கினூர் லெனின். அதே சமயத்தில் முதலாளிய ஜனநாயகப் புரட்சிக்குப் பாட்டாளி வர்க்கம் தலைமை தாங்க வேண்டியது பற்றியும் இப் புரட்சி பாட்டாளி வர்க்கப் புரட்சியாக மாற்றம் பெறுதல் குறித்தும் உருவாக்கப்பட்ட தத்துவத்துடன் லெனினும், ரஷ்ய போல்ஷ்விக் கட்சியும், ரஷ்யாவின் முதலாளிய ஜனநாயகப் புரட்சி, சோஷலிசப் புரட்சி ஆகியவற்றிற்கான செயல் திட்டத்தை வகுத்தனர். புதிய வரலாற்றுச் சூழ்நிலைமைகளில் பாட்டாளி வர்க்கத்தின் இராணுவ அமைப்பைக் கட்டுவதன் இன்றியமையாமையை லெனின் அடிக்கோடிட்டுக் காட்டினூர்.

''பாட்டாளி வர்க்கத்திற்கு எதிராக ஆயுதபாணியாக்கப்பட்டுள்ள ஒரு முதலாளிய வர்க்கம் இருப்பது நவீன முதலாளிய சமுதாயத்தின் மிகப் பெரும், அடிப்படையான, முக்கியமான உண்மையாகும்... நமது முழக்கம் கீழ்க்கண்டதாக இருக்க வேண்டும்: 'முதலாளி வர்க்கத்தைத் தோற்கடித்து, அதன் உடமைகளைக் கைப்பற்றி அதனை நிராயுதபாணியாக்க பாட்டாளி வர்க்கத்தை ஆயுதபாணியாக்குக.' ஒரு புரட்சிகர வர்க்கத்திற்குச் சாத்தியமான நடைமுறைத் தந்திரம் இது ஒன்றுதான்; இந்த நடைமுறைத் தந்திரம் முதலாளிய இராணுவத்தின் ஒட்டுமொத்தமான புறநிலை வளர்ச்சியின் காரணமாக தர்க்கரீதியாக உருவாகின்றது. இந்த நடைமுறைத் தந்திரத்தை தீர்மானிப்பதும் இப்புறநிலை வளர்ச்சி தான்.''[15]



20ம் நூற்றுண்டின் துவக்கத்தில் இருந்தும் 1905ம் ஆண்டு புரட்சி, மாபெரும் அக்டோபர் புரட்சி ஆகியவற்றுக்குத் தலைமை ஏற்கையிலும் மார்க்ஸ், ஏங்கெல்ஸ் ஆகியோரின் கோட்பாட்டைப் பிரயோகித்த லெனினும், ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியும், நிலையான சேனையை அகற்றி அவற்றுக்குப் பதிலாக ஆயுதமேந்திய மக்களை, குடிமக்கள் படைகளை வைத்தல் என்ற கருத்தை முன் வைத்தனர். அது முதலாளிய ஜனநாயகப் புரட்சியினதும், சோஷலிசப் புரட்சியினதும் முக்கிய கடமைகளில் ஒன்ருக இருந்தது.

ரஷ்யாவிலும், உலகிலுள்ள பல நாடுகளிலும் உள்ள (முதலாளிய) நிலையான சேனை, வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்துப் போராடுவதற்காக அல்லாமல் உழைக்கும் மக்களை ஒடுக்குவதற்கும் வேறு நாட்டு மக்களை அடிபைப் படுத்துவதற்குமே முக்கியமாகப் பயன்படுகிறது என்பதை லெனின் சுட்டிக் காட்டினூர். லெனின் எழுதினூர்: ''எல்லா நாடுகளிலும் நிலையான சேனை என்பது பிற்போக்கின் ஆயுதமாகவும், தொழிலாளி வர்க்கத்திற்கு எதிராக முதலாளிகள் நடத்தும் போராட்டத்தில் முதலாளியத்தின் சேவகர்களாகவும், மக்களின் சுதந்திரத்தைக் கழுவில் ஏற்றுபவைகளாகவும் மாறியுள்ளது.''[16]

இச் சேனை இயல்பிலேயே மக்களுக்கானதாக இருக்க முடியாது. அதை அழிப்பது தான் புரட்சியின் வெற்றிக்கான நிபந்தனை; பிற்போக்குச் சக்திகள் மீண்டும் ஆட்சிக்கு வரத் தீட்டும் திட்டங்கள் அனைத்திலிருந்தும் புரட்சியைக் காப்பாற்றவும், சேனைகளுக்கான பெருஞ் செலவைத் தவிர்க்கவும், அதை அழிப்பது இன்றியமையாதது. அச் சேனைக்குப் பதிலாக **மக்களை ஆயுதபாணியாக்க வேண்டும்; முதன்மையாக விவசாயிகளையும், தொழிலாளிகளையும் ஆயுதபாணியாக்க வேண்டும்.** அன்று நிலவிய வரலாற்று நிலைமைகளில் லெனின் கூறினூர்: ''இராணுவம் என்ற தனிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதியை ஒழித்துக் கட்டிவிட்ட ஆயுதமேந்திய மக்கள், எல்லாப் படைவீரர்களையும் குடிமக்களாகவும், குடிமக்கள் அனைவரையும் ஆயுதமேந்தக் கூடியவர்களாகவும் ஆக்கி யுள்ளனர். இவர்கள் ரஷ்யாவின் சுதந்திரத்தைக் காக்கும் அரணாக இருப்பார்களேயானால் உலகில் உள்ள எந்த சக்தியாலும் சுதந்திர ரஷ்யாவை ஆக்கிரமிக்க முடியாது..... மக்களின் குடிப்படைகளை உருவாக்குவதென்பது நடைமுறைச் சாத்தியமானது என்பதனையும், தற்காப்புப் போர், தாக்குதல் போர் ஆகிய இரண்டினதும் இராணுவக் கடமைகளையும் மக்கள் குடிப்படைகளால் சாதிக்க முடியும் என்பதையும் இராணுவ விஞ்ஞானம் சாதித்துக் காட்டியுள்ளது.''[17]

லெனின் தலைமையின் கீழ் அக்டோபர் புரட்சிக்கு முன்பும், புரட்சியின் அரசியல் படையைக் கட்டும் போதும், ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியும், தொழிலாளி வர்க்கமும் இம் முழக்கத்தைச் செயல்படுத்த ஆவன செய்தன. அவர்கள் போர் வீரர்கள் மத்தியில் பிரச்சாரத்தை முடுக்கி விட்டனர்; ஜாரின் சேனைக்குள்ளேயே கட்சி அமைப்புகளைக் கட்டி சேனைப் படையலகுகளுக்குக் குழி பறித்து அவற்றைப் புரட்சியின் பால் வென்றெடுக்க முயற்சி செய்தனர்; கட்சிக்குள் இராணுவ விஞ்ஞானத்தைக் கற்பதை ஊக்குவித்தனர்; இராணுவ அறிவையும், இராணுவப் பயிற்சியையும் மக்கள் திரளினிடையே செயலூக்கத்துடன் பரப்பினர்; தொழிலாளர்களுக்கும் புரட்சிகர மக்கள் திரளினருக்கும் ஆயுதங்களை வழங்கினர்; எல்லா இராணுவ அமைப்புகளிலும் கட்சித் தலைமையை நிறுவி அதை வலுப்படுத்தினர்; புரட்சிகர ஆயுதப் படைகளின் மூலக்கருக்களாக செயல்படும் பொருட்டு தொழிலாளர் குடிப்படைகளையும், படையலகுகளையும் உருவாக்கினர்; புரட்சிகர படைவீரர்களுடன் தொழிலாளர்களும், விவசாயிகளும் சேர்ந்து இயங்குகின்ற புரட்சிகர ஆயுதப் படையை நிறுவினர்; **இது மூன்று கூறுகளைக் கொண்டதாக இருந்தது.**



(1) ஆயுதமேந்திய பாட்டாளி வர்க்கமும், விவசாயி வர்க்கமும்;

(2) இந்த வர்க்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒழுங்கமைக்கப்பட்ட முன்னணிச் செயல்வீரர் அலகுகள்;

(3) மக்களோடு சேர்ந்து கொண்ட சேனை படையலகுகள்.

இதன் காரணமாக புரட்சியால் ஒரு ஆயுதப் படையைக் கட்ட முடிந்தது. இது பிரதானமாக கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் செயல்பட்ட ஆயுதமேந்திய தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோரைக் கொண்டதாக இருந்தது; மக்களின் புரட்சிகரத் தாக்குதலில் அதிர்ச்சிப் படையாக அது செயற்பட்டது; பெப்ரவரி புரட்சியின் வெற்றியிலும் பின்னர் அக்டோபர் புரட்சியிலும் தீர்க்கமான பாத்திரம் வகித்தது.

ரஷ்ய அக்டோபர் புரட்சியின் வெற்றி உலகின் முதல் சோஷலிச அரசைத் தோற்றுவித்தது. இந்த அரசு பகைமை கொண்ட ஏகாதிபத்தியத்தால் சுற்றிவளைக்கப்பட்டது. இந்த வெற்றி மனித வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை தோற்றுவித்து வைக்க உதவிற்று; முதலாளிய உலகு முழுவதற்கும் அதிர்ச்சியைத் தந்தது. எனவே லெனின் முன்கூட்டியே பார்த்துணர்ந்தது போல, முதலாளிய உலகம் பாட்டாளி வர்க்க அரசை, அது பிறக்கும் போதே கொன்றுவிட முயன்றது. இந்த ஆக்கிரமிப்பு அபாயம், சோஷலிசத் தாய்நாட்டை ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பில் இருந்து பாதுகாக்க அரசு ஆயுதமேந்த வேண்டிய கட்டாயத்தையும் தனது இராணுவ அமைப்பு வடிவத்தை மறுபரிசீலனை செய்யவேண்டிய அவசியத்தையும் ஏற்படுத்தியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லெனினின் மாபெரும் பங்களிப்பு கீழ்க்காணும் உண்மையில் தங்கியுள்ளது: மக்களை ஆயுதபாணியாக்குதல் என்ற மார்க்ஸ், ஏங்கெல்ஸ் ஆகியோரின் கோட்பாட்டை லெனின் உறுதிசெய்ததுடன், அவர்களது கருத்துக்களை மேலும் வளர்த்து, **ஆயுதமேந்திய மக்களை அடிப்படையாகக் கொண்டு சோவியத் அரசுக்கான ஒரு கிரமமான நிலையான சேனையை, தொழிலாள வர்க்கத்தினதும், உழைக்கும் மக்களினதும் புதிய வகைச் சேனையைக் கட்டவேண்டியது அவசியம்** என்ற புதிய கோட்பாட்டையும் உருவாக்கினார்.

மிகப்பெரும் ஆக்கிரமிப்பு அபாயம் இருந்த சமயத்தில், சோவியத் குடியரசு ஏகாதிபத்தியத்தால் எளிதாக வீழ்த்தப்படாமல் இருக்க வேண்டுமானால், அதற்கொரு வலுமிக்க கிரமமான நிலையான சேனை இருக்க வேண்டும் என்பதை லெனின் எடுத்துக் காட்டினார். இச் சேனை, ஆயுதத் தளவாடங்கள் போதுமான அளவு பெற்றுள்ளதும், நன்கு பயிற்றுவிக்கப்பட்டதும், கடுமையான ஒழுங்குக்குட்பட்டதும், மையப்படுத்தப்பட்ட ஒன்றுபட்ட தலைமையின் கீழ் செயல்படுவதுமான சேனையாக இருக்க வேண்டும். சரியான பயிற்சியும், நவீன ஆயுதங்களும், தளவாடங்களும் பெற்றுள்ள பெரும் சேனைகள் முதலாளிய நாடுகளில் இருந்தன; சோவியத் அரசின் ஆயுதப்படைகளும் தொடர்ந்து நவீன போர்க் கருவிகளைப் பெற்று வந்தன; நவீன இராணுவக் கலையின் விதிகளுக்கேற்ப, இக் கருவிகளைப் பயன்படுத்துவதைக் கற்றுத் தேற அவர்களுக்கு மேலும் பயிற்சி தேவைப்பட்டது; ஏகாதிபத்தியவாதிகள் எதிர்பாராத திடீர் தாக்குதலைத் தொடுக்க எப்போதும் தயாராக இருந்தனர். இந்தச் சமயத்தில் சோவியத் அரசின் ஆயுதப் படைகளை, மக்கள் குடிப்படை வடிவத்திலேயே வைத்திருக்க முடியாது; மாறாக அது ஒரு கிரமமான நிலையான சேனையாக மாறவேண்டும். லெனின் கூறினார்: **"இன்று கிரமமான சேனை முன்னால் நிறுத்தப்பட வேண்டும்."** இது முதலாளிய சேனையில் இருந்து பண்பு வகையில் மாறுபட்ட **கிரமமான சேனை; இது ஒரு புதுவகைச் சேனை; ஒரு மக்கள் சேனை; புரட்சிகரச் சேனை; சோஷலிசச் சேனை.**

நவீனப் போர் முறைகளின் தேவைகளைக் கருத்தில் கொள்கையில், குடிப்படை அமைப்புடன் ஒப்பிடும் போது நிலையான சேனைக்குள்ள அனுகூலங்கள் கண்கூடு; எந்த ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தோடும் அது பிணைந்து கிடக்காததால், அதை எங்கும் கொண்டு செல்லலாம்; அது நவீன சாதனங்களையும் தொழில் நுணுக்க சாதனங்களையும் பெற்றுள்ளது; அதனால் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வரும் இராணுவ நுட்பங்கள், இராணுவக் கலை ஆகியவற்றின் தேவைகளுக்கேற்ப முறைப்படியான நீண்ட கால ஆயுதப் பயிற்சியைப் பெற முடியும்; அதில் நன்கு பயிற்சி பெற்ற, அனுபவமிக்க, தொழில் ரீதியான அதிகாரிகள் இருக்கின்றார்கள்; இக் காரணங்களால், அதன் போரிடும் திறனும், போருக்கான தயார் நிலையும் உயர்ந்த அளவில் இருக்கும்.

முற்றிலும் புதிய பிரச்சினைகளும், பெரும் இடர்ப்பாடுகளும் இருந்த காலகட்டத்தில், லெனினும், ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியும், மக்களின் ஆதரவையும் படைப்பாற்றலையும் சார்ந்து நின்று, பழைய சேனையைக் கலைத்த போதே, ஒன்றன் பின் ஒன்றாகவும் வெற்றிகரமாகவும் பல பிரச்சினைகளைத் தீர்த்தார்கள். இவை **பாட்டாளி வர்க்க அரசின் புதுவகை கிரமமான சேனை - தொழிலாளி - விவசாயி செஞ்சேனை ஒன்றைக் கட்டுதல் சம்பந்தப்பட்ட** பிரச்சினையாகும். லெனின் செஞ்சேனையின் செயல்பாட்டையும், கடமைகளையும் வரையறுத்தார்; பாட்டாளி வர்க்க சேனையின் புரட்சித் தன்மை; அதன் மக்கள் சார்புத் தன்மை; கட்சி அமைப்பு முறை; சேனைக்குள் மேற்கொள்ளப்பட வேண்டிய அரசியற் பணிகள்; சேனையில் கம்யூனிஸ்ட் கட்சியின் நெருக்க




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான தலைமை; இராணுவ ஊழியர்களைப் பயிற்றுவித்து உருவாக்குதல் பற்றிய கொள்கைகள்; அமைப்பு நெறிகள்; சோவியத் சேனைக்கு வேண்டிய ஆயுதங்கள், கருவிகள், கல்வி, பயிற்சி ஆகியவை; சோவியத் இராணுவக் கலை - இப் பிரச்சினைகளுக்கும் செஞ்சேனை சம்பந்தப்பட்ட வேறு சில பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டார்.

செஞ்சேனை கட்டப்பட்டு வருகையில், லெனின் எல்லாவித தவறான போக்குகளுக்கும் எதிரான உறுதி வாய்ந்த போராட்டத்தை நடத்த வேண்டியிருந்தது. 'மக்களை ஆயுதபாணியாக்குக' என்ற கட்சி முழக்கத்தை தவருகப் பயன்படுத்தி, செஞ்சேனை கட்டுவதில் கட்சி கடைப்பிடித்த மார்க்கத்தையும், கொள்கையையும் வெறித்தனமாகத் தாக்க முயன்ற மென்ஷ்விக்குகள் சோஷலிசப் புரட்சியாளர்கள்,★ அராஜக வாதிகள் ஆகியோரின் திட்டங்களை லெனின் தகர்த்தெறிந்தார். கட்சியின் 8வது காங்கிரசில், கட்சிக்குள் இருந்த 'இராணுவ எதிர்ப்புக் குழு'வினரை லெனினும் அவரது போராட்டத் தோழர்களும் தோற்கடித்தனர். இக் குழுவினர் ஒரு கிரமமான செஞ்சேனையைக் கட்டுவதற்கு வேண்டிய கட்டுப்பாடு, மையப்படுத்தப்பட்ட ஒன்றுபட்ட தலைமை போன்றவற்றை எதிர்த்தனர்.

உள்நாட்டுப் போர் முடிவடைந்த பிறகு, சோவியத் அரசின் இராணுவ அமைப்பின் வடிவம் பற்றிய விவாதம் மீண்டும் ஒரு முறை எழுந்தது. லெனின் தலைமையில் இருந்த கம்யூனிஸ்ட் கட்சி டிராட்ஸ்கியப் போக்கை உறுதி

---

★ மென்ஷ்விக்குகள்: ரஷ்யாவின் சமூக ஜனநாயகக் கட்சியிலிருந்த சிறுபான்மையினர்.

சோஷலிசப் புரட்சியாளர்கள்: ஒரு குட்டி முதலாளியக் கட்சியினர்.



யாக நிராகரித்தது. செஞ்சேனை கலைக்கப்பட்டு அது மக்கள் குடிப்படை அமைப்பில் முற்ருகச் சேர்க்கப்பட்டுவிட வேண்டும் என்பதே டிராட்ஸ்கியப் போக்கு.

லெனினின் ஆய்வுரை மிகவும் தெளிவானதும், சரியானதுமாகும் என்பதை புரட்சிகர நடைமுறை நிரூபித்துள்ளது. சோவியத் அரசை, அது பிறந்தவுடன் கொன்றுவிடும் நோக்கத்தோடு உள்நாட்டு எதிர்ப் புரட்சியாளர்களுடன் சேர்ந்து ஏகாதிபத்திய முகாம் மேற்கொண்ட இராணுவத் தலையீட்டைத் தோற்கடிப்பதில் சோவியத் அரசு பெற்ற வெற்றி, ஜப்பானிய இராணுவ வெறியையும், ஜெர்மனியப் பாசிஸத்தையும் தோற்கடித்து 1941 - 1945ம் ஆண்டு தேசப் பாதுகாப்புப் போரில் சோவியத் யூனியன் பெற்ற மாபெரும் வெற்றி ஆகியவை லெனினின் சரியான ஆய்வுரையுடன் பிரிக்க முடியாதபடி பிணைக்கப்பட்டுள்ளன. கீழ்க்காணும் உண்மையை முழு உலகமும் அறியும்:- உலகின் முதல் சோவியத் அரசின் வலுமிக்க கிரம சேனையான சோவியத் செஞ்சேனை தான், ஆக்கிரமிப்புச் சேனைகளைத் தோற்கடிப்பதில் தீர்க்கமான மற்றும் நேரடியான பாத்திரம் வகித்தது. 36 கோடித் துருப்புகளையும், அதிநவீனப் போர்க் கருவிகளையும் கொண்டிருந்த பாசிஸ ஜெர்மனியினதும், இராணுவ வெறி கொண்ட ஜப்பானினதும் ஆக்கிரமிப்புச் சேனைகளைத் தோற்கடித்தது; சோஷலிசத் தாய்நாட்டில் இருந்து ஆக்கிரமிப்பாளர்களைத் துரத்தியடித்து, ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் உள்ள பல நாடுகளின் விடுதலைக்கான நேரடிப் பங்களிப்பைச் செய்தது; ஜெர்மனிய நாஜிகளைத் துரத்திச் சென்று அவர்களது மறைவிடங்களிலேயே அவர்களை ஒழித்துக் கட்டியது; இவ்வாறு பாசிஸ அபாயத்தில் இருந்து மனித குலத்தைக் காப்பாற்றியது.

செஞ்சேனையானது, எதிரியைக் காட்டிலும் தான் அரசியலிலும், திடசித்தத்திலும் முற்றிலும் மேம்பட்டது என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதை மட்டும் நிரூபிக்கவில்லை; எண்ணிக்கைப் பலம், போரிடும் மனிதர்களின் பண்புச் சிறப்பு, நவீன ஆயுதங்கள், கருவிகள் ஆகியவற்றின் எண்ணிக்கை அவற்றின் தரம், சேனையின் போர்த்திறன், கட்டளைகளை விடுத்துச் செயல்படுத்தும் கலை ஆகியவற்றிலும் கூட செஞ்சேனை எதிரியை விடச் சிறந்து விளங்கிற்று. இத்தகைய சக்தி படைத்திருந்ததன் காரணமாகத்தான் செஞ்சேனையால் எதிர் தாக்குதலையும், தாக்குதல் நடவடிக்கைகளையும் ஒரே நேரத்தில் மேற்கொள்ள முடிந்தது; ஒரே தாக்குதலில் ஏராளமான எதிரிப் படைப் பிரிவுகளை நிர்மூலமாக்க முடிந்தது; எதிரிகளின் தற்காப்புப்படை நிலைகளில் உடைசல் ஏற்படுத்தி அவற்றில் நுழைந்து, பரந்த பிரதேசங்களை விடுவித்து, போரின் தீர்மானகரமான திருப்புமுனைகளை ஏற்படுத்தி இறுதியில் மகத்தான வெற்றியைச் சாதித்தது.

சோஷலிச அரசின் இராணுவ அமைப்பு பற்றி மார்க்ஸ், ஏங்கெல்ஸ் ஆகியோரின் தத்துவத்தைப் புதிய வரலாற்று நிலைமைகளில் மேலும் வளர்த்து கிரமமான சோவியத் செஞ்சேனையைக் கட்டுதல் என்ற ஆய்வுரையை லெனின் உருவாக்கினர். அது, முதலாளிய உலகின் பகைமிக்க சுற்றிவளைப்பை சோவியத் அரசு எதிர்கொண்டிருந்த நிலைமையில் உருவாக்கப்பட்ட ஆய்வுரையாகும். இந்த ஆய்வுரையின் மதிப்பு கீழ்க்காணும் உண்மையில் தங்கியுள்ளது: ஏகாதிபத்திய காலகட்டத்தில் யுத்த வெறி மிக்க ஏகாதிபத்தியத்திடம் அதிநவீன ஆயுதங்களைக் கொண்ட பிரமாண்டமான ஆக்கிரமிப்புச் சேனைகள் இருக்கும் போது, சோஷலிச அரசு தனது பாதுகாப்பை உத்தரவாதம் செய்து கொள்ள ஆயுதமேந்திய மக்களை மட்டுமல்லாது ஒரு சக்தி வாய்ந்த கிரமமான நிலையான சேனையையும் கொண்டிருக்க வேண்டும் என்பதை லெனின் பாட்டாளி வர்க்கத்திற்குச் சுட்டிக் காட்டினர். புதிய மேம்பட்ட சமூக அமைப்பையும், தொடர்ந்து வளர்ச்சியடைந்து வரும் சோஷலிச, பௌதீக,



தொழில் நுட்ப அடிப்படையையும் சார்ந்தும், தனது அரசு யந்திரத்தைப் பயன்படுத்தியும், அதிகாரத்தில் உள்ள பாட்டாளி வர்க்கத்தால் இத்தகையதொரு சேனையை விரைவாகவும் எளிதாகவும் கட்ட முடிந்தது. இது ஒரு புதிய வகையான, நவீன சேனை; சோஷலிச அரசின் தேசிய பாதுகாப்புக்கான உறுதியான அரண்.

அப்படியாளுல் ஒரு கேள்வி எழுகிறது. இத்தகையதொரு வலுமிக்க, கிரம, நிலையான சேனையை சோஷலிச அரசு கட்டவேண்டி இருக்கையில் மக்களை ஆயுதபாணியாக்குதல் என்ற பிரச்சினை என்னவது?

மக்களை ஆயுதபாணியாக்குதல் என்ற அடிப்படையில் சோஷலிச செஞ்சேனையைக் கட்டுவது அவசியமானது என லெனின் கூறினர். அனைத்து ரஷ்ய தொழிலாளர்-விவசாயிகள்-போர் வீரர் சோவியத்துக்களின் மூன்ருவது காங்கிரசில் பேசுகையில் லெனின் ஒரு சம்பவத்தைக் கூறினர்: விறகு பொறுக்கிக் கொண்டிருந்த ஒரு மூதாட்டி ஒரு செஞ்சேனை வீரனைப் பார்க்கிருள்; அவனே ஜார் சேனையிலிருந்த படைவீரர்களைப் போல் விறகு கட்டைகளைக் கைப்பற்றுவதற்கு மாருக, அம் மூதாட்டி மேலும் விறகு பொறுக்க ஒத்தாசை புரிகின்ருன். இச் சம்பவத்தைக் கூறிய லெனின், செஞ்சேனை வீரர்களைப் பற்றி மக்கள் ஒரு வித்தியாசமான கருத்தை வெளிப்படுத்தியுள்ளனர் என்ருர். ''துப்பாக்கியோடு வருகிறவனைக் கண்டு இனிமேல் நாம் அஞ்ச வேண்டியதில்லை; ஏனெனில் இவன் உழைக்கும் மக்களைப் பாதுகாத்து, சுரண்டுவோரின் நுகத்தடியை தகர்த்தெறிவான் என்று அவர்கள் பேசுகின்ருர்கள்.''[19] என லெனின் கூறினர். அது ஒரு உண்மையான புரட்சிகரச் சேனை; ஒரு மக்கள் சேனை. செஞ்சேனைக்கும், ஆயுதமேந்திய மக்களுக்குமிடையிலான உறவுகள் பற்றி லெனின் கூறினர்: ''இப்படித்தான் மக்கள் கருது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறார்கள். எனவே செங்காவலர்கள் சுரண்டுவோர்களை உறுதியுடன் எதிர்த்துப் போராடுகிறார்கள் என்று கல்வியறிவில்லாத சாமான்ய மக்கள் பேசினால் இப் பிரச்சாரம் வெல்லப்பட முடியாத சக்தியாகி விடுகிறது. இது பல இலட்சக்கணக்கான மக்களின் உள்ளங்களில் பதியும்; 19ம் நூற்றாண்டில் பாரிஸ் கம்யூனால் ஆரம்பித்து வைக்கப்பட்டிருந்ததும், பாரிஸ் கம்யூன் முதலாளி வர்க்கத்தால் தோற்கடிக்கப்பட்டதன் காரணமாக அற்ப ஆயுளே பெற்றிருந்ததுமான ஒரு பணிக்கு அஸ்திவாரம் இடும். இப் பிரச்சாரமானது, **மக்களை ஆயுதபாணியாக்குதல் என்ற அடிப்படையில் சோஷலிச செஞ்சேனையைக் கட்டியெழுப்பும்** சோஷலிசவாதிகளின் கனவை நனவாக்கும்.''[20]

போல்ஷ்விக் கட்சியின் எட்டாவது காங்கிரசில் செஞ்சேனையைக் கட்டும் முயற்சிகளில் கவனம் குவிக்க வேண்டிய தேவையை வற்புறுத்திப் பேசிய லெனின், **கட்சியானது, மக்களின் குடிப்படை அமைப்பைத் தொடர்ந்து பேணிப் பாதுகாத்து வருகிறது** என்பதைச் சுட்டிக் காட்டினார். இக் காங்கிரஸ் நிறைவேற்றிய செயல்திட்டத்தில், உழைக்கும் மக்கள் அனைவருக்கும் இராணுவப் பயிற்சி கொடுத்தல், மறு ஒழுங்குக்குட்படுத்தப்பட்ட துருப்புகள், அரசு நிறுவனங்கள், தொழிற் சங்கங்கள், ஏழை விவசாயிகளின் அமைப்புகள் முதலானவற்றுக்கிடையே நெருக்கமான உறவுகளை ஏற்படுத்துதல் ஆகிய கடமைகள் சேர்க்கப் பட்டிருந்தன.

சோவியத் யூனியனில் அக்டோபர் புரட்சிக்குப் பிறகு புரட்சிகர மக்களின் ஆயுதப்படைகள், காவலர்கள், தொழிலாளர்கள்-ஏழை விவசாயிகளின் கெரில்லாப் படைப்பிரிவுகள் ஆகியன, எதிர்ப் புரட்சியாளர்களின் கலகங்களுக்கு எதிரான போராட்டத்தில் மிக முக்கிய பங்கு வகித்திருந்தன. தொழிலாளர்கள்-விவசாயிகள் செஞ்சேனை புதிதாகக் கட்டப்பட்ட போது அதன் மையக்கூறாக இருந்தவர்கள் இந்தச் 'செங்காவலர்கள்' தான்.

பத்து இலட்சம் பேர் கொண்ட வலுமிக்க சக்தியாக செஞ்சேனை வளர்வதற்கு முன்பு, நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இருந்த கெரில்லாப் படைகள், அந்நியத் தலையீட்டாளருக்கும், வெண்காவலர்களுக்கும் எதிரான மக்கள் போராட்டத்தின் முக்கிய சக்திகளில் ஒன்றாக இருந்தன. உள்நாட்டுப் போரின் போது பல்லாயிரக் கணக்கான கெரில்லாக்கள், செஞ்சேனையுடன் நெருக்கமாக ஒருங்கிணைந்து எதிரிப்படைக் குவிப்பைச் சுற்றிவளைத்து அதற்குப் பின்புறமிருந்து போரிட்டனர். கிரமமான சேனையின் பல படையலகுகள், படைவரிசைகள் உள்நாட்டுப் போரிலிருந்த கெரில்லாப் படைகளிலிருந்தே உருவாக்கப் பட்டன.

உள்நாட்டுப் போரில் பெற்ற வெற்றிக்குப் பிறகு, செஞ்சேனையின் எண்ணிக்கைப் பலத்தைக் குறைத்து அதன் தரத்தை உயர்த்தும் பணி நடைபெற்ற போதும், மக்களின் குடிப்படைகள் பல ஆண்டுகளுக்குத் தொடர்ந்து பேணப்பட்டு வந்தன; ஒவ்வொரு காலகட்டத்தினதும் திட்டவட்டமான நிலைமைகளுக்கேற்ப அவற்றின் வடிவங்கள் மாற்றியமைக்கப்பட்டு வந்தன.

ஸ்டாலின் தலைமையில் இருந்த சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ், 1941 - 1945ம் ஆண்டுகளில் நடந்த தேசப் பாதுகாப்புப் போரின் போது, கெரில்லாப் படைகள், குடிப்படைகள், ஆயுதபாணிகளான தொழிலாளர்கள் முதலானோரும் செஞ்சேனையுடன் சேர்ந்து தங்கள் தாய்நாட்டில் ஜேர்மனியப் பாசிஸத்தைத் தோற்கடிப்பதில் ஒரு மாபெரும் பங்கை வகித்தனர்.

தற்காலிகமாக ஜேர்மானியர்கள் வசம் இருந்த பகுதிகளில், கம்யூனிஸ்ட் கட்சியால் அமைப்புக்குள்ளாக்கப்பட்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிருந்த 10 இலட்சம் கெரில்லாப் போராளிகள் மிக வீரமிக்க போராட்டம் நடத்தினர். அவர்கள் இலட்சக் கணக்கான எதிரித் துருப்புக்களை நிர்மூலமாக்கினர்; ஜேர்மனியத் தரைப்படையின் வலிமையில் பத்தில் ஒரு பங்கை அவர்கள் நகரமுடியாதபடி செய்தனர். முக்கிய போர்முனைகளில் கூட, ஆயுதமேந்திய மக்கள் செஞ்சேனையோடு தோளோடு தோள் நின்று போரிட்டனர். சோவியத் தாய் நாட்டின் ஒவ்வொரு அங்குலத்தையும் பாதுகாத்தனர். விரிந்த அளவிலான இராணுவ நடவடிக்கைகளின் போது நூற்றுக்கணக்கான குடிப்படைப் பிரிவுகள் மக்களோடு சேர்ந்து, செஞ்சேனையுடன் ஒருங்கிணைந்து போரிட்டன. யுத்தப் பணிகளிலும் செஞ்சேனைக்குத் துணை நிற்கக்கூடிய பணிகளை மேற்கொள்வதிலும் அவர்களது சாதனைகள் நினைவில் இருந்து மறையாதவையாகும்.

சோவியத் செஞ்சேனை அடிப்படையான பங்கு வகித்த மாபெரும் தேசபக்தப் போரில், சோவியத் அரசின் நிலையான சேனையும், ஆயுதமேந்திய மக்களும் ஒருங்கிணைந்து போரிட்டதானது, நவீன நிலைமைகளில் நடத்தப்படும் மக்கள் யுத்தம் பற்றிய ஒரு பிரகாசமான சித்திரமாகும்.

சோவியத் மக்களும், செஞ்சேனைப் போராளிகளும் ஜேர்மனியப் பாசிஸத்திற்கு எதிராக 1941-45இல் நடந்த மக்களின் புனிதப் போரின் பிரமாண்டமான சக்தியைக் குறித்துப் பெருமிதம் கொள்கின்றனர். மக்களிடையே பிரபலமாக இருந்த ஒரு சோவியத் பாடலில் இப் பெருமிதம் பிரதிபலிக்கின்றது. இப் பாடல் வரிகளில் சில:

> ''மக்கள் யுத்தம்
> அது புனித யுத்தம்.''



அது சோவியத் இராணுவ விஞ்ஞானத்திற்குக் கிட்டிய வெற்றி; மக்கள் யுத்தம் பற்றிய மார்க்சிய - லெனினிய மார்க்கத்துக்கு கிட்டிய வெற்றி; இராணுவ அமைப்பைக் கட்டுவது பற்றி மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின் ஆகியோரால் வகுக்கப்பட்டதும், புதிய நிலைமைகளுக்கு சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியால் பிரயோகிக்கப்பட்டதுமான ஒரு கோட்பாட்டிற்கு கிட்டிய வெற்றி.

இரண்டாம் உலகப் போரின் போதும், அதன் பின்னரும் பல்வேறு நாடுகளில் உள்ள மக்களின் புரட்சிகர இயக்கங்கள் புயல்வேகத்தில் வளர்ந்து வந்தன; ஐரோப்பாவிலிருந்து ஆசியா வரையிலும் எங்கு பார்க்கினும் பல எழுச்சிகளும், புரட்சிப் போர்களும் வெடித்தன. பாசிஸத்துக்கு எதிராக செஞ்சேனை ஈட்டிய மகத்தான வெற்றி, உலக மக்களின் புரட்சிகரப் போராட்டத்தின் மகத்தான வெற்றி, பல சோஷலிச நாடுகள் தோன்றுவதற்கும் அவை ஒரு உலக அமைப்பாக அமைவதற்கும் வழிவகுத்தது.

சோஷலிசம், தேசிய விடுதலை, ஜனநாயகம், சமாதானம் ஆகியவற்றுக்காக உலக மக்கள் நடத்தும் போராட்டங்கள் ஏகாதிபத்தியத்தை இடைவிடாது தாக்கிவரும் ஒரு புரட்சிகரப் பேரவையைத் தோற்றுவித்துள்ளது.

அக்டோபர் புரட்சி தொட்டும், இரண்டாம் உலகப் போரின் போதும், அதன் பிறகும் தோன்றிய ஆயுதமேந்திய எழுச்சிகள், புரட்சிப் போர்கள் ஆகியவற்றின் சுவாலையில் தான் ஐரோப்பா, ஆசியா, லத்தீன் அமெரிக்கா ஆகியவற்றில் உள்ள சோஷலிச நாடுகளில் மக்களின் புரட்சிகர ஆயுதப்படைகள் பிறந்து துரிதமான வளர்ச்சியைப் பெற்றன. திட்டவட்டமான நிலைமைகளில் உள்ள வேறுபாடுகள், வெவ்வேறு வரலாற்றுப் பின்னணிகள் ஆகியவற்றின் காரணமாக சோஷலிச நாடுகளின் புரட்சிகர ஆயு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப் படைகளின் வரலாறுகளும், வளர்ச்சி மட்டங்களும், ஸ்தாபனக் கட்டமைப்புகளும் வெவ்வேருக உள்ளன. ஆனுல் அவற்றில் பெரும்பாலானவை உள்நாட்டுப் பிற்போக்குவாதிகளுக்கும், பாசிஸ ஆக்கிரமிப்புகளுக்கும் எதிராகப் போரிட்ட கெரில்லா இயக்கங்களிலிருந்து பிறந்தவை தான்; கெரில்லா இயக்கங்களிலிருந்தே சேனைகள் உருவாக்கப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்டன; அதே வேளையில் பல்வேறு வடிவங்களின் கீழ் மக்கள் திரளினரின் ஆயுதப் படைகளும் உருவாக்கப்பட்டன.

ஆசியாவில், ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், அதிகார வர்க்க முதலாளியம் ஆகியவற்றுக்கெதிரான நீண்ட, கடினமான ஆயுதமேந்திய போராட்டத்தில், சீன மக்கள் தொழிலாளர்கள் - விவசாயிகள் செஞ்சேனையை ஒழுங்கமைத்து, ''மக்கள் அனைவரையும் ஒன்றுதிரட்டி, மக்கள் அனைவரையும் ஆயுதபாணியாக்குதல்'' என்பதை நடைமுறைப்படுத்தி, ஒரு மகத்தான வெற்றியினை ஈட்டினர். வியட்நமிய மக்கள் ஆயுதமேந்திய எழுச்சிகளையும் புரட்சிகரப் போர்களையும் வெற்றிகரமாக நடத்தினர்; மக்கள் திரளினரை ஆயுதபாணியாக்கி, செஞ்சேனையைக் கட்டுதல் பற்றிய மார்க்சிய-லெனினிய ஆய்வுரைகளை ஆக்கபூர்வமாகப் பிரயோகிப்பதில் பெறும் வெற்றிக்கு ஒரு சிறப்பான எடுத்துக் காட்டாக இருப்பன பொதுமக்களின் ஆயுதப்படைகளாகும்; இது பற்றி நாம் பின்வரும் அத்தியாயங்களில் விளக்குவோம்.

பல்வேறு போராட்ட வடிவங்கள் மூலம், பல காலனிகளும், சார்பு நாடுகளும் கூட பல்வேறு அளவிலான சுதந்திரத்தை வென்றெடுத்துள்ளன.

பல நாடுகள் ஆயுதப் போராட்டத்தின் மூலம் சுதந்திரம் பெற்றுள்ளன. அவை தேசிய நாடுகளாகியுள்ளன.



இவற்றில்; தீவிர ஏகாதிபத்திய எதிர்ப்பும், காலனிய எதிர்ப்பும் காட்டிய சில நாடுகளில் தேசிய அரசு அதிகாரத்தின் சேனைகளை ஒழுங்கமைப்பதன் மூலம், அதே வேளையில் மக்களையும் ஓரளவுக்கு ஆயுதபாணிகளாக்கியும், தமது ஆயுதப்படைகளைக் கட்ட முயற்சி செய்துள்ளன.

தற்போது அதிகாரத்தையும், தேசிய சுதந்திரத்தையும் வென்றெடுக்க, ஆயுதப் போராட்டங்களை நடத்திவரும் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாட்டு மக்கள், தமது திட்டவட்டமான நிலைமைகளில் புரட்சிகர ஆயுதப் படைகளை ஒழுங்கமைப்பதற்கு மேற்காணும் அனுபவங்களிலிருந்து கற்ற பாடங்களைப் பிரயோகித்துக் கொண்டிருக்கின்றனர்.

அமெரிக்காவைத் தலைவனுகக் கொண்ட ஏகாதிபத்தியம் பல திசைகளிலிருந்தும் தாக்குதல்களுக்குட்பட்டு தோல்விக்கு மேல் தோல்விகளைச் சந்தித்து வருகிறது. இதன் காரணமாக அது, உலக மக்களின் புரட்சிகரப் போராட்டங்களை எதிர்க்க நயவஞ்சகமானதும், கொடூரமானதுமான கொள்கைகளைப் பின்பற்றி, தனது சிறப்புரிமைகளையும், நலன்களையும் பேணிப் பாதுகாத்துக் கொள்ள முயல்கின்றது. இராணுவச் செலவுகளை அதிகரிக்கவும், ஆயுதப் போட்டியைக் கடுமையாக்கவும், பேரழிவு ஏற்படுத்தக் கூடிய ஆயுதங்களை உற்பத்தி செய்வதிலும், எல்லாவிடங்களிலும் இராணுவத் தளங்களை நிறுவுவதிலும், இராணுவக் கூட்டொப்பந்தங்களைச் செய்து கொள்வதிலும் கடும் பிரயத்தனம் செய்கின்றது; இடைவிடாத இராணுவத் தலையீடுகளை மேற்கொள்கிறது. 'விசேடமான' மற்றும் 'வரம்பு செய்யப்பட்ட' ஆக்கிரமிப்பு யுத்தங்களைச் செய்கின்றது; ஒரு புதிய உலக போருக்கான தயாரிப்பைச் செய்கிறது.

சோஷலிசத் தாய்நாட்டையும், உலக சமாதானத்தையும் பாதுகாக்கவும், ஏகாதிபத்தியத்தின் போர்த் திட்டங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளையும் சூழ்ச்சிகளையும் முறியடிக்கவும் சோஷலிச நாடுகள் தமது பாதுகாப்புத் திறன்களை வலுப்படுத்திக் கொள்ள கடும் முயற்சி செய்கின்றன; அதே வேளையில் பொருளாதார நிர்மானப் பணியிலும், விஞ்ஞான தொழில் நுணுக்க வளர்ச்சியிலும் தொடர்ந்து ஈடுபட்டுள்ளன. மேன்மையான சோஷலிச சமூக அமைப்பையும், சோஷலிசத்தினதும், கம்யூனிசத்தினதும் பௌதீக தொழில் நுணுக்க அடிப்படையைக் கட்டுவதில் ஈட்டியுள்ள சாதனைகளையும் சார்ந்து நின்று, சோஷலிச நாடுகள் தமது திட்டவட்டமான நிலைமைகளுக்கு ஏற்ற வகையில் நவீனமயமான புரட்சிகரச் சேனைகளைக் கட்டுவதில் ஈடுபட்டுள்ளன. சோஷலிச சேனைகளின் புரட்சிகரத் தன்மையை அந் நாடுகள் இடைவிடாது உயர்த்திக் கொண்டேயிருக்கின்றன; அணு ஆயுதங்கள், ஏவுகணைகள், மரபு வழி ஆயுதங்கள் உள்ளிட்ட புதிது புதிதான நவீன ஆயுதங்களையும், சாதனங்களையும் இச் சேனைகளுக்கு வழங்கி வருகின்றன.

ஒரு நவீன சேனையைக் கட்டுவதில் சோஷலிச நாடுகள், ஒரு விரிந்த அளவிற்கு தொழிலாளர்கள், கூட்டுப் பண்ணை விவசாயிகள் ஆகிய மக்கள் திரளினரை ஆயுதபாணியாக்குவதற்கு பெருங்கவனம் தருகின்றன. மக்களின் ஆயுதப்படைகளின் வடிவங்களும், அவற்றின் ஆயுதங்களும், சாதனங்களும் இந் நாடுகளின் தேவைகளுக்குப் பொருந்துகின்ற வகையில் உருவாக்கப்படுகின்றன. தேசிய பாதுகாப்பை வலுப்படுத்துவதிலும், நாட்டைக் காப்பதிலும் மக்கள் சக்தியையும், சோஷலிச அமைப்பின் சக்தியையும் மிக உயர்ந்த அளவிற்கு வளர்க்கும் நோக்கத்தோடேயே இவை செய்யப்பபடுகின்றன.

மேலே குறிப்பிட்ட தத்துவார்த்த நடைமுறை அடிப்படையிலிருந்து நாம் வகுத்துக் கொள்ள வேண்டிய முடிவுகள் என்ன? கீழ்வரும் முடிவுகளே அவை:



புரட்சிகர மக்களை ஆயுதபாணியாக்குதல் என்பதை புரட்சிகரச் சேனையைக் கட்டுதல் என்பதோடு இணைத்துச் செய்தல் என்பது தான், சோஷலிச நாடுகளின் பாதுகாப்பு அமைப்பின் இராணுவ அமைப்பு வடிவம்; விடுதலைப் போர்களின் இராணுவ அமைப்பு வடிவம், நம் காலத்தில் மக்கள் நடத்தும் தேசிய விடுதலைப் போர்கள், புரட்சிகரப் போர்கள் ஆகியவற்றின் இராணுவ அமைப்பு வடிவம் ஆகியன பற்றிய முழுமையான மார்க்சிய-லெனினிய கோட்பாடாகும். மக்களை ஆயுதபாணியாக்குதல் என்பது மார்க்ஸ், ஏங்கெல்ஸ் ஆகியோரின் ஆய்வுரை; இதை விரிவுபடுத்தி மக்களை ஆயுதபாணியாக்குதல் என்பதை அடிப்படையாகக் கொண்டு புரட்சிகரச் சேனையைக் கட்டுதல் என்பது லெனினின் ஆய்வுரை; நாம் மேலே கூறியது மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின் ஆகியோரது ஆய்வுரைகளின் விரிவாக்கமேயாகும்.

மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின் ஆகியோர் பாட்டாளி வர்க்கமும், ஒடுக்கப்பட்ட மக்களும் இராணுவ அமைப்புகளைக் கட்டுவதில் பெற்ற அனுபவத்தை இவ்வாறு தொகுத்துக் கூறியுள்ளனர். இந்த இராணுவ அமைப்புகள், அதிகாரத்தைக் கைப்பற்றி அதைப் பாதுகாக்க பாட்டாளி வர்க்கமும், ஒடுக்கப்பட்ட மக்களும் நடத்திய நீடித்த புரட்சிகரப் போராட்டத்தின் போது கட்டியமைக்கப்பட்டவையாகும். ஓரளவிற்கு இது மார்க்சியம் தோன்றுவதற்கு முன்னைய வரலாற்றுக் காலகட்டங்களில் புரட்சிகர வர்க்கங்களும், ஒடுக்குமுறைக்கும் ஆக்கிரமிப்புக்கும் இலக்கானவர்களும் ஆயுதப் படைகளை அமைப்பதில் பெற்ற அனுபவத்தின் தொடர்ச்சியாகவும், அதன் ஆக்கபூர்வமான வளர்ச்சியாகவும் இருக்கின்றது என்றும் கூறலாம்.

முதலாளி வர்க்கம், ஏகாதிபத்தியவாதிகள், நிலப்பிரபுக்கள் ஆகியோரின் ஆட்சியைத் தூக்கியெறிவதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்சிகளைப் பாட்டாளி வர்க்கமும், உழைக்கும் மக்களும், ஒடுக்கப்பட்ட மக்களும் தொடக்குகையில் அவர்களிடம் சேனை ஏதும் இருக்கவில்லை; எந்தப் பலமுமில்லாமல் தான் புரட்சியைத் தொடங்கினர். புரட்சியின் போக்கில், ஆயுத மேந்திய போராட்டம், ஆயுத எழுச்சி என்ற பிரச்சினை எழுந்த போது, பாட்டாளி வர்க்கமும், உழைக்கும் மக்களும், ஒடுக்கப்பட்ட மக்களும் தமது சொந்த இராணுவ அமைப்புகளை உருவாக்க வேண்டியிருந்தது. இந்த இராணுவ அமைப்பின் ஆரம்ப வடிவம் ஆயுதபாணியாக்கப் பட்ட மக்கள் என்பது நியதியாகி விட்டது; புரட்சிச் சேனை, ஆயுதபாணியாக்கப்பட்ட மக்கள் என்ற அடித்தளத்திலிருந்து படிப்படியாகக் கட்டப்பட்டது. ஆயுதமேந்திய எழுச்சிகளில் வழக்கமாக முதன்மைப் பாத்திரம் வகிப்பது ஆயுத மேந்திய மக்கள் தான்; சில சமயங்களில் அதிர்ச்சிப்படைப் பாத்திரம் புரட்சிகரச் சேனையால் வகிக்கப்பட்டது. எழுச்சிகள், புரட்சிகரப் போர்களாக வளர்ச்சி பெற்ற போது சேனையின் முக்கியத்துவம் மென்மேலும் அதிகரித்து வந்தது; புரட்சிகர ஆயுதப் படைகள் என்பன சேனை, ஆயுதமேந்திய மக்கள் இரண்டையும் உள்ளடக்கியாயின.

கிரம மற்றும் நிலையான புரட்சிகரச் சேனையைக் கட்டுதல் என்ற பிரச்சினையை, பாட்டாளி வர்க்கமும், உழைக்கும் மக்களும் அதிகாரத்தை வென்றெடுத்துத் தங்களுக்கென ஒரு அரசைப் பெற்றிருக்கையில் தான் தீர்க்க முடியும். **சோஷலிச அரசின், மக்கள் ஜனநாயக அரசின் இராணுவ அமைப்பு வடிவம், ஒரு கிரமமான நவீன ரக புரட்சிகரச் சேனை, ஒரு பரந்த அளவில் ஆயுதபாணியாக்கப்பட்ட மக்கள் திரளினர் ஆகிய இரண்டும் இணைந்ததாகும்.** சோஷலிச அரசு, மக்கள் ஜனநாயக அரசு மக்களின் போர் ஆற்றலையும், தனது போர் ஆற்றலையும் உயர்ந்த பட்சம் வளர்க்கும் ஆற்றல் பெற்றிருக்கின்றது. ஆயுதமேந்திய மக்களும், புரட்சிகரச் சேனையும் அரசின் ஆயுதப் படைகளின் இரு கூறுகளாகும். இதில் நிலையான சேனையே மையக்கூறு; ஆயுதமேந்திய மக்களோ விரிவுபடுத்தப்பட்ட சக்தியாகும். அதனால்தான், ஆயுதபாணியாக்கப்பட்ட மக்கள் படைகளை வளர்க்கும் போதே சேனையைக் கட்டுவதற்குக் கவனம் செலுத்தப்பட வேண்டும். **மேலே சொல்லப்பட்ட இரு கூறுகளும் சோஷலிச அரசின் ஆயுதப் படைகளில் நெருக்கமாக இணைந்திருப்பது** சுரண்டும் அரசுகளை விட சோஷலிச அரசு முற்றிலும் மேம்பட்டதாக இருப்பதற்கு ஒரு காரணமாகும்.



சுரண்டும் வர்க்கங்களின் அரசு ஆட்சிகளில் ஆளும் வர்க்கங்களின் நலன்களும், உழைக்கும் மக்களின் நலன்களும் ஒன்றுக்கொன்று முற்றிலும் முரண்பட்டிருப்பதால், ஒரு புறம் பரந்துபட்ட மக்களுக்கும் மற்றொரு புறம் அரசு மற்றும் அதன் நிலையான சேனை ஆகியவற்றிற்கும் இடையில் ஓர் அடிப்படையான முரண்பாடு நிலவுகின்றது. ஆயுதமேந்திய புரட்சிகர மக்கள் தனக்கு ஒரு ஆபத்தாகும் என்று ஆளும் அரசு கருதுகிறது. பிற்போக்கு ஆட்சியாளர்கள், மக்களை ஆயுதபாணியாக்குவதை விட எதிரியிடம் நாட்டை ஒப்படைத்துவிடத் தயாராக இருப்பார்கள். இவர்கள் மக்களோடு ஐக்கியப்படுவதற்குப் பதிலாக தங்கள் வர்க்கத்தைச் சேர்ந்த கொடிய எதிரியுடன் சமரசம் செய்து கொள்வார்கள் என ஏங்கெல்ஸ் ஒரு முறை குறிப்பிட்டார். நிலப்பிரபுத்துவ வர்க்கமும், முதலாளி வர்க்கமும், அவை வரலாற்றில் முற்போக்குப் பாத்திரம் வகித்துக் கொண்டிருந்த காலகட்டத்தில், தேசிய உணர்வு கொண்டிருந்த சமயத்தில், ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து நிலையான சேனையுடன் தோளோடு தோள் நின்று போரிட மக்களை ஆயுத பாணிகளாக்கிய சம்பவங்களும் உண்டு. ஆனால் அப்போதெல்லாம் மிகவும் வரம்புக்குட்பட்ட அளவிலேயே மக்கள் ஆயுதபாணியாக்கப் பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோஷலிச ஆட்சியிலோ, நிலைமை முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது. சுரண்டும் வர்க்கங்கள் தூக்கியெறியப்பட்டுள்ளன; மனிதனை மனிதன் சுரண்டும் முறை ஒழித்துக் கட்டப் பட்டுள்ளது. உழைக்கும் மக்களின் கூட்டுத் தலைமை நிறுவப் பட்டுள்ளது. தேசிய மற்றும் கூட்டுடமை முறை உருவாக்கப்பட்டுள்ளது. பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசின் பிரதான வன்முறைக் கருவியான சோஷலிச ஆயுதப் படைகளின் செயல்பாடு, புதிய ஆட்சியைப் பாதுகாப்பதும், உள்நாட்டு, வெளிநாட்டுப் பகைவர்களை நசுக்குவதும், உழைக்கும் மக்களின் நலன்களைப் பாதுகாப்பதும் ஆகும். புதிய சமுதாயத்தில் உள்ள இந்த உயர்ந்த அரசியல் மற்றும் தார்மீகத் தனித் தன்மையும் தொடர்ந்து வளர்ச்சி பெற்றுவரும் சோஷலிசப் பௌதீக தொழில்நுட்ப சக்திகளும், புதிய வகை நவீன ஆயுதப் படைகளைக் கட்டி புரட்சிகரச் சேனையினதும், ஆயுதமேந்திய மக்களினதும் ஒன்றிணைந்த போராற்றலைப் புதிய மட்டங்களுக்கு உயர்த்துவதற்கான மிக உறுதியான அடிப்படையாக அமைகின்றன. வரலாற்றில் முதல் முறையாக தொழிலாளர்களையும், விவசாயிகளையும் ஆயுதப் படைகளில் சேர்த்திருப்பவை சோஷலிச அரசின் ஆயுதப் படைகள்தான். இந்தத் தொழிலாளர்களும், விவசாயிகளும் தமது எதிர்காலத்தை தாமே தீர்மானிப்பவர்களாக விளங்குகின்றனர்; மிக உயர்ந்த அரசியல் உணர்வைப் பெற்றுள்ள இவர்கள் சோஷலிச, கம்யூனிச இலட்சியத்திற்காக அனைத்தையும் தியாகம் செய்யத் தயாராக இருப்பவர்கள். அவர்கள் வெல்லப்பட முடியாத ஆயுதப் படையினர் ஆவர்.



# II

## ஆயுதப் படைகளைக் கட்டியமைப்பதில் நம் மக்களுக்குள்ள மரபும் அனுபவமும்

பாட்டாளி வர்க்கத்தின் இராணுவ அமைப்பு பற்றிய மார்க்சிய - லெனினிய ஆய்வுரைக்கு அடிப்படையாக அமைந்தவை: பிரதானமாக முதலாளிய மற்றும் ஏகாதிபத்தியக் காலகட்டத்தில் ஐரோப்பாவில் நடந்த பாட்டாளி வர்க்கப் புரட்சிகள், தேசிய விடுதலைப் போர்கள் ஆகியவற்றின் நடைமுறையும் அனுபவங்களும்; பல்வேறு வர்க்கங்களும், மக்களும் வெவ்வேறு சகாப்தங்களில் நடத்திய இராணுவப் போராட்டங்களினதும் அவர்கள் உருவாக்கிய இராணுவ அமைப்புகளினதும் நடைமுறையும் அனுபவங்களும்.

அந்நியர் ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டம் பற்றியும் நம் மக்களின் இராணுவ அமைப்பு பற்றியுமான வரலாற்றை நாம் கற்கும் போது, பல ஐரோப்பிய நாடுகளின் இராணுவப் போராட்டங்களுக்கும், இராணுவ அமைப்புக்கும் மாறுபட்ட அடிப்படையான அம்சங்களை நாம் இவ்வரலாற்றில் காண்ணுறுகிறோம். நாடு தழுவிய எழுச்சிகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் யுத்தம், மக்களை ஆயுதபாணியாக்குதல் சம்பந்தமாக 19ம் நூற்றாண்டு ஐரோப்பாவில் என்னென்ன நிகழ வேண்டாமென ஏங்கெல்ஸ் விரும்பினாரோ, அவையெல்லாம் நம் நாட்டில் பல நூற்றாண்டுகளுக்கு முன், நிலப்பிரபுத்துவக் காலத்திலேயே பல முறை நடந்திருக்கின்றன. நாடு தழுவிய எழுச்சி, மக்கள் யுத்தம், பாட்டாளிகளுடையவும், விடுதலைக்குப் போராடும் தேசங்களுடையவுமான இராணுவ அமைப்பு ஆகியவற்றுக்கான கோட்பாடுகளை உருவாக்குவதில் மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின் ஆகியோரின் மேதாவிலாசத்தை, நம் மக்களின் நேரடியான, ஒளிமிக்க, வளமான நடைமுறையும் அனுபவமும் மேலும் வலுவாக நிருபித்துக் காட்டியுள்ளன.

பல மேலைநாடுகளும், நிலப்பிரபுத்துவம் சிதைவுற்று முதலாளியம் தோன்றிய காலத்தில் தான் தேசங்களாக உருப்பெற்றன. ஆனால் நமது தேசமோ கடந்த காலத்தில் அந்நிய நிலப்பிரபுத்துவத்தின் ஆக்கிரமிப்புக்கும் ஆட்சிக்கும் எதிரான போராட்டங்கள் மூலமாக உருவாகி வளர்ந்ததாகும். **நமது வரலாற்றில் பல நூற்றாண்டுகளாக அநேக தேசிய எழுச்சிகளும், போர்களும் தொடர்ச்சியாக நடைபெற்று வந்துள்ளன.**

வியட்நாம், மனிதகுல நாகரீகத்தின் தொட்டில்களில் ஒன்றாகும். ஹுங் (Hung) மன்னர்கள் வான் லாங் (Van Lang) அரசைத் தோற்றுவித்த காலந் தொட்டு, கடந்த சுமார் 2000 ஆண்டுகள் நெடுக, இயற்கைக்கும் பிற பழங்குடிகளுக்கும் எதிரான போராட்டங்களில் வியட் பழங்குடிகள் படிப்படியாய் வலுவான தளப்பிரதேசங்களை உருவாக்கின. இதிலிருந்து தான் வியட் தேசம் பிறப்பெடுத்தது. இப் பழங்குடியினர் குறிப்பிட்ட நிலப்பகுதியில் நீண்ட காலம் வாழ்ந்தனர். தமக்கேயுரிய மொழியைப் பெற்றிருந்தனர். குறிப்பிட்ட வளர்ச்சி மட்டத்தோடு கூடிய



பொருளாதாரத்தையும் சமூக அரசியல் அமைப்பையும் நிறுவினர். தமக்கேயுரிய பண்பாட்டு-ஒழுக்கவியல் மரபுகளைப் படைத்தனர். இவ்வாறு நம் மக்கள் ஒரு தேசிய உணர்ச்சியையும் உணர்வையும் வளர்த்துக் கொண்டனர். மிக ஆரம்பக் காலத்திலிருந்தே தம் நிலத்துக்கு தாமே எஜமானர்கள் என்ற உணர்வை வளர்த்துக் கொண்டனர். அவர்கள் வலுவான ஆற்றல்கள் பெற்றிருந்தனர். சக்திமிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிரான போராட்டங்களில், தம் சுதேச நிலத்தைத் தக்கவைத்துக் கொள்வதில் வியட்நாம் மக்கள் வெற்றி பெற்றனர். தீரத்தோடும் மதியூகத்தோடும் அவர்கள் போரிட்டார்கள்; தளரா ஊக்கத்துடனும் விடாப்பிடியுடனும் பாடுபட்டார்கள்.

நமது தேசம் வளமானது, அழகானது. பரவலான இயற்கை மூலவளங்களைக் கொண்டது. அது தென் கிழக்காசியாவின் இராணுவ முக்கியத்துவமுள்ள பகுதியாக உள்ளது. வட, தென் தேசங்களும் கிழக்கு, மேற்கு தேசங்களும் சந்திக்கும் முக்கியமான நீர், நில மார்க்கங்களின் சந்திப்பாய் நம் தேசம் உள்ளது. இதனால் தான் வலுமிக்க ஆக்கிரமிப்புச் சக்திகள் எப்போதும் நம் நாட்டைத் தாக்க முயன்றும், சூழ்ச்சி செய்தும் வந்துள்ளன. நம் மக்களை அடிமைப்படுத்திச் சுரண்டுவதும், நம் நிலத்தைத் துவக்கப் புள்ளியாய்க் கொண்டு மற்ற திசைகளில் தம் செல்வாக்கைப் பரப்புவதுமே ஆதிக்க சக்திகளின் நோக்கமாக இருந்தது. எனவே நம் மக்கள் தம் வரலாறு நெடுகிலும் தொடர்ச்சியாக ஆக்கிரமிப்புப் போர்களை எதிர்கொள்ளவும், தாய் நாட்டையும் அதன் தேசிய விடுதலையையும் காக்கும் பொருட்டு போர்கள் தொடுக்கவும் நேர்ந்தது. தேசிய சுதந்திரத்தை திரும்பப் பெற எழுச்சிகள் நடத்தவும், விடுதலைப் போர்கள் நடத்தவும் நேர்ந்தது. இந்த எழுச்சிகள் மூலமும் போர்கள் மூலமும் தேசிய உணர்வு, தேசிய உணர்ச்சி, தனது நாட்டுக்குத் தானே அதிபதி என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வு, தேச சுதந்திரத்தைக் காக்கவும் திரும்பப் பெறவும் போராடும் தீர்க்கமான உறுதி போன்றவை வளர்ந்து வந்தன. நம் மக்கள் படிப்படியாக ஒரு மதிப்புமிகு மரபை உருவாக்கி அதைச் செழுமைப்படுத்தி வந்தனர்; அந்நிய ஆக்கிரமிப்புக்கு எதிராகவும், சுதந்திரத்துக்காவும், விடுதலைக்காகவும் தீரத்துடன் போராடிய மரபே அது.

நமது நாடு பரப்பிலும் மக்கள் தொகையிலும் சிறிய நாடு. கிறிஸ்தவ சகாப்தத்தின் துவக்கத்தில் நமது மக்கள், இப்போது பாக் போ (Bac Bo), வட டிரங் போ (Trang Bo) என அழைக்கப்படுகிற பிரதேசத்தில் தான் பிரதானமாய் வசித்து வந்தனர். டிரங் சகோதரியர் காலத்தில் நம் மக்கள் தொகை சுமார் 10 இலட்சமாகும். பிற்பாடு நமது பிரதேசம் விஸ்தரிக்கப் பட்டது. நமது மக்கள் தொகையும் அதிகரித்தது. இருப்பினும் ஆக்கிரமிப்பாளர்கள் வசம் வலுவான படைகள் எப்போதும் இருந்து வந்தன. நம் மக்கள் தம் சிறிய படையைக் கொண்டு பெரிய எதிரிப் படைகளை எதிர்க்க வேண்டிவந்த சூழ்நிலையில், சொந்த நாட்டைக் காக்கவும், கொடிய எதிரிகளை வீழ்த்தவும் வேண்டி அனைத்து மக்களையும், தேசம் முழுவதையும் படையாய் அமைக்க வேண்டியதாயிற்று. சேனையை மட்டும் நம்பிக் கொண்டிருக்க முடியவில்லை.

அந்நியராதிக்கத்தை எதிர்த்த நம் மக்களின் போராட்டங்கள் அனைத்தும் நீதியானவையாகவே இருந்தன. நமது மக்களிடம் எப்போதும் ஆழமான தேசபக்தி, உயர்ந்த பட்ச தேசிய ஒற்றுமையுணர்வு, இறையாண்மை உணர்வு, எண்ணிக்கைப் பலங்கூடியவர்களை எதிர்த்துப் போராடுவதில் தளராத உறுதி ஆகியவை நிரம்பியிருந்தன. இதனால் தான் நம் வரலாற்றில் நடந்த தேசிய எழுச்சிகளிலும், போர்களிலும் இராணுவ அமைப்பைப் பொறுத்தவரை, எழுச்சிப் படைப் பிரிவுகளாகவோ தேசியச் சேனையாகவோ ஒழுங்கமைக்கப்பட்ட ஆயுதந் தாங்கிய மக்களே படைகளாக அமைந்திருந்தனர். பொதுவாக, ஆயுதந் தாங்கிய மக்களும், தேசியச் சேனையும் சேர்ந்தே இயங்கின. அந்நிய ஆக்கிரமிப்புக்கு எதிராக 'தேசம் முழுவதும் படைகளில் சேர்வது' என்ற மரபை நம் மக்கள் உருவாக்கி வளர்த்தனர்.[21] இதனைத் தான், 13ம் நூற்றாண்டிலேயே தேசிய வீரனான டிரான் குவாக் துவான் (Tran Quoc Tuan) வெற்றிக்கு அடிப்படையான வழியாக்கிக் கொண்டான்.[22] அவனுக்கு முன் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக நம் மக்களுக்கிருந்த போர் அனுபவத்தின் அடிப்படையிலிருந்தே இந்த கோட்பாட்டை அவன் வகுத்தான். அந்தக் கோட்பாடு தான் நம் காலத்தில் 'அனைத்து மக்களின் ஒற்றுமை' என்ற மார்க்கமாகப் பரிணமித்தது. டிரான் காலத்தில்தான் 'ஒவ்வொருவனும் ஒரு போர் வீரனாவது' என்பது சொல் வழக்குக்கு வந்தது.[23] மிகவும் பழங்காலத்திலிருந்தே வந்த மற்றொரு சொல் வழக்கும் உண்டு. அதாவது 'எதிரி நம் வீட்டை நெருங்கினால் பெண்கள் கூட சண்டை செய்ய வேண்டும்.' நம் நாட்டின் வாழ்விலும் போராட்டங்களிலும் இது மிக சகஜமான நடைமுறையாக நிலவியது.

நம் நாட்டின் தேசிய எழுச்சிகளிலும், போர்களிலும் மக்கள் திரளினர் பங்கேற்பதும் 'தேசம் முழுவதும் படைகளில் சேர்வதும்' அனைத்து மக்களும் சேர்ந்து எதிரியை எதிர்ப்பதுமாகிய மரபு இருந்து வருவதன் காரணமாக, நமது வரலாற்றில் தேசிய எழுச்சிகளும், தேசியப் போர்களும் நீண்ட காலமாகவே மக்கள் எழுச்சிகளாகவும், மக்கள் யுத்தங்களாகவும் இருந்து வந்துள்ளன என்பதை நம்மால் உறுதியாக சொல்ல முடியும். அந்த மக்கள் எழுச்சிகளையும், மக்கள் யுத்தங்களையும் முதன்மையாய் நிலப்பிரபுத்துவ வர்க்கமே நடத்தியது. இவை அடிக்கடி நடந்தன. வழி நடத்தும் வர்க்கம், வரலாற்று நிலைமைகள் ஆகியவை சம்பந்தமான வரம்புகள் ஒருபுறம் இருப்பினும் இந்த யுத்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களும், எழுச்சிகளும் நல்ல வளர்ச்சியை எட்டின. இப்போது ஒரு கேள்வி எழுகிறது? இத்தகையப் போராட்டங்களில், நமது தேசத்துக்குள்ளும் இராணுவ அமைப்புக்குள்ளும் நடக்கக்கூடிய வர்க்கப் போராட்டங்களின் நிலை என்ன?

வர்க்கப் பகைமையால் பிரிக்கப்பட்டுள்ள எல்லா வர்க்க சமுதாயங்களையும் போலவே நமது வியட்நாமிய சமுதாயமும், தேசத்துக்குள் நடந்த கடுமையான வர்க்கப் போராட்டங்கள் வழியேதான் பரிணமித்து வந்துள்ளது. இந்தப் போராட்டங்கள் முதன்மையாய் நிலப்பிரபுத்துவ வர்க்கத்துக்கும், விவசாயிகள் வர்க்கத்துக்கும் இடையில் நடந்தன. நம் நாட்டில் நிலப்பிரபுத்துவ அரசின் சேனையானது, அந்நிய ஆக்கிரமிப்பாளர்களுடன் சண்டையிடுவது, பிற நாடுகளுடன் ஆக்கிரமிப்புப் போர்கள் தொடுப்பது ஆகிய வெளிநாட்டு நடவடிக்கைகளுடன், மக்களை-முக்கியமாக விவசாயிகளை-ஒடுக்குகிற நடவடிக்கைகளையும் மேற்கொண்ட நிலப்பிரபுத்துவ வர்க்கத்தின் கருவியாகவும் இருந்தது. தேசத்துக்குள் வர்க்கப் பகைமை முற்றியிருந்த சமயங்களில் (பெரும்பாலும் இச் சமயங்களில் எந்த அந்நிய ஆக்கிரமிப்பும் இருக்கவில்லை) மிகுந்த புரட்சியுணர்வும், ஜனநாயக உணர்வும் கொண்டோரான வியட்நாமிய விவசாயிகள் கடுமையான போராட்டங்களை பலமுறை நடத்தியுள்ளனர்; தம் ஆயுதப் படைகளை ஒழுங்கமைத்து நிலப்பிரபுத்துவத்துக்கு எதிராக விவசாயிகளின் எழுச்சிகளையும், விவசாயிகளின் போர்களையும் நடத்தினர். இது ஒரு முக்கியமான பிரச்சினை. ஆனால் இக் கட்டுரையின் வரம்புக்கு அப்பாற்பட்டதாகும்.

சமாதான காலத்தில் அந்நிய ஆக்கிரமிப்பு அபாயம் ஏற்படும் போதோ, தொடர்ந்து அந்நிய ஆக்கிரமிப்புப் படைகள் அச்சுறுத்தும் போதோ நமது நாட்டுக்கும் அந்நிய நிலப்பிரபுத்துவ ஆக்கிரமிப்பாளர்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் முன்னணிக்கு வந்தன. இந்நிலையில் நாட்டிலுள்ள பல்வேறு வர்க்கங்களும் ஒன்று திரண்டன. தற்காலிகமாக தமக்கிடையிலான முரண்பாடுகளைப் பின்னுக்குத் தள்ளின. அந்நிய ஆக்கிரமிப்புக்கு எதிராக தேசம் முழுவதன் படைகளையும் ஒருங்கு திரட்டின. ஒரு சில நிலப்பிரபுக்கள் மட்டும் தேசத்துக்கு துரோகம் செய்து ஆக்கிரமிப்பாளர்களுக்கு சரணடைந்தார்கள். மார்க்சியப் பார்வையில், தேசியப் போராட்டமும் வர்க்கப் போராட்டத்தின் ஒரு வடிவம் தான். எனவே நம் நாட்டில் அக் காலகட்டத்தில் நிலப்பிரபுக்களும், விவசாயிகளும் ஒன்றுசேர்ந்து, ஆக்கிரமிப்பு செய்த அந்நிய நிலப்பிரபுத்துவத்தை எதிர்த்து நடத்தியது வர்க்கப் போராட்டம் தான். நம் நாட்டு நிலப்பிரபுத்துவ வர்க்கம் தன் ஆரம்ப காலகட்டத்தில், தேசிய உணர்வும் கொண்டிருந்தது. அந்நிய ஆக்கிரமிப்பை எதிர்க்குமாறு மக்களை ஊக்குவிக்கும் சில ஜனநாயக நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொண்டனர். ஆட்சிக்கு 'ஆழமான வேர்களையும், உறுதியான தளங்களையும்' உருவாக்கத் தேவையான 'மக்கள் படைகளைப் பேணிப் பராமரித்தல்' என்ற கருத்து டிரான் குவாக் துவானுக்கு இருந்தது. இது 'நாட்டின் பாதுகாப்புக்கு நல்லதொரு கொள்கையாகும்' என அவன் கருதினான். இதனால் தான் நம் நாட்டின் தேசிய இயக்கத்தை - நமது வரலாற்றில் நிலப்பிரபுத்துவ வர்க்கம் ஆக்கபூர்வமான பங்காற்றிய காலம் வரை - நிலப்பிரபுத்துவ வர்க்கத் தலைமையிலிருந்தும் அதன் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளில் இருந்தும் பிரித்துவிட முடியாதிருந்தது. மேலும் அவ் வர்க்கத்தை, தீவிர தேசபக்தர்களும் நம் மக்களில் மிகப் பெரும்பான்மையானவர்களுமான விவசாயிகளின் பலமான படைகளிலிருந்தும் பிரித்துவிட முடியாதிருந்தது. நிலப்பிரபுத்துவ வர்க்கம் நசிந்து தேசத்தைக் காட்டிக் கொடுத்தபோது, நம் விவசாயிகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலப்பிரபுத்துவத்துக்கு எதிராகக் கிளர்ந்தனர். தேசிய சுதந்திரப் பதாகையைக் கையிலெடுத்தனர். நிகுயென் ஹியுவால் (Nguyen Hue) நடத்தப்பட்ட டே சன் (Tay Son) இயக்கத்தின் போது இதுவே நடந்தது. டே சன் விவசாயிகள் இயக்கம் தேசிய இயக்கமாயிற்று. நம் தேசிய எழுச்சியையும், தேசியப் போரையும் மிக உயர் நிலைக்குக் கொணர்ந்தது. நாட்டின் நிலப்பிரபுக்களைத் தூக்கியெறிந்து, அந்நிய ஆக்கிரமிப்பை முறியடித்து, வாகை பல சூடியது.

நம் தேசத்தின் தோற்றமும் வளர்ச்சியும், நாடு முழுவதும் எதிரியுடன் போராடி அனைத்து மக்களும் போர்வீரர்களான மரபும், இம் மரபின் வழிப்பட்ட தேசிய எழுச்சிகளும், போர்களும் நம் வரலாற்றின் தனிச் சிறப்புமிக்க அம்சங்களாகும். அவை நம் நாட்டின் சமூகச் செயல்பாடுகளின் பல அம்சங்களிலும் செல்வாக்கு செலுத்தியிருக்கின்றன. நம் மக்களின் எழுச்சிகளிலும், போர்களிலும் கடந்த காலத்து தேசிய எழுச்சிகள், போர்களின் போது நம் நாடு உருவாக்கிய இராணுவ அமைப்பிலும் அவை ஏற்படுத்தியுள்ள தாக்கம் ஆழமானது.

முந்தின நூற்றாண்டுகளில் நம் மக்கள் அந்நிய ஆக்கிரமிப்புக்கு எதிராக நடத்திய போராட்டங்களையும் அவர்கள் உருவாக்கிய இராணுவ அமைப்பையும் பற்றி, கட்டுக்கதைகளிலிருந்தும், புராணங்களிலிருந்தும், வரலாற்று ஆவணங்களிலிருந்தும் ஓரளவுக்கு அறிய முடிகிறது.

ஹங் மன்னர்கள் காலத்திலும், வான் லாங் அரசுக் காலத்திலும் சன் திங், துயி திங் (Son Tinh, Thuy Tinh- மலைப்பூதம், நதிப்பூதம்) என்ற கட்டுக்கதை நிலவியது. இது நம் மக்கள் இயற்கைச் சக்திகளை எதிர்த்துக் கடினமான போராட்டம் நடத்தியதைப் பிரதிபலிக்கிறது. இத்துடன் தங் கியோங் (Thanh Giong) என்ற கதையும் இடம்



பெறுவதற்குக் காரணமிருக்க வேண்டும். இக் கதை அந்நிய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து நம் மூதாதையர் நடத்திய வீரஞ்செறிந்த போராட்டத்தைப் போற்றுகிறது. அந்நிய ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போரிடுவதில் நம் தேச மரபிற்கேயுள்ள அம்சங்களை தங் கியோங் கதை சித்தரிக்கிறது; நம் நாட்டின் தளராத போர்க்குணம், ஆயுதந் தாங்கிய மக்களின் வெல்லற்கரிய பலம் போன்றவை அதில் தீட்டப் படுகின்றன. தேசிய மீட்புக்கான அறைகூவலைக் கேட்டதும் தங் கியோங் அதிசயிக்கத்தக்க முறையில் வளர்ந்து பெரியவனாகி விடுகிறான். அவன் இரும்புக் கோலையும், மூங்கிற் கழிகளையும் பாவித்து எதிரியுடன் சண்டையிடுகிறான். விவசாயிகள் தம் மண்கொத்திகளுடனும், மீனவர் தம் மீன் பிடிக் கயிறுகளுடனும், இடையர்கள் தம் தடிகளுடனும் அவனைப் பின் தொடர்கின்றனர்.... இந்த உருவகக் கதை 'தேசம் முழுமையும் ,எதிரியுடன் போரிட்டமைக்கும்', 'அனைத்து மக்களும் ஆயுதந் தரித்தமைக்கும்' ஒரு பழங் கால எடுத்துக்காட்டாய் விளங்குகிறது.

இன்னும் முந்திய காலத்தில் மக்கள் அந்நிய ஆக்கிரமிப்புக்கு எதிராக தாமாகவே எழுந்து நின்று ஆயுதந் தாங்கியிருக்கிறார்கள். கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் அவு லாக் (Au Lac) மக்களும் பிற வியட் பழங்குடிகளும் சின் (Chin) ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிராக பல தசாப்தங்கள் போரிட்டார்கள். மதிநுட்பமிக்கவர்களைத் தளபதிகளாகத் தேர்ந்தெடுத்தார்கள். இரவு நேரங்களில் எதிர்பாராத் தாக்குதல்கள் நடத்தி ஆயிரக்கணக்கான எதிரித் துருப்புகளைக் கொன்று வெற்றி குவித்தார்கள். போரிடுவதிலும், அணிகளை ஒழுங்கமைப்பதிலும் பின்பற்றப்பட்ட இந்த முறை பாமர மக்கள் திரளினருக்கே உரியதாகும். இவர்கள் எதிரி மீதான வெறுப்பினால் தூண்டப்பட்டு எதிரியை அழித்தொழிக்க எழுந்தனர். இது நமக்கு, 18ம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் காலனிய ஆட்சியை எதிர்த்து நடந்த சுதந்திரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரில் கலந்து கொண்ட அமெரிக்கக் கிளர்ச்சியாளர்களை நினைவூட்டுகிறது. ஏங்கெல்சால் புகழப்பட்ட இந்த சுதந்திரப் போரில் அமெரிக்கக் கிளர்ச்சியாளர்கள் ஆங்காங்கே வியூகங்கள் வகுத்துக் கொண்டு இடம் பெயர்ந்து, இடம் பெயர்ந்து வீரத்தோடு போரிட்டனர். இது போன்று தாமாகவே எழுந்து நின்று ஆயுதமேந்தி பண்டைக் காலத்தில் போரிட்ட நமது மக்களும் உண்மையில் 'கெரில்லா வீரர்களே.'

நம் வரலாற்றில் அந்நிய ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிராகப் போரிட அமைந்த **தேசிய சேனை அமைப்பும்** மிக ஆரம்ப காலத்திலேயே தோன்றிவிட்டது. அன் துவாங் வுவாங் (**An Duong Vuong**) மன்னனின் சேனையில் தரைப் படைகளும், கடற்படைகளும் இருந்தன. கோ லோ (**Co Loa**) கோட்டை தரைப்படைத் தளமாகவும், கடற்படைத் தளமாகவும் விளங்கியது. அந்த சேனையிடம் திறன்மிக்க ஆயுதமொன்று இருந்தது. அது ஏக காலத்தில் பல அம்புகளை விடுக்கும் வில்லாகும். வெண்கலத்தாலான அம்பு முனைகள் ஏராளமாக உருவாக்கப் பட்டன. சில ஆயிரக்கணக்கான அம்பு முனைகள் சமீபத்தில் கோ லோ பகுதியில் அகழ்வாராய்ச்சியின் போது கண்டெடுக்கப் பட்டன. நம் நாட்டின் ஆரம்ப காலத்து இராணுவ அமைப்பின் வளர்ச்சிக்கு இவை சான்றாக நிற்கின்றன. ஏககாலத்தில் பல அம்புவிடும் வில்லும் வெண்கல அம்பு முனைகளும் புழங்கியமை, அன்று இராணுவ உத்திகளில் ஒரு பெரிய முன்னேக்கிய வளர்ச்சி ஏற்பட்டிருந்தது என்பதைக் குறிக்கின்றன. 'மாயாஜால வில்' போன்ற கட்டுக்கதை இதிலிருந்து தான் தோன்றியதா? ஆனல் இத்தகைய 'மந்திர வில்' கைவசம் இருந்தும் கூட, மக்களைச் சாரீந்திராததாலும் விழிப்புணர்வைத் தளர்த்தினதாலும் அன் துவாங் வுவாங் மன்னன் பேரழிவைச் சந்தித்தான். திரியு தா (**Trieu Da**)விஞல் தோற்கடிக்கப் பட்டான்.



இதையடுத்து அந்நிய நிலப்பிரபுக்களின் ஆதிக்கம் நடந்த காலம் துவங்கியது. **பத்து நூற்ருண்டுகளாக நமது மக்கள் தம் நாட்டை விடுவிக்கவும், தேசிய சுதந்திரத்தைத் திரும்பப் பெறவும் இடைவிடாது போராட்டத்துக்குக் கிளர்ந்தார்கள்.** அத் தேசிய எழுச்சிகளில் பல, விடுதலைப் போர்களாக மாறின. டிரங் சகோதரிகளின் எழுச்சிதான் அவற்றின் தொடக்கம். இவ்வெழுச்சி நாடு முழுவதிலும் எதிரியைத் தோற்கடித்தது. இதைத் தொடர்ந்து நிகழ்ந்த எழுச்சிகளுக்கு முறையே சூடாட் (**Chu Dat**), லுவாங் லாங் (**Luong Long**), திரியு சீமாட்டி (**Lady Trieu**), லை பி (**Ly Bi**), லை டு தியன் (**Ly Tu Tien**), திங் கியன் (**Dinh Kien**), மாய் தக் லோன் (**Mai Thuc Loan**), புங் ஹுங் (**Phung Hung**), துவாங் தங் (**Duong Thanh**) ஆகியோர் தலைமை ஏற்றனர். எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற் போல் நடந்த குக் துவா டு (**Khuc Thua Du**) எழுச்சியும், பாக் தங் ஆற்றில் நிகோ குயன் (**Ngo Quyen**) பெற்ற வெற்றியும் அந்நிய ஆதிக்கத்துக்கு முடிவு கட்டின. தேச சுதந்திரத்தை மீட்டுத் தந்தன.

பொதுவாய்ச் சொல்வதானல் அந்த அந்நிய ஆட்சி காலகட்டத்தில், நம் நாடு தனக்கென சேனை வைத்திருக்க முடியவில்லை என்பது வெளிப்படை. மக்களின் ஆயுதப்படைகள் பிரதானமாய் **கிளர்ச்சித் துருப்புகளைக்** கொண்டனவாய் இருந்தன. இத் துருப்புகள் எழுச்சிக் காலங்களில் உருவாக்கப்பட்டவையாகும். லாக் ஹௌ (**lac hau**-குடிப் பிரதானிகள்), லாக் துவாங் (**lac tuong**-இராணுவப் பிரதானிகள்) தேசபக்தர்கள் ஆகியோரால் வழிநடத்தப் பட்டன. இவர்கள் அக் கால நிலப்பிரபுத்துவ வர்க்கத்தின் பிரதிநிதிகள். அந்தத் துருப்புகள், கிளர்ச்சி செய்யும் மக்களின் ஆயுதப் படைகளின் தன்மையைக் கொண்டிருந்தன. ஏறக்குறைய ஒரு சேனை போலவே இருந்தன. கிளர்ச்சிப் படைகள் சில சமயம் சிறு அளவிலும் சிலசமயம் பெரிய அளவிலும் இருந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன. ஆனுல் தேசபக்த மக்கள், சமவெளி மக்கள், மலையக மக்கள், தேசபக்தப் பிரமுகர்கள், பழங்குடித் தலைவர்கள், அதிகார வகுப்பினர் போன்ற பல்வேறு சமூகத் தட்டின ரைச் சேர்ந்த ஆட்கள் அப்படைகளில் இருந்தனர்.

எழுச்சிகளின் வெற்றிக்குப் பின்னரோ, எழுச்சிகள் விடுதலைப் போர்களாய் மாறிய போதோ அவ்வெழுச்சிகளுக்குத் தலைமை தாங்கியவர்கள், போர்களை நடத்த ஒருங்கு தேசிய சேனையை உருவாக்க முயன்றனர்.

மக்களின் போராட்ட இயக்கங்களும் கிளர்ச்சியாளர்களின் எழுச்சிகளும் அந்நிய நிர்வாகத்தின் கீழிருந்த வியட் நாமியப் போர்வீரர்களின் மேல் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தின. இதன் விளைவாக பல சிப்பாய்க் கலகங்கள் வெடித்தன. 803ம் ஆண்டுக் கலகத்தில் வியட்நாமியப் படைத் தலைவர் வுவாங் கை குயன் (Vuong Quy Quyen) தன் ஆட்களைச் சேர்த்து அந்நிய ஆட்சியாளர்களைத் துரத்தியடித்தார்.

இக் காலகட்டத்தில் நம் மக்களின் தேசிய உணர்வும், தேசபக்தியும் பல எழுச்சிகளிலும் தெளிவாக வெளிப்பட்டன. அவற்றுக்குச் சிறப்பான எடுத்துக்காட்டாக விளங்குவது நம் சகாப்தத்தின் துவக்கத்தில் நடந்த டிரங் சகோதரிகள் எழுச்சியாகும். மி லிங்கில் (Me Linh) நடந்த இவ்வெழுச்சிக்கு இரு சகோதரிகள் தலைமை தாங்கினர். இந்த எழுச்சிக்கு 65 மாவட்டங்களிலும், நகரங்களிலும் இருந்த மக்கள், குடித் தலைவர்கள், இராணுவப் பிரதானிகள் அனைவரிடமிருந்தும் - அதாவது அப்போதைய நாடு முழுவதிடமிருந்தும் ''ஏகோபித்த ஆதரவு'' கிடைத்தது.[24] டிரங் சகோதரிகளின் 'தேச மீட்பு' அறைகூவலுக்கு நாடு முழுவதன் 'ஏகோபித்த ஆதரவு' கிடைத்தது உண்மையிலேயே வரலாற்றில் ஒரு அரிதான சம்பவமாகும். அதனை, 'அனைவரும் ஒருங்கிணைந்து நடத்திய எழுச்சி', மக்கள் எழுச்சி எனலாம். பழைய அவு லாக் ராச்சியமாக அமைந்த பல்வேறு பழங்குடிகளின் தலைவர்களுடையவும், மக்களுடையவும் குறிப்பிடத்தக்க தேசிய உணர்வை அவ்வெழுச்சி பிரதிபலித்தது.



டிரங் சகோதரிகள் நடத்திய எழுச்சி வெற்றி பெற்றது. நம் தேசிய சுதந்திரம் மீட்கப்பட்டது. சகோதரிகள் ஒரு ஆட்சி மன்றத்தையும், அரசையும், சேனையையும் நிறுவினர். மூன்றுண்டுகளுக்குப் பின் ஆதிக்கவாதிகள் மீண்டும் நம் நாட்டில் ஊடுருவினர். சகோதரிகளின் இளம் சேனை எதிரியால் தோற்கடிக்கப் பட்டது.

ஆரும் நூற்றுண்டின் மத்தியில் லை பியின் (Ly Bi) எழுச்சி மிகப் பெரிய அளவில் நடத்தப் பட்டது. ஏககாலத்தில் எழுச்சி நடந்து 'பல்வேறு மாநிலங்களில் இருந்து தீரமிக்க போர் வீரர்களைத் திரட்டுவதில்' அது வெற்றி பெற்றது. மூன்று மாதங்களுக்குள் அந்நிய ஆட்சியைத் தூக்கியெறிந்தது. லை பியின் கிளர்ச்சித் துருப்புகள் லாங் பியன் நகரை விரைவில் கைப்பற்றினர். லுவாங்கின் (Luong) ஆக்கிரமிப்புச் சேனையால் அடுத்தடுத்து மேற்கொள்ளப்பட்ட இரண்டு எதிர்த் தாக்குதல்களை முறியடித்தனர்.

வெற்றிக்குப் பின் வான் ஸுவான் அரசும் (Van Xuan) சுதந்திர அரசின் சேனையும் நிறுவப்பட்டன. அதையடுத்த தேசிய எதிர்ப்புப் போரில் லை பியின் துருப்புகள் முறியடிக்கப் பட்டன. ஆனுல் திரியு குவாங் பக் (Trieu Quang Phuc) படைகளை மறுசீரமைத்து, தா டிராக்குக்கு (Da Trach) பின்வாங்கி, ஒரு 'நீடித்த போராட்டம்' என்ற போர்த் தந்திரத்தை மேற்கொண்டான்.[25] சிறு தாக்குதல்கள், தனித்தனியான மோதல்கள், எதிர்பாராத நேரத் தாக்குதல்கள், இரவு நேரத் திடீர்த் தாக்குதல்கள் போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றைக் கையாண்டு எதிரியைப் பலவீனப் படுத்தினான். பின் லுவாங் வம்சத்தின் ஆட்சியில் இருந்த பெரும் சீர்குலைவுகளைச் சாதகமாக்கிக் கொண்டு, ஆக்கிரமிப்பாளர்களை தோற்கடிக்கவும், சுதந்திரத்தை மீட்கவும் எதிர்த்தாக்குதல் தொடுத்தார். வான் ஸுவான் சுதந்திர அரசு அரை நூற்றாண்டுக்கு மேல் நீடித்தது. அக் காலத்தில் நம் மக்களுக்கு அது ஒரு பெரிய வெற்றியாக இருந்தது. நீடித்த போராட்டம் என்ற கருத்து இவ்வாறு தோன்றியது. சிறு தாக்குதல்கள், தனித்தனியான மோதல்கள், எதிர்பாராத் தாக்குதல்கள், இரவு நேரத் திடீர்த் தாக்குதல்கள் ஆகிய செயல்திட்டங்கள் ஒரு புதிய மட்டத்துக்கு வளர்ந்தன.

வான் சுவாங் அரசின் தோல்விக்குப் பின் அடுத்த மூன்று நூற்றாண்டுகளின் போது நம் மக்கள் ஆயுதமேந்தி எழுச்சிகள் நடத்துவதை நிறுத்தவேயில்லை. பின் 10ம் நூற்றாண்டில் போராட்டங்கள் உத்வேகம் பெற்றன. அடுத்தடுத்த விவசாயிகள் கிளர்ச்சிகளால் டாங் வம்சம் (Tang) பலவீனமடைந்தது. டாங் ஆளுனர் பதவி நீக்கப்பட்டு கொல்லப்பட்டான். மக்கள் ஆதரவுடன் குக் துவா டு (Khuc Thua Du) ஆட்சியைப் பிடித்து தன்னை ஆளுனராகப் பறைசாற்றினான். தேசிய இறைமையை மீண்டும் வென்றெடுத்தான். அடுத்த 20 ஆண்டுகளில் கடுஞ்சோதனைகளுக்கு உட்பட்ட தேசிய இறைமை அடுத்தடுத்து இழக்கப்படுவதும், மீட்கப்படுவதுமாக இருந்தது. கி.பி. 938இல் டாங் நிகோ குயனின் சேனை பாக் டாங் நதியில் நடந்த போரில் வெற்றியை ஈட்டி நாம் ஹான் (Nam Han) ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடித்தது. நமது நாடும் உண்மையான சுதந்திரத்தை மீட்டது. இந்தக் கடற்படைச் சண்டையில் போர்க் கப்பல்களும், இரும்புமுனை வைத்த மர வேல்களும் பயன்படுத்தப்பட்டன. இது அந்தக் காலகட்டத்தில் நம் தேசிய சேனையின் வளர்ச்சி நிலையைக் காட்டுகிறது. வரலாற்றறிஞர் லி வான் ஹியு (Le Van Huu), நிகோ குய



னின் அருஞ்செயலைப் பாராட்டி எழுதியதாவது:- நிகோ குயன் "நம் வியட் தேசத்தின் புதிதாய் நிறுவப்பட்ட சேனையைக் கொண்டு லியு ஹோவாங் தாவொவின் (Luu Hoang Thao) ஆயிரக்கணக்கான துருப்பினரை முறியடித்தான். சாதுரியமான செயல் திட்டங்களையும், போர் முறைகளையும் கையாண்டான். ஒரு அரசை நிறுவி தன்னை அரசனாகப் பறை சாற்றினான்." இவ்வாறு நம் நாட்டில் மீண்டும் ஆக்கிரமிப்பாளர்கள் ஊடுருவி விடாதவாறு தடுத்தான்.

பாக் டாங் வெற்றி நம் வரலாற்றில் ஒரு பெரிய திருப்பு முனையாக விளங்கிற்று. அது ஒரு காலகட்டத்தின் துவக்கம். அன்று நம் தேசம் முழுமையான சுதந்திரத்தை வென்றிருந்தது. எப்போதையும் விட வளமான நிலப்பிரபுத்துவ அரசாக வளர்ந்திருந்தது. இந்த சுதந்திரத்தைப் பல நூற்றாண்டுகளுக்கு வலுப்படுத்திக் காத்தது. மத்தியப்படுத்தப்பட்ட நிலப்பிரபுத்துவ அரசு, பல்வேறு வம்சங்கள் வழியாக பொருளாதாரக் கட்டமைப்பையும், பண்பாட்டு வளர்ச்சியையும் ஊக்குவிக்கவும், தேசப் பாதுகாப்பை வலுப்படுத்தவும், மத்திய-பல்வேறு வட்டார-மட்டங்களில் நிர்வாக யந்திரத்தைக் கட்டி வலுப்படுத்தவும் மென்மேலும் செம்மையான வழிகளை உருவாக்கியது. அன்று தேசிய வளர்ச்சியில் ஆக்கபூர்வமான பாத்திரம் வகித்த நிலப்பிரபுத்துவ வர்க்கத்தின் தலைமையின் கீழ் நமது மக்கள் தாய்நாட்டைக் காக்கவும், தேசிய சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் பல போர்களை நடத்தினர். நம் நாடு தற்காலிகமாய் எதிரி கையில் சிக்கியபோது நம் மக்கள் சுதந்திரத்தைத் திரும்பப் பெற ஆயுத எழுச்சிகள் நடத்தினர்; விடுதலைப் போர்கள் நடத்தினர்.

இக் காலகட்டத்தில் நம் நாட்டின் ஆயுதப் படைகளின் வளர்ச்சியானது, எழுச்சிகளையும், போர்களையும் மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ந்திருந்தது. ஒவ்வொரு துறையிலும் படிப்படியாய் வலுப்பெற்று வந்த நிலப்பிரபுத்துவ ஆட்சியின் அடிப்படையில் அமைக்கப்பட்ட சுதந்திர அரசின் ஒட்டுமொத்த வளர்ச்சியை அது பிரதிபலித்தது.

நிலப்பிரபுத்துவ அரசின் ஆயுதப் படைகளை அமைப்பதில் நமது நாட்டுக்கும், ஐரோப்பாவின் பல நிலப்பிரபுத்துவ அரசுகளுக்கும் இருந்த வித்தியாசம் என்னவென்றால், நாம் 'ஒவ்வொருவனும் ஒரு போர் வீரனாவது' என்ற முறையைக் கையாண்ட போது ஐரோப்பா கூலிப்படைகளையே வைத்திருந்தது. ஐரோப்பாவில் 'அனைத்து மக்களையும் ஆயுதபாணியாக்குவது', பிரெஞ்சு முதலாளியப் புரட்சியின் முதலாண்டுகளில் மட்டுமே நடைமுறையில் இருந்தது.

'ஒவ்வொருவனும் ஒரு போர் வீரனாவது' என்ற முறை நம் நாட்டில் மேற்கொள்ளப் பட்டது. பல்வேறு வம்ச ஆட்சிகளிலும் படிப்படியாக நடைமுறைப் படுத்தப் பட்டது.

திங் லி காலத்தில், '12 சு குவான் (**Su Quan**-நிலப்பிரபுத்துவ யுத்த பிரபுக்கள்) கலகத்தை' அடக்கிய பின், அப்போது தான் நிறுவப்பட்ட நிலப்பிரபுத்துவ மத்திய அரசு, சேனைக்குப் புதிதாக ஆட்கள் எடுப்பதற்காக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு முறையைத் துவங்கியது. 'தேவைப்பட்ட போது ஆட்களை எடுத்துக்கொண்டு பணி முடிந்ததும் திரும்பப் பண்ணைக்கு அவர்களை அனுப்பி விடும் முறையில்'. ஆயுதப் படைகள் ஒழுங்கமைக்கப்பட்டன.[26] இதனால் தான் பெருந்தொகையான முழுநேரப் போர் வீரர்கள் இந்த ஆயுதப் படைகளின் மையக்கூறாக இல்லாதிருந்த போதும், படைத் தலைவர் லி ஹோவானின் கீழ் நிலப்புரபுத்துவ அரசு மொத்தம் சுமார் 10 இலட்சம் பேர் கொண்ட 10 படைகளை அமைக்க முடிந்தது. அப்போது மக்கள் தொகையில் போரிடத் தகுதி பெற்றிருந்த



ஆட்கள் அனைவருமே இப் படைகளிலிருந்தனர். இது உண்மையிலேயே அனைத்து மக்களையும் ஆயுதபாணியாக்குவதன் ஒரு வடிவமேயாகும். நிலப்பிரபுத்துவக் காலத்தில் அரிதாகக் காணப்பட்ட இவ்வடிவம் அந்நிய ஆக்கிரமிப்பை எதிர்க்க வேண்டி வந்த நம்மைப் போன்ற சிறிய தேசத்துக்கு மிக அவசியமானதாகும்.

லி வம்ச ஆட்சியின் கீழ் சுதந்திர நிலப்பிரபுத்துவ அரசு பன்முக வளர்ச்சி பெற்றது. அக்கால ஆயுதப்படைகளின் அமைப்பு முறை மற்றும் கொள்கைகள் இதற்கான சான்றுகளாகும். நிகு பின் யு நாங் (**ngu binh u nong**-விவசாயத்தில் இராணுவத்தை இருத்துதல்) என்ற கொள்கை இருந்தது. அதாவது இராணுவ சேவை கிராமப்புறத்துக்குக் கொண்டு வரப்பட்டது. போர் வீரர்களாகவும் இருந்த விவசாயிகள் பண்ணை வேலையுடன் இராணுவக் கடமையையும் செய்தனர். லி வம்சத்தினர், நாட்டிலுள்ள ஆண்களை ஹோவாங் நாம் (**hoang nam** - 18-20 வயதினர்) என்றும் தாய் ஹோவாங் நாம் (20-60 வயதினர்) என்றும் பிரித்தனர். இவர்கள் அனைவரும் இராணுவத்தில் பதிந்து கொண்டு சேனைக்குச் சேவை செய்வதில் முறை மாற்றிக்கொள்ள வேண்டும். போர் மூளும் போது அவர்கள் அனைவரும் அழைக்கப் படுவர். கட்டாய இராணுவச் சேவை என்று இன்று அழைக்கப்படுவது இது தான்.

டிரான் அட்சியின் கீழ் ஆயுதப் படைகள், டிரான் குவாக் துவானின் கருத்தான 'ஒவ்வொருவனும் ஒரு போர் வீரனாவது' என்பதன் அடிப்படையில் அமைக்கப்பட்டன. அனைத்து மக்களும், முழு தேசமுமே படையணிகளில் திரட்டப் பட்டனர். வரலாற்றாசிரியர் பான் ஹுய் சு (**Phan Huy Chu**) குறிப்பிட்டார். 'அச் சகாப்தத்தில் இராணுவம் மிகப் பலம் பொருந்தியதாயிருந்தது. அமைதிக் காலத்தில் துருப்புகள் வசதியான இடங்களில் நிலை கொண்டிருக்கும்; போர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடிக்கையில் சண்டையிட அவை மிகுந்த ஆர்வம் காட்டின. டிரான் ஆட்சியின் கீழ் அனைத்து மக்களும் போர் வீரர்களாக விளங்கினர். ஆகவே கொடிய எதிரிகளையும் அவர்கள் தோற்கடித்து தேசத்தின் நிலையை வலுப்படுத்தினர்.' சேனையை ஒழுங்கமைப்பதற்கு டிரான் காலத்தில் வரையறுத்துத் தரப்பட்ட இந்த முறை, முன்னூறாண்டு கால அமைதியான தேச நிர்மாணத்தினூடே நிலப்பிரபுத்துவ அமைப்பு நம் நாட்டில் வளர்ச்சி பெற்று வலுவடைந்ததைப் பிரதிபலிக்கிறது.

'ஒவ்வொருவனும் ஒரு போர் வீரனாவது' என்பதை அடிப்படையாகக் கொண்டு நிலப்பிரபுத்துவ வர்க்கம் பல்வேறு விதமான இராணுவ அமைப்பு வடிவங்களை உருவாக்கிற்று. அரச சபையின் கீழிருந்த தேசியத் துருப்புகள்; பிரபுக்கள், பழங்குடித் தலைவர்கள் கீழிருந்த பிரதேசத் துருப்புகள்; ஒவ்வொரு கிராமத்திலும் அல்லது ஸ்தலத்திலும் இருந்த கிராமத் துருப்புகள், குடிப்படைகள் அல்லது ஸ்தலத் துருப்புகள் என்பன அவை. தேசியத் துருப்புகள், திங், லி ஆட்சிக் காலங்களில் 'அரசனின் துருப்புகள்' எனப்பட்டன. லி, டிரான் ஆட்சிக் காலங்களில் 'காலாட் காவற்படைகள்', 'அரச காவல் படைகள்' எனப்பட்டன. நம் கால நிலையான சேனைகள் போலவே அவை முழுநேர சேவையாற்றின. கிராமப் புறங்களில் இருத்தப்பட்டு 'அமைதி காலத்தில் விவசாய வேலைக்கு அனுப்பப்பட்டும், போர்க் காலத்தில் பெயர்ப்பட்டியலின்படி இராணுவத்துக்கு அழைக்கப்பட்டும்' வந்தவர்கள் 'புறத்துருப்புகள்' எனப்பட்டனர். இன்றைய சேமப் படையைப் போன்றவை இவை. ஹுவாங் பிங் (**huong binh**-கிராமத் துருப்புகள்), தோ பிங் (**tho binh**-ஸ்தலத் துருப்புகள்) ஆகியன சமாதான காலத்தில் கிராமங்களில் நிலப்பிரபுத்துவ ஆட்சியைக் காக்க நிலப்பிரபுத்துவ அதிகாரிகளால் உருவாக்கப்பட்டன. இவை போர்க் காலத்தில் மக்களுடன் சேர்ந்து ஆக்கிரமிப்



பாளருக்கு எதிராகப் போராடின. இவையே பரந்துபட்ட மக்களின் ஆயுதப் படைகளாக அமைந்தன.

சுதந்திரப் போராட்டம் நடந்த 10 நூற்றாண்டுகளில் நம் மக்களின் ஆயுதப் படைகளில் பெரும்பான்மையாக இருந்தவர்கள் கிளர்ச்சித் துருப்புகள்; எழுச்சிகளின் போது பரந்துபட்ட மக்கள் இப் படைகளில் பெரிய அளவில் பங்கேற்றனர். தேச சுதந்திரத்தைக் கட்டி வலுப்படுத்தும் சகாப்தத்திலோ, தாய்நாட்டைக் காப்பதற்கான போர்களில் **சேனையின்** பாத்திரம் முன்னணியில் நின்றது. அதுவே, நம் நாட்டில் சுதந்திர நிலப்பிரபுத்துவ அரசின் கிரம சேனையாகும். இதன் அமைப்பு முறை படிப்படியாக செம்மைப்படுத்தப்பட்டது. லை வம்ச ஆட்சியின் சேனையில் காலாட்படைகள், குதிரைப் படைகள், யானைப் படைகள், கப்பற்படைகள் ஆகியவை இருந்தன. அவர்களிடம் வேல்கள், குத்தீட்டிகள், அம்புகள், வில்கள் போன்றவற்றுடன் கவண்களும் இருந்தன. டிரான் துருப்புகளிடம் அன்றே ஒரு பழைய வகையான பீரங்கிகள் இருந்தன. சேனைக்கு ஆயுதம் வழங்குவதில் நம் மக்கள் மிகுந்த கவனம் காட்டினர். அன்றைய உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி நிலைக்கு ஏற்ப திறம்பட்ட போர்க் கருவிகளும், சாதனங்களும் செய்ய அவர்கள் அறிந்திருந்தனர். துருப்புகளுக்கு போதிய உணவளிப்பதிலும் அவர்கள் மிகுந்த அக்கறை செலுத்தினர். 'போர் வீரர்களின் உயிர்பிழைப்பு, அவர்களை நன்கு போஷிப்பதைச் சார்ந்திருக்கிறது' என்பதை அவர்கள் கருத்தில் கொண்டிருந்தனர். சிறு எண்ணிக்கையிலானவரே இராணுவத்தில் முழுநேர சேவையில் இருந்தனர். ஆனால் அவர்கள் நன்கு பயிற்றப்பட்டிருந்தார்கள். போர் வெடித்தால் இம் மையப்படையை மிகத் துரிதமாய் விரிவுபடுத்திக் கொள்ள முடிந்தது. துருப்புகளைப் பயிற்றுவிப்பதிலும் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டது. அதிகாரிகளையும், ஆட்களையும் பயிற்றுவிப்பதற்காக டிரான் குவாக் துவான், பிங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

து இயு லுவாக் (**Binh Thu Yeu Luoc**-இராணுவக் கலை பற்றிய கையேடு) என்ற நூலையும், வான் கீப் தாங் பி ட்ருயன் து (**Van Kiep Tong Bi Truyen Thu** - இராணுவ போர்த் தந்திரமும், நடைமுறைத் தந்திரமும் பற்றி) என்ற நூலையும் எழுதினர்.

நிலப்பிரபுத்துவ அரசின் இராணுவ அமைப்புக்கான விதிகளை வரலாற்றறிஞர் பான் ஹுய் சு, தன் 'பிங் சே சி' (**Binh Che Chi**-சேனையமைப்பியல்) என்ற நூலில் [இந்நூல் அவரது லிச் டிரியு ஹீன் ஸுவாங் லோவாய் சி - **Lich Trieu Hien Chuong Loai Chi** - என்ற பெரும் படைப்பின் பகுதியாகும்] பின்வரும் தலைப்புகளில் விவரிக்கிறார்:

(1) இராணுவ அணிகள்

(2) புதிய ஆட்கள் சேர்க்கும் முறைகள்

(3) துருப்புகளுக்கு உணவு, உடை முதலியனவும் படிகளும் வழங்குவதற்கான விதிகள்

(4) பயிற்சி முறைகள்

(5) விலக்க (வேண்டியன பற்றிய) விதிகள்

(6) தேர்வு முறைகள்

(7) சடங்கு, சம்பிரதாயங்கள் பற்றிய விதிகள்

இது முற்காலத்தில் நம் நாட்டில் இராணுவ அமைப்பு எவ்வளவு செம்மையுற்றிருந்தது என்பதைக் காட்டுகிறது; மேலும் நம் மூதாதையர் - நீண்ட சமாதான காலத்துப் பின் - ஆயுதப் படைகளைக் கட்டுவதிலும், தேச சுதந்திரத்தைப் பாதுகாக்க வலுப்படுத்துவதிலும், இராணுவப் பயிற்சி பெறுமாறு மக்களை ஊக்குவிப்பதிலும் எவ்வளவு பெருங் கவனம் எடுத்துக் கொண்டனர், எவ்வளவு விழிப்பாயிருந்தனர் என்பதைக் காட்டுகிறது. அதேபோது 'நாட்டைக் காப்பது' மட்டுமல்ல, 'கலகங்களை அடக்குவதும்' - அதாவது நாட்டு மக்களின் போராட்டங்களை நசுக்குவதும்-நிலப்பிரபுத்துவ அரசின் சேனையின் செயல்பாடாய் இருந்ததில் வியப்பில்லை.



நம் தேசம் சுதந்திரத்தை மீட்டு, நன்கு கட்டமைந்த அரசைக் கட்டியதும், நம் மக்களின் தேசபக்தியும், அயரா போர்க் குணமும் புதிய முகடுகளைத் தொட்டன. அந்நிய ராட்சிக் காலத்தில் அவர்களின் தேசபக்தி சுதந்திரத்தை மீட்டெடுக்க கடுமையாய்ப் போராடும் மனவுறுதியில் வெளிப்பட்டது. சுதந்திர காலத்திலோ, நாட்டைத் தன்னிறைவாக்குவதிலும், எல்லைப் பாதுகாப்புக்காகப் போராடுவதிலும் அது வெளிப்பட்டது. தம் மூதாதையர் பெருந் தியாகங்கள் புரிந்து வென்றெடுத்ததும், தம் கைத்திறனாலும், நெற்றி வியர்வையாலும் அவர்கள் வளர்த்தெடுத்ததுமான தம் நாட்டின் அழகைக் காப்பதில் நம் மக்களின் தேசபக்தி வெளிப்பட்டது. தேசம் முழுவதன் தேசபக்தி உணர்வின் துணை கொண்டும், மென்மேலும் வளர்ச்சி பெற்றுவந்த நிலப்பிரபுத்துவ அடிப்படை மீது கட்டப்பட்ட ஆயுதப்படைகளின் துணை கொண்டும் நம் தேச வீரர்களின் இராணுவ மேதாவிலாசத்தின் காரணமாகவும் நம் மக்கள் அக் காலகட்டத்தில் நாட்டின் பாதுகாப்புக்காக மிக ஒளிமிக்க வெற்றிகளைச் சாதித்தனர். நம் நாடு ஒவ்வொரு துறையிலும் வளர்ச்சி பெற்று வந்தாலும், பரப்பளவில் சிறிய நாடாகவே இருந்தது. 'ஒவ்வொருவனும் ஒரு போர் வீரனாவது' என்ற முறையைச் சார்ந்தவர்களாய், சிறியதானாலும் மிகச் சிறப்பான பயிற்சி பெற்ற சேனைகளுடன், நம் மக்கள் அச்சகாப்தத்தின் மிகப் பெரியதும், மிக வலுவானதும், மிக மூர்க்கத்தனமானதுமான ஆக்கிரமிப்புப் படைகள் பலவற்றைக் கீர்த்தி வாய்ந்த வகையில் தோற்கடித்தார்கள். தாய்நாட்டின் சுதந்திரத்தையும், விடுதலையையும் காத்து நின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளபதி லி ஹோவான், சுங் ஆக்கிரமிப்புச் சேனையை சி லாங், பாக் டாங் (Chi Lang, Bach Dang) சண்டைக ளில் தோற்கடித்தார்.

லீ துவாங் கீட் (Ly Thuong Kiet), எதிரிப் பிரதேசத் தில் எதிரிக்கு வாய்ப்பளிக்காத தாக்குதல்களைத் தொடுப்ப திலும், ஆக்கிரமிப்பாளர்களின் முக்கியமான துவக்க தளங் களை அழிப்பதிலும் முன்முயற்சி எடுத்தார். அடுத்து நிகழ்ந்த போரில் அரச படையான 'பெரிய சேனையாலும்', ஸ்தல, கிராமக் காவற்படைகள் போன்றவற்றாலும் எதிரி ஏககாலத் தில் மறிக்கப்பட்டான். பெரிய சேனை, நிஹு நிகுயெட் (Nhu Nguyet) ஆற்றோரமாக இருந்த எதிரிப் பாதுகாப்பு படைநிலைகள் எங்கனும் பல சண்டைகள் புரிந்தது. எதிரிப் படைகளைப் பாதிக்கு மேல் அழித்தொழித்தது. ஸ்தல, கிரா மக் காவற்படைகள் உள்ளிட்ட, பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான துருப்புகள் எதிரியை அவனது பின்புலத்தில் தாக்கின. பிரதான சேனைக்கு ஒத்திசைந்து, எதிரியின் சண்டை மற்றும் போக்குவரத்துத் துருப்புகளின் சின்னச் சின்னப் படைப் பிரிவுகளை அவை தாக்கி அழித் தன. லாங் சன் பகுதியில் 'தான் காங் பக்கால்' (Than Canh Phuc) தலைமை தாங்கப்பட்ட டே மக்கள் காடுகளுக் குள் பின்வாங்கி, எதிர்பாராத் தாக்குதல், இரவு நேரத் திடீர்த் தாக்குதல்கள் போன்ற உத்திகளை மிகத் திறமையா கக் கையாண்டனர். **சண்டையில் ஈடுபட்டிருக்கும் பிரதான சேனைக்கும், பிரதேசப் படைகளுக்கும் இடையிலான ஒருங் கிணைப்பு என்பது இவ்வாறு தான் தோன்றியது. எதிரியை ஏககாலத்தில் முன்புறமிருந்தும், பின்புறமிருந்தும் தாக்கும் இராணுவ ஒருங்கிணைப்பு நடவடிக்கை இதிலிருந்தே எழுந் தது.** இந்த ஒருங்கிணைந்த போராட்ட வடிவம் உண்மை யில் ஒரு வலுவான ஆக்கிரமிப்பாளரை எதிர்த்துப் போரா டும் ஒரு சிறிய நாட்டின் இராணுவக் கலைக்கே உரிய அம்ச மாகும். சுங்கின் ஆக்கிரமிப்புப் போர் முறியடிக்கப்பட்டது.



நம் நாட்டை சுதந்திர ராச்சியமாக சுங் அங்கீகரிக்க வேண் டியதாயிற்று.

13ம் நூற்றுண்டில் யுவான் (மங்கோலிய) படையெடுப் பாளர்களை எதிர்த்து மூன்று போர்கள் நடந்தன. அப்போது இருந்த சேனையையும், 'ஒவ்வொருவனும் ஒரு போர் வீரனு வது' என்ற முறையின் அடிப்படையில் ஒழுங்கமைக்கப் பட்ட ஸ்தல, கிராமக் காவற் படைகளையும் டிரான் குவாக் துவான் பயன்படுத்திக் கொண்டான். போரின் துவக்கத்தி லிருந்து முடிவுவரை அவன் கிரம சேனையின் துருப்புகளை ஒன்று குவித்து நடத்திய சண்டைகளுடன், ஆங்காங்கு ஸ்தல, கிராமக் காவற்படைகள் நடத்தும் சிறு தாக்குதல் களை சாதுரியமாக இணைக்கும் செயல் தந்திரத்தைக் கையாண்டான். இதில் **சேனைக்கு** மிக முக்கியமான, நேரடி யான, தீர்மானகரமான பாத்திரம் இருந்தது வெளிப்படை. டாங் பே டா, ஹாம் து, ஸுவாங் துவாங், வான் கீப், பாக் டாங் [Dong Bo Dau, Ham Tu, Chuong Duong, Van Kiep, Bach Dang] போன்ற இடங்களில் பல சிறப்பு மிக்க அழித்தொழிப்புச் சண்டைகள் வெற்றிகரமாக நடத் தப்பட்டன. ஆனுல் பெரும் எண்ணிக்கையிலான **ஆயுதந் தாங்கிய மக்களும்** மிக முக்கியமான பங்காற்றினர். மலைப் பகுதி மக்கள் எதிரிப் படைகள் பலவற்றை மறித்து, நகர முடியாமல் செய்து, பலவீனப்படுத்தி, நிர்மூலமாக்கினர். கழிமுகப் பகுதிக் குடிப்படையினர் அந்தந்த இடங்களில் எதிரியுடன் போரிட்டனர். தத்தம் கிராமங்களைத் தளங்க ளாகப் பாவித்தனர். ஆரம்பக் காலத்திலிருந்தே நம் மக்க ளுக்கு கிராமங்களில் போரிட்ட அனுபவம் இருந்தது. அவற் றைச் 'சண்டைக் கிராமங்கள்' எனலாம். (நமது இன்றைய கிராமங்களும் அத்தகையனவே) மக்கள் தம் உணவு முத லான பண்டங்களை ஒளித்துவைக்க முயன்றனர். எதிரிக்கு காலித் தோட்டங்களையும், வெறிச்சோடிய வீடுகளையும் விட்டுச் சென்றனர். இவ்வாறு எதிரிக்கு உணவுப் பண்டங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் கிடைப்பதில் இடையூறுகள் ஏற்படுத்தினர். அதிகாரிகளதும், ஆட்களதும் கரங்களில் பொறிக்கப்பட்ட சத் தட் (Sat that-தாத்தாரியர்களைக் கொல்லு) என்ற இரு சொற்கள், அக் காலத்தில் நம் மக்களுக்கு பகைவரை எதிர்ப்பதில் இருந்த மிக உயர்ந்த வைராக்கியத்தையும், சண்டையிடுவதிலும், சண்டையில் தம்மைத் தியாகம் செய்வதிலும் அவர்களுக்கிருந்த ஆயத்த மனநிலையையும் வெளிப்படுத்துகின்றன. அது உண்மையிலேயே அனைத்து மக்களின், தேசம் முழுவதன் போராக இருந்தது. நிலப்பிரபுத்துவ காலத்தின் உண்மையான மக்கள் யுத்தமாகும் அது. ஆசியாவிலும், ஐரோப்பாவிலும் பேரழிவை விதைத்தவர்களும், உலகப் படத்திலிருந்த பல ராச்சியங்களை வென்று அழித்தவர்களுமான மங்கோலிய யுவான் ஆக்கிரமிப்புத் துருப்புகள் வியட்நாமை மும்முறை தாக்கின. ஆனால் மூன்று முறையும் வெட்கக்கேடான முறையில் வியட்நாமிய மக்களால் தோற்கடிக்கப்பட்டனர். டிரான் காலத்து எதிர்ப்புப் போரின் மாபெரும் வெற்றிக்கு வழிநடத்தினவன் தேசிய வீரனை டிரான் குவாக் துவான் ஆவான். இந்த வெற்றிக்கு அடிப்படைக் காரணம் 'தேசம் முழுவதும் படைகளில் சேர்ந்ததாகும்.' இது, அக்காலத்து இராணுவ அமைப்பின் உயர் வளர்ச்சி மட்டத்தையும் தாய்நாட்டைக் காக்கும் போரில் சேனையும், ஆயுதந் தரித்த மக்களும் காட்டிய பெருந்திறனையும் குறித்துக் காட்டுகிறது. நிலப்பிரபுத்துவ அமைப்பின் அடிப்படையில், பல நூற்றாண்டுகளாக நிலவிய சமாதான காலத்தில் ஒவ்வொரு துறையிலும் கட்டி வலுப்படுத்தப்பட்டதும் தேசப் பாதுகாப்பில் தீவிரமான தயார் நிலையுடன் விளங்கியதுமான நாட்டின் சூழ்நிலைகளில் தொடுக்கப்பட்ட தேசபக்தப் போரில் அது ஒரு புகழ்பெற்ற வெற்றியாகும்.

14ம் நூற்றாண்டின் மத்தியில் டிரான் நிலப்பிரபுத்துவ வம்சம் நசியத் தொடங்கியது. அவர்கள் மக்களை ஒடுக்குவதையும், சுரண்டுவதையும் மும்முரமாக்கினர்: ஏறத்தாழ அரை நூற்றாண்டுக் காலம் இடைவிடாது விவசாயிகளதும், குடியாட்களதும் கிளர்ச்சிகள் வெடித்தன. ஹோ கை லை (Ho Quy Ly) இதனை தனக்கு அனுகூலமாக்கிக் கொண்டு அரியணையைக் கைப்பற்றி ஹோ வம்சத்தை நிறுவினன். மக்கள் பிளவுபட்டனர். மிங் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக ஹோ கை லை ஒழுங்கமைத்த எதிர்ப்பானது, முழுக்கவும் சேனையையும், நவீன ஆயுதங்களையும், கோட்டைகளையும் சார்ந்திருந்தது; மக்களைச் சார்ந்திருக்கவில்லை. எனவே அது தோல்வியுற்றது.

ஆனால் ஆக்கிரமிப்பாளர்கள் நம் மக்கள் மேல் தம் ஆட்சியைத் திணித்துவிட முடியவில்லை. எழுச்சிகள் பெருகின.

லி லாய் (Le Loi), சுமார் 2000 கிளர்ச்சியாளர்களைக் கொண்டு தனது எழுச்சியை லாம் சனில் துவங்கினன். அந்த எழுச்சி ஒரு விடுதலைப் போராக வளர்ச்சி பெற்றது. அவனது படையில் கிளர்ச்சித் துருப்புகளும் அவனது அறைகூவலுக்கு செவிமடுத்த ஆயுதந் தாங்கிய மக்களும் இருந்தனர். எழுச்சியானது விடுதலைப் போராக வளர்ச்சி பெற்றதும் கிளர்ச்சியாளர்கள் ஒரு சேனையாக ஒழுங்கமைக்கப்பட்டனர். வெற்றி பெறப்பட்ட போது இந்த சேனையில் 2 இலட்சத்துக்கு மேற்பட்ட ஆட்கள் இருந்தார்கள். அதன் அமைப்பு மென்மேலும் செம்மைபெற்றுச் சென்றது. லை, டிரான் வம்சங்களின் அனுபவத்தைச் செரித்துக் கொண்டு வளர்ந்தது.

''தடிகளைக் கொடிகளாய் உயர்த்துக; நாட்டின் எல்லாப் பகுதி ஏழை மக்களையும் திரட்டுக'' என்பது நிகுயென் டிராயின் புகழ்பெற்ற வாசகம்.[27] இது கிளர்ச்சிப் படைகளின் பரந்துபட்ட தன்மையைப் பிரதிபலித்தது. ஒரு மூங்கில் குச்சி தான் கிளர்ச்சிப் பதாகை. 'பண்ணையடிமைகளையும், ஒட்டாண்டிகளையும்' கொண்டு படைகள் அமைக்கப்பட்டன. நம் நாட்டில் இருந்த பெருந்திரளினரான விவசா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத் தொழிலாளிகளைக் கொண்டு இப் படைகள் அமைக்கப் பட்டன எனலாம். இவர்கள் முந்திய நூற்றுண்டில் சுமார் 50 ஆண்டுக் காலம் டிரான் நிலப்பிரபுத்துவ வர்க்கத்தின ருக்கு எதிராக வெற்றி பெருத போராட்டம் நடத்தியவர்க ளாவர். இவர்கள் லி லாயினதும், நிகுயென் டிராயினதும் தேசியப் பதாகையின் கீழ் திரண்டவர்களாவர். மேலும் லாம் சன் எழுச்சி வெடித்த சூழ்நிலை, முந்திய பத்து நூற் ருண்டுகளில் அந்நிய ஆட்சி நிலவிய சூழ்நிலையிலிருந்து மாறுபட்டிருந்தது. நம் நாடு மிங் ஆட்சியின் கீழ் 20 ஆண் டுகள் இருந்தது. ஆனல் அதற்குமுன் நம் மக்கள் ஒரு சுதந் திரமான நிலப்பிரபுத்துவ அரசைக் கட்டியிருந்தார்கள். தம்மைவிட பலம்வாய்ந்த எதிரிகளின் ஆக்கிரமிப்புப் போர் களை அடுத்தடுத்து ஐந்து நூற்றுண்டுக் காலத்தில் தோற் கடித்து, தமது அரசின் சுதந்திரத்தைக் காத்து வலுப் படுத்தி வந்திருந்தார்கள். எனவே, பலமுறை காடுகளுக் குப் பின்வாங்கி எதிரியின் தாக்குதல்களைச் சமாளிக்க தனித் தனியான மோதல்களில் ஈடுபட்டிருந்த ஆரம்ப ஆண்டுக ளில், கிளர்ச்சிப் படைகள் பல சிரமங்களை எதிர்கொண்ட போதிலும், அவை மிகத் துரிதமாகவே வளர்ச்சி பெற்றன; அதுவும் குறிப்பாக, நிகே அன் நகரைக் கைப்பற்றி அதை உந்துபலகை போல் பயன்படுத்தி, தங் ஹோவா, டான் பிங், துவான் ஹோவா ஆகியவற்றை விடுவித்தபின் (**Thanh Hoa, Tan Binh, Thuan Hoa**) அவற்றின் வளர்ச்சி துரிதமடைந்தது. கிளர்ச்சிப் படைகளுக்கு ஆதரவாக ஒவ் வொரு பகுதியிலும் மக்கள் உடன் நின்றனர். படைகளுக் குத் தேவையான பொருட்களை அளித்தனர். கிளர்ச்சிப் படைகளுடன் ஒன்றிணைந்து செயல்படுவதற்காகத் தம்மை ஆயுதபாணிகளாக்கிக் கொண்டனர். எதிரியை முற்றுகை யிட்டு தாக்கி அழித்தனர். மாவட்டங்களில் அந்நிய நிர் வாகத்தைச் சிதறடித்து, பரந்த பிரதேசங்களை விடுவித் தனர்.



மிங்குகள் தம் சேனைக்கு உதவிப் படைகள் அனுப்பி னர். இருப்பினும் நிகுயென் டிராயின் சேனை 'ஒரே மனது கொண்ட ஆயிரக்கணக்கான ஆட்களைக்' கொண்டதாயிருந் தது. ஹோவின் சேனையோ 'பத்து இலட்சம் மனங்களைக் கொண்ட பத்து இலட்சம் பேரைக்' கொண்டதாயிருந்தது. லி லாயும், நிகுயென் டிராயும் அவர்களின் தலைசிறந்த தள பதிகளும் பல பெருஞ் சண்டைகள் நடத்தி, டோட் டாங்- சக் டாங், சி லாங் - ஸுவாங் கியாங் (**Tot Dong - Chuc Dong, Chi Lang - Xuong Giang**) ஆகிய பகுதிகளில் மறக்கமுடியாத வெற்றிகள் ஈட்டினர். நூருயிரக் கணக்கான எதிரித் துருப்புகளை துவம்சம் செய்தனர். பல்வேறு பிரதேச மக்களும் அவர்கள் அறைகூவலுக்கு செவி மடுத்தனர். 'எங் களும் கிளர்ச்சிக்காரர்களை பெருமக்கள் திரள் பின் தொடர்ந்தது. அவர்களுக்கு வழிநெடுக பானங்கள் வழங் கியது. வெற்றிக்கு மேல் வெற்றி குவித்த இவர்கள் எதிரியை அழுகிப்போன பொருட்களையும், உளுத்துப்போன மரக்கட் டையையும் அழிப்பதுபோல் அழித்தனர்.[28] பல்வேறு யுக்தி களைக் கொண்டு மக்கள் தாமே நேரடியாகவும் எதிரியை எதிர்த்தனர். கோ லாங் (**Co Long**) கோட்டையில் இருந்த லுவாங் (**Luong**) குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண், எதிரி களைக் கொன்று கோட்டையைக் கைப்பற்ற ஒரு யுக்தி வகுத் தாள். இதற்காக அவள் 'தேச நிர்மாணி' என்ற விருதை லி லாயிடமிருந்து பெற்ருள்.

நிகுயென் டிராய் 'மனங்களைத் தாக்கும்' நடவடிக்கை களையும் நடத்தினன். அதாவது எதிரி மத்தியில் பிரச்சார வேலைகளை மேற்கொண்டான். நிகே அன், தீன் சாவ், தி காவ், தாங் குவான் (**Nghe An, Dien Chau, Thi Cau, Dong Quan**) போன்ற பல நகரங்களில் எதிரி சரணடையு மாறு அவனை இணங்கச் செய்யவும், வற்புறுத்தவும் கூடிய பிரச்சாரம் நடத்தினன். இதை ஏற்று நூருயிரம் எதிரித் துருப்புகள் சரணடைந்தார்கள். உள்ளூரிலிருந்து சேர்க்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட ஆயிரக்கணக்கான கூலிப்படைகள் மக்கள் தரப்புக்கு கட்சி மாறின.

மிங் வம்சத்தை எதிர்த்த எதிர்ப்புப் போரின் வெற்றி, லி லாய், நிகுயென் டிராய் ஆகியோரின் தலைமையின் கீழ் நடந்த ஒரு மக்கள் யுத்தத்தின் வெற்றியாகும். ஆனால் டிரான் தலைமையின் கீழ் நடந்த தேசபக்தப்போர் போலன்றி இது தேசிய எழுச்சியாக இருந்தது. இவ்வெழுச்சி விடுதலைப் போராக வளர்ந்தது. இதில் **கிளர்ச்சியாளர்களின் சண்டையுடன், மக்களின் பரவலான எழுச்சிகளும் இணைந்தன. கிளர்ச்சியாளர்களே பின்னர் சேனையாக வளர்ந்தனர்.** 'ஒரு முறை கிளர்ச்சிப் பதாகை உயர்த்தப்பட்டதும் மக்கள் தேனீக் கூட்டம் போல் ஒன்றாய் எழுந்தார்கள்.' அவர்கள் பல்வேறு போர் முறைகளைப் பயன்படுத்தினர். சில சமயம் 'இடி மின்னல் போல்' நேரடிச் சண்டையில் ஈடுபட்டார்கள். சில சமயம் கறையான்களைப் போல் அடியிலிருந்து குழிபறித்து பெரிய எதிரிப் படைகளையும் வீழ்த்தி விடுவார்கள். அந்நிய, உள்ளூர் அதிகாரிகளைத் தூக்கியெறிந்தார்கள். நாடு முழுவதையும் விடுவித்தார்கள். தேச சுதந்திரத்தை மீட்டார்கள். மக்கள் எழுச்சி இன்றேல், அந்நிய சுதேச ஆட்சியாளர்களைத் தூக்கியெறியவோ, கிளர்ச்சியாளர்களுக்கு பெரிய கௌரவத்தையும், விரிந்த செயல்பாட்டுக் களத்தையும் வழங்கியிருக்கவோ முடிந்திருக்காது. ஆனால் (பெரிய அழித்தொழிப்புச் சண்டைகளை நடத்தக் கூடிய ஒரு சேனையாக பின்னர் வளர்ச்சி பெற்ற) கிளர்ச்சித் துருப்புகள் இல்லாதிருந்திருக்குமானால், ஆக்கிரமிப்புப் போரை தோற்கடித்ததோ, அந்நியர் நிர்வாகத்தைச் சிதறடித்ததோ சாத்தியமாகி இருந்திருக்காது. டிரானின் கீழ் நடந்த தேசப் பாதுகாப்புப் போருடன் ஒப்பிடும் போது, தேசிய சேனையும், ஆயுதம் தாங்கிய மக்களும் இப்போது இணைந்ததானது ஒரு வளர்ச்சியே ஆகும். மக்களின் பரந்த



அளவிலான எழுச்சிகள் நடைபெற்றது, மிங்குகளுக்கெதிரான போராட்டத்தின் தனிச்சிறப்பாகும்.

வெற்றிக்குப் பின் லி லாயும், நிகுயென் டிராயும் நாட்டைப் புனரமைக்கவும் ஒரு புதிய வளர்ச்சி நிலைக்கு நிலப்பிரபுத்துவ மத்திய ஆட்சியைக் கொணரவும் விரைந்து செயல்பட்டனர். லியின் கீழ் இராணுவ அமைப்பு பெற்ற வளர்ச்சியானது இந்த வளர்ச்சியைப் பிரதிபலித்தது. 'ஒவ்வொருவனும் ஒரு போர் வீரனாதல்' என்ற மரபையும் லை, டிரான் வம்சத்தினரின் அனுபவங்களையும் வளர்த்தெடுத்த லி வம்சமும், மத்திய அளவில் அரச துருப்புகளை ஒழுங்கமைத்தது. மாவட்டங்களிலும், இராணுவப் பிரதேசங்களிலும் பிரதேசத் துருப்புகளையும், ஸ்தலங்களில் கிராமக் காவற் படைகளையும், குடிப்படைகளையும் ஒழுங்கமைத்தது. பிரபுக்களுக்கென சொந்த துருப்புகள் இருக்கவில்லை. சேனையில் முழு நேரச் சேவையிலிருப்போர் தொகை ஒரு லட்சமாகக் குறைக்கப்பட்டது. பிறர் கலைக்கப்பட்டு வீட்டுக்கு அனுப்பப்பட்டனர். படைக்கு ஆள் சேர்க்கவும், போருக்கு ஆள் திரட்டவும் ஒரு ஆட்பதிவு முறையும் இருந்தது. "ஆட்களின் பெயர்கள் குடிப் பேரேடுகளில் பட்டியலிடப்பட்டன. பிழை ஏற்படாதிருக்க வேண்டி மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை பட்டியல் சரி பார்க்கப்பட்டது. தேவைப்படும் போது அப் பதிவேடுகளின்படி போர் வீரர்களும், குடிமக்களும் அழைக்கப்பட்டனர். அனைவரும் போர் வீரர்களாயினர்." சமாதான காலத்தில் ஆயுதப் படைகளை ஒழுங்கமைப்பதிலும், பொருளாதார நிர்மாணத்தோடு தேசப் பாதுகாப்பைப் பலப்படுத்துவதிலும், அந்நிய ஆக்கிரமிப்பு நிகழுமானால் தாய்நாட்டைக் காக்கப் போர் தொடுக்க ஆயத்தமாய் வைத்திருப்பதிலும் இப் பதிவு முறை உதவியது. இது நிலப்பிரபுத்துவ அரசின் ஆட்சியை உறுதி செய்வதையே இலக்காய்க் கொண்டதில் வியப்பில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் நாட்டு நிலப்பிரபுத்துவ அமைப்பு சீர்மிகு நிலையிலிருந்து 16ம் நூற்றுண்டில் சீர்கெடும் நிலைக்கு வந்தது. பல நூற்றுண்டுகளாக நிலப்பிரபுத்துவத் துருப்புகள் பரஸ்பர அழித்தொழிப்பில் ஈடுபட்டிருந்தன. டிரிங்குக்கும், மாக்குக்கும் (Trinh, Mac) இடையிலான உள்நாட்டுப் போர் அரை நூற்றுண்டுக்கு மேல் நடந்தது. அதையடுத்து டிரிங்குக்கும் நிகுயெனுக்கும் இடையில் 50 ஆண்டுகள் மூர்க்கத்தனமான உள்நாட்டுப் போர் நடைபெற்றது. இது நம் நாட்டை ஒரு நூற்றுண்டுக்கு மேல் பிளவுண்டிருக்கச் செய்துவிட்டது. சீர்கெட்ட நிலப்பிரபுக்கள் விவசாயிகளை ஒடுக்குவதையும், சுரண்டுவதையும் மும்முரமாக்கினர். மக்களின் எழுச்சிகளுக்கு அஞ்சி அவர்கள் மக்களிடமிருந்த துப்பாக்கி முதலான ஆயுதங்களைப் பறிக்க ஆணையிட்டனர்; மக்கள் துப்பாக்கிகள் தயாரிப்பதைக் கட்டுப்படுத்தினர். விவசாயிகளின் போராட்டங்களை ஈவிரக்கமற்று அடக்க, நிலப்பிரபுக்கள் தம் சேனையைப் பயன்படுத்தினர். பெரிய அளவிலான விவசாயிகளின் எழுச்சிகளும், விவசாயிகளின் போர்களும் தொடர்ச்சியாக வெடித்தன. குறிப்பாக 18ம் நூற்றுண்டில், இவற்றின் உச்சநிலையாக நிகுயென் ஹியுவால் நடத்தப்பட்ட டே சன் கிளர்ச்சி அமைந்தது.

நமது நாட்டில் எழுச்சியிலும், போரிலும் ஏற்பட்ட வளர்ச்சியையும், சேனையும், ஆயுதம் தாங்கிய மக்களும் ஒருங்கிணைவதில் ஏற்பட்ட வளர்ச்சியையும் டே சன் எழுச்சி குறித்தது. தேசிய இயக்கமாக வளர்ச்சி பெற்ற விவசாய இயக்கத்திலிருந்தும் இவ்விரு இயக்கங்களின் நெருக்கமான ஒருங்கிணைப்பிலிருந்தும் டே சன் எழுச்சி உதயமானது. நசிந்துபோன நிலப்பிரபு வர்க்கம் ஆக்கிரமிப்பாளர்களுக்குச் சரணடைந்தபோது தேசிய வீரன் நிகுயென் ஹியு, தேச மீட்புப் பதாகையை உயர்த்தினன். இவன் விவசாய இயக்கத்தின் மகத்தான தலைவன். எனவே அக்காலத்து விவசாயிகள் எழுச்சியும், தேசியப் போரும் எதிரி மீது அவர்கள் தொடுத்த வலிந்த தாக்குதலுக்கான புதிய, மகத்தான ஆற்றலைப் பெற்றன.

'பணக்காரனிடமிருந்து பறித்து ஏழைகளுக்குக் கொடு' என்ற கிளர்ச்சியாளர்களின் முழக்கம் விவசாயிகளும், ஏழை மக்களும் எழுச்சி பெற ஊக்கமூட்டியது. கிளர்ச்சி பரந்த இடங்களுக்குப் பரவியது. பின் அது நாட்டிலிருந்த நிலப்பிரபுத்துவ ஆட்சியைத் தூக்கியெறியும் விவசாயிகள் போராகவும், அந்நிய நிலப்பிரபுக்களின் ஆக்கிரமிப்பை முறியடிக்கும் தேசியப் போராகவும் வளர்ந்தது.

தேசியப் போராக வளர்ச்சி பெற்ற விவசாயிகள் எழுச்சியில் ஆயுதப் படைகள் கிளர்ச்சிப் படைகளில் இருந்து கட்டப்பட்டன. பின் அவை படிப்படியாக ஒரு சேனையாக ஒழுங்கமைக்கப் பட்டன. அதில் விவசாயிகளும், பிறதட்டு மக்களும் பெரும் பங்கேற்றனர். இது அரசியல் நோக்கங்கள், படையின் அளவு, நிறுவனம் மற்றும் இராணுவக் கலையின் வளர்ச்சி மட்டம் ஆகியவற்றைப் பொறுத்து நம் நாட்டின் இராணுவ அமைப்பில் ஏற்பட்ட மற்ரெரு வளர்ச்சியாகும். டே சனில் முதல் கிளர்ச்சிப் படை வெளிப்படையாகவே ஏழை மக்களின் ஆயுதந் தாங்கிய படையமைப்பாகவே இருந்தது. விவசாயிகள், கைத்தொழிலாளர்கள் போன்ரேர் மூங்கிற் கழிகள், குத்தீட்டிகள், வேல்கள், வாள்கள், துப்பாக்கிகள் போன்ற பல்வேறு ஆயுதங்களைத் தரித்திருந்தனர். கிளர்ச்சியின் போக்கில், எல்லாவிடத்திலிருந்தும் ஆயுதபாணியாய் எழுந்து நின்ற விவசாயிகளும், பிற ஒடுக்கப்பட்ட மக்களும் நிகுயென் ஹியுவின் துருப்புகளைப் பின்பற்றி, கிளர்ச்சியாளர்களுடன் சேர்ந்தனர். நசிந்துவந்த நிலப்பிரபு வர்க்கத்தின் அதிகாரத்தைத் தகர்த்தனர். நிகுயென் ஹியுவின் புகழ் ஓங்கிற்று. அவனது துருப்புகளின் எண்ணிக்கை விரைவில் பெருகிற்று. அவை படிப்படியாக டே சன் சேனையாக ஒழுங்கமைக்கப் பட்டன. அது ஒரு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விவசாயிகள் சேனை.** பிற்பாடு அது **தேசிய சேனை** ஆயிற்று. அதன் அமைப்பு நிலையும், ஆயுத சாதன நிலையும் உயர்வாயிருந்தன. அச் சேனையில் காலாட் படையும், குதிரைப் படையும், யானைப் படையும், கப்பற் படையும் இருந்தன. அவற்றிடம் பல்வேறு வகைத் துப்பாக்கிகள், பீரங்கிகள், பலவகைப் போர்க்கப்பல்கள் ஆகியவை இருந்தன. சண்டை யானைகள், நூற்றுக்கணக்கில் துருப்புகள், பெரிய துப்பாக்கிகள் ஆகியவற்றை ஏற்றிச் செல்லக்கூடிய பெரிய போர்க் கப்பல்கள் இருந்தன. ஹியு, படகுகளிலும், யானைகள் மீதும் பீரங்கிகளை ஏற்றி அவற்றை பீரங்கிப் படை போல் பயன்படச் செய்தான்.

மக்களின் (முக்கியமாக விவசாயிகள், பிற ஏழை மக்கள்) எழுச்சியைச் சார்ந்திருத்தல், யூகமிக்க போர் யுக்திகளும், உயர்ந்த இயங்குதிறனும் கொண்டு, நிகுயென் ஹியுவின் தலைமையின் கீழிருந்த டே சன் சேனையானது, நம் வரலாற்றில் புதிய போர்ச் சாதனைகளைச் செய்தது.

குய் நிகான் கோட்டையைத் தகர்த்தது, குவாங் நிகாயைக் கைப்பற்றியது, பூ யென்னை விடுவித்தது, ஜியா தின் சோட்டைக்கெதிரான ஐந்து வெற்றிகரமான தாக்குதல்கள் நடத்தியது (**Qui Nhon, Quang Ngai, Phu Yen, Gia Dinh**) போன்ற பல புகழ்பெற்ற சண்டைகளுக்குப் பின் டே சன் சேனை, 200 ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி புரிந்த பழைய நிகுயென் நிலப்பிரபுத்துவக் கூட்டத்தைத் தூக்கியெறிந்தது. பின் 'ராச் கம் - ஸோவாய் மட்'டில் நடந்த (**Rach Gam - Xoai Mut**) மறக்க முடியாத வெற்றியில் பத்தாயிரக் கணக்கான சயாமியத் துருப்புகளை அழித்தொழித்ததுடன், நிகுயென் ஹியு, ஆக்கிரமிப்புத் தாக்குதலைத் தகர்த்தெறிந்தான்.

இதையடுத்து துருப்புகள் மின்னல் வேகத்தில் செயல்பட்டன. இக் கட்டத்தில் டே சன் சேனை, பு சுவான் கோட்டையைக் கைப்பற்றியது. ஜியாங் ஆற்றுக்கு விரைந்தது. தாமாகவே கிளர்ந்தெழுந்த மக்களின் ஆதரவுடன், அங்கிருந்து பத்து நாட்களில் திரின் துருப்புகளை தோற்றோடச் செய்தது.



''சேனை உடனடியாக வட கடல் நோக்கிப் பயணம் சென்றது.''[29] நிகுயென், வி ஹோவாங் (**Vi Hoang**) மேல் திடீர்த் தாக்குதல் தொடுத்தான். தாங் லாங்கை (**Thang Long**) விடுவித்தான்.[30] ஏறக்குறைய முன்னூறாண்டுகள் ஆட்சியிலிருந்த திரின் நிலப்பிரபுத்துவக் கூட்டத்தை ஒரு மாதத்துக்குள் தூக்கியெறிந்தான். இதன் மூலம் பக் ஹா முதல் ஜியா தின் வரை தேசிய ஐக்கியம் ஏற்பட வழி கோலினான்.

அரியணையில் தொடர்ந்து ஒட்டிக் கொண்டிருக்க விரும்பிய லி பிரபுக் கூட்டம் சிங் ஆக்கிரமிப்பாளர்களை நாட்டுக்குள் அழைத்தது. அந்நிய ஆக்கிரமிப்பு அபாயத்தைக் கண்ட நிகுயென் ஹியு தன் சேனையை வடக்கு நோக்கி நடத்திச் சென்றான். மின்னல்வேகப் படைஇயக்கத்தோடும், 'ஒரே சண்டை மூலம் போரில் வென்றுவிடும்' வைராக்கிய சித்தத்தோடும், 'வீரம் விளையும் வியட் நாம் நாட்டுக்கு உரியோர் இருக்கிறார்கள்'[31] என்பதை ஆக்கிரமிப்பாளருக்கு சுட்டிக்காட்டும் உறுதியான தீர்மானத்துடனும், இப்போது பேரரசனாயிருந்த தேசிய வீரன் நிகுயென் ஹியு ஐந்தே நாட்கள் நடந்த புகழ்பெற்ற நிகாக் ஹோய் - டாங் டா (**Ngoc Hoi - Dong Da**) சண்டையில் 2 இலட்சம் பேர் கொண்ட சிங் சேனையைத் தகர்த்தான். அவர்களின் ஆக்கிரமிப்புத் திட்டத்தைச் சிதறடித்தான்.

தேசிய இயக்கமாய் விரிவடைந்த விவசாயி இயக்கமான டே சன் எழுச்சியானது, **பரந்த அளவில் ஆயுதம் தரித்து எழுந்து நின்ற மக்களையும் மிக சக்திவாய்ந்த ஒரு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சேனையையும்** அடிப்படையாகக் கொண்டிருந்தது. நாட்டிலிருந்த மூன்று பிற்போக்கு நிலப்பிரபுத்துவக் கும்பல்களைத் தூக்கியெறிந்தது. இரு அந்நிய ஆக்கிரமிப்புச் சேனைகளைத் தகர்த்தெறிந்தது. தேசத்தை ஒன்றுபடுத்துவதை நிறைவு செய்தது. தேசிய சுதந்திரத்தைப் பாதுகாத்தது. இது ஒரு மகத்தான இராணுவ அருஞ்செயலாகும். நமது புரட்சிகர விவசாயிகளுக்கும், தேசத்துக்கும் கிடைத்த பெரிய வெற்றியாகும். நம் நாட்டு வரலாற்றில் இணைகாண முடியாத சிறப்புடையதாகும். பிறநாட்டு விவசாயி இயக்கங்களின் வரலாற்றிலும் இத்தகைய வெற்றி அரிதாகவே காணப்படுகிறது.

19ம் நூற்றுண்டில் நம் நாடு ஒரு கடுமையான சோதனையைச் சந்தித்தது. பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் நம் நாட்டை ஆக்கிரமிக்கத் துவங்கினர். இப்புது எதிரி, பொருளாதார, இராணுவ வலிமை மிகுந்த ஒரு மேலை முதலாளியச் சக்தியாகும். இது முந்திய நிலப்பிரபுத்துவ ஆக்கிரமிப்பாளர்களை விட மிக மாறுபட்டது. நாட்டுக்குள் நீண்ட காலத்துக்கு முன்பே நிலப்பிரபுத்துவ ஆட்சி சீரழிந்து போயிருந்தது. தேச வரலாற்றில் நிலப்பிரபுத்துவம் முற்போக்கான பங்காற்றிய காலம் மலையேறி விட்டது. நிலப்பிரபுத்துவத்தின் அதீத பிற்போக்குக் கொள்கைகள் வியட்நாமிய சமுதாயத்தை முற்றுன சீரழிவில் தள்ளிவிட்டன. நிலப்பிரபுத்துவ அரசு தன் சேனையைக் கொண்டு விவசாயிகள் கிளர்ச்சிகளை ஒடுக்கி வந்தது. அதன் சேனை முழுக்க மக்கள் விரோத சக்தியாகி விட்டது. எனவே நாட்டு மக்களிடமிருந்து அதற்கு எவ்வித ஆதரவும் கிட்டவில்லை. இதற்கிடையில் விவசாயிகள் ஆயுதபாணியாய் எழுந்தனர். சிறியதும் பெரியதுமான நூற்றுக் கணக்கான எழுச்சிகளை நடத்தினர். நிலப்பிரபுத்துவ வர்க்கத்தின் கொடிய ஆட்சியையும் மிருகத்தனமான அடக்குமுறையையும் எதிர்த்தனர்.



பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளின் ஆக்கிரமிப்பை எதிர்கொண்ட விவசாய மக்கள் நாடெங்கனும் கிளர்ந்தெழுந்தனர். ஆனல் நிகுயென் நிலப்பிரபுத்துவக் கூட்டம் எந்தவித சீர்திருத்தமும் செய்ய மறுத்து, தொடர்ந்து மக்களை ஒடுக்கி வந்தது. தன் வர்க்க நலன்களுக்காக, அது மக்களுடன் அணி சேர்வதை விடவும் ஆக்கிரமிப்பாளர்களுக்கு அடிபணியவே முனைந்தது. எனவே நமது" நாடு பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளிடம் தன்னை இழந்தது. வெட்கக்கேடான முறையில் நிகுயென் ஆட்சியாளர்கள் சரணடைந்த போதிலும், நம் மக்கள் விடாமல் போராடினர். ஒரு நூற்றுண்டுக் கால பிரெஞ்சு ஆட்சியின் கீழ் நம் மக்கள் நம் நாட்டின் அயராத போர்க்குணத்தை வெளிப்படுத்தினர். இடைவிடாது கிளர்ந்தெழுந்து பல்வேறு எதிர்ப்பியக்கங்களை நடத்துவதற்கான கிளர்ச்சித் துருப்புகளை ஒழுங்கமைத்தனர். அவற்றில் சில - தெற்கில் ட்ருவாங் காங் தீன், நிகுயென் டிரங் டிரக் (**Truong Cong Dinh, Nguyen Trung Truc**) ஆகியோருடையவையும் வடக்கில் பான் தின் புங், நிகுயென் தீன் துவாட், ஹோவாங் ஹோவா தாம் (**Phan Dinh Phung, Nguyen Thien Thuat, Hoang Hua Tham**) போன்ருேருடையவையுமாகும். நம் மக்கள் கிளர்ச்சியாளர்களோடு தோளோடு தோள் நின்று மிக்க வீரத்துடன் போரிட்டனர். வீழ்ந்துபட்டவர்களின் இடத்தைப் பலர் நிரப்பினர். ஆனலும் அவர்களால் வெற்றிபெற முடியவில்லை. ஏனெனில் புதிய வரலாற்று நிலைகளுக்கேற்ற சரியான மார்க்கமும், சரியான தலைமையும் அவர்களுக்கு இருக்கவில்லை. வியட்நாமிய தொழிலாளி வர்க்கமும், நமது கட்சியும் தோன்றிய பிறகுதான் நமது தேசிய வரலாறு மகத்தான திருப்பத்தை அடைந்தது.

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் நாட்டின் எழுச்சிகள் மற்றும் போர்களின் வரலாறும், இராணுவ அமைப்பின் வரலாறும் நம் மக்கள் அந்நிய ஆக்கிரமிப்புக்கு எதிராக நடத்திய மிகப் புகழ்பெற்ற போராட்ட மரபைக் கொண்டிருந்தவர்கள் என்பதை நிரூபிக்கின்றன. தன்னைவிட மிகப் பலம் பொருந்திய ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடிக்க நன்கு ஒன்றிணைந்து தன் சக்திகளையெல்லாம் ஒன்றுசேர்த்துப் போராடிய ஒரு சிறிய நாட்டின் மரபு அது. நம் நாட்டின் எழுச்சிகளும், தேசியப் போர்களும் ஓரளவு நன்கு வளர்ச்சி பெற்ற மக்கள் எழுச்சிகளாகவும், மக்கள் யுத்தங்களாகவுமே இருந்திருக்கின்றன.

அந்த எழுச்சிகளையும், தேசியப் போர்களையும் வெற்றி பெறச் செய்வதற்கான **இராணுவ அமைப்பைப்** பொறுத்தவரையில் மிக ஆரம்ப காலத்திலிருந்தே நமது மக்கள், ‘ஒவ்வொருவனும் ஒரு போர் வீரனாவது’ என்ற குறிக்கோளைச் செயல்படுத்தி வந்தார்கள். பல்வேறு வடிவங்களில் பரந்துபட்ட மக்களை அணிதிரட்டுவதாகும் அது. அதன் உச்ச வடிவம், சேனையுடன் சேர்ந்து நின்று ஆயுதந்தாங்கிய மக்களும் போராடுவதாகும். எனவே **எழுச்சிகளிலும், தேசியப் போர்களிலும்,** ஆயுதந் தாங்கிய மக்கள் மட்டுமோ அல்லது சேனை மட்டுமோ செயல்பட்ட ஒரு சில சந்தர்ப்பங்களைத் தவிர, **நம் நாட்டில் இராணுவ அமைப்பு என்பது பொதுவாக, தேசிய சேனையும், மக்களின் ஆயுதப்படைகளும் இணைந்ததாகவே இருந்து வந்திருக்கிறது.** இவற்றின் அமைப்பு வடிவங்கள் பல்வேறுபட்டதாய் இருந்திருக்கின்றன; வளர்ச்சி மட்டங்கள் வேறுபட்டிருந்க்கின்றன. குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலுக்கும், நிலைக்கும் ஏற்ப ஒன்றுக்கொன்று மாறுபட்ட பாத்திரம் வகித்திருக்கின்றன. இதன் பயனாக நம் நாட்டில் எழுச்சிகளும், தேசியப் போர்களும் தேசம் முழுவதினதும், அனைத்து மக்களினதும் ஆற்றலையும் முழுமையாக வெளிக்கொணர முடிந்தது. இப் போர்களில், எண்ணிக்கைப் பலம் கூடிய படையை ‘எண்ணிக்கைப் பலம் குறைந்த படை கொண்டு எதிர்ப்பது’, ‘பெரியதை எதிர்க்க சிறியதைப் பயன்படுத்திக் கொள்வது’, ‘பலமானதைத் தோற்கடிக்க பலங் குறைந்ததை துணைக்குச் சேர்த்துக் கொள்வது’ போன்ற மரபுவழி இராணுவ அறிவு ஆக்கபூர்வமாகப் பிரயோகிக்கப்பட்டது.

**கடந்த காலத்தில் நம் வியட்நாமிய மக்கள் தம் தாய்நாட்டைக் காக்கவும், விடுதலை ஈட்டவும், தொடுத்த தேசிய எழுச்சிகளிலும், தேசியப் போர்களிலும் வெற்றியைச் சாதிப்பதற்காக அமைந்துக் கொண்ட இராணுவ அமைப்பினதும், பாவித்த இராணுவக் கலையினதும் கோட்பாடு இது தான்:- அதாவது ‘ஆயுதந் தாங்கிய மக்களுடன் தேசிய சேனை சேர வேண்டும்; அல்லது தேசிய சேனையுடன் ஆயுதந் தாங்கிய மக்கள் சேர வேண்டும்.’**

**இராணுவ அமைப்பானது முதன்மையாக அரசியல் அமைப்பை, அரசின் வர்க்க இயல்பைச் சார்ந்துள்ளது. அது எப்போதும் எழுச்சிகள், போர்கள் ஆகியவற்றின் தன்மையுடனும், குறிக்கோளுடனும் நெருக்கமாகப் பிணைந்திருக்கிறது.** ஆக, நம் நாட்டின் இராணுவ அமைப்பினால், எதிரிக்கெதிரான சண்டையில் பரந்துபட்ட மக்களனைவரையும் அணிதிரட்ட முடிந்ததற்கு முதன்மையான காரணம், அந்த எழுச்சிகளும், தேசியப் போர்களும் நீதியானவை என்பதும் அவற்றின் அரசியல் குறிக்கோள்கள் தேசிய சுதந்திரத்தை மீட்பதும், காப்பதுமாக இருந்தன என்பதுமாகும்.

அந்த எழுச்சிகளிலும், தேசியப் போர்களிலும் தேசிய நலன்களும், யுத்தத்தின் குறிக்கோள்களும் பற்றிய கருத்தொற்றுமை கிளர்ச்சித் துருப்புகளுக்கும், மக்கள் படைகளுக்கும் இடையில் இருந்தது; கிளர்ச்சித் துருப்புகளை ஒழுங்கமைத்த நிலப்பிரபுத்துவ வர்க்கத்தின் பிரதிநிதிகள் அல்லது நிலப்பிரபுத்துவ அரசின் சேனைக்கும் பரந்துபட்ட மக்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கும் இடையில் கருத்தொற்றுமை இருந்தது. (இந்தக் கருத்தொற்றுமைக்கு நிலப்பிரபுத்துவ வர்க்கத்தின் தன்மை காரணமாகவும் வரலாற்று நிலைகள் காரணமாகவும் வரம்பிருந்தது என்பது உண்மை.) இதனால் தான் அந்த கிளர்ச்சிப் படைகளும், சேனைகளும் மக்களின் ஆழ்ந்த தேசபக்தி, தேசிய ஒற்றுமையுணர்வு, அயராத போர்க் குணம் ஆகியவற்றைச் சார்ந்து நின்றன. அதனால்தான் மக்கள், சேனையில் விரும்பிச் சேர்ந்தனர்; அதை ஆதரித்தனர்; சண்டையில் நேரடிப் பங்கேற்றனர். இவ்வாறு சேனையும், ஆயுதம் தாங்கிய மக்களும் ஒருங்கிணைய வழிகோலின. ஹுவோங் பிங், தோ பிங் (கிராமத் துருப்புகள், ஸ்தலத் துருப்புகள்) படைகள் கூட தம் போர்த்திறனைக் காட்ட முடிந்தது. மக்களின் ஆயுதந் தாங்கிய படைகளைச் சிலபோது விரிவுபடுத்தவும், சண்டையில் தேசிய சேனையுடன் நெருக்கமாக இணைந்து கொள்ளவும், அதன் மூலம் நாடு முழுவதன் பலத்தை அதிகப்படுத்தவும் முடிந்தது. 'ஒவ்வொருவனும் ஒரு போர் வீரனுதல்' என்ற முறையானது ஒவ்வொரு தேசபக்தக் குடிமகனும் தேச மீட்சியிலும் தாய்நாட்டைக் காப்பதிலும் பங்கெடுப்பதைச் சாத்தியமாக்கியது. மக்களைப் போருக்கு அணிதிரட்ட நிலப்பிரபுத்துவ வர்க்கமும் சில ஜனநாயக வடிவங்களைப் பிரகடனம் செய்தது. எழுச்சிகளதும், தேசியப் போர்களதும் நீதியான தன்மையைப் பிரதிபலித்த சேனையைக் கட்டியெழுப்புவதில் தேசிய வீரர்கள் முற்போக்கான கருத்துகளைக் கொண்டிருந்தனர். அவர்கள் தம் அதிகாரிகளுக்கும், ஆட்களுக்கும் 'தேசத்துக்காக உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள்', 'மானங் கெட்டுப் பிழைப்பதிலும் மானத்தோடு சாவது மேல்', 'தந்தையும் மகனும் போல் ஒன்றுபடுக', 'எண்ணிக்கையை விட ஐக்கியத்தைப் பேணி வளருங்கள்' போன்றவற்றைக் கற்பித்தனர்.

நாட்டைக் காப்பதற்குப் பதில் கிளர்ச்சிகளை - அதாவது மக்களின் போராட்டங்களை-ஒடுக்குவதற்கு சேனையை நிலப்பிரபுத்துவ அரசு பயன்படுத்திய காலங்களில், அல்லது அந்நிய ஆக்கிரமிப்பின் போது ஆளும் நிலப்பிரபுத்துவ வர்க்கம் தேசிய நலன்களுக்கு மேல் தன் சுயநலன்களை வைத்துக் கொண்டு, ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்துச் சண்டையிடுவதற்குப் பதில் நாட்டிலுள்ள விவசாயிகள் இயக்கத்தை எதிர்க்கத் தன் சேனையைப் பயன்படுத்திய காலங்களில், நிலைமை முழுக்க வேறு. இத்தகைய மாறுபட்ட நிலைமை, நிலப்பிரபுத்துவம் நசியும் காலத்தில் ஏற்பட்டது. 'ஒவ்வொருவனும் ஒரு போர் வீரனுகுக' என்னும் முறை அப்போது ஒழித்துக் கட்டப்பட்டது. நிலப்பிரபுத்துவ சேனையில் ஒரு ஆளைச் சேர்ப்பது அவனுக்குத் தரப்படும் தண்டனையாக ஆயிற்று. நிலப்பிரபுத்துவ வர்க்கத்துக்கும், மக்களுக்குமிடையில் நிலவிய பகை முரண்பாடுகள் மிகவும் முற்றிப் போயின. நிலப்பிரபுத்துவ அரசுக்கும், எதிர்ப் புரட்சிகர சேனைக்கும் எதிராக ஆயுதப் போராட்டம் உட்பட பல்வேறு வழிகளில் மக்கள் எழுந்தார்கள். நிலப்பிரபுத்துவ அரசைத் தூக்கியெறிந்து அதன் சேனையை அழிப்பதற்காக தம் சொந்த ஆயுதபாணி அமைப்புகளை மக்கள் நிறுவினார்கள்.

**நிலப்பிரபுத்துவ அமைப்பின் அடிப்படையில் கட்டப்பட்ட இராணுவ அமைப்பு, அந்த சமூக அமைப்பின் பௌதீக, தொழில்நுட்ப நிலைகளையும் அப்போதைய உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி நிலையையும் சார்ந்திருக்கிறது.** ஆரம்பக்கால, சாதாரண வில்களில் இருந்து, ஏககாலத்தில் பல அம்பெய்யும் வில்கள் வரையும், வெண்கல முனை அம்புகள் வரையும், பின் பிற பல ஆயுதங்கள், கவண்கள் முதல் பீரங்கிகள் வரையும், பெரிய போர்க்கப்பல்கள் வரையும், யானை மீதேற்றிய பீரங்கிகள் போன்றன வரையுமான ஆயுதசாதன வளர்ச்சியானது, அமைப்பின் வடிவம், சண்டைமுறை, போர்த்திறன் ஆகியவற்றைத் தீர்மானிக்கும் காரணிகளில் ஒன்ருக இருந்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை கூறப்பட்ட காலம் முழுவதிலும், நம் நாட்டை ஆக்கிரமிக்க வந்தவர்கள் நம்மைவிட பலம் பொருந்தியவர்களாயிருந்தாலும் நாமிருந்த நிலப்பிரபுத்துவ சமுதாய நிலையிலேயே அவர்களும் இருந்தார்கள். எனவே அவர்களிடம் படைகள் பெரிதாக இருந்தாலும், அவர்களின் ஆயுத சாதனங்கள் நம்மதிலும் பார்க்க அதிநவீமானவையாயில்லை. சில சந்தர்ப்பங்களில் நமது ஆயுதங்களை விட அவை பழமையானவையாகவே இருந்தன. அக் காலங்களில் நம் நாட்டையும் நம் இராணுவ அமைப்பையும் எதிர்கொண்ட பிரச்சினை, ஒரே மாதிரியான ஆயுதங்களும், தளவாடங்களும் இரு தரப்புகளும் பெற்றிருக்கும் நிலையில், எண்ணிக்கைப் பலம் கொண்ட படையை, எண்ணிக்கைப் பலமற்ற சிறிய படை கொண்டு எதிர்ப்பது எப்படி என்பதாகவே இருந்தது. ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புச் சேனைகளுடன் போரிட வேண்டிவந்த நம் காலத்தில் தான், எண்ணிக்கையில் மட்டுமல்ல, நவீன ஆயுத வகையிலும் வலுவான எதிரியின் ஆக்கிரமிப்புச் சேனைகளை, குறைந்த வளர்ச்சியே பெற்றுள்ள பொருளாதாரத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டதும் எளிய ஆயுத சாதனங்களைக் கொண்டதுமான ஆயுதப் படை கொண்டு எதிர்ப்பது எப்படி என்பது நாம் தீர்க்க வேண்டிய பிரச்சினையாயிற்று.

பொதுவாக வரலாற்றிலும் குறிப்பாக எழுச்சிகளிலும், போர்களிலும் பரந்துபட்ட மக்களின் பாத்திரம் பற்றி வரலாற்றுப் பொருள்முதல்வாதமும், பாட்டாளி வர்க்க இராணுவ விஞ்ஞானமும் கூறும் உண்மைகள் சரியானவையே என்பதை நம் நாட்டில் பரந்துபட்ட மக்களின் பங்கேற்புடன் நடத்தப்பட்ட எழுச்சிகளும், தேசியப் போர்களும் மெய்ப்பித்துள்ளன. மேலும் அவை, சுரண்டும் வர்க்கங்களின் ஆட்சிக்கும், அந்நிய ஆதிக்கங்களின் ஆக்கிரமிப்புக்கும் எதிராக புரட்சிகர வர்க்கங்களும், ஒடுக்கப்பட்ட மக்களும் தொடுக்கும் எழுச்சிகளிலும், போர்களிலும் மக்களை



ஆயுதபாணியாக்குவதையும் சேனை ஒன்றை உருவாக்குவதையும் பற்றிய மார்க்சிய - லெனினிய ஆய்வுரை சரியானதே என்பதை நிலைநாட்டுகின்றன.

இதே வரலாற்றுக் கட்டங்களில் ஐரோப்பிய நாடுகளில் நிலவிய நிலையுடன் இதை நாம் ஒப்பிட்டால், நாம் பின்வரும் முடிவுக்கு வரமுடியும். அதாவது மத்திய காலத்தில் ஐரோப்பாவில் நடந்த பல போர்களின் வரலாறும், கூலித் துருப்புகளைக் கொண்டு பல்வேறு நிலப்பிரபுத்துவக் கூட்டங்களுக்கிடையில் நடந்த பரஸ்பரக் கொலைகளின் தொகுப்பாகவே இருந்தது. **ஆனால் நம் நாட்டில் நடந்த போர்களின் வரலாறே முதன்மையாய் தேசிய எழுச்சிகள், தேசியப் போர்களின் வரலாறாகவே, மக்கள் எழுச்சிகளின், மக்கள் யுத்தங்களின் வரலாறாகவே இருந்தது.**

அந்நிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான சண்டையில் 'தேசம் முழுவதும் படைகளில் சேரும்' மரபு, மக்கள் எழுச்சி, மக்கள் யுத்தம் என்ற அனுபவம், தேசிய சேனை, ஆயுதந் தாங்கிய மக்கள் படைகள் இரண்டும் இணைந்த இராணுவ அமைப்பு பற்றிய அனுபவம், இவையெல்லாம் **நம் மக்களின் மதிப்புமிக்க மரபும், அனுபவமுமாய்** இருக்கின்றன. இவை நம்நாட்டுக்கேயுரிய, பிற நாடுகளின் இராணுவ வரலாற்றில் அரிதாகவே காணப்படுகிற அம்சங்களாகும்.

வியட்நாமியத் தொழிலாளி வர்க்கம் தோன்றி, நம் **கட்சி** பிறந்ததும், மார்க்சிய - லெனினிய ஒளியிலும், நம் கட்சியின் அரசியல் இராணுவ மார்க்கத்தின் ஒளியிலும், மேற்சொன்ன மதிப்புமிக்க மரபும், அனுபவமும் நம் கட்சியாலும், மக்களாலும் செரித்துக் கொள்ளப்பட்டன. புதிய வரலாற்றுச் சூழலில், நம் காலத்தின் மிகக் கொடிய ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடிக்கும் பொருட்டு அவை புதிய மட்டங்களுக்கு வளர்க்கப்பட்டன.

○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# III

## புரட்சிகர மக்கள் திரளினரை ஆயுதபாணியாக்கியதிலும் மக்கள் சேனையை உருவாக்கியதிலும் நம் கட்சியும் மக்களும் ஆற்றிய ஆக்கபூர்வப் பணி

நம் கட்சி தோற்றுவிக்கப்பட்டதிலிருந்தே, அது புதிய சகாப்தத்தில் மகத்தான தேசிய விடுதலை இயக்கத்தை வழி நடத்தும் வரலாற்றுக் கடமையை மேற்கொண்டிருக்கிறது. நம் தேசத்தின் வரலாற்றிலேயே மிகப் புகழ்பெற்ற சகாப் தத்துக்குள், சுதந்திரம், விடுதலை, சோஷலிசம் ஆகியவற் றின் சகாப்தத்துக்குள் நம் தேசத்தை இட்டுச் சென்றுள் ளது.

கடந்த சில ஆயிரம் ஆண்டுகளாக நமது மக்கள் நமது நாட்டின் சுதந்திரத்தை மீட்கவும், காக்கவும் பல எழுச்சி களையும், தேசியப் போர்களையும் நடத்தியிருக்கிறார்கள். கடந்த நாற்பதாண்டுகளில் கட்சியின் சரியான, சுயேச்சை யான, ஆக்கபூர்வமான கொள்கைகளால் வழிநடத்தப்பட்ட நீடித்த போராட்டத்தில், மீண்டும் நம் மக்கள், நம் நாட் டின் தேசிய சுதந்திரத்தை மீட்டுக் காக்கவும், நம் நாட்



டில் மக்கள் ஜனநாயக அமைப்பையும், சோஷலிசத்தை யும் கட்டிக் காக்கவும் அடுத்தடுத்து வீரஞ்செறிந்த எழுச்சி களையும், மக்கள் யுத்தங்களையும் தேசஅளவில் நடத்தினார் கள்.

நமது மக்கள் ஆகஸ்டு புரட்சியில் பொது எழுச்சியை வெற்றிகரமாய் நடத்தி, பிராங்கோ-ஜப்பானியப் பாசிஸ ஆட்சியைத் தூக்கியெறிந்து, வியட்நாம் ஜனநாயகக் குடி யரசை நிறுவினார்கள். இது தென்கிழக்காசியாவின் முதல் மக்கள் ஜனநாயக அரசாகும். நம் மக்கள் முதல் எதிர்ப்புப் போரை வெற்றிகரமாக நடத்தி பிரெஞ்சுக் காலனியவாதிக ளின் ஆக்கிரமிப்புப் போரைத் தோற்கடித்து, நாட்டில் பாதியை விடுவித்து வடபகுதியைச் சோஷலிசத்துக்கு இட் டுச் சென்றார்கள். அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடத்திய இரண்டாம் எதிர்ப்புப் போரிலும் நம் மக்கள் வெற்றி பெற்றார்கள். நாட்டின் தென்பகுதியை விடுவிக்கவும் வடபகுதியைக் காக்கவும், தேசத்தை மீண்டும் அமைதி யான முறையில் ஒன்றுபடுத்துவதற்காகவும், உலக மக்க ளின் புரட்சிகர இலட்சியத்துக்குப் பங்களிப்பாற்றுவதற்கா கவும் இந்த இரண்டாம் எதிர்ப்புப் போரை அவர்கள் நடத் தினார்கள். நம் தேசத்தின் வரலாற்றில் அந்நியராதிக்கத் துக்கு எதிராக நடத்தப்பட்ட மிகப் புகழ்வாய்ந்ததும் மகத் தானதுமான போர் இதுவாகும். நம் தேசம் தன் வரலாற் றில் அதற்கு முன் ஒருபோதும் இவ்வளவு நீண்ட காலம் தொடர்ச்சியாக போரிட்டதில்லை. தொடர்ந்து பல தசாப் தங்களுக்கு ஆயுத எழுச்சிகளையும், புரட்சிப் போரையும் இக் காலகட்டத்தில் செய்தது போல் நம்நாடு முன்பு செய் ததில்லை. அதுமட்டுமல்ல, இதற்கு முன் ஒருபோதும் நம் தேசம், ஒரு ஆசிய வல்லரசான ஜப்பானியப் பாசிசம், ஐரோப்பாவின் பழைய காலனிய சக்தியான பிரெஞ்சுக் காலனியம், முன்னணி ஏகாதிபத்திய அரசும் மனித இனத் தின் முதல் எதிரியுமான அமெரிக்க ஏகாதிபத்தியம் போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரட்டு ஆக்கிரமிப்பாளர்களை அடுத்தடுத்து எதிர்த்து வெற்றி கண்டதில்லை.

நம் மக்கள் தீரத்துடன் கூடிய உற்சாகமும், உருக்கையொத்த மனவுறுதியும் கொண்டு பெரிய வெற்றிகளைச் சாதித்திருக்கிறார்கள். இந்த மகத்தான வெற்றிகளை, பின்வருவனவற்றிலிருந்து பிரித்துவிட முடியாது: **வியட்நாமிய தொழிலாளி வர்க்கத்தின் தோற்றம், நமது கட்சித் தலைமை, நம் அன்புக்கும், மதிப்புக்கும் உரிய தலைவர் ஹோ சி மின்,** மகத்தான அக்டோபர் புரட்சியால் தோற்றுவிக்கப்பட்டுள்ள **புதிய சகாப்தத்தின் வரலாற்று நிலைமைகளும், வரலாற்றுச் சூழல்களும்.**

சுதந்திரமும், விடுதலையும், சோஷலிசமும் பெறுவதற்காக, முன் சொன்ன கொடிய ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடிக்க வேண்டிய வரலாற்றுப் பணி நம் முன் நின்றது. இதனை வெற்றிகரமாய்ச் சாதிப்பதற்காக நமது தேசம் **அனைத்து மக்களின் படையை** திரட்டியது. **உன்னதத் தீரத்துடன்,** நம் கட்சியின் தலைமையின் கீழ் ஒரு நீதிப்போர் நிகழ்த்தியது. மக்கள் திரளினரின் அரசியல் படைகளை ஒழுங்கமைத்தும், இந்தப் பெரும் அ ர சி ய ல் சே னை யின் அடிப்படையிலும், நமது கட்சியானது மக்களின் **இராணுவ அமைப்பைக்** கட்டும் பிரச்சினையை வெற்றிகரமாகத் தீர்த்தது; மக்களின் ஆயுதப் படைகளை வெற்றிகரமாய்க் கட்டியமைத்தது.

நம் நாட்டில் புரட்சிப் போராட்டத்தின் வெற்றியை நிர்ணயித்த மிக முக்கியமான காரணிகளில் ஒன்று, நம் மக்களின் ஆயுதப் படைகளாகும். அதன் வளர்ச்சி, கட்சியின் மார்க்கங்களை நிறைவேற்றுவதை இலக்காய்க் கொண்ட ஆயுத எழுச்சிகளினதும், புரட்சிப் போர்களினதும் வளர்ச்சியில் அடங்கியிருக்கிறது. நம் நாட்டின் **ஆயுத எழுச்சிகளின**



**தும், புரட்சிப் போரினதும் புதிய வளர்ச்சிகளை** நாம் பகுத்தாய வேண்டும். இதுவே, புரட்சிகர 'ஆயுதப் படைகளைக் கட்டியதில் நம் கட்சியும், மக்களும் ஆற்றிய ஆக்கப்பணியைத் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு அடிப்படையானதாகும்.

நம் வியட்நாமிய மக்கள் கடந்த காலத்திலேயே நிலப்பிரபுத்துவ வர்க்கத்தால் வழிநடத்தப்பட்ட மக்கள் எழுச்சிகளிலும், மக்கள் யுத்தங்களிலும் பங்கேற்ற அனுபவம் பெற்றிருந்தார்கள். விவசாயிகள் இயக்கத்திலிருந்தும், தேசிய இயக்கத்திலிருந்தும் உருவான மக்கள் எழுச்சிகளிலும், மக்கள் யுத்தங்களிலும் அவர்கள் அனுபவம் பெற்றிருந்தார்கள்.

இன்று நமது தேசம் **தொழிலாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் தேசந் தழுவிய** எழுச்சியையும், **மக்கள் யுத்தத்தையும்** நடத்தியிருக்கிறது. இது, நம் நாட்டில் மாபெரும் புரட்சிகரப் போக்குகளான தேச விடுதலைப் புரட்சியும், சோஷலிசப் புரட்சியும் இணைந்ததன் விளைவாகும்.

நம் நாட்டின் புரட்சிகரப் போராட்டத்தின் சிறப்புச் சூழ்நிலைகளுக்கேற்ப மார்க்சிய-லெனினியத்தை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தியும், அந்நிய ஆக்கிரமிப்புக் கெதிராக புகழ்பெற்ற போராட்டம் நடத்திய தேசிய மரபைச் செரித்து வளர்த்தெடுத்தும், நமது கட்சியும், மக்களும் ஆயுத எழுச்சியையும், புரட்சிப் போரையும் புதிய வளர்ச்சி மட்டத்துக்கு உயர்த்தியிருக்கிறார்கள். மேலும் அரசியல் குறிக்கோள்கள், போரில் ஈடுபடுத்தப்பட்ட சக்திகள், போராட்ட முறைகள், உயரளவிலான வலிந்து தாக்குதல் திறன் ஆகியவற்றைப் பொறுத்து, ஆயுத எழுச்சிக்கும் புரட்சிப் போருக்கும் **புதிய உள்ளடக்கத்தையும், பண்பையும் வழங்கியிருக்கிறார்கள்.**

**அரசியல் குறிக்கோள்களைப்** பொறுத்த வரையில், நம் வரலாற்றின் முந்திய எழுச்சிகளும், தேசியப் போர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் நோக்கங்களை உடையனவாயிருந்தன: அவை **தேசிய சுதந்திரத்தை** வென்றெடுத்துப் பாதுகாப்பதும், அந்நிய நிலப்பிரபுத்துவத்தின் ஆட்சியையும், ஆக்கிரமிப்புப் போர்களையும் எதிர்ப்பதும், அதேபோது நாட்டில் நிலப்பிரபுத்துவ அமைப்பைக் கட்டிக் காத்து வளர்த்தெடுப்பதும் ஆகும். அந்த எழுச்சிகள் மூலமும், தேசியப் போர்கள் மூலமும் நம் விவசாயிகள் சில பொருளாதார, அரசியல் உரிமைகளை வென்றெடுத்தனர். ஆனால் நிலப்பிரபுத்துவ அமைப்பின் கட்டுக்கோப்புக்குள் தான் இவ்வுரிமைகளை அவர்களால் பெறமுடிந்தது; அதாவது அக் காலத்தில் முற்போக்குப் பாத்திரம் வகித்த நிலப்பிரபுத்துவ வர்க்கத்தால் மேற்கொள்ளப்பட்ட 'மக்கள் படைகளை வைத்துப் பராமரித்தல்' என்ற கொள்கையின் கட்டுக்கோப்புக்குள் தான் அவ்வுரிமைகள் பெறப்பட்டன.

நம் காலத்தில் நம் நாட்டில் நடத்தப்பட்ட ஆயுத எழுச்சிகளுக்கும், புரட்சிப் போர்களுக்கும் வேறு அரசியல் குறிக்கோள்கள் இருக்கின்றன. அவை, ஏகாதிபத்தியத்தினுடையதும், அதன் அடிவருடிகளுடையதும் ஆட்சியைத் தூக்கியெறிவது, ஏகாதிபத்தியம் தொடுத்த ஆக்கிரமிப்புப் போரை முறியடிப்பது, **தேசிய விடுதலை, மக்கள் ஜனநாயகம், சோஷலிசம்** ஆகியவற்றைச் சாதிப்பது, மக்கள் ஜனநாயக, சோஷலிச அமைப்பை நம் நாட்டில் கட்டிக்காத்து வளர்ப்பது ஆகியவையாகும். இந்த அரசியல் குறிக்கோள்களே வியட்நாமியப் புரட்சிக்கென கட்சியால் முன்வைக்கப்பட்ட அடிப்படையானதும் உடனடியானதுமான கடமைகளாகும். கட்சியின் புரட்சிகர மார்க்கம், தேசிய விடுதலைப் பணியும், ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்பதும் நெருக்கமாகப் பிணைந்திருக்கின்றன எனக் கருதுகிறது; தேசிய விடுதலைப் பாதை சோஷலிசப் புரட்சிப் பாதையுடனும், நம் நாட்டில் ஆற்றப்பட வேண்டிய புரட்சிப்பணி, உலகின் பிறநாடுகளின் புரட்சிகளுடனும் நெருக்கமாகப்



பிணைந்திருக்கின்றன எனக் கருதுகிறது. நம் கட்சி வழி நடத்தும் ஆயுத எழுச்சியும் புரட்சிப் போரும், நம் தேசத்தை விடுவிப்பதையும், தாய்நாட்டுக்கு முழுச் சுதந்திரத்தைக் கொணர்வதையும் மட்டுமல்ல, வர்க்க விடுதலையையும், உழைக்கும் மக்களின் - முக்கியமாக விவசாயிகளுடையவும், தொழிலாளர்களுடையவும் - பல்வேறு உரிமைகளையும், நலனையும் அவர்களுக்கு மீட்டளிப்பதையும் குறியாகக் கொண்டிருக்கிறது; அத்துடன் உலக மக்களின் புரட்சிகர இலட்சியத்துக்கும் தன் பங்களிப்பைச் செய்கிறது. இந்த அரசியல் குறிக்கோள்கள் தான் போராட்டத்தின் நோக்கமாகும்; ஆயுதந்தாங்கிய புரட்சிகர அமைப்பினதும், மக்களின் ஆயுதப் படைகளினதும் வலிமைக்கான மூலாதாரம் இந்த அரசியல் குறிக்கோள்கள் தான்.

போராட்டத்தில் ஈடுபட்ட படைகளைப் பொறுத்தவரையில், நம் நாட்டின் முந்திய எழுச்சிகளும் தேசியப் போர்களும் 'தேசம் முழுவதும் படைகளில் சேர்வது' என்ற பெரும் பலத்தைப் பெற்றிருந்தன. நம் மக்களின் ஆழ்ந்த தேச பக்தியும், தேசிய ஒற்றுமை உணர்வுமே இதற்குக் காரணமாகும். இப்படைகளை முற்போக்கான நிலப்பிரபுத்துவக் குழுக்கள் வழிநடத்தின. இவை ஆக்கிரமிப்புக்கெதிரான போராட்டத்தில் மக்களை அணிதிரட்டுவதற்காக சில ஜனநாயக வடிவங்களைப் பிரகடனம் செய்தன. எனவே நமது தேசம் தன்னைவிடப் பல மடங்கு பலம் பொருந்திய பல ஆக்கிரமிப்பாளர்களையும் தோற்கடித்தது, என்றாலும் வரலாற்று நிலைகள் காரணமாகவும், நிலப்பிரபுத்துவ வர்க்கத்துக்கும், விவசாயி வர்க்கத்துக்கும் இடையிலிருந்த பகைமை காரணமாகவும் 'தேசம் முழுவதும் படைகளில் சேர்ந்ததால்' பெற்ற பலத்துக்கும் கூட சில வரம்புகள் இருந்தன.

நம் காலத்தில் நம் நாட்டில் நடைபெற்ற எழுச்சிகளுக்கும், புரட்சிப் போர்களுக்கும் ஒரு புதிய பலம் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுதான் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையிலமைந்த விவசாயி - தொழிலாளி கூட்டணியின் அடிப்படையில் அமைந்த அனைத்து மக்களின் ஒற்றுமை என்பதாகும். தேசத்தின் சுதந்திரத்தையும், விடுதலையையும் வென்றெடுப்பதிலும் புதிய ஒரு சமுதாய அமைப்பைக் கட்டுவதிலும், தொழிலாளி வர்க்கத்துக்கும், அனைத்து உழைக்கும் மக்களுக்கும், பிறதட்டு தேசபக்த மக்களுக்கும் ஒத்த நலன்கள் இருந்தன. இதிலிருந்துதான் அவர்களின் ஒற்றுமை உதிக்கிறது. இது, தேசிய இறைமையை வென்றெடுக்கவும் காத்துக் கொள்ளவும், தம் வாழ்க்கையைத் தாமே தீர்மானித்துக் கொள்ளும் உரிமை பெறவும் தேச விடுதலை, வர்க்க விடுதலை ஆகியவற்றுக்கான போராட்டத்தில் ஆழ்ந்த தேசபக்தியுடன் மிக உயர்ந்த வர்க்க உணர்வு இணைவதால் ஏற்பட்ட வலிமையாகும்; இது மக்கள் ஜனநாயக-சோஷலிசச் சமூக அமைப்பு என்ற புதிய சமூக அமைப்புக்குள்ள வலிமையாகும். இந்த அமைப்பு, சுரண்டும் அமைப்புகளுடன் ஒப்பிடுகையில் ஒவ்வொரு துறையிலும் மேம்பட்டிருக்கும் அமைப்பாகும். மக்களின் ஆயுதப்படைகளின் வலிமைக்கு அடிப்படையாக இருப்பவை, தொழிலாளி வர்க்கத் தலைமையின் கீழ் உள்ள விவசாயி - தொழிலாளி கூட்டணியோடு அனைத்து மக்களும் ஐக்கியப்படுவதால் ஏற்படும் வெல்லமுடியாத ஆற்றலும் புதிய சமுதாய அமைப்பின் மேன்மையும் ஆகும்.

தற்போதைய போராட்டத்தில், நம் மக்கள் உலகப் புரட்சியின் உதவியையும், ஒத்துழைப்பையும் பெறுகிறார்கள். முதன்மையாக, சோஷலிச முகாமைச் சேர்ந்த சகோதர நாடுகள் அனைத்தின் உதவியும் கிடைக்கிறது. நிலப்பிரபுத்துவ காலத்து நம் மூதாதையரோ தம் சொந்தப் படைபலத்தை மட்டுமே சார்ந்து நிற்க முடிந்தது. நம் நாட்டில் ஆயுத எழுச்சிகளும் புரட்சிப் போரும் வெற்றி பெறுவதிலும், நம் தேசத்தின் மகத்தான வலிமையை உருவாக்கு



வதிலும் இந்த சர்வதேச உதவியானது மிக முக்கியமான காரணியாகி இருக்கிறது.

போராட்ட முறைகளைப் பொறுத்த வரையில், நமது மக்கள், புரட்சிகர வன்முறை பற்றிய மார்க்சிய - லெனினியக் கண்ணோட்டத்தில் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். கடந்த காலங்களின் மக்கள் எழுச்சியிலும், மக்கள் யுத்தங்களிலும் நம் தேசம் பெற்ற அனுபவத்தைச் சுவீகரித்து வளர்த்தெடுத்துள்ளனர். வெற்றியை ஈட்ட புதுப் போராட்ட முறைகளை உருவாக்கியுள்ளனர். அந்தப் பல்வேறு போராட்ட முறைகள், நம் நாட்டுப் புரட்சிகள் உலகப் புரட்சியின் அங்கமாகச் செயல்படுகின்றன. உலகப் புரட்சியானது வலிந்த தாக்குதல் தொடுக்கக் கூடிய நிலையில் உள்ளது. உலகப் புரட்சிக்குள் செயல்படும் நம் நாட்டுப் புரட்சி இயக்கங்களும் வலிந்த தாக்குதல் தொடுக்கும் நிலையில் உள்ளன.

அப் போராட்ட முறைகள், மக்களனைவரும், தேசமுழுவதும், நாடனைத்தும் பங்குபெறுகிற எழுச்சியிலும், போரிலும் கையாளப்படும் முறைகளாகும்; கிராமப் பகுதிகள், நகர்ப் பகுதிகள் இரண்டிலும் அரசியல் படைகளும், ஆயுதப் படைகளும் பங்குபெறுகின்ற போராட்ட முறைகளாகும்; வலுமிக்க மக்கள் சேனையும், நாடெங்கனும் காணப்படுகின்ற மக்களின் ஆயுதப் படைகளும் பங்குபெறுகிற போராட்ட முறைகளாகும்; பலவேறு போர் முனைகளில் பல போராட்ட வடிவங்களை - பிரதானமாக, ஆயுதப் போராட்டத்தை அரசியல் போராட்டத்துடன் இணைத்தல் என்ற வடிவத்தைக் கையாண்டு, வெற்றியை ஈட்டுவதற்கான சாத்தியமான உயரளவு ஒட்டுமொத்த வலிமையை உருவாக்குகின்ற போராட்ட முறைகளாகும். இப் போராட்ட வடிவங்கள், எழுச்சியையும், போரையும் நடத்துவதற்கான ஒரு மூலச் சிறப்புள்ள, ஆக்கபூர்வமான முறையாக அமைகின்றன; புதிய காலகட்டங்களில் வியட்நாமிய தேசந்தழுவிய எழுச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யினதும், மக்கள் யுத்தத்தினதும் மூலச் சிறப்புள்ள ஆக்க பூர்வமான இராணுவக் கலையாக அவை அமைகின்றன.

இப்போதுள்ள அரசியல் குறிக்கோள்கள், போரிடும் படைகள், போராட்ட முறைகள் ஆகியவற்றின் காரணமாக புதிய உள்ளடக்கமும், பண்பும் கொண்டுள்ளதும், நாட்டைக் கட்டிக் காத்த நாலாயிரமாண்டு வரலாற்றின் முழுப் பலத்தையும் வெளிக்கொணர்வதுமான நிகழ்கால ஆயுத எழுச்சியும், புரட்சிப் போரும் முற்றிலும் புதிய பலத்தைப் பெற்றுள்ளன. இந்த பலத்தைக் கொண்டு நம் கட்சியும், மக்களும் நம் முன்னோரின் போராட்டங்களின் போது இருந்திராத ஒரு புதிய, மிக முக்கியமான பிரச்சினையை வெற்றிகரமான முறையில் தீர்க்க முடிந்தது; பிற்பட்ட பொருளாதாரத்தைக் கொண்ட ஒரு சிறிய நாடு, பெரிய மக்கள் தொகைகளையும், மிக வளர்ச்சி பெற்ற பொருளாதாரங்களையும், பெரிய அளவிலான பொருளாதார இராணுவ ஆற்றலையும், எண்ணிக்கையிலும் நவீனப் போர்க் கருவிகள் மற்றும் தொழில் நுட்ப சாதனங்களிலும் வலுத்த சேனைகளையும் கொண்டிருந்த பெரிய ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிராக எப்படிப் போர் தொடுத்து அவற்றின் ஆக்கிரமிப்பை முறியடிக்க முடியும் என்பது தான் அப்பிரச்சினை.

கடந்த காலத்திலும் சரி, நிகழ் காலத்திலும் சரி, நமது தேசம் சிறிய படை கொண்டே பெரும் படையை எதிர்க்க வேண்டி இருந்திருக்கிறது. ஆனால் கடந்த காலத்தில் இருந்த நிலைமைகள் முற்றிலும் வேறானவை. முந்திய காலங்களில் ஆக்கிரமிப்பாளர்கள் நம்மைவிட பலசாலிகளாய் இருந்தாலும் நம்மைப் போன்றே நிலப்பிரபுத்துவ அமைப்பின் கீழ் இருந்தார்கள். அவர்களிடம் பெரிய சேனைகள் இருந்தன. ஆனால் அவர்களின் ஆயுதங்களும், தொழில் நுட்பமும் நவீனமானவையாய் இருக்கவில்லை. சிலபோது நம்மைவிட பழைமையான கருவிகளையே அவர்கள் வைத்திருந்தனர். இக்கால ஆட்சியாளர்களும், ஆக்கிரமிப்பாளர்களுமோ எனில் மிகப் பலசாலியான எதிரிகளாவர். ஏனெனில் அமெரிக்க ஏகாதிபத்தியம் உள்ளிட்ட பெரிய ஏகாதிபத்தியச் சக்திகளாய் அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அநீதியான போர்கள் தொடுக்கிறார்கள். அவர்களின் சமூக அமைப்புகள் பிற்போக்கானவை. ஆனால் அவர்கள் வளர்ச்சிபெற்ற பொருளாதாரங்களையும், நவீன தொழிற்சாலைகளையும், பெரும் பொருளாதார - இராணுவ ஆற்றல்களும் பெற்றவர்கள். அவர்களது சேனைகள் பலமடங்கு பெரியவை; நவீன தொழில் நுட்ப சாதனங்கள் மிகுந்தவை. மாறாக நம் நாடோ சிறியது; நமது நிலப்பரப்பு சிறியது. நமது மக்கள் தொகை குறைவே. நமது எழுச்சிகளும் போர்களும் நீதியானவை. அதிகாரத்தைக் கைப்பற்றியபின் நம் மக்கள் வளர்ச்சிபெற்ற அரசியலாட்சியைக் கட்டியிருக்கிறார்கள். ஆனால் பொருளாதாரம் இன்னும் பிற்பட்டதாகவே உள்ளது. விவசாயமே இன்னும் முக்கியத் தொழிலாக உள்ளது. பௌதீக, தொழில் நுட்ப அடிப்படை மட்டான அளவிலேயே உள்ளது. ஆயிரமாண்டுகளான நிலப்பிரபுத்துவத் தேக்கநிலையும், நூறாண்டுகளான பிரெஞ்சுக் காலனிய ஆட்சியும், சுரண்டலுமே இதற்குக் காரணமாகும். மேலும், அதிகாரத்தைக் கைப்பற்றியதிலிருந்து பல தசாப்தங்களாக நம் மக்கள் தொடர்ந்து போர்களில் ஈடுபட நேர்ந்துள்ளது. எனவே தேசமுழுவதிலும் அமைதியான தேச நிர்மாணத்தில் ஈடுபடவும், பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தவும் போதிய அவகாசமிருக்கவில்லை. இதனால் தான், சோஷலிச முகாமின் சகோதர நாடுகளிடமிருந்து கணிசமான உதவி கிடைத்தும் கூட, நம் மக்கள் தம்மினும் வலிய ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடிக்க தம் சொந்தப் பொருளாதாரத்தையே பிரதானமாய்ச் சார்ந்திருக்க வேண்டியிருந்தது.

நம் மக்களின் புரட்சிப் போராட்டத்தை நடத்திச் செல்லும் போது, ஆயுத எழுச்சிகளையும், புரட்சிப் போரையும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிகரமாய் நடத்தி முடிப்பதற்காக, நமது கட்சியும், நமது தலைவர் ஹோ சி மின்னும், வெல்ல முடியாததும் வீர மிக்கதுமான **'வியட்நாம் மக்களின் ஆயுதப் படைகளை'** உரு வாக்கி ஒழுங்கமைத்துப் பயிற்றுவித்தார்கள். தேசந்தழுவிய எழுச்சியினதும், மக்கள் யுத்[illegible]தும் வளர்ச்சியுடன் நெருக்கமாகப் பிணைந்திருந்த, நம மக்களின் இக்கால இரா ணுவ அமைப்பாகிய வியட் மக்களின் ஆயுதப்படைகள் தம் வர்க்கத்தன்மை, அமைப்பு வடிவங்கள், ஆயுத சாதனங் கள், இராணுவக் கலை மற்றும் போர்த்திறன் போன்றவற் றில் மேலும் வளர்ச்சி பெற்றுள்ளன.

**வர்க்கத் தன்மையைப்** பொறுத்தவரை, எழுச்சிகளிலும், தேசியப் போர்களிலும் ஈடுபட்டிருந்த நம் நாட்டின் முந் தைய ஆயுதப் படைகள் முதன்மையாய், நிலப்பிரபுத்துவ வர்க்கத்தாலேயே ஒழுங்கமைக்கப்பட்டு நடத்திச் செல்லப் பட்டன. எனவே அப்படைகளுக்கு நிலப்பிரபுத்துவத் தன்மை இருந்தது. நிலப்பிரபுத்துவ வர்க்கத்தின் பிரதிநிதி களால் ஒழுங்கமைக்கப்பட்ட கிளர்ச்சிப் படைகளுக்கும், நிலப்பிரபுத்துவ அரசின் சேனைக்கும், பரந்துபட்ட மக்களுக் கும் ஒரே தேசிய நலன்களும், போர் நோக்கங்களும் இருந் தன. இது, அந்நிய நிலப்பிரபுத்துவக் கூட்டங்களின் ஆட் சியையும், ஆக்கிரமிப்பையும் எதிர்த்த வெற்றிகரமான சண் டைகளில் தேசிய ஆயுதப்படைகளின் பெரும் பலத்துக் குரிய ஆதாரமாயிருந்தது. இருப்பினும் நிலப்பிரபுத்துவ அரசின் சேனைக்கும், நாட்டின் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான வர்க்க நலன்களில் முரண்பாடு இருந்தது. ஏனெனில் அச் சேனையானது, பெரும்பான்மையாக விவசா யிகளைக் கொண்டமைந்த தேசத்தை அடிமைப்படுத்தி ஆட்சி செய்வதற்கு சிறுபான்மையான நிலப்பிரபுத்துவ வர்க்கத்தின் கருவியாக இருந்தது. எனவே எழுச்சிகளிலும், தேசியப் போர்களிலும், தேசிய நலன்கள், போரின் நோக்



கங்கள் ஆகியவற்றிலும் இருந்த கருத்தொற்றுமைக்கு சில வரம்புகள் இருந்தன. இவ் வரம்புகள், அக்காலத் தேசியச் சேனைகளின் போராற்றலைப் பாதிக்கவே செய்தன.

நம் மக்களின் தற்போதைய ஆயுதப்படைகள் **புதுவகை ஆயுதப் படைகளாகும்; புதுவகை இராணுவ அமைப்புகளா கும்.** இவை தொழிலாளி வர்க்கத்தின் கட்சியால் ஒழுங் கமைக்கப்பட்டு நடத்தப்படுகின்றன. எனவே **தொழிலாளி வர்க்கத் தன்மை** கொண்டுள்ளன. அவை வியட்நாம் மக்க ளுடைய, பிரதானமாய் உழைக்கும் மக்களுடைய, அதிலும் சிறப்பாக விவசாயிகள், தொழிலாளிகள், வியட்நாமில் வாழும் பல்வேறு தேசிய இனங்கள் ஆகியோருடைய இராணுவ அமைப்பாக உள்ளன. அவர்களின் போரிலக்கு கள, கட்சியால் வகுத்துத் தரப்படும் புரட்சிகர இலக்குக ளாகும். அவற்றிலுள்ள போராளிகளும், ஊழியர்களும் புரட் சிகர வர்க்கங்களிலிருந்து, முதன்மையாய் விவசாயி, தொழிலாளி மக்களிடமிருந்து வந்தவர்கள். ஆக்கிரமிப்பா ளர்களுக்கும், அவர்களின் பிரதிநிதிகளுக்கும் எதிராக நம் கட்சித் தலைமையின் கீழ் ஆயுத எழுச்சியும், புரட்சிப் போரும் நடத்துவதற்காக நம் கட்சியினதும், மக்கள் ஜன நாயக சோஷலிச அரசினதும் கருவியாய் அவை உள்ளன. மக்களின் ஆயுதப்படைகளுக்கும், நம் அரசின் சேனைக்கும், அனைத்து மக்களுக்கும் இடையில், தேசிய நலன்கள், அந் நிய ஆக்கிரமிப்புக்கு எதிரான எழுச்சிகள், போர்கள் ஆகிய வற்றின் குறிக்கோள்கள் போன்றவற்றில் முழுமையான கருத்தொற்றுமை நிலவுவது மட்டுமல்ல; நாட்டைக் கட்டி எழுப்புவது, புதிய சமுதாய அமைப்பான மக்கள் ஜனநாயக சோஷலிச அமைப்பைக் கட்டி வளர்ப்பது ஆகிய பணிகள் சார்ந்த வர்க்க நலன்கள், போரின் நோக்கங்கள் போன்ற வற்றிலும் உயர்ந்த கருத்தொற்றுமை நிலவுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டு, உள்நாட்டுக் கடமைகளில் ஆயுதப்படைகளுக்கும், மக்களுக்கும் உள்ள ஒத்த குறிக்கோள்கள், தேசிய - வர்க்க நலன்கள் பற்றிய உணர்வு, தேச பக்தி, புதிய சமுதாய அமைப்பின் மீதும் பாட்டாளி வர்க்க சர்வ தேசியத்தின் மீதும் பற்றுதல் ஆகியவையெல்லாம் மக்கள் ஆயுதப் படைகளின் மிக உயர்ந்த போர்க்குணத்துக்கும், புரட்சிகரத் தீரத்துக்கும் அடிப்படையாக உள்ளன. **அதனுல்** தான் வியட்நாம் மக்களின் ஆயுதப்படைகள் **உண்மை**யாகவே "கட்சிக்கு நேர்மையாகவும், மக்களுக்கு விசுவாசமாகவும் நடக்கின்றன. சுதந்திரத்துக்காகவும், தாய்நாட்டு விடுதலைக்காகவும், சோஷலிசத்துக்காகவும் போராடவும், தம்மைத் தியாகம் செய்யவும் தயாராயுள்ளன. ஒவ்வொரு கடமையையும் நிறைவேற்றுகின்றன; ஒவ்வொரு தடையையும் வெல்கின்றன; ஒவ்வொரு எதிரியையும் தோற்கடிக்கின்றன."[32] நம் மக்களின் ஆயுதப்படைகளின் வெல்லற்கரிய பலம் என்பது முதன்மையாக நம் கட்சியின் **தலை**மையிலிருந்தும், ஆயுதப்படைகளின் புரட்சிகர இயல்பில் இருந்தும், சேனைக்கும் மக்களுக்குமிடையிலான அந்நியோன்னிய உறவுகளிலிருந்தும் எழுகிறது. எனவே நமது சேனையின் போர்த்திறனை உயர்த்திப் பலப்படுத்துவதற்கான மிக அடிப்படையான உத்திரவாதம், கட்சித் தலைமையைப் பலப்படுத்துவதிலும், உறுதியான கட்சியமைப்புகளைக் கட்டுவதிலும், சேனையின் மத்தியில் தீவிர அரசியல் பணியாற்றுவதிலும் அரசியல் சித்தாந்தப் பணியின் அடிப்படையில் சேனையை அனைத்து அம்சத்திலும் கட்டியெழுப்புவதிலும் அடங்கியிருக்கிறது.

**படைகளின் அமைப்பு வடிவங்களைப்** பொறுத்தவரை, நம் கட்சி பாட்டாளி வர்க்கத்தின் இராணுவ அமைப்பு பற்றிய மார்க்சிய - லெனினிய ஆய்வுரையை ஆக்கபூர்வமாய் பிரயோகித்திருக்கிறது. ஆயுதப்படைகளை ஒழுங்கமைப்ப



தில் கடந்த காலத்தின் தேசிய அனுபவத்தைச் சுவீகரித்து வளர்த்தெடுத்திருக்கிறது. அரசியல், சமூக நிலைமைகளின் அடிப்படையிலும், பௌதீக, தொழில் நுட்ப அடித்தளங்களின் அடிப்படையிலும், பரந்த அளவில் **அனைத்து மக்களையும் ஆயுதபாணியாக்குவது, புரட்சிகர மக்கள் திரளினருக்கு ஆயுதங்கள் வழங்குவது** என்பதை வெற்றிகரமாய் நிறைவேற்றியது. **மக்கள் சேனையைக்** கட்டும்போது **மூன்று வகைத் துருப்புகளை** ஒழுங்கமைத்தது. அவை கிராமத் துருப்புகள், பிரதேசத் துருப்புகள், குடிப்படைகள் மற்றும் தற்காப்புப் படையலகுகள் என்பவையாகும்! நமது கட்சி, **மக்களின் ஆயுதந்தாங்கிய பாதுகாப்புப் படைகளையும்** ஒழுங்கமைத்தது. மக்களின் ஆயுதப்படைகள் மக்களின் அரசியல் படைகளிலிருந்து உதிக்கின்றன. இவ் அரசியல் படைகள் படிப்படியாக மக்களின் ஆயுதப்படைகளாக்கப் படுகின்றன. பின் படிப்படியாக மக்கள் சேனையாக்கப்படுகின்றன. மக்களின் ஆயுதப்படைகள் என்பன குடிப்படைகளின் படைப்பிரிவுகள், தற்காப்புக் குழுக்கள் ஆகியவற்றிலிருந்து உருவான மேலும் உயர்ந்த அமைப்பு வடிவத்தையும், மேலும் சிறந்த ஆயுதங்கள், சாதனங்கள் ஆகியவற்றையும் கொண்ட விரிந்த அளவிலான பெரும்படைகள் தான். முதலில் பிளாட்டூன்களாகவும், கம்பெனிகளாகவும் இருந்தவற்றிலிருந்து மேலும் விரிந்த அளவிலான அமைப்பையும் மேலும் நவீனமான தொழில்நுட்ப சாதனங்களும் கொண்ட வலுமிக்க மக்கள் சேனை உருவாக்கப்பட்டது. துவக்கத்தில் அதில் ஒரேயொரு காலாட்படை தான் இருந்தது. ஆனுல் விரைவில் அது பல்வேறு படைக்கலங்களும், படைத்துறைகளும் கொண்ட நவீன கிரம சேனையாயிற்று. தேசந்தழுவிய எழுச்சியிலும், மக்கள் யுத்தம், தேசப் பாதுகாப்பு ஆகியவற்றிலும், விடுதலைப் போர், தாய்நாட்டைப் பாதுகாக்கும் போர் ஆகியவற்றிலும் மக்களின் ஆயுதப்படைகளும், மக்கள் சேனையும் எப்போதும் நெருக்கமாக இணைந்து நிற்கின்றன.

மக்களது ஆயுதப்படைகளின் மிக எடுப்பான அம்சம் அதன் **மிகப் பரந்துபட்ட மக்கள் திரள் தன்மையாகும்.** 'அனைத்து மக்களின் ஒற்றுமை' என்ற கட்சி மார்க்கத்தைப் பின்பற்றியும், புரட்சிகர இலக்குகளுக்கான சண்டையில் அனைத்து மக்களின் பலத்தைச் சார்ந்துநின்றும், நம் மக்கள் நம் தேசிய வரலாற்றின் முன்னெந்தக் காலகட்டத்திலும் ஆற்றியதைவிட போர்த்துறையில் இப்போது பெரும்பங்காற்றியிருக்கிறார்கள். ஏங்கெல்சால் குறிப்பிடப்படும் 'புரட்சிகரப் போராட்டங்களில் பிறந்த புரட்சிகர இராணுவ அமைப்பின்', 'மக்கள் திரள் தன்மையின்' வளர்ச்சியில் இது ஒரு பாய்ச்சலாகும். நம் மக்கள் அதிகாரத்தை வென்று, கட்சியால் வழிநடத்தப்படும் புதுவகை அரசான மக்கள் ஜனநாயக சோஷலிச அரசை நிறுவிய பின்னர், மக்களின் ஆயுதப்படைகள் உள்நாட்டு, வெளிநாட்டு எதிரிகளை எதிர்க்கவும், புதிய அமைப்பைக் காக்கவும், புரட்சிகர அதிகாரத்தைப் பேணவும், மக்கள் நலன்களைப் பாதுகாக்கவும் நம் அரசின் வன்முறைக் கருவியாயிற்று. அதனால்தான் அரசையும், ஆட்சியையும் காப்பதற்கான போரில் கலந்துகொள்ள மக்கள் தாமாக முன்வருகிறார்கள்; பெரிய அளவில் மக்களை ஆயுதபாணியாக்கவும், அதனடிப்படையில் ஒரு வலுவான மக்கள் சேனையைக் கட்டவும் அரசால் முடிகிறது. பாட்டாளி வர்க்க இராணுவ விஞ்ஞானத்தை நிறுவியவர்கள் முன்கூட்டியே கூறியது போல், பாட்டாளி வர்க்கத்தின் விடுதலை இராணுவத் துறையிலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும். முதலாளியப் புரட்சி சாதித்ததைவிட பரந்த அளவில் மக்கள் பங்கேற்கும் புதுவகை ஆயுதப்படைகளை அவை உருவாக்கும்.

ஆயுதப்படைகளின் **பௌதீக, தொழில்நுட்ப அடிப்படை, அதற்குள்ள ஆயுத சாதனங்கள்** என்ற பிரச்சினையில் கட்சி எப்போதும் கவனம் செலுத்துகிறது. ஏனெனில் **ஆயுதப்**



படைகளின் போர்த்திறனுக்கு அதிமுக்கியக் காரணிகள் மனிதர்களும், ஆயுதங்களுமே. இவற்றில் மிகமுக்கியமானதும், தீர்மானகரமானதுமான காரணி மனிதர்கள் தான். மேலும் செப்பமான ஆயுதங்களைக் கண்டுபிடிப்பதன் மூலமும், போர்வீரனிடமும், போரில் பங்கெடுக்கும் படைகளிடமும் ஏற்படும் மாற்றங்கள் மூலமும், இராணுவ அமைப்பில் புரட்சிகரமான விளைவு ஏற்படுகிறது என்றார் ஏங்கெல்ஸ். மக்களின் ஆயுதப்படைகள் புரட்சிகர உணர்வும், உயர்ந்த உள உரமும், உணர்வுபூர்வமானதும், கண்டிப்பானதுமான கட்டுப்பாடும் கொண்ட **மனிதர்களின் சேர்க்கையாகும்.** இவர்கள் பொருத்தமான அமைப்பு வடிவங்களில் திரட்டப்படுகின்றனர். தம் வசமுள்ள அனைத்து **ஆயுத சாதனங்களையும்** பயன்படுத்திக் கொள்கின்றனர். எதிரியைத் தோற்கடிக்க பொருத்தமான **போராட்ட முறைகளைக்** கையாள்கின்றனர்.

நம் நாட்டில் ஆயுத எழுச்சிகள் மூலமும், புரட்சிப் போர்கள் மூலமும் மக்களின் புரட்சிகர உணர்வில் ஒரு பண்பு வகை மாற்றம் ஏற்பட்டிருப்பது வெளிப்படை. வியட்நாம் தேசத்தில் **புதிய மனிதர்களை,** நம் காலத்திய **வியட்நாம் போராளிகளை** உருவாக்க அது உதவுகிறது. ஆனால் மறுபுறம் பௌதீக, தொழில்நுட்ப சாதனங்களைப் பொறுத்த வரை மிகுந்த வரம்புகள் இன்னும் உள்ளன. மனிதர்கள், சாதனங்கள், தளவாடங்கள், போர்முறைகள் என்பவற்றினிடையிலான இயங்கியல் உறவை நம் கட்சி எப்போதும் கவனத்தில் கொள்கிறது என்ற உண்மையிலேயே அதன் முனைப்பான வெற்றி தங்கியுள்ளது. மிகப் பொருத்தமான இராணுவ அமைப்பை உருவாக்கும் பொருட்டு மேற்படிக் காரணிகளின் பரஸ்பர விளைவுகளை தெளிவாகக் காணவும், பகுத்தாயவும் அதனால் முடியும். ஒரு பிற்பட்ட பொருளாதாரத்தைக் கொண்ட நிலைகளில், மக்களின் புரட்சிகர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வையும், போராளிகளின் புரட்சிகர உத்வேகத்தையும், துருப்புகளின் மிகுந்த உள உரத்தையும், ஆயுதப் படைகளின் மக்கள் திரள் தன்மையையும், பல்வேறு போர் முறைகளையும் சார்ந்திருப்பது எப்படி என்பதை நம் கட்சி அறிந்திருக்கிறது. தானியங்கி ரைபிள்களையும், டாங்கிகளையும், பீரங்கிப் படை, விமானப் படை, கப்பற் படைகளையும் பெற்றுள்ள எதிரிக்கு எதிராக, முதலில் சாதாரணமான ஓரளவு நவீனமான ஆயுத சாதனங்களையும் பின் படிப்படியாக அதிநவீனமான ஆயுத சாதனங்களையும் பாவிப்பதென்ற முறையில் தன் வசமுள்ள அனைத்து ஆயுத சாதனங்களையும் முழுமையாக உபயோகித்துக் கொள்ள நம் கட்சி அறிந்திருக்கிறது. தம் வீரத்தினாலும், மதியூகத்தினாலும், ஆக்க பூர்வச் சண்டைமுறைகளின் உதவியாலும், நம் மக்களின் ஆயுதப்படைகள் எதிரிக்கெதிரான போராட்டத்தில் கூர் முனை கொண்ட மூங்கில்கள், கற்பொறிகள் (Stone-traps), தடிகள் போன்ற எளிய ஆயுதங்கள் முதல், ஏறக்குறைய நவீனமானவையும் 20ம் நூற்றாண்டின் தொழில்நுட்ப சாதனைகளின் விளைபொருட்களுமான பீரங்கிகள், டாங்கிகள், விமானங்கள், ஏவுகணைகள் போன்றவை வரைக்குமான பல்வேறுவகை ஆயுத சாதனங்களைப் பயன்படுத்தியும், அவற்றின் ஆற்றலையும், திறனையும் உயர்த்தியும் வந்துள்ளன.

எதிரியைவிட எண்ணிக்கைப் பலத்தில் குறைந்த சேனையையே நம் மக்கள் பெற்றிருந்தாலும், மக்கள் திரளினரின் ஆயுதப்படைகளதும், அவர்களின் பெரும் அரசியல் படைகளதும் ஒன்றுபட்ட ஆதரவுடன் தம்மைவிடப் பல மடங்கு பெரிய ஆக்கிரமிப்புச் சேனைகளைத் தோற்கடித்திருக்கிறார்கள். அளவிலும், நவீனத்திலும் தாழ்ந்த ஆயுத சாதனங்களைக் கொண்டே நம் மக்கள், தம்மினும் கூடிய நவீன ஆயுத சாதனங்களைப் பெற்றிருந்த ஆக்கிரமிப்புச்



சேனைகளைத் தோற்கடித்திருக்கிறார்கள். இது வீரமிக்க வியட்நாம் மக்களது ஆயுதப்படைகளின் குறிப்பிடத்தக்க சாதனையாகும். வியட்நாமின் இராணுவ விஞ்ஞானத்துக்கும் இது ஒரு குறிப்பிடத்தக்க சாதனை.

இருப்பினும் பிற்பட்ட பௌதீக, தொழில்நுட்ப அடிப்படை என்பது ஒரு பெரிய குறைபாடு தான்; அதைப் போக்க வேண்டும் என நாம் எப்போதும் உணர்ந்தே வந்திருக்கிறோம். புரட்சிகர ஆயுதப்படைகளிடமும், மக்கள் சேனை ஊழியர்களிடமும், போராளிகளிடமும் அதிநவீன ஆயுத சாதனங்கள் இருந்தால் மக்கள் ஆயுதப்படைகளின் சண்டையிடும் ஆற்றல் அதனால் கணிசமாய் உயரும். இதனால்தான் நமது மக்களின் வீரமிக்கதும், நீடித்ததுமான போராட்டத்தை வழிநடத்திச் செல்லும்போது, ஆயுதப் படைகளின் சாதன மேம்பாட்டில் சேனையை **நவீனப்படுத்துவதில்** நம் கட்சி எப்போதும் கவனம் செலுத்துகிறது. நம் ஆயுதப்படைகளின் சாதனப் பிரச்சினையைத் தீர்க்கும் வழி மக்களைச் சார்ந்திருப்பதும், கைகளில் கிடைத்த எந்த ஆயுதத்தைக் கொண்டும் சண்டையிடுவதும், எதிரியிடமிருந்து ஆயுதங்களைக் கைப்பற்றுவதும், முடிந்தால் நாமே ஆயுதங்களை உற்பத்தி செய்வதும் ஆகும். அத்துடன் சோஷலிச முகாமில் உள்ள சகோதர நாடுகளின் உதவியை நன்கு பயன்படுத்திக் கொண்டு, படிப்படியாய் நம் ஆயுதப்படைகளில் சாதன மேம்பாடுகளைக் கொணர வேண்டும். நம் மக்கள் அதிகாரத்தைக் கைப்பற்றியது முதல் நமது கட்சியானது படிப்படியாய்க் கட்டப்பட்டுவரும் புதிய சமூக அமைப்பையும், நம் நாட்டின் வளரும் பொருளாதாரத்தையும், மகத்தான சர்வதேச உதவியையும் சார்ந்து நின்று மென்மேலும் விரிந்த அளவிலும் நவீன வழிகளிலும் நம் மக்களின் ஆயுதப்படைகளின் சாதனங்களைப் புதுப்பிக்க முயன்று வருகிறது. நம் ஆயுதப்படைகளின் தொழில்நுட்ப சாதனங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் நாட்டின் பொருளாதாரத்தையும், உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி மட்டத்தையும் மட்டும் பிரதிபலிப்பதில்லை; ஓரளவுக்கு சோஷலிச முகாமிலுள்ள சகோதர நாடுகளின் பொருளாதாரத்தையும், உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி மட்டத்தையும் பிரதிபலிப்பதாகச் சொல்லலாம். இவ்வாறு நம் மக்களின் ஆயுதப்படைகளின் தொழில்நுட்பச் சாதனங்கள் படிப்படியாய் நவீனப்படுத்தப்பட்டிருக்கிறது. நவீன ஆயுத சாதனங்கள் மக்கள் சேனைக்கு மட்டுமல்ல, மக்களின் ஆயுதப்படைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. மக்களின் ஆயுதப் படைகளின் போர்த்திறனை உயர்த்துவதற்காக அவற்றின் தேவைகளுக்கும், வழிமுறைகளுக்கும் பொருந்திய விதத்தில் ஓரளவுக்கு நவீனமான சாதனங்கள் நிறைய வழங்கப்பட்டுள்ளன.

நிகேதின் சோவியத்துகள் முதல் ஆகஸ்டு புரட்சியின் பொது எழுச்சி வரை, பிரெஞ்சு எதிர்ப்புப் போர் முதல் அமைதியான சூழலில் நாட்டின் வடபகுதி நிர்மாணிக்கப்பட்ட ஆண்டுகள் வரை, அமெரிக்க ஆகாயப்படையின் அழிப்புப் போருக்கு எதிரான சண்டை முதல், இன்று நம் நாட்டின் இரு பிரதேசங்களிலும் அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராக நடக்கும் தேசபக்தப் போர் வரை, நிறையத் தியாகங்களும், இன்னல்களும், புகழ்பெற்ற அருஞ்செயல்களும், சண்டையும் நிறைந்த தசாப்தங்களினூடே, நம் மக்களின் ஆயுதப்படைகள் ஒரு வளர்ச்சிமாற்றத்தை எய்தியுள்ளன. சிறியதும், பலம்குறைந்ததுமான படையாக இருந்து, பெரியதும், பலமிக்கதுமான படையாக மாறியுள்ளன. நம் காலத்தின் மிகக் கொடியதும், மிகப் பலம்வாய்ந்ததுமான ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து நம் மக்கள் நடத்திய நீடித்த உக்கிரமான போராட்டத்தில், நம் கட்சியானது ஒவ்வொரு காலகட்டத்துக்குமுரிய புரட்சிகரக் கடமைகள், அக் கட்டங்களுக்குரிய திட்டவட்டமான போராட்ட வடிவங்கள், போராட்டத்தின் குறிக்கோள் ஆகியவற்றை வரையறுத்துக் கொண்டது. குறிப்பிட்ட வரலாற்று நிலைமைகளுக்கும், சூழல்களுக்கும் இசைந்த வகையில் மக்கள் சேனையைக் கட்டுதல், அனைத்து மக்களையும் ஆயுதபாணியாக்குதல், புரட்சிகர மக்கள் திரளினரை ஆயுதபாணியாக்குதல் என்ற பிரச்சினைக்குத் தீர்வு கண்டது. நமது மக்களின் ஆயுதப்படைகள் பல மதிப்புமிக்க அனுபவப் பாடங்களைக் கற்றுக்கொண்டன. தம் வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும், தம் படைகளைக் கட்டி விரிவுபடுத்தவும், தொடர்ந்து வளரவும், அனைத்து எதிரிகளையும் தோற்கடிக்கவும், கீர்த்திமிக்க போர்ச் சாதனைகள் புரியவும், கட்சியாலும், மக்களாலும் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட அனைத்துக் கடமைகளையும் நிறைவேற்றவும் வேண்டி போரில் எழுந்த முக்கியப் பிரச்சினைகளைத் தீர்த்திருக்கின்றன.



நம் கட்சி ஸ்தாபிக்கப்பட்ட போது, புரட்சிகர வன்முறை பற்றிய தன் நிலைப்பாட்டை, அதன் புரட்சிகர செயல் திட்டத்தில் உறுதிப்படுத்தியது. ஆயுதப் போராட்டத்தின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்பதை அது அங்கீகரித்தது. புரட்சிகரப் படைகள் எப்படி ஒழுங்கமைக்கப்பட வேண்டும் என்பதை வரையறுத்துக் கூறியது. 1930 பெப்ரவரியில் வெளியிடப்பட்ட ‘கட்சி அரசியல் செயல்திட்டத்தின் சுருக்கம்’ என்ற நூலில் தலைவர் ஹோ சி மின், ஒரு தொழிலாளி-விவசாயி சேனையமைப்பு பற்றிய கருத்தை முன்வைத்தார். பிற்பாடு அக்டோபர் 1930ல் வெளிவந்த ‘கட்சியின் அரசியல் ஆய்வுரை’ ‘தொழிலாளி - விவசாயி மக்களை ஆயுதபாணியாக்குவதையும்’, ‘தொழிலாளி - விவசாயி சேனையமைப்பு’ பற்றியும், ‘தொழிலாளி - விவசாயி தற்காப்பு படைக்குழு’ பற்றியும் தெளிவாகக் குறிப்பிட்டது. ஆக, துவக்கம் முதற்கொண்டே மக்களை ஆயுதபாணியாக்குவது, சேனையைக் கட்டுவது என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதை நம் கட்சி ஆதரித்து வந்துள்ளது. அதே வேளையில் புரட்சிகர ஆயுதப்படைகளின் அமைப்பின் வர்க்கத்தன்மை குறித்தும் சுட்டிக் காட்டியுள்ளது.

நம் கட்சி நிறுவப்பட்டபின் வெகு விரைவிலேயே நாடு புரட்சிகரச் சூறாவளியால் உந்தப்பட்டு நிகேதின் சோவியத்துக்களைத் (1930-31) தோற்றுவித்தது. நம் நாட்டின் வரலாற்றில் முதன்முறையாக கட்சித் தலைமையின் கீழ் விவசாயிகளும், தொழிலாளர்களும் எழுச்சி பெற்று காலனியவாதிகள், அதிகார வகுப்பினர், உள்ளூர்க் கொடுங்கோலர்கள் ஆகியோரின் ஒடுக்குமுறை ஆட்சியைத் தூக்கியெறிய புரட்சிகர வன்முறையைப் பயன்படுத்தினார்கள். சோவியத் அதிகாரத்தை நிறுவினார்கள். காலனியவாதிகளும், நிலப்பிரபுத்துவ ஆட்சியாளர்களும் கதிகலங்கினர்.

நிகேதின் சோவியத்துகள் குறுகிய காலமே தாக்குப்பிடித்தது. ஆனால் அவற்றின் முக்கியத்துவம் மிகப் பெரிது. இது முதல் படி; ஆயினும் இது நமது புரட்சியின் முழு வளர்ச்சியின் மீதும் தீர்மானகரமான செல்வாக்கு செலுத்தியது எனலாம். நமது கட்சியை முன்னணிப் படையாய்க் கொண்டிருந்த தொழிலாளி வர்க்கத்தின் தலைமையை அது உறுதிப்படுத்தியது; தொழிலாளி வர்க்கத்தின் தலைமைதாங்கும் திறனை வெளிப்படுத்தியது. விவசாயிகள் - தொழிலாளர்களின், தொழிலாளி வர்க்கத்தால் தலைமைதாங்கப்பட்ட தொழிலாளி - விவசாயிக் கூட்டணியின் வலிமையை அது நிரூபித்தது. வன்முறைப் புரட்சி மார்க்கத்தையும், அதிகாரத்தைக் கைப்பற்ற மக்களின் புரட்சிகர வன்முறையை எப்படிப் பயன்படுத்தலாம் என்பதையும் அது சுட்டிக்காட்டியது. கட்சித் தலைமையின் கீழ் நம் மக்கள் நடத்திய ஒத்திகை அது; அது 15 ஆண்டுகளுக்குப் பின்னர் வெற்றிகரமாய் நடந்தேறிய பொது எழுச்சிக்கான முன்னோட்டம்.



புரட்சிகரமான முப்பதுகளில், நம் மக்களின் **ஆயுதப் படைகள், 'தற்காப்பு அமைப்புகள்'** என்ற வடிவில் இருந்தன. இவை, பின்னர் உருவாகி வளர்ந்த **ஆயுதப் படைகளுக்கும், புரட்சிகர சேனைக்கும்** வித்துக்களாக அமைந்தன. அதேவேளையில் தற்காப்பு அமைப்புகள் நகரங்களிலும், கிராமங்களிலும், தொழிலாளர் - விவசாயிகள் அமைப்புகளாக இருந்தன. அவற்றின் கடமைகளும், பணிகளும் அவற்றின் பெயரால் குறிக்கப்பட்டன. அவை எதிரியை எதிர்த்து பல்வேறு வடிவங்களில் போராடிய மக்கள் **பாதுகாப்புப் படைகள்.**

தற்காப்புப் படைகள் பெரும் பங்கை ஆற்றின. 1930 பெப்ரவரியில் ஃபூ ரிங் (**Phu Rieng**) ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டங்களும், வேலைநிறுத்தங்களும் செய்தபோது தொழிலாளர்களின் தற்காப்புப் படைப்பிரிவு எதிரித் துருப்புகளை எதிர்த்து சண்டையிட்டது. ஒரு பிரெஞ்சு சார்ஜண்டுக்குக் கைமுறிந்ததும் எதிரித் துருப்புகள் பறந்தோடி விட்டன. ஆர்ப்பாட்டம் திட்டமிட்டபடி நடந்தது. 1930ன் பிற்பகுதியில் நிகா பியில் (**Nha Be**) நடத்தப்பட்ட கூட்டம் வெற்றி பெற்ற பின் 700 - 800 தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் நடந்தது. இவ் வெற்றிக்கு "நிகா பி தொழிலாளர்களின் தற்காப்புப் படையலகின் தலையீடே காரணமாகும். இப் படையலகு ஒரு பொலிஸ்காரனின் மண்டையை உடைத்து, அவனது கைத்துப்பாக்கியை பிடுங்கி, சொற்பொழிவாளரை விடுவிக்குமாறு அவனை நிர்ப்பந்தித்தது. இதனால் சொற்பொழிவாளர் தன் உரையைத் தொடரவும், கூட்டம் தொடர்ந்து நடக்கவும் சாத்தியமேற்பட்டது."[33]

நிகேதின் சோவியத் இயக்கத்தில் தொழிலாளர்களும், விவசாயிகளும் தடிகள், அரிவாள்கள், வேல்கம்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற ஆயுதங்களைத் தரித்து உள்ளூர் கொடுங்கோலர்களைத் தண்டித்தனர். மாவட்ட அதிகாரிகளின் அலுவலகங்களையும், சிறைகளையும் உடைத்து நொறுக்கினர்; படை வீடுகளை முற்றுகையிட்டனர்; தமது ஆட்சி நிர்வாகத்தை உருவாக்கினர்... பல தொழிற்சாலைகளிலும், கிராமங்களிலும், தொழிலாளி-விவசாயிச் சங்கங்களிலும் பொதுவுடமை, இளைஞர் கழகங்களிலும் இருந்து மிகச் சிறந்த ஆட்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு விவசாயி - தொழிலாளி தற்காப்புப் படையலகுகளாக்கப் பட்டனர். 1930 செப்டெம்பர் 18ல் தங் சுவாங் (நிகே அன்) இல் அவற்றின் வெற்றியைக் கொண்டாட 20,000 பேருக்கு மேல் திரண்டிருந்த கூட்டம் நடந்தது. இக் கூட்டத்தை ஆயிரத்துக்கும் மேற்பட்ட தற்காப்புப் படைக்குழுவினர் பாதுகாத்தனர்.

தற்காப்புப் படையலகுகளின் அமைப்பு சம்பந்தமான பிழையான கருத்துகள், தவறான நடவடிக்கைகள் ஆகியவற்றை நமது கட்சி எதிர்த்துப் போரிட்டது. தற்காப்புப் படையலகுகளை அமைத்தது அவசரப்பட்டுச் செய்த காரியமென சிலர் கண்டித்தனர். வேறுசில இடங்களில் நிரந்தர தற்காப்புப் படையலகுகளுக்குப் பதிலாக தற்காலிகத் தற்காப்புப் படையலகுகள் அமைக்கப் பட்டன; அல்லது நிரந்தரத் தற்காப்புப் படைக் குழுக்கள் அமைக்கப்பட்டாலும் அங்கு மக்களிடையே அரசியல் பணி செய்வதோ, அவர்களுக்கு இராணுவப் பயிற்சியளிப்பதோ செய்யப்படவில்லை.

மக்களை ஆயுதபாணிகளாக்குவது பற்றி நமது கட்சி கூறியதாவது:- ''சூழ்நிலை கனிந்தவுடன் அதிகாரத்தைக் கைப்பற்ற கட்சித் தலைமையின் கீழ் தொழிலாளர்-விவசாயிகளின் ஆயுத வன்முறை கட்டாயம் வெடிக்கும்.'' ''மக்களை ஆயுதபாணியாக்க சரியான தயாரிப்பு செய்யாவிட்டால் புரட்சி வெற்றி பெறாது.'' ''மக்களுக்கு இராணுவப் பயிற்சி கொடுத்து அவர்களை ஆயுதபாணியாக்கும் போது, கண்மூடித்தனமாக செயல்படும் போக்கையும், ரைபிள்களையும், கைக்குண்டுகளையும் தயாரிக்கும் போது, உழைக்கும் மக்களிடையே அன்றாட அரசியல் வேலை செய்வதைப் புறக்கணிக்கும் போக்கையும் கடுமையாக எதிர்த்துப் போராட வேண்டும்.''



ஆயுதப்படைகளின் அமைப்பு வடிவங்கள் பற்றி கட்சி கூறியதாவது:- ''தொழிலாளி - விவசாயித் தற்காப்புப் படைக் குழுக்கள் கெரில்லாப் படையோ, செஞ்சேனையோ ஆகமாட்டா. செஞ்சேனையையோ, கெரில்லாப் படையையோ நினைத்த இடத்தில், நினைத்த நேரத்தில் உருவாக்கிவிட முடியாது. நாம் எவ்வளவு பலவீனமாய் இருந்த போதிலும், புரட்சிகர எழுச்சிக்கான வேலையை மக்களிடையே துவங்கியவுடன் தற்காப்புப் படைகளைக் கட்டவேண்டும். கட்சிக் கிளைகள், இளைஞர் கழகம், புரட்சிகர மக்கள் சங்கங்கள் போன்றன இருக்கிற எந்தத் தொழில்துறையும், ஊரும் தற்காப்புப் படையின்றி இருக்க அனுமதிக்கக் கூடாது.''

நிரந்தரத் தற்காப்புப் படையலகுகளையும் ஏராளமான மக்கள் தற்காப்புப் படைகளையும் ஏககாலத்தில் அமைக்க வேண்டியது அவசியமாகும்.

கட்சித் தலைமை பற்றியும், தற்காப்புப் படைக் குழுக்களின் வர்க்கத் தன்மை பற்றியும் கட்சி கூறியதாவது:- ''புரட்சிகரத் தொழிலாளி - விவசாயி தற்காப்புப் படையை பொதுவுடமைக் கட்சி மத்தியச் செயற்குழுவின் இராணுவப் பிரிவின் ஐக்கியப்பட்ட தலைமையின் கீழிருத்த வேண்டும்.'' ''தற்காப்புப் படைக்குழுக்களின் புரட்சிகரத் தன்மை கவனமாகப் பேணப்பட வேண்டியதாமே.'' ''நிரந்தரத் தற்காப்புப்படையிலுள்ள கட்சித் தலைமை இந்த நோக்கத்துக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுபட வேண்டும். நம்பகமான கட்சி உறுப்பினர்களும், இளைஞர் கழக உறுப்பினர்களும் தற்காப்புப் படையில் சேர்க்கப்பட்டு அப்படையில் அவர்கள் ஆணை செலுத்த வேண்டும். படையலகின் தலைவர்களும், கட்சிப் பிரதிநிதிகளும் இணைந்து தலைமைதர வேண்டும். தினசரி நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட கட்சி ஊழியர்களால் தீர்மானிக்கப்பட வேண்டும். பொதுவான இராணுவ நடவடிக்கைகள், தற்காப்புப் படைகளின் உயர்மட்டத் தலைமை அதனோடு தொடர்புடைய கட்சியின் இராணுவக் குழு ஆகியவற்றின் கட்டுப்பாட்டுக்கு உட்பட வேண்டும்.''

**நமது மக்களின் புரட்சிகர ஆயுதப்படைகளைக் கட்டுவதில் மேலே சொல்லப்பட்ட கருத்துக்கள் கட்சிக்கு இருந்த தொடக்க நிலைக் கருத்துகள், ஆனால் அடிப்படையான கருத்துகள் ஆகும்.** நிகேதின் சோவியத் இயக்கத்தில் விளைந்த இக் கருத்துகளும் அனுபவங்களும், ஆரம்ப கால கட்டத்திலிருந்தே நம் கட்சியும், மக்களும் புரட்சிகர வன்முறை பற்றியும், **புரட்சிகர மக்கள் திரளினரை ஆயுதபாணியாக்குவது** பற்றியும், **தொழிலாளி-விவசாயி செஞ்சேனையைக் கட்டுவது** பற்றியுமான மார்க்சிய-லெனினிய சிந்தனையை தம் நாட்டின் திட்டவட்டமான நிலைகளுக்குத் தக ஆக்கபூர்வமாய் பிரயோகித்தனர் என்பதை நிரூபிக்கின்றன.

1936-39 ஆண்டுகளில், உலகப் போரைத் தொடங்குவதற்கு கடும் ஆயத்தங்கள் செய்துவந்த ஜெர்மனிய, இத்தாலிய, ஜப்பானியப் பாசிஸ்டுகளிடமிருந்து ஆபத்துகள் எதிர்ப்பட்ட காலத்தில் நமது கட்சி தன் போராட்டப் பாதையை மாற்றியது. ''பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தைத் தூக்கியெறிவோம்'', ''நிலவுடமையாளர்களிடமிருந்து நிலத்தைப் பறித்து உழுவோருக்கு விநியோகிப்போம்'' போன்ற முழக்கங்களைக் கட்சி தற்காலிகமாய் ஒதுக்கி வைக்கத் தீர்மானித்தது. **இந்தோசீன ஜனநாயக முன்னணி** நிறுவப்பட்டு அது பிற்போக்குக் காலனியவாதிகள், நிலப்பிரபுத்துவ மன்னன், அவனது அதிகார வர்க்கக் கும்பல் ஆகியவற்றை எதிர்த்து ஜனநாயக உரிமைகளுக்காகவும், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காகவும் போராடியது; பாசிஸ ஆக்கிரமிப்பாளருக்கு எதிராகவும், உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்காகவும் போராடியது. கட்சி தன் போராட்ட வடிவங்களையும் மாற்றிக் கொண்டது. வெறும் தலைமறைவுப் போராட்ட வடிவிலிருந்து, தலைமறைவு நடவடிக்கைகளுடன், பகிரங்க (அரை இரகசிய) நடவடிக்கைகளை இணைத்தது; சட்டபூர்வ, ஓரளவு சட்டபூர்வ நடவடிக்கைகளை, சட்ட விரோதமான நடவடிக்கைகளுடன் திறமையாக இணைத்து நடத்தியது. இவ்வாறு முன்னெப்போதுமில்லா வேகத்துடனும், விரிவுடனும் போராட்ட இயக்கம் நகரங்களிலும், கிராமங்களிலும் பரவுமாறு செய்வதில் கட்சி வெற்றி கண்டது; இலட்சக்கணக்கான மக்கள் அரசியல் விழிப்பு பெறச் செய்தது; தொழிலாளி-விவசாய மக்களிடையே வர்க்க உணர்வை உயர்த்தியது. அனைத்துப்பிரிவு மக்களின் தேசபக்தியையும் தட்டியெழுப்பியது. காலனிய நாடுகளில் இத்தகைய சூழ்நிலை ஏற்படுவது அரிது. 1930-31ம் ஆண்டுகளின் நிகேதின் சோவியத் இயக்கத்தை அடுத்து 1936-39 ஆண்டுகளின் ஜனநாயக முன்னணிக் காலகட்டத்தில் **அரசியல் படைகள் கட்டப்பட்டு, அரசியல் போராட்ட இயக்கம்** துவக்கப்பட்டது. இது அடுத்த புரட்சிக் காலக்கட்டத்தில், அரசியல் படைகளையும், ஆயுதப்படைகளையும் கொண்டு நமது மக்களின் தீர்க்கமான அரசியல், ஆயுதப் போராட்டத்தை நடத்துவதற்கான தயாரிப்பில் மேற்கொள்ளப்பட்ட மற்ெறாரு அடிப்படையான நடவடிக்கையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் உலகப் போர் வெடித்தது. ஐரோப்பாவில் பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் வெட்கக்கேடான முறையில் ஜெர்மன் பாசிஸ்டுகளிடம் சரணடைந்தனர். ஆசியாவில் பிரெஞ்சுக் காலனியவாதிகள் இந்தோசீனவை ஜப்பானிய இராணுவவாதிகளிடம் ஒப்படைத்தனர். அப்போது வியட்நாமிய மக்கள் தீரத்துடன் எழுந்து ஜப்பானிய, பிரெஞ்சுப் பாசிஸவாதிகளை எதிர்த்துப் போரிட்டனர்.

பாக் சன், நாம் கி, தோ லுவாங் ஆகிய இடங்களில் மூன்று எழுச்சிகள் வெடித்தன. இவை நம் நாட்டின் போராட்டத்தில் ஒரு புதுக்கட்டத்தின் துவக்கமாகும்.

1939ல் நடந்த ஆருவது கட்சிக் காங்கிரசும் 1940ல் நடந்த கட்சி மத்தியச் செயற்குழுவின் ஏழாம் கூட்டத் தொடரும் போர்த்தந்திர மார்க்கத்தில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தின. ஏகாதிபத்தியவாதிகளுக்கும், அவர்களின் அடிவருடிகளுக்கும் எதிரான போராட்டத்தில் முழுக் கவனம் செலுத்துவதற்காக விவசாயப் புரட்சி முழக்கம் தற்காலிகமாக கைவிடப்பட்டு, தேசிய சுதந்திரமே முதல் கடமையாக முன்வைக்கப்பட்டது. 1941 வசந்தத்தில் ஹோ சி மின் தலைமையில் நடந்த 8ம் கூட்டத் தொடரில் கட்சி புதிய சூழ்நிலைகளுக்கேற்ப போர்த்தந்திர மாற்றத்தை முடிவுசெய்தது. நம் உடனடியான இலக்கு தேசிய விடுதலைப் புரட்சியே என்பதை கட்சிக் காங்கிரஸ் உறுதிப்படுத்தி, மக்களின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த தேசபக்த அமைப்புகளைக் கொண்ட வியட்மிங் முன்னணியை உருவாக்கத் தீர்மானித்தது. மேலும், அக் காங்கிரஸ் புரட்சிகர ஆயுதப்படைகளைக் கட்டிவளர்ப்பதென்றும், தேசிய விடுதலைக்கான தற்காப்புப் படையலகுகளையும், சிறு கெரில்லாக் குழுக்களையும், நிலையான கெரில்லா படைப்பிரிவுகளையும் ஒழுங்கமைப்பதென்றும் புரட்சிகர தளப் பிரதேசங்களை நிறுவுவதென்றும், எல்லாத் துறைகளிலும் நடவடிக்கைகளை முடுக்கிவிடுவதென்றும், படிப்படியாய் அரசியல் போராட்டத்தை ஆயுதப் போராட்டமாக வளர்ப்பதென்றும், இந்தப் போராட்ட வடிவங்களை நெருக்கமாக ஒருங்கிணைத்து அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக ஒரு ஆயுத எழுச்சிக்குத் தயாராவதென்றும் தீர்மானிக்கப் பட்டது.



தேசம் தழுவிய புரட்சி இயக்கம் கொதி நிலையில் இருந்தது. புரட்சியின் அரசியல் சேனையான வியட்மிங் முன்னணி, முதலில் கிராமப்புறத்திலும் பின் பிரெஞ்சு, ஜப்பானியப் பாசிஸ்டுகளின் கொடிய ஒடுக்குமுறையை மீறி நகர்ப்புறங்களிலும், துரிதமாகவும் மிக உறுதியோடும் வளர்ந்தது. 'ஆயுதங்களைக் கையிலெடுத்து பொது எதிரியை துரத்திடுக' என்ற கட்சி மத்திய செயற்குழுவின் அறைகூவலையடுத்து மக்களின் அரசியல் படையின் துணையுடன் மக்களின் ஆயுதப் படைகள் துரிதமாக விரிவு பெற்றன.

நிரந்தரமான கெரில்லா படைப் பிரிவுகள் பல ஒழுங்கமைக்கப்பட்டன. பாக் சன் எழுச்சியின் போது உருவாக்கப்பட்ட பாக் சன் கெரில்லா இயக்கம் கட்டிக் காக்கப்பட்டு 1940 இறுதியில் தேசிய விடுதலைச் சேனையாக வளர்க்கப் பட்டது. 1944 டிசம்பரில் வியட்நாமின் விடுதலைக்காக ஆயுதந் தாங்கிய பிரச்சாரப் படை உருவாக்கப்பட்டபோது, தேசந்தழுவிய போர், அனைத்து மக்களையும் ஆயுதபாணியாக்கல், சேனை கட்டுதல், ஸ்தல ஆயுதப்படைகள் கட்டுதல் ஆகியன பற்றிய நம் கட்சி மார்க்கம், தலைவர் ஹோ சி மின்னால் தெளிவாக முன்வைக்கப்பட்டது: ''நமது எதிர்ப்புப் போர் மக்கள் அனைவராலும் நடத்தப்படுவதால், மக்களனைவரும் ஒன்று திரட்டப்பட்டு ஆயுதபாணியாக்கப்பட வேண்டும். எனவே நாம் நம் படைகளைத் திரட்டி நம் முதல் துருப்புகளை உருவாக்கும் போது பிரதேச ஆயுதப்படைகளையும்

கட்டிக்காக்க வேண்டும். அவற்றுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதற்காகவும் ஒவ்வொரு துறையிலும் அவற்றுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யவேண்டும்.''

கட்சி முன்கூட்டியே கணித்தது போலவே 1945 மார்ச் 9 அன்று பிரெஞ்சு ஆட்சியாளர்கள் ஜப்பானியர்களால் தூக்கியெறியப்பட்டனர். ஜப்பானியப் பாசிஸ்டுகளுக்கெதிராக நாடு முழுவதிலும் தீவிர தேசபக்த இயக்கம் வளர்ந்து வந்தது. இது பொது எழுச்சிக்கான முன்னோட்டமாக இருந்தது. ஆங்காங்கே எழுச்சிகளும், ஸ்தல கெரில்லா யுத்தங்களும் வெடித்து வியட்நாமியப் புரட்சிகர அலை மேலோங்கியது. வெவ்வேறு ஆயுதப்படைகளிலிருந்து **வியட்நாம் விடுதலைச் சேனை** உருவாக்கப்பட்டது. **சாதாரண தற்காப்புப் படைகளும், போரிடும் தற்காப்புப் படைகளும்** விரிவடைந்து வந்தன. பின் வியட்பாக் மாகாணங்களை உள்ளடக்கிய **விடுதலை வலயம்** உருவாகியது. இது தேசம் முழுவதற்கும் முதன்மையான புரட்சித்தளமாகவும், எதிர்கால வியட்நாம் ஜனநாயகக் குடியரசுக்கான வித்தாகவும் விளங்கியது.

இவ்வாறு நாம்கி கெரில்லாப் படைகள்[35] தேசிய விடுதலைச் சேனை, ஆயுதந்தாங்கிய பிரச்சாரப் படை, பாடோ கெரில்லாப் படைகள் போன்றவற்றில் இருந்து **புரட்சிகர சேனை பிறந்தது**. அதே போது மக்களின் ஆயுதப்படைகளைத் தேசபக்த அமைப்புகள் தொடர்ந்து உருவாக்கி வந்தன. நம் நாட்டில் முதன்முறையாக உண்மையாகவே மக்களுடையதாயிருந்த ஒரு **புரட்சிகர ஆயுதப் படை**, ஒரு **புதிய வகை சேனை** தோற்றுவிக்கப்பட்டு கட்சியால் வழி நடத்திச் செல்லப்பட்டது.

இரண்டாம் உலகப் போர் முடிவடைந்து கொண்டிருந்தது. ஜெர்மானிய, இத்தாலிய பாசிஸ்டுகள் சரணடைந்திருந்தார்கள். ஜப்பானியப் பாசிஸ்டுகளும் தம் முடிவை நெருங்கிக் கொண்டிருந்தார்கள். 1945 ஆகஸ்ட் 13ல் டான் டிராதோவில் (**Tan Trao**) நடந்த கட்சியின் இரண்டாம் தேசியக் காங்கிரசில் ஒரு பொது எழுச்சி நடத்தத் தீர்மானித்தது. 1945 ஆகஸ்ட் 19ல் தலைநகரான ஹனோயில் வெற்றி பெற்ற எழுச்சி, நாடு முழுவதிலும் நிலவிய புரட்சிச் சூழ்நிலையில் தீர்மானகரமான தாக்கத்தை ஏற்படுத்தியது. பாக் போ, டிரங் போ முதல் நாம் போ வரை அனைத்து மாகாணங்களின் நகரங்களிலும், கிராமங்களிலும் எழுச்சி விரைவாகப் பரவியது. **1945 ஆகஸ்டின் பொது எழுச்சி** ஒரு ஒளிமிக்க வெற்றியாயிற்று. நூற்றாண்டுகள் நீடித்த காலனிய ஆட்சியும், ஆயிரக்கணக்கான ஆண்டுகள் நீடித்த நிலப்பிரபுத்துவ ஆட்சியும் சுமார் பத்து நாட்களில் குலைந்து வீழ்ந்தன. 1945 செப்டம்பர் 2ம் நாள் ஹனோயில் தலைவர் ஹோ சி மின் **சுதந்திர பிரகடனத்தைப்** படித்தார். **வியட்நாம் ஜனநாயகக் குடியரசு தோன்றியது.** வியட்நாம் மக்களின் வரலாற்றில் புதிய சகாப்தம் துவங்கியது.

1945 ஆகஸ்டின் பொது எழுச்சி தொழிலாளி வர்க்கக் கட்சியின் தலைமையின் கீழ் **அனைத்து மக்களும் நடத்திய** எழுச்சியாகும். கட்சியின் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்து நம் மக்கள் நாடு முழுவதிலும், கிராமம் நகரம் யாவற்றிலும் எழுச்சியை நடத்தினர். அரசியல் படைகளையும், ஆயுதப் படைகளையும் நெருக்கமாக ஒருங்கிணைத்தார்கள். ஆயுத எழுச்சி மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றினார்கள். ''ஒரு எழுச்சி நடத்தி அரசதிகாரத்தைக் கைப்பற்றும் மிகச் சாதகமான சந்தர்ப்பம் மக்களின் அரசியல் படைகளுக்குக் கிடைத்தது தான் ஆகஸ்டுப் புரட்சியின் வெற்றிக்கு முதன்மைக் காரணமாகும். ஆனால் அதற்கும் முன் நமது கட்சி, அரசியல் படைகளுக்கும் அரசியல் போராட்ட





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கத்துக்கும் துணை நிற்கத்தக்க ஆயுதப்படைகளைக் கட்டியிருக்கவில்லையானால், பரந்த தளப் பிரதேசங்களை உருவாக்கியிருக்கவில்லையானால், நிலைமைகள் கணிந்துவந்த போதெல்லாம் ஆயுத எழுச்சி நடத்தத் தவறியிருந்தால் புரட்சியானது இவ்வளவு விரைவில் வெற்றி பெற்றிருக்க முடியாது.''[36]

புரட்சியின் பலம்பொருந்திய அரசியல் படையில், நாடு முழுவதிலும் இலட்சக்கணக்கான மக்கள் இருந்தனர். அது பரந்து விரிந்த ஆயுதப்படைகளைக் கொண்டிருந்தது. இந்த அரசியல் படை தான் எழுச்சியின் வெற்றிக்கு பிரதான சக்தியாகும். நேரடித் தாக்குதல் மூலம் எதிரியின் அதிகாரத்தைத் தூக்கியெறிய ஆயுதங்களைக் கையிலெடுத்து மக்கள் செயல்பட்டதால் அரசியல் படைகளிலிருந்து ஆயுதப்படைகளை வேருகப் பிரித்துக் காண்பது கடினம். ஆகஸ்டுப் பொது எழுச்சியின் போது நம் மக்களின் ஆயுதப்படைகளில் இருந்த அமைப்புகள் பின்வருவன:-

1. **விடுதலைச் சேனையின்** படையலகுகள்;
2. நாடு முழுவதிலுமிருந்த தேசபக்த அமைப்புகளிலிருந்து வந்த நூற்றுயிரக் கணக்கான மக்களைக் கொண்ட **தற்காப்புப் படைகளும்**, அநேக **சிறு கெரில்லாக் குழுக்களும்** இத்துடன் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் தடிகள், கோடரிகள், சுத்திகள், அரிவாள்கள், வேல்கம்புகள் என கைக்குக் கிடைத்த எந்த ஆயுதத்தையும் எடுத்துப் போராடிய பரந்துபட்ட மக்களின் படைகளும் இருந்தன.

**அனைத்து மக்களும்** நடத்திய பூகம்பம் போன்ற இத் தாக்குதலில் மக்களின் ஆயுதப்படைகள் ஒரு மாபெரும் முன்னேக்கிய பாய்ச்சல் நிகழ்த்தின. அவற்றின் எண்



ணிக்கை பெருகியது. அவற்றின் உள உரம் உயர்ந்தது, அவற்றின் வலிந்து தாக்கும் திறன் கூடியது. இச் சூழ்நிலைகளில் சில ஆயிரம் பேரையே கொண்டிருந்த நம் விடுதலைச் சேனை மிகுந்த செல்வாக்கு பெற்றது. மக்களின் ஆயுதப் படைகள் அளவற்ற போர்த் திறன்கள் பெற்றிருந்தன. அவை எளிதாக எதிரியின் மனேதிடத்தைக் குலைத்தன. புரட்சிகர மக்களின் எழுச்சி இயக்கத்துக்குப் பலமான உந்துதலை வழங்கின.

எல்லா ஜனநாயக உரிமைகளும் மறுக்கப்பட்டு மிகச் சாதாரண ஆயுதம் வைத்துக்கொள்வது கூட தடைசெய்யப்படும் ஒரு காலனிய நாட்டில், காலனிய ஆட்சியாளர்களின் நன்கு ஒழுங்கமைக்கப்பட்டதும், நன்கு ஆயுதபாணியாக்கப்பட்டதுமான சேனையை முறியடிப்பதற்காக ஒரு பெரிய புரட்சிகர சேனையைக் கட்டுவது ஆரம்ப காலத்தில் மிகவும் கடினம் என்பதை ஆகஸ்டுப் புரட்சியின் அனுபவம் காட்டுகிறது. எனவே, எழுச்சியின் அரசியல் நோக்கம் சரியாக தீர்மானிக்கப்பட்டு விட்டால், பின் மக்களனைவரின் எழுச்சி வெற்றிபெறச் செய்வதற்காக, ஒரு **பலமான அரசியல் படையை**, ஒரு **சக்திவாய்ந்த அரசியல் சேனையை** உருவாக்குவதும் **அதன் அடிப்படையில் மக்கள் திரளினரின் ஆயுதப்படைகளையும் ஓரளவு அமைப்பு வடிவம்பெற்ற ஒரு புரட்சிச் சேனையையும்** கட்டியமைத்தல் அவசியமாகும்.

மக்களின் பெரிய அரசியல் படையும் அவர்களின் விரிவான ஆயுதப்படைகளும் தான், எழுச்சியை வெற்றிபெறச் செய்த பிரதானமான சக்தியாகும். இது ஏனென்றல் புரட்சிக்குத் தலைமையேற்ற கட்சி இப்படைகளைத் தொடர்ச்சியாய்க் கட்டிக்காத்து பயிற்றுவித்து வந்திருந்தது. தீர்க்கதரிசனத்துடன் செயல்பட்ட கட்சி, எழுச்சிக்கான சந்தர்ப்பத்தை எப்போது எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்திருந்தது. ''நெருக்கடி உச்சத்தை அடைய வேண்டும்; முன்னணிப் படைகள் கடைசிவரை போராடத் தயாராக இருக்க வேண்டும். சேமப் படைகள் முன்னணிப் படைக்குத் துணை நிற்கத் தயாராக இருக்க வேண்டும். எதிரி அணிகள் முற்றாக நிலைகுலைந்திருக்க வேண்டும்.. இத்தகைய சந்தர்ப்பமே எதிரிக்குத் தீர்மானகரமான அடியைக் கொடுப்பதற்குரிய சந்தர்ப்பமாகும்; ஒரு எழுச்சியைத் துவங்குவதற்குமான சந்தர்ப்பமுமாகும்.''[37] இம் மாதிரிச் சந்தர்ப்பங்களில் மக்களின் வலிந்துதாக்கும் திறனைச் சந்திக்கும் போது ஆட்சியாளர்கள் எழுச்சியை எதிர்க்க தம் சேனையைப் பயன்படுத்தும் மனவுறுதியையோ திறனையோ பெற்றிருக்க மாட்டார்கள். **'சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்வது'**, எழுச்சி நடத்தும் கலையின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகும். ஆகஸ்டு பொது எழுச்சியில் நம் கட்சி ஒரு எழுச்சிக்கான சந்தர்ப்பத்தை முன்கூட்டியே எதிர்பார்த்து நின்றது. அச் சந்தர்ப்பம் வந்ததும் அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டது. நன்கு தயாரிப்புகள் செய்துவைத்திருந்த கட்சி மிகப் பொருத்தமான தருணத்தில் எழுச்சியைத் தொடுத்தது. பாசிஸ ஜப்பான் சரணடைவுக்குப் பின் இந்தோசீனாவிலிருந்த ஜப்பானியத் துருப்புகள் சண்டையிடுவதற்கான மனபலத்தை முழுக்க இழந்து, அங்கிருந்த ஜப்பானிய இராணுவவாதிகள் எழுச்சியை எதிர்க்க தம் சேனையை உபயோகிக்க மனவுறுதி இல்லாமற் போய்விட்ட நிலையில் மக்களின் அரசியல் படையும், அவர்களின் ஆயுதப்படைகளும் தம் பலத்தை தீர்மானகரமான முறையில் பயன்படுத்தி எதிரியாட்சியைத் தூக்கியெறிந்து, மக்களுக்கான அதிகாரத்தைக் கைப்பற்றின.

எதிரியின் சேனையும் ஆட்சியும் எங்கெல்லாம் எழுச்சியை எதிர்க்கின்றனவோ அங்கெல்லாம் அவற்றைத் தாக்கிச் சிதைத்து முடமாக்கி உடைத்து நொறுக்க வேண்டும். இவ்வாறு எதிரி சேனையின் ஒரு பகுதியையும் அவனது ஆட்



சியின் ஒரு பகுதியையும் தாக்கியழிக்கும் அதிர்ச்சிப்படையாக செயல்பட ஒரு வகை அமைப்பு வடிவம் கொண்ட புரட்சிச் சேனை வேண்டும். இத்தகைய ஒரு புரட்சிச்சேனை இல்லாதிருந்தால் நாம் எழுச்சிக்கு மக்கள் திரளினரைத் திரட்டியிருக்கவோ அனைத்து மக்களின் எழுச்சியை வெற்றி பெறச் செய்வதற்கான சாதக சூழ்நிலைகளை உருவாக்கியிருக்கவோ முடிந்திருக்காது. ஆகஸ்டுப் புரட்சியின் போது பொது எழுச்சிக்கு ஆயத்தம் செய்வதற்காக பகுதி எழுச்சிகளும் ஸ்தல கெரில்லாப் போரும் நடைபெற்ற சமயத்திலும், பொது எழுச்சி வெடித்துக் கொண்டிருந்த சமயத்திலும், மக்கள் திரளினரின் எழுச்சி இயக்கம் உச்ச நிலையில் இருந்தபோதும் கூட பல இடங்களில் புரட்சிச் சேனைக்கும், பிற்போக்குச் சேனைக்கும் இடையில் பல ஆயுதந்தாங்கிய மோதல்கள் நடைபெற்றன. எனவே ஒரு எழுச்சியின் பிரதான சக்தி ஆயுதந்தாங்கிய மக்களின் அரசியல் படைதான். ஆனால் புரட்சிச் சேனை துணை நின்றால் மக்களின் எழுச்சி இயக்கம் வெற்றி பெற அதிகவாய்ப்பு இருக்கிறது. அளவில் சிறியதாயிருந்த போதிலும் விடுதலைச் சேனையின் துணை, ஆகஸ்டுப் புரட்சியின் வெற்றியனுபவத்தைத் தந்தது.

எழுச்சியில் வெற்றி பெறுவதற்கு எதிரித்துருப்புகள் மத்தியில் பிரச்சார வேலை செய்வதும் அவசியமாகும். பிரச்சார வேலை மூலம் அவர்களை நம் பக்கம் வென்றெடுக்கவும், அவர்கள் அணிகளை முடக்கிச் சீர்குலைக்கவும், அவர்களின் உளஉரத்தைக் குலைக்கவும், அவர்களைச் செயலிழக்கவைத்து மனச்சலனம் கொண்டவர்களாக்கவும் வேண்டும். இதன் மூலம் அவர்கள் மக்கள் எழுச்சியில் குறுக்கிடாதபடி தடுக்கவோ நம் தரப்புக்கு அவர்களை வென்றெடுக்கவோ முடியும். லெனின் சொன்னார்: ''தொழிலாளி-விவசாயி மக்களும் எதிரிச் சேனையிலுள்ள நல்ல சக்திகளும் தம் தாக்குதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை ஒருங்கிணைக்கும் போதுதான், எழுச்சி வெற்றி பெறுவதற்கான சாதக நிலைமைகள் உருவாக்கப் படுகின்றன. அதாவது எழுச்சியைச் சரியான தருணத்தில் துவக்க முடிகிறது.''[38] **எதிரித் துருப்புகள் மத்தியில் பிரச்சார வேலை** என்பது, 'தொழிலாளி-விவசாயி-போர்வீரர் கூட்டணி' என்ற முழக்கத்தின் அடிப்படையில் செய்யப்பட வேண்டும். ஒரு எழுச்சியில் இது போர்த்தந்திர முக்கியத்துவம் உள்ளதாகும்.

ஒரு போரில் இரு சேனைகள் ஒன்றுடன் ஒன்று சண்டையிடும் போது, நிலைமை வேறு. இப்போதும் எதிரித் துருப்புகள் மத்தியில் கலக வேலை செய்வது தேவைதான் என்றாலும் பிரதான கடமை எதிரியை அழித்தொழிப்பதே, தோற்கடிப்பதே ஆகும். ''இரு சேனைகளுக்கிடையில் நடக்கும் மோதலில் வெற்றி என்ற வகையில், தெருச்சண்டையில்... எழுச்சியானது இராணுவத்தை (அதாவது எதிரி சேனையை) உண்மையாகவே வெற்றிகொள்வது என்பது, மிக அபூர்வமாய் நிகழும் ஒரு விதிவிலக்கே ஆகும்.... ஆனால் சண்டை எப்போதும் வெற்றியடையக் காரணம், துருப்புகள் ஆணைகளுக்குச் செவிமடுக்கத் தவறிவிடுவதும் தளபதிகள் குழம்பிப் போவதும் அல்லது அவர்கள் செயல்படமுடியாமல் போவதும் ஆகும்.''[39] எதிரிப் படைகளிடையே கலக வேலை மக்களின் அரசியல் படைகளாலும், அவர்களின் ஆயுதப்படைகளாலும் நடத்தப்படுகிறது. இதற்கு புரட்சிச் சேனையும் ஓரளவு துணை நிற்கிறது. உண்மை என்னவெனில், ஆகஸ்டுப் புரட்சியின் போது கிளர்ச்சி செய்த மக்கள் தம் வலிமையையும் எதிரித் துருப்புகள் மத்தியில் செய்யப்பட்ட பிரச்சார வேலையையும் சார்ந்திருந்தனர். இப்பிரச்சார வேலை ஜப்பானியத் துருப்புகளையும், வியட்நாமியக் கூலிப்படைகளையும் ஏறக்குறைய முடக்கிவிட்டது; அவர்களைச் செயலிழக்க வைத்தது. எழுச்



சியை எதிர்க்கும் தைரியத்தை அவர்கள் இழக்கச் செய்தது. பல பகுதிகளில், எதிரியணிகளில் சேவைசெய்த வியட்நாமியப் போர்வீரர்கள் புரட்சியில் சேர்ந்து கொண்டனர். எதிரித் துருப்புகள் மத்தியில் எப்போதும் கலக வேலை செய்ய வேண்டியது அவசியமானது தான். இருப்பினும் ஆட்சியாளர்கள் எழுச்சியை எதிர்க்க தம் துருப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளும் திறனும், மனவுறுதியும் இன்னும் உடையவர்களாக இருக்கும் பட்சத்தில், நாம் நம் புரட்சிகர வலிந்த தாக்குதலைத் தீர்மானமாக முன்னெடுக்க வேண்டும்; ஆயுதப் போராட்டத்தைத் துரிதப்படுத்தி புரட்சிச்சேனையை விரிவுபடுத்திப் பலப்படுத்த வேண்டும். அப்போதுதான் பிற்போக்குத் துருப்புகளைத் தோற்கடிக்கவும் ஆயுத எழுச்சியையும், புரட்சிப் போரையும் வளர்க்கவும் மக்களுக்கு வெற்றியை வென்று தரவும் முடியும்.

**சுருங்கச் சொன்னால்** நம் கட்சியானது அரசியலிலும் படைகளை ஒழுங்கமைப்பதிலும் சரியான மார்க்கத்தைக் கடைப்பிடித்ததாலும், எழுச்சிக்கான சரியான காலத்தைச் சரியானபடி பயன்படுத்திக் கொண்டதாலும், மக்களின் பெரும் அரசியல் படையினதும், விரிந்த ஆயுதப் படைகளினதும் வலிமையைப் பயன்படுத்தி அனைத்து மக்களையும் அணிதிரட்டியதாலும் தான், ஆகஸ்டுப் புரட்சியில் நாடு முழுவதிலும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான போராட்டத்தில் நம் மக்களை வெற்றிக்கு இட்டுச்செல்ல முடிந்தது.

ஆகஸ்டுப் புரட்சியானது ஒரு காலனிய, அரை நிலப்பிரபுத்துவ நாட்டில் மார்க்சிய-லெனினியம் பெற்ற முதல் வெற்றியாகும். நம் **சகாப்தத்தின் அனுகூலமிக்க சர்வதேச சூழ்நிலையில், ஒரு சிறிய, ஒடுக்கப்பட்டு, ஆதிக்கம் செய்யப்படுகிற நாட்டின் மக்கள் எழுச்சி பெற்று ஆயுத எழுச்சி வடிவத்தைப் பயன்படுத்தி, அதிகாரத்தைக் கைப்பற்ற முடியும்; காலனிய**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகாதிபத்தியவாதிகளின் சுரண்டும் ஒடுக்குமுறை ஆட்சியை யும், அவர்கள் திணித்த நிர்வாக யந்திரத்தையும்; நவீன ஆயுத சாதனங்களைக் கொண்ட அவர்களின் தொழில் முறைச் சேனையையும் தூக்கியெறிய முடியும் என்பதை ஆகஸ்டுப் புரட்சி நிரூபிக்கிறது.

நம் மக்கள் நாடு முழுவதையும் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து, புதிய ஆட்சி தன் அதிகாரத்தை உறுதிப் படுத்தியிராத நிலையில், பிரெஞ்சுக் காலனியவாதிகள் மீண்டும் நம் நாட்டின் மேல் ஆக்கிரமிப்புப் போர் தொடுத்தனர். 'தேசிய சுதந்திரத்தை இழந்து அடிமைகளாய்ச் சீரழிவதை விட எல்லாவற்றையும் தியாகம் செய்வது மேல்' என தலைவர் ஹோசிமின் அறைகூவல் விடுத்ததற்கு இணங்கி நம் மக்கள் அனைவரும் ஒரே சக்தியாய் எழுந்தனர். எதிரியை அழித்தொழிக்கவும், நாட்டைக் காப்பாற்றவும், தேசிய சுதந்திரத்தைப் பாதுகாக்கவும், புதிதாய் நிறுவப்பட்ட மக்கள் அதிகாரத்தைக் கட்டிக்காக்கவும் அவர்கள் வீரத்துடன் போராடினர். ஆகஸ்டுப் புரட்சியில் அனைத்து மக்களின் எழுச்சி, மக்கள் யுத்தமாக வளர்ந்தது. விடுதலைப் போராகவும் அதே சமயம் தாய்நாட்டைக் காப்பதற்கான போராகவும் வளர்ந்தது.

பிரெஞ்சுக் காலனியவாதிகளை எதிர்த்து நடந்த போர் ''மக்கள் அனைவரும், தம் சொந்த வலிமையைச் சார்ந்து நின்று அனைத்து முனைகளிலும் நடத்திய நீடித்த போராகும்.''[40]

போர் முதலில் நாம்போவில் வெடித்தது. கனரக ரைபிள்கள், டாங்கிகள், விமானங்கள் போன்ற ஆயுத சாதனங்களையும் பிரிட்டிஷ், ஜப்பானியத் துருப்புகளின் உதவியையும் பெற்றிருந்த பிரெஞ்சுக் காலனியத் துருப்புகளுக்கு எதிராக, நாம்போ மக்களின் ஆயுதப்படைகள் கூர்மையான கம்புகள் போன்ற எளிய ஆயுதங்களைக் கொண்டு இணையற்ற வீரத்துடன் போரிட்டன.



1946 டிசம்பர் 19 அன்று தேசம் தழுவிய எதிர்ப்புப் போர் வெடித்தது. நகரங்களிலும், கிராமங்களிலும் இருந்த மக்களோடு சேர்ந்து நம் மக்களின் ஆயுதப்படைகள் ஈடிணையற்ற போர் தொடுத்தன. குறைந்த ஆயுத சாதனங்களையும் குறைந்த அனுபவத்தையுமே பெற்றிருந்த அப்படைகள், மிகுந்த தியாக உணர்ச்சியுடன் போரிட்டு எதிரியின் படைகளை நகர முடியாமல் செய்து, பாய்ந்து தாக்கி, அழித்தொழிப்பதில் வெற்றி பெற்றன.

எதிர்ப்புப் போர் படிப்படியாக நகரங்களிலிருந்து கிராமங்களுக்குப் பரவியது. நாம் எதிரியின் மீது கடுமையான தாக்குதல்கள் தொடுக்கவும் அதேபோது நீடித்த எதிர்ப்புப் போருக்காக நம் பிரதானப் படையைக் கட்டிக்காக்கவும் முயன்றோம். எதிரிப் படைகள் தாம் சென்ற இடத்திலெல்லாம் குடிப்படையினரிடமிருந்தும், கெரில்லாக்களிடமிருந்தும் கடுமையான எதிர்ப்பைச் சந்தித்தன. பொது மக்களின் துணையுடன், குடிப்படையினரும் கெரில்லாக்களும் பாலங்களையும், சாலைகளையும் தகர்த்தார்கள். எதிரிக்கு தொல்லை கொடுத்து அவனை நிர்மூலமாக்கினார்கள். எதிரி சமீபிக்கும் போதெல்லாம் மக்களை வீடுகளில் இருந்து வெளியேற்றி மறைத்து வைத்தார்கள்.

1947 பிற்பகுதியில் பிரெஞ்சுக் காலனியவாதிகள் வியட்பாக் பிரதேசத்தின் மீது ஒரு பெரிய அளவிலான தாக்குதலைத் தொடுத்தார்கள். அதன் நோக்கம், எதிர்ப்பின் பிரதானப் படையையும் அதன் தலைமையையும் துடைத்தொழிப்பதும், நாடு முழுவதிலும் எதிர்ப்புத் தளத்தை அழிப்பதும், இவ்வாறு எதிர்ப்புப் போரை விரைவில் தீர்த்துக் கட்டுவதும் ஆகும். எதிரியின் தற்காப்புப் படைநிலைகள் நெடுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும், இந்த எதிரிப்படைகளை எதிர்த்து பிரதானப்படை பெரும் தாக்குதல்கள் தொடுத்தது; பிரதேசத் துருப்புகளும், குடிப்படையினரும், கெரில்லாக்களும் எண்ணற்ற சிறு தாக்குதல்கள் தொடுத்தனர். நாடு முழுவதிலும் இருந்த போர் முனைகளுடன் நெருக்கமாக ஒருங்கிணைந்து போராடிய வியட்பாக் மக்களும் ஆயுதப்படைகளும், 1947 குளிர் காலத்தில் பிரெஞ்சுக் காலனியவாதிகளின் தாக்குதலை மொத்தமாய் முறியடித்து விட்டார்கள்.

போரில் நமக்குச் சாதகமான ஒரு திருப்பம் ஏற்பட்டது. துரிதத் தாக்குதல்கள் மூலம் விரைவில் வெற்றி பெற்றுவிடலாம் என நம்பிக் கொண்டிருந்த எதிரி, இப்போது ஒரு நீடித்த போரை நடத்த நிர்ப்பந்திக்கப்பட்டான். நீடித்த போர் நடந்தால் தான் வியட்நாமின் வடக்கு, மத்திய, தெற்கு ஆகிய மூன்று போர் முனைகளிலும் தனது பின்புலத்தை உறுதி செய்துகொள்ள முடியும் எனத் திட்டமிட்டான். எனவே போரை நீடிக்கச் செய்யவும், வியட்நாமியரை வியட்நாமியருக்கு எதிராகப் போரிட வைக்கவும் சில திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தத் துவங்கினான். நாமோ எதிரிப்படைகளின் பின்புலத்துக்குள் ஆழமாக ஊடுருவி, பரந்த, தீவிரமான கெரில்லாப் போர்களை நடத்தினோம். பிரதானப் படையின் ஒரு பகுதியை சுயேச்சையான கம்பெனிகளாகவும், பட்டாளங்களாகவும் பிரித்ததன் மூலம், எதிரியின் பின்புலத்தில் செயல்பட்ட குடிப்படைகள், கெரில்லாப் படைகள், பிரதேசப் படைகள் போன்றவற்றுக்கு நம்மால் புதிய வலிமையைச் சேர்க்க முடிந்தது. அதே போது இயங்கு படையலகுகளை உருவாக்கவும் இயங்கு போர் முறையை முன்னெடுத்துச் செல்லவும் முயன்றோம். மக்களின் மூன்று வகை ஆயுதப்படைகள் திட்டவட்டமான வடிவங்கள் பெற்றன.

1950ம் ஆண்டு இலையுதிர் காலத்திலும், குளிர் காலத்திலும் எல்லைப் பிரதேசத்தைக் கைப்பற்றுவதற்காக நடத்



தப்பட்ட சண்டையில் ஈட்டப்பட்ட வெற்றி, மூன்று வகை ஆயுதப்படைகளில் குறிப்பாக கிரம சேனையில் ஏற்பட்ட பெரும் முன்னேற்றத்தைக் குறித்தது. பெரிய அளவில் அமைப்புக்குள்ளாக்கப்பட்டு செப்பமான கருவிகளும், ஆயுதங்களும் வழங்கப்பட்ட நமது சேனை, முதன் முதலாக ஒரு பெரும் வலிந்த தாக்குதலை நடத்தி, எதிரியின் முதல்தர இயங்கு படைகளின் ஒரு பகுதியை நிர்மூலமாக்கி, எல்லைப் பிரதேசத்திலிருந்த அவர்களது தற்காப்புப் படைநிலைகளை உடைத்துச் சென்று, ஒரு பரந்த பிரதேசத்தை விடுதலை செய்தது. மக்கள் யுத்தமானது கெரில்லாப் போரிலிருந்து மரபுப் போராக வளர்ச்சியடைந்தது. மக்கள் சீனக் குடியரசு நிறுவப்பட்டதும், வியட்நாமியப் புரட்சியின் மீது ஏகாதிபத்தியவாதிகள் தொடுத்திருந்த சுற்றிவளைப்பு முடிவுக்கு வந்தது. சோஷலிச நாடுகளுடன் நமது தகவல் தொடர்பு மார்க்கங்கள் திறக்கப்பட்டன.

1951ம் ஆண்டுத் துவக்கத்தில் நடந்த இரண்டாவது கட்சிக் காங்கிரஸ் வியட்நாமியப் புரட்சி, நீண்டகால எதிர்ப்பு என்ற அடிப்படைப் பிரச்சினைகள் பற்றிய பல முடிவுகளை எடுத்தது. காங்கிரஸ் நடந்த பிறகு, கட்சியின் சரியான கொள்கைகள் குறிப்பாக விவசாயச் சீர்திருத்தம் பற்றிய கொள்கை நடைமுறைப் படுத்தப்பட்டன. இவை, ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவக் கும்பலைத் தோற்கடிக்க மிகுந்த புரட்சியுணர்வுடன் எழுந்து நிற்குமாறு உழைக்கும் விவசாயி மக்களை ஊக்குவித்தன. எதிர்ப்புப் போருக்கும் ஆயுதப்படைகளைக் கட்டியெழுப்புவதற்கும் தேவையான மனித சக்தியும் மூலவளங்களும் உற்சாகத்துடன் திரட்டப்பட்டன. மக்கள் யுத்தம் புதிய விசையைப் பெற்றது; 1950ம் ஆண்டு தொட்டே அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து முக்கியமான உதவிகளைப் பெற்றுவந்த பிரெஞ்சு ஆக்கிரமிப்பாளர்களை முற்றிலுமாகத் தோற்கடித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய அளவு வலிந்த தாக்குதல்களும், எதிர்த் தாக்குதல்களும் கிரம சேனையால் தொடுக்கப்பட்டன. குறிப்பாக இவை, பிரதானமான போர் முனையான பாக் போவில் தொடுக்கப்பட்டன. எல்லாப் போர் முனைகளிலும் கெரில்லாப் போரும் முடுக்கிவிடப்பட்டது. எதிரியின் பின்புலத்தி லுள்ள பல இடங்களில் இருந்த மக்கள் அரசியல் போராட்டத்தை ஆயுதப் போராட்டத்துடன் நெருக்கமாக இணைத்த னர்; கிராமங்களிலிருந்த பொம்மை ஆட்சியாளர்களை ஒழித்துக்கட்டி எதிரியின் காவல்நிலையங்களை துடைத்தெறிந்து மக்கள் அதிகாரத்தை நிறுவி, எதிரியின் பின்புலத்தை தமது போர்முனைப் படைநிலைகளாக (Front line) ஆக்கிக் கொண்டனர். குறிப்பாக, பிரதான இராணுவ நடவடிக்கை களின் போது மரபுப் போருடன் நெருக்கமாக இணைக்கப் பட்டு நடத்தப்பட்ட கெரில்லாப் போர் புதிய வளர்ச்சிக் கட்டத்தை அடைந்தது. கிராமப்புறத்தில் புரட்சி இயக்கம் துரிதப்படுத்தப்பட்டபோது, நகர்ப்புறங்களில் போராட்ட இயக்கம் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகிறது.

1953ம் ஆண்டு இறுதியிலும், 1954ம் ஆண்டுத் துவக்கத்திலும் மிகுந்த போர்த்தந்திர ரீதியான எதிர்த்தாக்குதல் நாடு முழுவதிலும், இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பல முக்கிய மார்க்கங்களில், தொடுக்கப்பட்டது. மரபுப் போர், கெரில்லாப் போர் இரண்டுமே நெருக்கமாக ஒருங்கிணைக்கப்பட்ட முறையில் முடுக்கிவிடப்பட்டு நடத்தப்பட்டன. நமது சேனையும், மக்களும் எல்லாப் போர்முனைகளிலும் மகத்தான வெற்றிகளை ஈட்டினர். குறிப்பாக தியன் பியன் ஃபு (Dien Bien Phu) என்ற இடத்தில் இந்தோ சீனாவிலிருந்த எதிரியின் முதல்தர இயங்கு படையின் ஒரு முக்கியப் பகுதியை நாம் நிர்மூலமாக்கினோம். புகழ்மிக்க தியன் பியன் ஃபு வெற்றியானது தீர்மானகரமான இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த வெற்றியாகும். இவ் வெற்றியும், இதர போர் முனைகளில் கிடைத்த வெற்றிகளும் சேர்ந்து ஆக்கிரமிப்புப் போரைத் தொடர்ந்து நடத்த எதிரி கொண்டிருந்த எண்ணத்துக்கு பலத்த அடி கொடுத்தன. தியன் பியன் ஃபு வெற்றியானது போரின் தன்மை முழுவதையும் மாற்றி, பிரெஞ்சு ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான எதிர்ப்புப் போருக்கு புகழ்மிக்க வெற்றியைக் கொணர்ந்தது.



ஆகஸ்டுப் புரட்சியின் அனுபவமும் பிரெஞ்சு ஆக்கிரமிப்புக்கு எதிரான எதிர்ப்புப் போரும் கீழ்க்காணும் முடிவுகளுக்கு நம்மை இட்டுச் செல்கின்றன. இவை எழுச்சியிலும், புரட்சிப் போரிலும் பயன்படுத்தப்படும் ) டைகள் பற்றிய முடிவுகளாகும். ஆகஸ்ட் எழுச்சியில் பயன்படுத்தப்பட்ட பிரதான சக்தி, மக்களின் அரசியல் படையும் அவர்களது விரிவான ஆயுதப்படைகளுமாகும். ஆனால் பிரெஞ்சு ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான மக்கள் யுத்தத்திலோ பிரதான சக்தியாக விளங்கியது, மக்களின் ஆயுதப் படைகள் ஆகும். இவை மக்களின் ஐக்கியப்பட்ட அரசியல் படைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தன; அரசியல் படைகளுடன் தமது நடவடிக்கைகளை ஒருங்கிணைத்துச் செயற்பட்டன. இதற்குக் காரணம் என்னவென்றால், பொதுவாக எழுச்சி என்பது மக்கள் நடத்துவதாகும். யுத்தமோ இரண்டு சேனைகளுக்கிடையே நடப்பதாகும். மக்கள் யுத்தத்தில், மக்களின் எழுச்சிகள் இருக்கும். மக்களின் எழுச்சியில், இரு சேனைகளுக்கிடையிலான யுத்தங்களும் இருக்கும். பிரெஞ்சு காலனியாதிக்கவாதிகளுக்கெதிரான எதிர்ப்புப் போரில், நமது மக்கள் ஆயுதப்படைகளை, அரசியல் படைகளுடன் திறம்பட இணைத்தனர். அரசியல் படைகள் தான் ஆயுதப் படைகளுக்கான அடிப்படை. மூன்று வகையான ஆயுதப்படைகளே மக்களனைவரின் எதிர்ப்புப் போருக்கான அடிப்படையாகும். நமது மக்கள் ஆயுதப் போராட்டத்தை அரசியல் போராட்டத்துடனும், இராணுவ நடவடிக்கைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் எழுச்சியுடனும் திறம்பட இணைத்தனர். **ஆயுதப் போராட்டத்தை பிரதானமான போராட்ட வடிவமாகக்** கொண்டனர்.

எதிர்ப்புப் போர் நடந்த ஆண்டுகளில், **மக்களின் ஆயுதப்படைகளைக்** கட்ட நமது கட்சி கடுமையாக உழைத்தது. இவை, தொழிலாளி - விவசாயி கூட்டணியை அத்திவாரமாகக் கொண்ட மக்களின் அரசியல் படைகளின் அடிப்படை மீது உருவாக்கப்பட்டன; அதிகாரத்தைக் கைப்பற்ற ஆயுத எழுச்சி நடத்துவதற்கான தயாரிப்பு செய்யப்பட்ட நாட்களில் இவை உருவாக்கப்பட்டன. மக்களின் ஆயுதப் படைகள், மக்களதிகாரம் நிறுவப்பட்ட முதலாண்டுகளில் மாபெரும் முன்னேற்றத்தைக் கண்டன; நீடித்த எதிர்ப்புப் போரில் அவை உருக்குப் போன்ற உறுதிபெற்று, துரிதமான வளர்ச்சியைப் பெற்றன. விடுதலைச் சேனை, நமது அரசின் கிரம சேனையாகிய **வியட்நாம் மக்கள் சேனையாக** மாறியது. **தற்காப்புப் படையலகுகளும், குடிப்படைகளும், கெரில்லாப் படைகளும்** தொடர்ந்து வளர்ச்சியடைந்து வந்தன. **மக்களின் ஆயுதப்படைகளின் மூன்று வகைகளான பிரதானப்படை, பிரதேசப் படைகள், குடிப்படைகள் மற்றும் கெரில்லாப் படைகள்** ஆகியன தொடர்ந்து வலுப்பெற்று வந்தன.

**கிரம சேனை** தான் அடிப்படைப் படையாகும். நாடு முழுவதிலும் முக்கியப் போர்முனைகளில் பயன்படுத்தப்பட்ட இயங்குபடை இதுதான். எதிரியின் கிரம சேனையை, குறிப்பாக அவர்களது இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இயங்குபடையை நிர்மூலமாக்குதல், அவர்களது ஆயுதப் படைகளுக்குக் கதிகலங்க வைக்கும் அடிகள் கொடுத்தல், பிரதேசத்தை எதிரியிடமிருந்து விடுவித்தல், யுத்த நிலைமையை மாற்றுவதற்காக கெரில்லாப் படைகளுடன் இணைந்து செயல்படுதல் ஆகியன கிரம சேனையின் கடமைகளாகும். ஆக்கிரமிப்புப்போர் நடத்த எதிரி கொண்டிருக்கும் எண்ணத்தைத் தகர்த்து, எதிர்ப்புப் போருக்கு முழு வெற்றியை ஈட்டுவதற்கான வழிமுறை என்ற வகையில் மேற்காணும் நடவடிக்கைகள் போர்த்தந்திர முக்கியத்துவம் கொண்டுள்ளன. கிரமப் படைகளும் மரபுப் போர்முறையும், கெரில்லாப் போரின் தீவிரமான வளர்ச்சிக்கான நிலைமைகளையும் உருவாக்கின; மக்களின் அரசியல் போராட்டத்தையும், ஆயுதமேந்திய எழுச்சிகளையும் ஊக்குவித்தன; எதிரித் துருப்புகளிடையேயும், எதிரியின் ஆட்சிக்குள்ளும் நடத்தப்பட்ட கலக வேலையை ஊக்குவித்தன.

பிரெஞ்சு ஆக்கிரமிப்புக்கு எதிரான எதிர்ப்புப் போராட்டத்தில் நமது பிரதானப் படை, ஆரம்பத்திலிருந்த சிறிய படையலகுகளிலிருந்து, இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இயங்குபடையாக வளர்ச்சியடைந்தது. இந்த இயங்கு படையானது சண்டைகளில் அனுபவம் பெற்றுத் தேர்ந்த இயங்கு போர்க் குழுக்களானதாகும். இக்குழுக்கள், தொடர்ந்து மேம்படுத்தப்பட்டுவந்த ஆயுத சாதனங்கள், சிறந்த பயிற்சி, உயர்ந்த அளவு உளஉரம், மிகுந்த போராட்ட ஆற்றல்கள் ஆகியவற்றைக் கொண்டிருந்தன. ஒரு சண்டையில் பல எதிரிப் பட்டாளங்களையோ, படை வகுப்புகளையோ அழித்தொழிக்கத் திறன்பெற்றிருந்தன. முதன்முதலாக 1950ல் மேற்கொள்ளப்பட்ட எல்லைப்புற இராணுவ நடவடிக்கையின் போதும் பின்னர் ஹோவாபின், டேபாக் முதலிய இடங்களில் நடந்த பெரும் நடவடிக்கைகளிலும் எதிரியுடன் போரிட்ட நமது இயங்கு போரிடும் குழுக்கள், பிரதேச ஆயுதப்படைகளுடனும் மூன்றுவகை ஆயுதப்படைகளுடனும் நெருக்கமாக இணைந்து செயல்பட்டு மிகுந்த செயல்திறமிக்கவையாக விளங்கின; எதிர்ப்புப் போரின் முன்னேற்றத்துக்குப் பெரும் பங்களிப்புச் செய்தன. பிரெஞ்சு ஆக்கிரமிப்புக்கு எதிரான எதிர்ப்புப் போரில் நமது இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயங்கு படைகள் அடைந்த மிக முன்னேறிய வளர்ச்சி நிலையை தியன் பியன் ஃபு சண்டை எடுத்துக் காட்டியது. நமது சேனையும், மக்களும் பல்வேறு அம்சங்களில் பெரும் வெற்றியை ஈட்டிக் கொண்டிருக்க, நமது முதல்தர இயங்கு போரிடும் குழுக்களோ, தியன் பியன் ஃபு போர்முனையில் தொழில்நுட்பப் படையலகுகளின் துணையுடனும் மக்களனைவரின் பலத்த ஆதரவுடனும் இந்தோசீனாவிலிருந்த பகைவனின் மிக வலுவான கோட்டையைத் துடைத்தெறிந்தது.

ஒவ்வொரு போர்முனையிலும் இருந்த திட்டவட்டமான நிலைமைகள், திட்டவட்டமான கடமைகள் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒவ்வொரு பிரதேசத்திலும் **பிரதேசப் படைகள்** கட்டப்பட்டன; பிரதேசங்களில் நடத்தப்படும் ஆயுதப் போராட்டத்தின் அடிப்படையாக அவை அமைகின்றன. வலுவான படையலகுகளாக ஒழுங்கமைக்கப்பட்ட பிரதேசப் படைகள், போர் நடவடிக்கைகளின் தேவைக்கேற்ப தமது படைகளை தேவையான இடங்களில் ஒன்று குவித்தும், பரவலாக்கவும் தத்தம் பிரதேசங்களில் செயல்படுகின்றன; எதிரியை நிர்மூலம் செய்வதிலும், கெரில்லாப் போரை நிலைநிறுத்தி அதை வளர்ப்பதிலும், கெரில்லாப் படைகளுடனும், குடிப்படையுடனும், பிரதானப் படையுடனும் நெருக்கமாக இணைந்து செயல்படுகின்றன; மக்களைப் பட்டிகளில் அடைப்பது போல் அடைத்து வைக்கவும் இளைஞர்களைக் கட்டாய இராணுவ சேவையில் ஈடுபடுத்தவும் எதிரி செய்யும் முயற்சிகளைத் தகர்ப்பதற்காக நடத்தப்படும் போரை, மக்களின் அரசியல் போராட்ட இயக்கங்களுடன் ஒருங்கிணைக்கின்றன; மக்களைப் பாதுகாத்து, மக்களதிகாரத்தைக் காத்து, எதிர்ப்புப் போருக்கு உதவுவதற்காக மனித சக்தியையும் மூலவளங்களையும் பாதுகாக்கின்றன.

எதிர்ப்புப் போராட்டத்தின் ஆரம்பக் காலங்களிலிருந்த ஆயுதமேந்திய பிரச்சாரக் குழுக்கள், சுயேச்சையான கம்



பெனிகள்,* பட்டாள அளவிலான குழுக்கள் ஆகியவற்றிலிருந்து, மாகாணங்களிலும் மாவட்டங்களிலும் உள்ள பிரதேசப் படைகள் படிப்படியாக வளர்ச்சிபெற்று வந்துள்ளன. அவற்றின் ஆயுத சாதனங்கள் தொடர்ந்து மேம்பட்டவையாகி வந்தன. இதற்குப் பிரதானமான காரணம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் தான்.

பிரதேசப் படைகள் ஏராளமான எதிரி பிளாட்டூன்களையும்,** கம்பெனிகளையும் அழித்தொழித்துள்ளன; எதிரியின் காவல் நிலையங்களைக் கைப்பற்றியுள்ளன. எதிர்ப்புப் போரின் கடைசிக் கட்டத்தில் அவை எதிரிப் பட்டாளங்கள் பலவற்றை முழுமையாகத் துடைத்தெறிந்துள்ளன.

**குடிப்படைகளும், கெரில்லாப் படைகளும்** மக்களின் விரிவுபடுத்தப்பட்ட ஆயுதப்படைகளாகும். பிரதேசப் படைகளுடன் ஒருங்கிணைந்து **கெரில்லாப் போரில்** ஈடுபட்டன; கிராமங்களிலிருந்த பொம்மை ஆட்சியாளர்களையும் துரோகிகளையும் ஒழித்துக்கட்டி, ஸ்தல அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான நடவடிக்கைகளில் மக்களின் அரசியல் படைகளுடன் ஒத்துழைத்தன. குடிப்படை வீரர்களும் கெரில்லா வீரர்களும் உற்பத்திப் பணியையும் விட்டுவிடவில்லை. அவர்கள் எல்லாவகையான ஆயுதங்களையும் பல்வேறு போர் வடிவங்களையும் பயன்படுத்தி, தத்தம் ஸ்தலங்களில் எதிரி மீது சரியான நேரத்தில் தாக்குதல்களைத் தொடுத்து, கிராமங்களிலும் நகரங்களிலும் எதிரி தென்பட்ட போதெல்லாம்,

---

* கம்பெனி (**Company**): தரைப்படை பட்டாளத்தின் (**Battalion**) உட்பிரிவு. மேஜர் அல்லது காப்டன் இதற்குத் தலைவர்

** பிளாட்டூன் (**Platoon**): கம்பெனியின் உட்பிரிவு. லெஃப்டினெண்ட் இதற்குத் தலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது பாதுகாப்பான பின்புலம் எனக் கருதப்பட்ட பகுதிகளிலும் கூட, அவனைத் தாக்கி அழித்து நிர்மூலமாக்கினர். ஸ்தலக் குடிப்படைகளும், கெரில்லாப் படைகளும் மக்கள் சேனையைக் கட்டுவதற்கும் கிரமப் போர் முறையை வளர்ப்பதற்குமான ஆயுதப்படைகளாகவும் அமைகின்றன.

பிரெஞ்சு ஆக்கிரமிப்புக்கு எதிரான எதிர்ப்புப் போராட்டத்தில், குடிப்படைகள், கெரில்லாப்படைகள் ஆகியவற்றின் எண்ணிக்கையும் அவற்றின் போராட்ட ஆற்றல்களும் அதிகரித்தன. போரிடும் கிராமங்களின் எண்ணிக்கையும் தொடர்ந்து அதிகரித்து வந்தது. இக் கிராமங்களில் நின்று, படிப்படியாகச் செம்மைப்படுத்தப்பட்டு வந்த எளிய ஆயுதங்களைத் திறமையாகப் பாவித்து, குடிப்படைகளும் கெரில்லாப் படைகளும் ஏராளமான எதிரிப் படைகளையும் (Sections) பிளாட்டூன்களையும் நிர்மூலமாக்கின; எதிர்ப்புப் போர் முடியும் தருவாயில் முழுக் கம்பெனிகளைக் கூட நிர்மூலமாக்கின. பிரதேசதுருப்புகளுடன் நெருக்கமாக ஒத்துழைத்த அவை, மென்மேலும் திறமை வாய்ந்தவையாயின. அவை கெரில்லாப் பிரதேசங்களைக் கட்டிக்காத்து விரிவுபடுத்தின; விடுதலைப் பிரதேசங்களைப் பாதுகாத்து தம் பிரதேசத்தைக் கைப்பற்ற எதிரி செய்த முயற்சிகளை முறியடித்து, பிரதேசங்களில் மக்கள் யுத்தத்தைத் துரிதப்படுத்தின. குடிப்படைகளும், கெரில்லாப் படைகளும், பிரதேசப் படைகளும் நீடித்த எதிர்ப்புப் போரில் ஒரு மிக முக்கிய பங்கு வகித்தன. எதிரியின் பின்புலத்தில் கெரில்லாப் போர் தொடுப்பதென கட்சி முடிவு செய்த 1948-49 போன்ற மிக முக்கியமான காலகட்டங்களிலும், பின்னர் ஹோவா பின், தியன் பியன் ஃபு போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் போது எதிரிப் படை நிலைகளுக்கு பின்புறமாக கெரில்லாப் போர் தொடுக்கப்பட்ட போதும் மேற்காணும் மூவகை ஆயுதப்படைகள் வகித்த பங்கு குறிப்பிடத்தக்கவையாகும்.



**கிரமப் படைகளும், பிரதேசப் படைகளும்** (இவை இரண்டும் சேர்ந்ததே **மக்கள் சேனை**) **மக்களின் ஆயுதப்படைகளான** குடிப்படைகள் மற்றும் கெரில்லாப் படைகளும் ஆகிய மூவகைகளாக மக்களின் ஆயுதப்படைகள் வளர்ச்சி பெற்றன. இவ் வளர்ச்சி, பிரெஞ்சுக் காலனியாதிக்கத்துக்கு எதிராக மக்கள் நடத்திய போரில் நமது இராணுவ அமைப்பு மக்களனைவரின் அமைப்பாக இருந்தது என்பதையே காட்டுகிறது.

அந்தப் போரில், புரட்சிகர ஆயுதப்படைகளின் வளர்ச்சியின் போது, கிரமப் படைகள், பிரதேசப் படைகள், குடிப்படைகள் மற்றும் கெரில்லாப் படைகள் ஆகியவற்றுக்கிடையிலிருந்த அமைப்பு உறவுகளும், இந்த மூன்று வகைப் படைகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பும், எதிர்ப்புப் போராட்டம் கெரில்லாப் போரிலிருந்து கிரமப் போராக வளர்ச்சியடைந்த போதும், எதிரியைத் தோற்கடிக்க கெரில்லாப் போரும், கிரமப் போரும் நெருக்கமாக ஒருங்கிணைந்த போதும் உருவாக்கப்பட்டன.

பிரெஞ்சு ஆக்கிரமிப்புக்கு எதிரான எதிர்ப்புப் போரின் வடிவம் நமக்கு காட்டுவதாவது: **கிரமப் படைகள், பிரதேசப் படைகள், குடிப்படைகள்-கெரில்லாப் படைகள் ஆகியவற்றுக்கிடையிலான ஒருங்கிணைப்பு, கிரமப் போருக்கும், கெரில்லாப் போருக்குமிடையிலான ஒருங்கிணைப்பு** ஒரு மக்கள் போரின் முதன்மையான அம்சமாகும். இதுதான் எதிரிக்கெதிராக மக்களனைவரையும் திரட்டுவதையும், ஒரு நீதியான போரை, விடுதலைப் போரை, தனது சொந்தப் பிரதேசத்துக்குள்ளேயே நடத்துவதில் உள்ள கூடுதல் ஆற்றலைப் பயன்படுத்துவதையும் சாத்தியமாக்குகிறது. பெரும் எண்ணிக்கையிலான துருப்புகளையும், நவீன ஆயுத சாதனங்களையும் கொண்ட எதிரியின் தொழில்முறை இராணுவத்தை, மரபுவழிப் போர் நடத்துவதிலிருந்தும், தன் வலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையையும் ஆற்றல்களையும் முழுமையாகப் பயன்படுத்துவதிலிருந்தும் அது தடுத்து நிறுத்திற்று. ஆக்கிரமிப்பாளர்கள் புரட்சிச் சேனையை மட்டுமல்லாது எல்லாத் துறைகளிலும் உறுதிவாய்ந்த எதிர்ப்பை நடத்த புரட்சிகர ஆயுதப் படைகளுடன் சேர்ந்து கொண்ட மக்களனைவரையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஆக்கிரமிப்புத் துருப்புகள் மக்கள் யுத்தம் என்ற பெருங்கடலில் மூழ்கடிக்கப்பட்டன. போர்முனைகளோ, பின்புலங்களோ இல்லாத ஒரு போரை அவர்கள் சந்தித்தனர். அவர்கள் சந்தித்த போரில் போர்முனை என்பது எங்குமே இல்லை என்றும் எல்லா இடங்களுமே போர்முனைதான் என்றும் கூறலாம். எல்லா ஆக்கிரமிப்புப் போர்களிலும் உள்ள உள்ளார்ந்த முரண்பாடுகள், அதாவது படைகளைப் பரவலாக்குவதற்கும் ஒன்றுகுவிப்பதற்குமிடையிலான முரண்பாடு, ஓரிடத்தில் நிலைகொள்ளுதலுக்கும், இடம்பெயர்தலுக்குமிடையிலான முரண்பாடு ஆகியன மேலும் கூர்மையடைந்தன. நவீன ஆயுதங்கள் தரித்த பெரும் ஆக்கிரமிப்புச் சேனை திறனற்றதாகியது. அவற்றல் மக்களின் ஆயுதப்படைகளைத் தோற்கடிக்கமுடியாமல் போய்விட்டது மட்டுமல்ல, அவை தொடர்ந்து நிர்மூலமாக்கப்பட்டு, இறுதியில் மக்களனைவரின் ஆதரவைப் பெற்ற, மக்களின் மூவகை ஆயுதப்படைகளால் தோற்கடிக்கப்பட்டன.

இவ்வாறு, எதிரி சேனையைவிட எண்ணிக்கைப்பலம் குறைந்த, ஆனல் மக்களின் விரிவான ஆயுதப் படைகளின் துணையைப் பெற்ற ஒரு மக்கள் சேனையுடன் இணைந்து, நமது மக்கள், மக்களனைவரும் பங்கேற்கும் அனைத்தும் தழுவிய எதிர்ப்புப் போரை நடத்தினர். கெரில்லாப் போரையும் கிரமப் போரையும் ஒருங்கிணைத்து, ஏறத்தாழ 5 இலட்சம் துருப்புகளையும், மிக நவீன போர்ச்சாதனங்களையும் கொண்ட பிரெஞ்சுக் காலனிய சேனையைத் தோற்கடித்தனர்.



இது, ஒரு காலனிய நாட்டில் ஒரு தேசிய விடுதலைப் போருக்குக் கிடைத்த முதல் வெற்றியாகும். இவ்வெற்றி நமது சகாப்தத்தில், பரந்த நிலப்பரப்பும், பெரும் மக்கள் தொகையும், வளர்ச்சியடைந்த பொருளாதாரமும் இல்லாத ஒரு சிறிய நாடு, ஒரு பழைய வகையான காலனிய ஆக்கிரமிப்புப் போரைத் தோற்கடிக்க புரட்சிப் போர் நடத்தமுடியும் என்பதை நிரூபிக்கிறது.

பிரெஞ்சு ஆக்கிரமிப்புக்கு எதிரான எதிர்ப்புப் போரில் கிட்டிய மகத்தான வெற்றியை அடுத்து, வட வியட்நாம் முழுமையாக விடுதலை செய்யப்பட்டது. அது ஒரு முழுமையான சுதந்திர அரசுக் கட்டமைப்புடன் சோஷலிசப் புரட்சிக் கட்டத்துக்கும், சமாதான நிலைமைகளில் சோஷலிசம் நிர்மாணிக்கப்படும் கட்டத்துக்கும் நகர்ந்தது. இதற்கிடையே தென் வியட்நாம் இன்னும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளதும் அவர்களது கையாட்களதும் ஆட்சியின் கீழ் இருந்தபடியால், நமது மக்கள் நாடு முழுவதிலும் மக்கள் தேசிய ஜனநாயகப் புரட்சியை நிறைவு செய்வதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து செய்து வந்தனர்.

விவசாய சீர்திருத்தத்தை நிறைவேற்றி, தேசியப் பொருளாதாரத்தைப் புதுப்பித்தவுடன் வட வியட்நாமிய மக்கள் சோஷலிச மாற்றத்தையும் சோஷலிச நிர்மாணத்தையும் மேற்கொண்டனர். அதாவது நமது வரலாற்றிலேயே மிகவும் ஆழமானதும் அடிப்படையானதுமான புரட்சியை நடைமுறைப் படுத்தினர். விவசாயச் சீர்திருத்தம் நிறைவு பெற்றதும், மனிதனை மனிதன் சுரண்டும் நிலையின் அடிப்படை ஒழிந்தது. புதிய உற்பத்தி உறவுகள் உருவாக்கப்பட்டன; உற்பத்திச் சாதனங்களில் சோஷலிச உடைமை முறை உருவாக்கப்பட்டது. சோஷலிசத்தின் பௌதீக தொழில் நுட்ப அடிப்படைகள் படிப்படியாக உருவாக்கப்பட்டு வந்தன. வட வியட்நாமில் நமது மக்களின் தேசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார்மீக ஒற்றுமை முன்னேக் காட்டிலும் வலுமிக்கதாயிற்று. தேசப்பற்று, சோஷலிசப் பற்று, புதிய சோஷலிச மனிதனின் உணர்வு ஆகியன தொடர்ந்து அதிகரித்து வந்தன. தமது நிர்மாணப் பணியிலும் போர்க்காரியங்களிலும் நமது மக்கள் சோஷலிச முகாமிலுள்ள சகோதர நாடுகளிலிருந்து அதிகரித்த உதவியைப் பெற்றுவந்தனர்.

மக்கள் ஆயுதப்படைகளில் ஏற்பட்டுள்ள புதிய முன்னேற்றத்துக்குக் காரணமாக இருப்பது, மேற்காணும் வரலாற்று நிலைகளில் வட வியட்நாம் சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியாகும். சமாதான நிலைமைகளில் சோஷலிச நிர்மாணத்தில் ஈடுபட்டுள்ள ஒரு சுதந்திர அரசின் மக்களனைவரும் பங்கேற்கும் தேசியப் பாதுகாப்புக்கான இராணுவ அமைப்பு அங்கு நிலவுகிறது. அது, சோஷலிச வட வியட்நாமைப் பாதுகாத்து, நாடு முழுவதிலும் புரட்சியை நிறைவேற்றப் பாடுபட்டு, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சதித்திட்டங்கள் அனைத்தையும் முறியடிப்பதற்காக பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசின் கருவியாகச் செயல்படுகிறது.

சேனையைக் கட்டியெழுப்பி சமாதான நிலைமைகளில் ஒரு சோஷலிச ஆட்சியின் கீழ் தேசியப் பாதுகாப்பை வலுப்படுத்திக் கொள்வது என்பது நமது கட்சிக்கும், நமது மக்களுக்கும் ஒரு புதிய அனுபவமாகும். கடந்த காலத்தில், பல நூற்றுண்டுகளாக, நமது மக்கள் சேனையைக் கட்டி, ஒரு சுதந்திர அரசில், சமாதான காலத்தில் தேசியப் பாதுகாப்பை வலுப்படுத்துவதில் அனுபவம் பெற்றிருந்தனர். ஆனுல் அது நிலப்பிரபுத்துவ ஆட்சியில் நடந்ததாகும். நமது கட்சி தோன்றியதிலிருந்து, நமது மக்கள் பல தசாப்தங்களாகப் போரிட்டு வந்தனர். காலனிய, நிலப்பிரபுத்துவ ஆட்சியிலிருந்த போது எழுச்சியை நடத்தி அதிகாரத்தைக் கைப்பற்றவும் பின்னர் தொடர்ந்து வலுப்படுத்தப்பட்டு வந்த மக்கள் ஜனநாயக அரசின் கீழ் நீடித்த விடுதலைப்



போரை நடத்துவதற்கும், வேண்டிய ஆயுதப்படைகளைக் கட்டுவதிலும் நாம் மதிப்புமிக்க அனுபவத்தைப் பெற்றுள்ளோம்.

தற்போது, நமது கட்சியும் மக்களும் ஒரு புதிய பிரச்சினைக்கு வெற்றிகரமான தீர்வு கண்டுள்ளனர்.

சமாதான நிலைமைகளில், நமது மக்களின் முதன்மைக் கடமை, நாட்டின் நிர்மாணத்திலும், சோஷலிசப் பொருளாதார நிர்மாணத்திலும் கவனம் குவிப்பதுதான். அதனுல்தான் இந்தக் காலகட்டத்தில் பொருளாதாரத்துக்கும் தேசியப் பாதுகாப்புக்குமிடையே உள்ள உறவு என்ற பிரச்சினைக்கு சரியான தீர்வு காண்பது, சேனையைக் கட்டி தேசியப் பாதுகாப்பை வலுப்படுத்துவதில் உள்ள அடிப்படையான பிரச்சினையாகும். ஒரு வலுவான பொருளாதாரத்தைக் கொண்டுதான் நாம் தேசப் பாதுகாப்பை வலுவானதாக்க முடியும். அதேபோல் தேசப்பாதுகாப்பு வலிமையானதாக இருந்தால்தான், நமது மக்களின் சமாதானகால உழைப்பைப் பாதுகாத்து நாட்டை நிர்மாணித்து, தாய்நாட்டின் பாதுகாப்பை உத்தரவாதம் செய்யமுடியும். பொருளாதாரத்துக்கும் தேசப் பாதுகாப்புக்கும் உள்ள உறவுகள் தற்காலிகமாய் பிளவுபட்டுள்ள நம் நாட்டின் நிலைமைகளுக்கு ஏற்றவாறு தீர்மானிக்கப்பட வேண்டும். அதாவது தென் வியட்நாம் இன்னும் அந்நிய ஆக்கிரமிப்புக்குள்ளாகியிருக்கிறது; வட வியட்நாமோ நாடு முழுவதிலும் புரட்சியை நிறைவேற்றுவதற்கான வலுவான அடித்தளத்தைத் துரிதமாகக் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. பலம்பொருந்திய ஆக்கிரமிப்புச் சக்தியாகிய அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடி வெற்றிபெற ஒரு நாடு தயார் நிலையில் இருப்பதற்காக இந்த அடித்தளம் கட்டப்பட வேண்டியுள்ளது. எனவே பொருளாதார நிர்மாணத்தில் ஈடுபடுகையில் நாம் தேசப்பாதுகாப்புத் தேவைகளைக் கருத்தில் கொள்ளவேண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டியுள்ளது. பொதுவான பொருளாதாரத் திட்டத்தின் கடமைகள், பொருளாதாரப் பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள நாட்டின் பகுதிகள் என்பவற்றில் மட்டுமல்லாது... தொழில், விவசாயம், தகவல் தொடர்பு, போக்குவரத்து, கலாச்சார சமூக நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட பல்வேறு பொருளாதாரத் துறைகளிலும் தேசியப்பாதுகாப்புத் தேவைகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

அதே சமயம், சமாதான காலப் பொருளாதாரத்திலிருந்து போர்க்காலப் பொருளாதாரத்துக்குச் செல்ல நாம் தயாரிப்புச் செய்யவேண்டும்.

சேனையைக் கட்டி, தேசியப் பாதுகாப்பை வலுப்படுத்துதல் என்பதைப் பொறுத்தவரை, மக்கள் யுத்தம், மக்களனைவரும் பங்கேற்கும் தேசியப் பாதுகாப்பு என்ற கருத்தை நமது கட்சி உறுதியாகப் பற்றி நிற்கிறது. அது புதிய நிலைமைகளில் மக்களனைவரையும் ஆயுதபாணிகளாக்கியுள்ளது; அதே சமயம் புதிய நிலைமைகளுக்கும் புதிய கடமைகளுக்கும் ஏற்ப ஒரு சக்திவாய்ந்த மக்கள் சேனையையும் கட்டி வருகிறது. புரட்சிகர மக்களை ஆயுதபாணியாக்குகிறது; மூவகையான மக்கள் ஆயுதப்படைகளை வலுப்படுத்தி வருகிறது. மக்களணைவரின் விரிவான ஆயுதப்படைகளில் உள்ளோர் பொருளாதார உற்பத்தியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். இந்த விரிவான மக்கள் ஆயுதப்படைகளையும், வலுவானதும், போர்க்குணமுள்ளதும், நன்கு பயிற்றப்பட்டதுமான சேனையையும் கொண்டு நாம் வலுவான தேசப் பாதுகாப்புடன் விளங்க முடியும். அதே சமயம், உற்பத்தி வேலைக்கும் பொருளாதாரத்தை நிர்மாணித்து வளர்க்கவும் போதுமான மனித சக்தியையும் நாம் பெற்றிருக்க முடியும். நம் நாடு சமாதான காலத்தில் பொருளாதாரத்தை மேம்படுத்தக் கடும் முயற்சி செய்யவும், போர்க் காலத்தில் வலிமைமிக்க ஏகாதிபத்திய எதிரிகளைத்



தோற்கடிக்க கடும்போர் நடத்தவும் வேண்டியிருக்கிறது. இந் நிலையில் மேலே கூறப்பட்ட கொள்கையே நமது நாட்டைப் போன்ற ஒரு சிறு நாட்டுக்குப் பொருத்தமான சரியான தேசியப் பாதுகாப்புக் கொள்கை ஆகும்.

வட வியட்நாமில் சமாதானம் மீட்கப்பட்டுள்ளது. ஆயினும் நம் நாடு இன்னும் பிளவுபடுத்தப்பட்டுள்ளது. தென் வியட்நாமில் இன்னும் ஆக்கிரமிப்பாளர்கள் இருந்துவருகின்றனர். இந்தச் சூழ்நிலையில், பொருளாதாரத்தையும் தேசப் பாதுகாப்பையும் ஒருங்கிணைத்துச் செல்ல வேண்டிய அவசியத்தை நாம் முழுமையாகக் கிரகித்துக் கொள்ள வேண்டும். இந்த முழுமையான புரிதல் நம் மக்களுக்கு இருப்பது, அவர்களின் உயர்ந்த விழிப்புணர்வைச் சுட்டிக் காட்டுகிறது. தாங்கள் சோஷலிச வட வியட்நாமின் சுதந்திரத்தையும், இறைமையையும் பாதுகாக்க வேண்டும் என்பதையும் சமாதான காலத்திலும் கூட எதிரியின் சதித் திட்டங்கள் அனைத்தையும் முறியடிக்கத் தயாராக இருக்க வேண்டும் என்பதையும், நாட்டை விடுதலை செய்ய முழு ஆயத்தமாகவும் உறுதியோடும் இருக்க வேண்டும் என்பதையும் அவர்கள் நன்கு அறிந்துள்ளனர்.

இக் கொள்கைக்கு இணங்க, நமது கட்சி ஒரு வலுமிக்க மக்கள் படையைக் கட்டுவதென்றும் அது ஒரு கிரம, நவீன சேனையாகவும் விரிந்த குடிப்படைகளும் தற்காப்புப் படைகளும் கொண்ட அமைப்பாகவும் வளர்க்கப்பட வேண்டும் என்றும் வலுவான சேமப்படைகளைக் கட்டவேண்டும் என்றும் முடிவெடுத்தது.

பின்புலப் பிரதேசத்தில், உற்பத்தி வேலைகளில் ஈடுபடுவதற்காக ஏராளமானோர் படைகளிலிருந்து விடுவிக்கப்பட்டு அனுப்பப்பட்டனர்; இதற்கிடையே, கணிசமான எண்ணிக்கையும் உயர்ந்த உளஉரமும் கொண்ட நிலையான சேனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றைக் கட்டி வலுப்படுத்தும் பணியிலும் நாம் ஈடுபட்டோம். சேனைப் படையலகுகள் பல, இராணுவத் தயாரிப்புப் பணிகளுடன் பொருளாதார நிர்மாணப் பணிகளிலும் ஈடுபட்டுள்ளன. மக்கள் தாமாகவே முன்வந்து இராணுவத்தில் சேரும் வழக்கத்தை மாற்றி **கட்டாய இராணுவ சேவையை** நமது அரசு நிறுவியுள்ளது. நமது அரசு தாய்நாட்டைக் காத்தல் என்பதை ஒவ்வொரு குடிமகனுக்கும் உள்ள கடமையாக ஆக்கியுள்ளது. இதன் நோக்கம் ஒரு வலுமிக்க **சேமப் படையைக்** கட்டுவதுதான். படைகளிலிருந்து அனுப்பப்பட்ட அல்லது படைசாராப் பணிகளுக்கு மாற்றப்பட்ட படைவீரர்களின் பெயர்கள் முதலிய விபரங்கள் பேரேடுகளில் பதிவு செய்யப்படுகின்றன. அவரவர்களின் தகுதிகளுக்கேற்றவாறு அவர்கள் சேமப்படை அதிகாரிகள் என்றோ சேமப்படை வீரர்கள் என்றோ வகைப்படுத்தப்படுகின்றனர். நாம் **குடிப்படைகளையும்** தற்காப்புப் படைகளையும் மறு ஒழுங்கமைத்து வலுப்படுத்தியுள்ளோம்; போரிடும் கம்யூன்கள், போரிடும் கிராமங்கள், போரிடும் நகர மாவட்டங்கள் ஆகியவற்றை ஒழுங்கமைப்பதைத் துரிதப்படுத்தியுள்ளோம். பாதுகாப்பு - ஒழுங்குப் பராமரிப்பை வலுப்படுத்தியுள்ளோம். நமது இளைஞர்களுக்கு அடிப்படையான இராணுவப் பயிற்சி தரப்படுகிறது. தேசப் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட விளையாட்டுகளும், உடற்பயிற்சிகளும் ஊக்குவிக்கப்படுகின்றன. **மக்களின் ஆயுத பாதுகாப்புப் படை** ஒழுங்கமைக்கப்பட்டு வருகிறது.

வட வியட்நாமில் மக்களின் ஆயுதப்படைகளை வலுப்படுத்துதல், மக்கள் சேனையின் பாத்திரம் என்பவற்றைப் பொறுத்தவரை 1960ல் நடந்த மூன்றாவது கட்சிக் காங்கிரசின் தீர்மானம் கூறுவதாவது: **''மக்கள் சேனையானது,** தேசிய சுதந்திரத்தையும் வட வியட்நாம் மக்கள் சமாதான காலத்தில் ஆற்றும் உழைப்பையும் பாதுகாக்கும் பிரதானமான படையாகும். அது நாட்டை மீண்டும் ஐக்கியப்படுத்துவதற்கான போராட்டத்தில் வலுமிக்க துணையாக நிற்கிறது. தேசியப் பாதுகாப்புப் படையை நாம் மேலும் வலுப்படுத்த வேண்டியுள்ளது; நிலையான சேனையை, ஒரு கிரம, நவீன சேனையாக ஆக்க வேண்டியுள்ளது; மக்களின் ஆயுதக் காவல் படைகளை வலுப்படுத்த வேண்டியுள்ளது; அதே சமயம் குடிப்படைகளையும் தற்காப்புப் படைகளையும் வலுப்படுத்தி வளர்த்து, சேமப்படைகளைக் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது.''[41]

சோஷலிசப் புரட்சியும் சோஷலிச நிர்மாணமும் ஒவ்வொரு துறையிலும் ஈட்டியுள்ள சாதனைகளின் அடிப்படையில், வட வியட்நாமிலுள்ள மக்களின் ஆயுதப்படைகள் துரிதமாக வளர்ச்சியடைந்தன.

ஒரு நவீன, கிரம மக்கள் சேனை உருவாக்கப்பட்டதானது, இக் காலகட்டத்தில் மக்களின் ஆயுதப்படைகள் அடைந்த ஒரு புதிய முன்னேற்றத்தைக் குறிக்கிறது. நமது சேனை, ஒரு சோஷலிச அரசின் புரட்சிச் சேனையாக, மூவகைப் படைகளையும் பல்வேறு வகைப் படைத்துறைகளையும் கொண்ட ஒரு நவீன சேனையாக ஆகியுள்ளது. அதில் தரைப்படை, விமானப்படை, கப்பற்படை ஆகியவை உள்ளன. தரைப்படையில் காலாட்படை, பீரங்கிப்படை, இராணுவப் பொறியியலாளர்கள் படைக் குழுக்கள், சமிக்ஞைப் படைக் குழுக்கள், இரசாயன முறியடிப்புப் படைக் குழுக்கள், போக்குவரத்துப் படைக் குழுக்கள் முதலியன உள்ளன. பல்வேறு படைத்துறைகளை ஒழுங்கமைப்பதற்கான விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன; துருப்புகளின் போரிடும் உணர்வும், கட்டுப்பாட்டுணர்வும் உயர்த்தப்பட்டுள்ளன. இவ்வாறு **கிரம சேனையானது** சக்தி வாய்ந்த சேனைக் குழுக்களாக (**Army Corps**) ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. அது தொடர்ந்து நவீன ஆயுத சாதனங்களைத் தரித்து வருகிறது; அதன் இயங்குதிறன் அதிகரித்து வரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது; வெவ்வேறு படைத்துறைகளுக்கிடையே ஒருங்கிணைப்பு மென்மேலும் சிறந்து விளங்குகிறது. வலுப்படுத்தப்பட்டு, மேலும் செப்பமான ஆயுத சாதனங்கள் வழங்கப்பெற்ற **பிரதேசத் துருப்புகள்** தமது போர்த்திறனை உயர்த்தி வருகின்றன. மக்களின் தேசப்பற்றும் சோஷலிசப் பற்றும் துணைநிற்க, கட்டாய இராணுவ சேவையும், வலுமிக்க சேமப்படைகளும், விரிவான குடிப்படைகளும், தற்காப்புப் படைகளும் துணை புரிய, மக்கள் சேனையானது மனித சக்திக்கான மிக விசாலமான மூலாதாரங்களைக் கொண்டிருக்கிறது; அதனால் தன் படைகளைத் துரிதமாக விரிவுபடுத்திக் கொள்ள முடிகிறது.

கிராமப்புறத்திலும், நகரங்களிலும் புதிய உற்பத்தி உறவுகள் ஏற்பட்டதை அடுத்து, குடிப்படைகளும் தற்காப்புப் படைகளும் கூட துரித வளர்ச்சி பெற்றன. அவை சோஷலிசத்தின் கீழுள்ள **மக்களின் ஆயுதப்படைகளாகும்**; உழைக்கும் மக்களின் மத்தியில் விரிவாக ஒழுங்கமைக்கப் பட்டவையாகும். **குடிப்படைகளும், கெரில்லாப் படைகளும்** கூட்டுப்பண்ணை விவசாயிகளின் ஆயுதமேந்திய அமைப்புகளாகும். **தற்காப்புப் படைகளும், போரிடும் தற்காப்புப் படைகளும்** தொழிற்சாலைகள், அரசு நிறுவனங்கள், சுரங்கங்கள், கட்டுமாணப் பகுதிகள், அரசுப் பண்ணைகள் ஆகியவற்றிலுள்ள தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள், நகர்ப்புறத்து உழைக்கும் மக்கள் ஆகியோரின் ஆயுதப்படைகளாகும். குடிப்படைகளிலும் தற்காப்பு அமைப்புகளிலும் சேமப்படைகளிலும் இருப்பவர்கள் உயர்ந்த அரசியல் உணர்வும் ஒப்பீட்டு நோக்கில் முன்னேறிய கலாச்சார வளர்ச்சியும் கொண்டுள்ளனர். அவர்கள் நன்கு ஒழுங்கமைக்கப்பட்டு, நன்கு பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்; நவீன ஆயுதங்கள் உள்ளிட்ட பல்வேறு வகை ஆயுதங்களை அவர்கள் தரித்துள்ளனர். பொருத்தமான சண்டை முறைகளை அவர்கள் வளர்த்துள்ளனர். இவ்வாறு தத்தம் ஸ்த



லங்களில் சண்டையிடுவதற்கான பெரும் ஆற்றல்கள் அவர்களிடம் உள்ளன; நிரந்தரமான படைகளுக்கு துணைநின்று வலுவூட்டும் ஆற்றல்கள் உள்ளன.

1965ல் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தென் வியட்நாமில் தொடுத்த 'விசேட போர்' முழுமையான தோல்வியைச் சந்திக்கும் நிலையிலிருந்தபோது, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் வட வியட்நாமைத் தாக்கத் தங்கள் விமானப்படையை வெட்கமற்ற முறையில் பயன்படுத்தினர்; தென் வியட்நாமின் மீது படையெடுக்க ஒரு ஆக்கிரமிப்புப் படையை அனுப்பினர். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நாசகாரப் போருக்கு எதிரான நமது வட வியட்நாம் மக்களின் சண்டை இப்படித்தான் ஆரம்பமாயிற்று. இது அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிரான தேசந்தழுவிய எதிர்ப்புப் போராட்டத்தின் பகுதி மட்டுமல்ல; அது எதிரியின் விமானப்படைத் தாக்குதலிலிருந்து சோஷலிசத் தாய்நாட்டைப் பாதுகாப்பதற்கான போருமாகும்.

நம்நாட்டின் வட பகுதிக்கு எதிரான நாசகாரப் போரில், அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் தமது நவீன விமானப்படை, கப்பற்படை ஆகியவற்றின் முக்கியமான பகுதியை ஈடுபடுத்தினர். வட வியட்நாமில் அவர்கள் டன் கணக்கில் குண்டுமாரி பொழிந்தனர்; நமது மக்களுக்கு எதிராக மன்னிக்க முடியாத குற்றங்கள் புரிந்தனர். போரை இடைவிடாது விரிவுபடுத்தி நாட்டின் வெவ்வேறு பகுதிகளையும் பின்னர் முழு நாட்டினதும் இதயமான தலைநகரையும் தாக்கினர். தங்களது பெரும் இராணுவ பலத்தைக் கொண்டு நமது மக்களை அடக்கிவிடலாம் என அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் கற்பனை செய்து கொண்டனர்.

அவர்கள் எண்ணம் முற்றாகப் பொய்த்தது. அந்நிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக வீரமிக்க போராட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்திய மரபினைக் கொண்ட வியட்நாம் மக்கள் எந்த ஒரு படையெடுப்பாளனுக்கும் ஒருபோதும் தலைவணங்கியதில்லை. ''சுதந்திரத்தையும், விடுதலையையும் விட மதிப்புமிக்கது ஏதும் இல்லை'' என்ற குடியரசுத் தலைவர் ஹோ சி மின்னின் அறைகூவலுக்கு செவிமடுத்து, சோஷலிச வட வியட்நாமிலுள்ள நமது சேனையும், மக்களும் உறுதியோடு எழுந்து நின்று நிலத்திலிருந்து விமானத் தாக்குதலை முறியடிக்கும் மக்கள் யுத்தத்தை நடத்தினர்.

அது நமக்கு முற்றிலும் புதிய மக்கள் யுத்த வடிவமாகும். மக்களனைவரும் எதிரியின் விமானப்படைக்கும், கப்பற்படைக்கும் எதிராகப் போரிடுகின்றனர்; மக்களனைவரும் பாதுகாப்பில் பங்கேற்கின்றனர்; தகவல் தொடர்பு, போக்குவரத்து ஆகியவற்றைப் பேணிப் பாதுகாக்கின்றனர்; வேலை செய்துகொண்டும் அதே நேரத்தில் போரிட்டுக் கொண்டும் உள்ளனர். பின்புலத்தைப் பாதுகாத்து போர்முனையில் போர்ப்பணியாற்றுகின்றனர். இது நம் நாட்டில் மக்கள் யுத்தம் பெற்ற புதிய வளர்ச்சியாகும். பிரெஞ்சுக்காரர்களுக்கு எதிராக நாம் நடத்திய மக்கள் யுத்தமானது, புதிதாக நிறுவப்பட்ட மக்கள் ஜனநாயக அரசில், மக்கள் அதிகாரம் அப்போதுதான் உருவாக்கப்பட்டு ஆனால் இன்னும் வலுப்படுத்தப்பட்டிராத நிலைமைகளில், ஏகாதிபத்தியவாதிகளால் நம் நாடு சூழப்பட்டிருந்தபோது, நடத்தப்பட்ட மக்கள் யுத்தமாகும். இப்போது நாம் நடத்தும் மக்கள் யுத்தமோ புதிதாக நிறுவப்பட்ட சோஷலிச அரசின் கீழ் நடத்தப்படுவதாகும். முழுமையான சுதந்திரம் பெற்றுள்ள நமது அரசு பத்தாண்டு சமாதானக் காலக்கட்டத்தில் வலுப்படுத்தப்பட்டு வளர்க்கப்பட்டுள்ள சூழ்நிலையில், சோஷலிச முகாமிலுள்ள சகோதர நாடுகளிலிருந்து முக்கிய உதவிகளைப் பெற்றுவரும் சூழ்நிலையில் நடத்தப்படும் மக்கள் யுத்தமாகும். பிரெஞ்சு ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான போரில்,



நாம் எதிரியின் தரைப்படைகளையே பிரதானமாக எதிர்த்துப் போரிட வேண்டியிருந்தது; நமது மக்களனைவரும் போரில் பங்கேற்றனர். நவீனமான ஆயுதங்கள் தரித்த பிரெஞ்சு ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புச் சேனையைத் தோற்கடித்தோம். இப்போதோ, நமது மக்களனைவரும் பிரதானமாக எதிரியின் விமானப்படையை எதிர்த்தே போரிட வேண்டியுள்ளது; அமெரிக்க ஏகாதிபத்திய ஆயுதப்படைகளின் மிக நவீனமான அங்கங்களில் ஒன்றை எதிர்த்துப் போராட வேண்டியுள்ளது.

மக்கள் யுத்தத்தை ஆழப்படுத்துவதற்காக மக்கள் அனைவரின் படைகளையும் ஒன்றுதிரட்டி நாட்டைப் போர்க்கால நாடாக அறிவிப்பதென்று நம் கட்சி முடிவுசெய்தது. நாம் எதிர்ப்புப் போரின் உடனடித் தேவைகளை நிறைவுசெய்வதற்காக, மக்களின் ஆயுதப்படைகளைத் துரிதமாக விரிவாக்கினோம். பொருளாதாரத்தின் திசை வழியைத் திருப்பி விட்டோம். தேசியத் தொழில்களைக் கைவிட்டு, பிரதேசத் தொழில்களை வளர்த்தோம். மக்கள் நிறைந்த பகுதிகளிலிருந்தும் எதிரி தன் தாக்குதல்களுக்குக் குறிவைத்த பகுதிகளிலிருந்தும் மக்களை வெளியேற்றினோம். போரிடுவதையும், பொருளுற்பத்தி செய்வதையும் ஒருங்கிணைத்தோம். போரில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதே பொருளுற்பத்தியையும் அதிகரித்தோம். என்ன சூழ்நிலை ஏற்பட்டாலும், வட வியட்நாமை சோஷலிசத்தை நோக்கி நாம் தொடர்ந்து வழி நடத்திச் செல்ல வேண்டும் எனக் கட்சி சுட்டிக்காட்டியது. அப்போதுதான் தேசந்தழுவிய புரட்சியில் வட வியட்நாம் தன் பங்கை ஆற்றமுடியும்; அதே சமயம் நாட்டின் நீண்ட கால நிர்மாணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்யமுடியும் எனக் கட்சி சுட்டிக்காட்டியது. மூன்று புரட்சிகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டன:

1) சோஷலிச உற்பத்தி உறவுகள் மென்மேலும் வலுப் படுத்தப்பட்டன.

2) மக்களின் அரசியல், தார்மீக ஒற்றுமை தொடர்ந்து அதிகரிக்கப்பட்டது.

3) சோஷலிசத்தின் பௌதீக, தொழில்நுட்ப அடிப் படை படிப்படியாக பலப்படுத்தப்பட்டது.

எல்லாத்துறைகளிலும் சோஷலிச அரசுக்குள்ள அனு கூலத்தை நமது கட்சியும், மக்களும் நன்கு பயன்படுத்தி, அமெரிக்காவின் நாசகாரப் போருக்கெதிரான மக்கள் யுத் தத்தின் கடமைகள் அனைத்தையும் நிறைவேற்றினர்.

இக்காலத்தில் போரில் ஈடுபட்டுள்ள அனைத்து மக்கள் படைகளின் வளர்ச்சி, இராணுவ அமைப்பின் வளர்ச்சி, மக் களின் ஆயுதப்படைகளும், மக்கள் சேனையும் ஆற்றிய பங் கின் வளர்ச்சி ஆகியன, சோஷலிச அரசின் கீழ் நிலத்தி லிருந்தே விமானத் தாக்குதலை எதிர்த்துப் போரிட்ட மக் கள் யுத்தத்தின் தன்மை காரணமாக ஏற்பட்டவையாகும்; நாடு முழுவதிலுமுள்ள மக்களனைவராலும் தேச விமோச னத்துக்காக, அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராக நடத் தப்பட்ட எதிர்ப்புப் போரின் தன்மைகளின் காரணமாக ஏற்பட்டவையாகும்.

முதலாவதாக, ஒரு குறுகிய காலத்துக்குள், மக்கள் சேனையின் விமான எதிர்ப்புப் - பாதுகாப்புப் படையிலும், விமானப்படையிலும், கிரம சேனையிலும், பிரதேசப் படை களிலுமிருந்த விமான வீழ்த்திப் படையலகுகளிலும் குறிப் பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டது. இப்படைதான் நிலத்தி லிருந்து விமானத் தாக்குதலை எதிர்த்துப் போரிட்ட மக் கள் யுத்தத்தின் முதுகெலும்பு ஆகும். நமது விமான எதிர்ப்



புப் - பாதுகாப்புப் படையிலும், விமானப்படையிலும் பல் வேறு குழல்விட்டங்களைக் கொண்ட விமான வீழ்த்தித் துப் பாக்கிகளும், நவீன ஏவுகணைகளும், ஜெட் விமானங்களும், பலவித நவீனத் தொழில்நட்பச் சாதனங்களும் இருந்தன. இப்படைகளில் இயங்குபடையலகுகளும், நிலைத்த படை யலகுகளும் இருந்தன. இவற்றின் பணி எதிரி விமானங் களைச் சுட்டு வீழ்த்துவதும், எதிரியின் தாக்குதல்களுக்கான பிரதான குறியிலக்குகளைப் பாதுகாப்பதும் ஆகும். நமது விமான எதிர்ப்புப் - பாதுகாப்புப் படையினதும், விமானப் படையினதும் பல்வேறு கிளைகளும் உள்ளிட்ட பலவகை யான போரிடும் குழுக்கள் கிரமசேனையைச் சேர்ந்த காலாட்படை, பிரதேசப் படைகள், பொதுமக்கள் ஆகி யோரின் துணையுடன், முக்கியமான தகவல் தொடர்பு மார்க்கங்களையும், தொழில் மையங்களையும், பெரு நகரங்களை யும் பாதுகாப்பதற்காகப் பெரும் சண்டைகள் பலவற்றில் பங்கேற்றன. இளம்பிராயமான நமது விமான எதிர்ப்புப் - பாதுகாப்புப் படையும், விமானப்படையும் மகத்தான வெற் றிகளை ஈட்டின. அது, நிலத்திலிருந்து விமானத் தாக்குதலை எதிர்த்துப் போரிட்ட மக்கள் யுத்தத்தில் நமது சேனை புரிந்த புதியவகையான கிரம யுத்தமாகும்.

நமது விமான எதிர்ப்புப் - பாதுகாப்புப் படை துரிதமாக முதிர்ச்சியடைந்து வருகையில் நமது இராணுவப் போக்கு வரத்துப் படையும் கூட வேகமாக வளர்ச்சியடைந்து வந் தது. சேனையின் போக்குவரத்துப் படை கீழ்க்காணும் பல் வேறு நவீனப் பிரிவுகளைக் கொண்டிருந்தது: போக்குவரத் துப் பிரிவு, பொறியியல் பிரிவு, விமான எதிர்ப்புப் - பாது காப்புப் பிரிவு, காலாட்படைப் பிரிவு... எதிரி விமானங்க ளின் மூர்க்கத்தனமான தாக்குதல்களுக்குட்பட்ட இராணு வப் போக்குவரத்துப் படை, மக்களின் தகவல் தொடர்பு மற்றும் போக்குவரத்துப் படைகளுடன் சேர்ந்து, எல்லாச் சூழ்நிலைகளிலும் தகவல் தொடர்புகளைப் பேணிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாக்க மிகுந்த தீரத்துடனும், மதியூகத்துடனும் போரிட்டது. பின்புலத்திலிருந்து போர்முனைவரை நாடெங்கனும் தகவல் தொடர்பு மார்க்கங்களில் தம் கடமைகளை நிறைவேற்றின.

**கிரம சேனைப் படைக்குழுக்கள்,** பல தொழில்நுட்பக் கிளைகளைக் கொண்டுள்ளன. அவை போரிடும் ஆற்றல் மிகுந்ததும், எதிரி தென்படும் இடமெங்கனும் அவனுக்கு எதிராகப் போரிட்டு அவனது இராணுவ நடவடிக்கைகளைத் தகர்த்தெறியத் தயாராக உள்ளதுமான ஒரு நவீனமயமாக்கப்பட்ட படையைக் கட்டுவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் குறிக்கின்றன. **பிரதேசப் படைகள்** துரிதமான விரிவாக்கத்தைக் கண்டுள்ளன; தமது அமைப்பையும் ஆயுத சாதனங்களையும் போரிடும் ஆற்றல்களையும் மேம்படுத்தியுள்ளன. பல எதிரி விமானங்களைச் சுட்டு வீழ்த்தியுள்ள விமான வீழ்த்திப் படையலகுகளை பல மாகாணங்கள் சொந்தமாக வைத்துள்ளன. எதிரிப் போர்க் கப்பல்களை மூழ்கடித்துள்ள பீரங்கிகளும் (இவை தரையில் இயங்குபவை), தகவல் தொடர்பு, போக்குவரத்து மார்க்கங்களைப் பாதுகாப்பதில் பெரும் பங்களிப்புச் செய்துள்ள பொறியியல் படையலகுகளும் இந்த மாநிலங்களுக்குச் சொந்தமாக உள்ளன.

மக்களின் தேசபக்தி, அவர்களது சோஷலிசப் பற்று, புதிதாக நிறுவப்பட்ட இராணுவச் சேவை முறை ஆகியவற்றைக் கொண்டு நாம் **போர்க்கால ஒன்றுதிரட்டலை** திருப்திகரமாகச் செய்துள்ளோம்; சமாதான காலத்தில் உருவாக்கப்பட்ட சேமப்படைகளின் அடிப்படையில் மக்களின் ஆயுதப்படைகளைத் துரிதமாக விரிவுபடுத்தினோம். தாய்நாட்டின் புனிதமான அறைகூவலுக்குச் செவிமடுத்து, சோஷலிச வட வியட்நாமைப் பாதுகாத்து தேசத்தின் புனிதமான எதிர்ப்புப் போரில் தம் கடமையை நிறைவேற்றுவதற்காக, ஏராளமான இளைஞர்கள் சேனைப் படையலகுகளிலோ அல்லது இளைஞரின் அதிர்ச்சிக் குழுக்களிலோ சேர்ந்து போர் முனைகளுக்குச் சென்றனர். இந்த இளைஞர்கள் கிராமங்களிலிருந்தும், நகரங்களிலிருந்தும், கூட்டுப்பண்ணைகளிலிருந்தும், அரசாங்க அலுவலகங்களிலிருந்தும், பள்ளிக்கூடங்களிலிருந்தும் இன்னபிற இடங்களிலிருந்தும் வந்தவர்களாவர்; அவர்கள் தீரத்துடன் போரிட்டுக் கொண்டிருக்கின்றனர்; ஒவ்வொரு போர்முனையிலும் தியாக உணர்வுடன் செயல்பட்டு, ஒளிமிக்க இராணுவ சாதனைகள் புரிந்து கொண்டிருக்கின்றனர்.

சமாதான காலத்தில் ஒழுங்கமைக்கப்பட்டு நன்கு ஆயத்தப்படுத்தப்பட்ட **மக்கள் ஆயுதப்படைகள்** போர்க் காலத்தில் அளவுரீதியிலும், பண்புரீதியிலும் துரிதவளர்ச்சி பெற்றன. அவர்களது ஆயுதசாதனங்கள் குறிப்பிடத்தக்க முறையில் அதிகரித்தன; செப்பமடைந்தன. பல கம்யூன்களில் துப்பாக்கி சுடும் அணிகளும் குழுக்களும் குடிப்படைகளால் ஒழுங்கமைக்கப்பட்டன; இவை ரைபிள்கள், இயந்திரத் துப்பாக்கிகள், சிறு குழல்விட்டமுடைய விமான வீழ்த்தித் துப்பாக்கிகள், தரைபீரங்கிகள், போன்றவற்றைக் கொண்டிருந்தன. பொறியியல்பணி, வேவுப்பணி, முதலுதவிப்பணி போன்றவற்றைச் செய்ய சிறப்புப்பயிற்சி பெற்றிருந்த அணிகளும் குழுக்களும் இருந்தன. பல இடங்களில் ஒவ்வொன்றும் ஒரு கம்யூன் எல்லைக்குள் செயல்பட்ட இயங்குபடைகளும் இருந்தன. பல தொழிற்சாலைகளிலும், நிறுவனங்களிலும் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட வலுவான தற்காப்புப் படைகள் இருந்தன. அவை உற்பத்தியில் ஈடுபட்டுக்கொண்டே, ஏராளமான நவீன ஆயுதங்களைத் திறமையாகப் பயன்படுத்தி, போரிடவும் செய்தன.

போரில், **குடிப்படைகளும் தற்காப்புப் படைகளும்** ஒரு பெரும் பாத்திரம் வகித்தன. 'கலப்பை ஒரு கையிலும் ரைபிள் ஒரு கையிலும்', 'சுத்தியல் ஒரு கையிலும் துப்பாக்கி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருகையிலும்' என்ற இயக்கங்களில், இளைஞரும், முதியோரும், ஆடவரும், பெண்டிரும் கிராமங்களிலும், நகரங்களிலும், சமவெளிப் பகுதியிலும், மலையகப் பகுதிகளிலும் எதிரி விமானங்களைச் சுட்டுவீழ்த்துவதில் செயலூக்கத்துடன் பங்குபெற்றனர். அவர்கள் தாழ்வாகப் பறக்கும் விமானங்களைச் சுட்டு வீழ்த்தும் துப்பாக்கிகளை ஆங்காங்கே கிராமப்புறம் எங்கணும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ள வலைப்பின்னல் போல் அமைத்து, குடிமக்களையும், உற்பத்தியையும் பாதுகாத்தனர்; எல்லா உயரங்களிலும், எல்லா திசைகளிலும் பறக்கின்ற எதிரி விமானங்களைச் சுட்டு வீழ்த்தும் துப்பாக்கிகள் அடங்கிய பின்னலமைப்பை உருவாக்குவதில் விமான எதிர்ப்புப் - பாதுகாப்புப் படையுடனும் விமானப் படையுடனும் நெருக்கமாக ஒத்துழைத்தனர். இத்தகைய அமைப்பு இடம்பெயர்ந்து சென்று செயல்படக்கூடியதும் வெவ்வேறு சூழ்நிலைகளிலும் போரிடக்கூடியதும் ஆகும். விரிந்த நிலப்பகுதிகளைத் தழுவுகின்ற இந்த அமைப்பு வெவ்வேறு உயரங்களில் பறக்கின்ற அமெரிக்க விமானங்களை எல்லா இடங்களிலும் எந்தச்சூழ்நிலையிலும் சுட்டு வீழ்த்துகின்ற குறிக்கோளிலேயே கவனம் குவிக்கின்றன. காலாட்படை ஆயுதங்களைப் பயன்படுத்தி, குடிப்படைகளும், கெரில்லாக்களும் ஏராளமான நவீன அமெரிக்க ஜெட்விமானங்களைச் சுட்டுவீழ்த்தி, விமானிகள் பலரைச் சிறைபிடித்துள்ளனர். தாழ்வாகப் பறக்கும் எதிரிவிமானங்களைச் சுட்டுவீழ்த்துவது, எதிரிவிமானப்படையை நிலத்திலிருந்தே எதிர்த்துப்போரிடும் மக்கள்யுத்தத்தில் மேற்கொள்ளப்படும் புதியவகை கெரில்லாப் போராகும். குடிப்படையினரும், கெரில்லாக்களும் பல எதிரி அதிரடிப் படைக் குழுக்களைச் சிறைப்பிடித்தனர்; அல்லது அழித்தொழித்தனர்; ஆயிரக்கணக்கான டன்கள் எடையுள்ள அதிநவீனமான அமெரிக்கக் குண்டுகளிலிருந்தும், கண்ணி வெடிகளிலிருந்தும் திரிகளை அகற்றினர். சோஷலிச ஆட்சிச் சூழலில் மக்களின் ஆயுதப்படைகள் தம் போரிடும் ஆற்றலை மிகவும் வளர்த்துள்ளன.



இயந்திரத் துப்பாக்கிகளையும், ரைபிள்களையும் பயன்படுத்தி வட வியட்நாமில் நவீன அமெரிக்க ஜெட் விமானங்களை குடிப்படைகளும், கெரில்லாக்களும் வீழ்த்தியிருக்கிறார்கள். இவ்வுண்மையே, ஒரு சிறிய, வளர்ச்சி குறைந்த நாடு, சிறப்பான ஆயுத சாதனங்கள் பெற்றிராத சேனையைக் கொண்ட நாடு, நவீன ஆயுதங்களைத் தரித்த ஒரு பெரும் சேனையைக் கொண்ட ஒரு பெரும் ஏகாதிபத்திய சக்தியின் ஆக்கிரமிப்பை முறியடித்தது எவ்வாறு என்பதையும் விளக்குகிறது.

குடிப்படைகளும், தற்காப்புப் படைகளும் போரில் ஈடுபட்டது மட்டுமல்லாது, மக்கள் யுத்தத்தின் பிற போர்முனைகளில் வேறு பல கடமைகளையும் மேற்கொண்டனர். அவை, தகவல் தொடர்புகளையும், போக்குவரத்தையும் பேணிப் பாதுகாத்தல்; விமான எதிர்ப்பு - பாதுகாப்புப் படைகளை ஒழுங்கமைத்தல்; மக்களின் ஆயுதக் காவல் படைக்குத் துணைநின்று சட்டம் ஒழுங்கைப் பராமரித்தல்; போரிடும் கம்யூன்களையும், கிராமங்களையும் உருவாக்குதல்; ஸ்தல பொருளுற்பத்தி வேலையையும், குடிமக்களின் உயிர்களையும், உடமைகளையும் பாதுகாத்தல்; பொருளுற்பத்தியில் முக்கிய பங்கு வகித்தல் போன்றனவாகும். இவ்வாறு எதிரி தொடுத்த நாசகாரப் போரின் திட்டங்கள் அனைத்தையும் தோற்கடிப்பதில் அவர்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கினர்.

சமாதான காலத்தில் உருவாக்கப்பட்ட மக்களின் ஆயுதக் காவல் படையானது போரின் போது துரிதமாக வளர்ச்சிபெற்று ஒரு முக்கியப் பங்காற்றியது. அதிகரித்த மதியூகத்துடன் அது கீழ்க்காணும் கடமைகளை நிறைவேற்

றியது: தற்காலிக இராணுவ எல்லைக் கோட்டினையும், எல்லைப் பகுதியையும், தீவுகளையும் பாதுகாத்தல்; தீரத்துடன் போரிடுதல்; தியாக மனப்பாங்குடன் பணிபுரிதல்; ஒழுங்கையும் பாதுகாப்பையும் பராமரித்தல்; எதிரி விமானங்களை வீழ்த்தி விமானிகளைச் சிறைப்பிடித்தல்; கொள்ளைக்கூட்டங்களையும், அதிரடிப்படைக் குழுக்களையும் அழித்தொழித்தல் அல்லது சிறைப்பிடித்தல்...

நமது மக்கள் சண்டை செய்வதிலும், போர்முனையில் சேவை புரிவதிலும் உற்சாகத்துடன் பங்கேற்றனர். ஆலைகள் அமைப்பதிலும், மண்ணரண்கள் கட்டுவதிலும், பொருட்களை எடுத்துச் செல்வதிலும், முதலுதவி செய்வதிலும் துருப்புகளுக்குத் தம்மாலியன்ற அனைத்து உதவிகளையும் செய்வதிலும் இலட்சக்கணக்கான வேலைநாட்களைச் செலவிட்டுள்ளனர். உற்பத்தியைப் பெருக்கவும், பொருளாதாரத்தையும் கலாச்சாரம், கல்வி, மருத்துவம் ஆகியவற்றையும் மேம்படுத்தவும் போர் உச்சநிலையிலிருந்த சமயத்திலும் சரி, இயல்பான வாழ்க்கை நிலைமைகளிலும் சரி, அவர்கள் கடுமையாக உழைத்தனர். சண்டையிலும் போர் முனைச் சேவை புரிவதிலும், தகவல் தொடர்புகள், போக்குவரத்தைப் பராமரிப்பதிலும், மக்களின் எதிரிவிமான எதிர்ப்பு-பாதுகாப்பை ஒழுங்கமைப்பதிலும், உற்பத்திப் பணியிலும், ஒரு புதுவாழ்வை உருவாக்குவதிலும் நமது சேனையும், மக்களும் புரட்சிகர வீரவுணர்வை வெளிப்படுத்தியுள்ளனர்.

•

அமெரிக்க நாசகாரப் போர், வட வியடநாமின் சோஷலிச அரசுக்கும், சமாதான காலத்தில் கட்டப்பட்ட இராணுவ அமைப்புக்கும் ஒரு கடும் சோதனையாக விளங்கிற்று. நமது போர் முயற்சிகளை நமது சகோதர நாட்டினரின் போர் முயற்சிகளுடனும், தென் வியட்நாம் விடுதலைச் சேனையின் போர்முயற்சிகளுடனும் ஒருங்கிணைத்து சோஷலிச முகாமிலுள்ள சகோதர நாடுகளிலிருந்து முக்கிய உதவிகளைப் பெற்று, வட வியட்நாமிலுள்ள நமது மக்களும், சேனையும் மகத்தான வெற்றிகளை ஈட்டினர். அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் தமது கொடிய நாசகாரப் போரில் வெட்கக்கேடான தோல்வியைத் தழுவினர். அவர்களது தீய திட்டங்கள் தகர்க்கப்பட்டன. 40 வகைகளுக்கும் கூடுதலான வெவ்வேறு வகையான 3000 நவீன விமானங்கள் வட வியட்நாமில் சுட்டுவீழ்த்தப்பட்டன. இவற்றில் பல முதன் முறையாகப் பயன்படுத்தப்பட்ட, அதிநவீன விமானங்களாகும். முதல்தரமான அமெரிக்க விமானப்படை விமானிகள் ஏராளமான பேர் கொல்லப்பட்டனர் அல்லது சிறைபிடிக்கப்பட்டனர். சோஷலிச வட வியட்நாம் ஒரு உருக்குச் சுவர் போல உறுதியாக நின்றது. அதன் பொருளாதாரமும், பாதுகாப்பும் மேலும் வலுப்படுத்தப்பட்டன. நாடு முழுவதற்குமான புரட்சிக்கான வலுமிக்க தளப்பகுதியாக இருந்த வட வியட்நாம், மகத்தான போர்முனைக்குச் சேவை செய்யும் தன் புகழ்மிக்க கடமையை நிறைவேற்றியது; சேனையினதும் நாடு முழுவதிலுமிருந்த மக்களினதும் பங்கேற்புடன் வட வியட்நாம், எதிர்ப்புப் போருக்கு மென்மேலும் மகத்தான வெற்றிகளை ஈட்டித் தந்தது.

நாசகாரப் போருக்கு எதிராக சோஷலிச வியட்நாமில் நமது மக்கள் யுத்தம் பெற்ற வெற்றி, நாடு முழுவதிலுமுள்ள நமது மக்களின் வெற்றியாகும். அது நமது மக்களுக்கு மட்டுமல்லாமல் உலகத்துக்குமே முக்கியத்துவமுடையதாகும். அது நமது கட்சியின் அரசியல், இராணுவ மார்க்கத்துக்கு கிடைத்த வெற்றி; தேசிய விமோசனத்துக்கும் சோஷலிச நிர்மாணத்துக்குமாக அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடுதல் என்ற கட்சியின் மார்க்கத்துக்குக் கிடைத்த வெற்றி; அதன் சரியான, சுதந்திரமான, ஆக்கபூர்வமான வெளிநாட்டுக் கொள்கைக்குக் கிடைத்த வெற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்ட் எழுச்சியையும், பிரெஞ்சுக்காரர்களுக்கு எதிரான எதிர்ப்புப் போரையும் போலல்லாது, சோஷலிச அமைப்பை அடித்தளமாகக் கொண்டு நமது கட்சி **எதிரி விமானப்படையை நிலத்திலிருந்தே எதிர்த்துப் போரிடும் மக்கள் யுத்தத்தை வெற்றிக்கு இட்டுச் சென்றது இதுவே முதல் தடவையாகும். மக்களனைவரின் போர்க்குணமிக்க ஒற்றுமை என்ற பலத்தைச் சார்ந்து குடிப்படைகளுடனும், தற்காப்புப் படைகளுடனும் ஒருங்கிணைந்து செயல்பட்ட கிரமப்படைகளும், பிரதேசப்படைகளும் சேர்ந்த நவீன சேனையை முதுகெலும்பாகக் கொண்டு, இந்தப் பரந்துவிரிந்த வலுமிக்க மக்களின் ஆயுதப்படைகள், எல்லாவிதமான நவீன மற்றும் ஓரளவு நவீன ஆயுதங்களையும் பயன்படுத்தி, அமெரிக்க விமானப்படையின் ஆக்கிரமிப்புப் போரைத் தோற்கடித்துள்ளன.** புதிய சூழ்நிலைமைகளில், ஒரு பெரிய படையை ஒரு சிறிய படை தாக்கும் கலையில், ஒரு சிலரைக் கொண்டு மிகப் பலரை எதிர்க்கும் கலையில், நவீனங் குறைந்த ஆயுதங்களைக் கொண்டு அதிநவீனமான ஆயுதங்களைத் தோற்கடிக்கும் கலையில் நமது மக்களும், சேனையும் ஒரு புதிய வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளனர்.

தாய்நாட்டைக் காப்பதற்கான போரில் செய்யப்பட வேண்டிய முதல் கடமை **நாடு முழுவதையும் சமாதானகால நிலைமைகளிலிருந்து, போர்க்கால நிலைமைகளுக்கு மாற்றுவதாகும்.** பிறமுக்கியமான கடமைகள் வருமாறு:- மக்களின் ஆயுதப்படைகளை விரிவுபடுத்துவதற்காக மக்களனைவரையும் திரட்டுதல்; **பொருளாதாரத்தை மாற்றியமைத்தல்,** அதாவது போரின் தேவைகளையும், போர்க்காலத்தில் மக்களின் வாழ்க்கைத் தேவைகளையும் நிறைவு செய்வதற்காக போர்க்காலப் பொருளாதாரத்தை ஒழுங்கமைத்தல் ஆகியனவாகும். நாட்டைப் போர்க்கால நிலைமைகளுக்குக் கொண்டு செல்லுதல் என்பது கீழ்க்காணுபவற்றைச் சார்ந்துள்ளது:



1) பொருளாதாரத்துக்கும், தேசியப் பாதுகாப்புக்கு மிடையிலான உறவுகள் என்ற பிரச்சினைக்கான சரியான தீர்வு;

2) தேச அளவிலும், பிரதேச அளவிலும் (சமாதான காலத்திலும் கூட) செய்யப்பட்டுள்ள முழுமையான ஏற்பாடுகள்...

பின்புலத்தில் பொருளாதார, அரசியல், பௌதீக, தார்மீக அம்சங்களை வலுப்படுத்துவது போர்முனைக்குத் தேவையான ஆட்களையும், பொருட்களையும் வழங்குவதற்கான நிச்சயமான உத்திரவாதமாகும். வலுவான பின்புலம், எந்தப் போரிலும் குறிப்பாக தேசபக்தப் போரிலும் வெற்றியைத் தருகின்ற முக்கியக் காரணிகளில் ஒன்ருகும்.

இராணுவ அமைப்பு என்ற அம்சத்தைப் பொறுத்தவரை, மக்களின் ஆயுதப்படைகள் ஒரு உயர்ந்த மட்டத்தை அடைந்தன. காரணம், பொது எழுச்சியிலும், விடுதலைப் போரிலும் உள்ள ஆயுதப்படைகளைப் போலல்லாது, இப்போதைய மக்கள் ஆயுதப்படைகள் ஒரு சுதந்திரமான, இறையாண்மை கொண்ட அரசினதும், படிப்படியாக உருவாக்கப்பட்டு வலுப்படுத்தப்பட்ட சோஷலிச ஆட்சியினதும் சாதகமான சூழ்நிலைமைகளைப் பயன்படுத்தி, சமாதான காலத்தில் ஒழுங்கமைத்துக் கட்டப்பட்டு ஆயத்த நிலைக்குக் கொண்டு வரப்பட்டவையாகும்.

எழுச்சியிலும், விடுதலைப்போரிலும் நமது மக்கள் வெறுங்கைகளுடனேயே போரிட்டனர். அக்காரணத்தாலேதான் நாம் ஆரம்பத்தில் மக்களுக்கு அறிவூட்டி ஒன்றுதிரட்ட வேண்டியிருந்தது; அரசியல் படையொன்றை ஒழுங்கமைக்க வேண்டியிருந்தது; புரட்சிகர ஆயுதப் படைகளைக் கட்ட வேண்டியிருந்தது. அதாவது முதலில் மக்களின் ஆயுதப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைகளைக் கட்டவேண்டியிருந்தது; இவற்றிலிருந்து, படிப் படியாக புரட்சிச்சேனை உருவாக்கப்பட்டது. இவ்வாறு ஒரு அரசியல் போராட்டம், பொதுவாக ஆயுதப்போராட்ட மாக அல்லது இரண்டும் இணைந்த போராட்டமாக வளர்ச் சியடைந்தது. ஒரு கெரில்லாப் போர், பொதுவாக கிரமப் போராக அல்லது இரண்டும் இணைந்த போராக வளர்ச்சி யடைகிறது. எழுச்சியிலும், விடுதலைப் போரிலும் ஆயுதப் போராட்டம் என்பது எப்போதும் அரசியல் போராட்டத் துடனும், எழுச்சிகள் சண்டைகளுடனும், எதிரிப்படை களை நிர்மூலமாக்குதல் என்பது மக்களுக்காக அதிகாரத் தைக் கைப்பற்றுதலுடனும் நெருக்கமாக இணைக்கப் பட்டுள்ளன.

எதிரியின் விமானப் படைக்கு எதிராக சோஷலிச வட வியட்நாமைப் பாதுகாப்பதற்கான போரில், நம்மிடம் துவக்கத்திலிருந்தே ஓரளவு வலிமைகொண்ட நவீன கிரம சேனையிருந்தது. இதில் சமாதான காலத்தில் கட்டப்பட்ட தும் போர் வெடித்த பின்னர் விரிவுபடுத்தப்பட்டதுமான கிரமப்படைகள், பிரதேசப்படைகள் இரண்டும் இருந்தன. நம்மிடம் எல்லா நகரங்களிலும், கிராமங்களிலுமிருந்த பல இலட்சக்கணக்கானவர்களைக் கொண்ட குடிப்படைகளும், தற்காப்புப் படையலகுகளும் இருந்தன. இவையும் கூட சமாதான காலத்தில் ஒழுங்கமைப்புக்குள்ளாக்கப்பட்டு, ஆயுதசாதனங்கள் வழங்கப்பட்டு, பயிற்றுவிக்கப்பட்டவை யாகும். புரட்சிகர ஆயுதப்படைகளைக் கட்டுதல் என்பது நமது மக்களின் தேசப்பற்று, சோஷலிசப்பற்று ஆகியவற் றின் அடிப்படையிலும் மக்களதிகாரத்தின் ஆணைகளால் உருவாக்கப்பட்ட திட்டவட்டமான கொள்கைகள், விதி முறைகள் ஆகியவற்றின் அடிப்படையிலுமே நிகழ்ந்தது.

நம்மிடம் ஒரு நவீன கிரம மக்கள் சேனையும், விரி வான மக்கள் ஆயுதப்படைகளும் இருந்ததால்தான், ஆரம்



பத்திலிருந்தே, கிரமப்போரும், கெரில்லாப்போரும் ஏக காலத்திலும் நன்கு ஒருங்கிணைந்த வகையிலும் மேற்கொள்ளப் பட்டன. நாசகாரப்போருக்கு எதிரான மக்கள்யுத்தம், கிரமப்போரும் மக்கள்சேனையும் வகிக்கிற பாத்திரத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டியுள்ளது. பிரதானப் படை யின் எதிரி விமான-எதிர்ப்பும் படையலகுகளும், விமானப் படையலகுகளும் ஏராளமான முக்கிய சண்டைகளை செய் துள்ளன, ஏராளமான எதிரி விமானங்களை அழித் துள்ளன; அடுத்தடுத்து விஸ்தரிக்கப்பட்ட தாக்குதல்களை முறியடித்துள்ளன. புதிய போரிடும் ஆற்றல்களுடன் கூடிய விரிவுபடுத்தப்பட்ட பிரதேசப் படைகள், பிரதேசங்களில் மக்கள்யுத்தத்துக்கான மையப்படைகளாகும். குடிப்படை களும் தற்காப்புப்படைகளும் கூட சண்டையில் ஒரு முக்கிய பாத்திரம் வகித்தன; தகவல் தொடர்பிலும், போக்குவரத் திலும், எதிரி விமானத் தாக்குதலிலிருந்து பாதுகாப்பதிலும் மக்கள் எடுத்த முயற்சிகளிலும், போர்முனைச் சேவையிலும் முக்கியப் பங்காற்றின.

ஒரு எதிரிச் சேனைக்கு எதிராக தரையில் நடத்தப் படும் சண்டையில், மக்கள் சேனையின் முப்படைகளும், எல்லாத் துறைகளும் மக்களின் ஆயுதப்படைகளுடன் இணைந்தும் தங்களது சக்தியனைத்தையும் கொண்டு ஒருங் கிணைந்தும் எதிரியைத் தோற்கடித்து தாய்நாட்டைக் காக்கப் போரிடும் என்பது நிச்சயம்.

எனவே தாய்நாட்டைக் காப்பதற்கான போரில், மக் களனைவரதும், முழு நாட்டினதும் ஆற்றலைப் பயன்படுத்திக் கொள்ளவும், கூடுமானவரை அதிகபட்சமான ஒருங் கிணைந்த படைகளைக் கூட்டவும் எழுச்சியிலும் விடுதலைப் போரிலும்பெற்ற அனுபவத்தைப் பிரயோகிக்கக் கூடியவர்க ளாகவே நாம் உள்ளோம். ஏனெனில் விடுதலைப் போரைப் போலவே நமது நாட்டில் தேசப் பாதுகாப்புக்கான போர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு களத்திலும் மக்களனைவரும் சேர்ந்து நடத்தும் ஒரு மக்கள்யுத்தமாகும். மற்றோர் புறமோ விடுதலைப் போரின் போது நம்மிடம் ஒரு புரட்சித்தளம் இருந்தது. தொடர்ந்து விரிவடைந்த சுதந்திர வலயமாக வளர்ச்சி பெற்றுவந்த விடுதலைப் பிரதேசம் நம்மிடம் இருந்தது; கூடவே தாய்நாட்டைப் பாதுகாப்பதற்கான போரின் தன்மைகளும் உருவாகி வளர்ந்து வந்தன.

சோஷலிச வட வியட்நாமில் நமது சேனையும் மக்களும் பெற்ற மகத்தான வெற்றி கீழ்காணும் விஷயத்தை நிரூபிக்கிறது: **குறைவளர்ச்சிப் பொருளாதாரத்தையும் குறைந்த அளவே நவீன ஆயுத சாதனங்களும், தொழில்நுட்பமும் பெற்றிருக்கும் ஒரு சேனையையும் கொண்டுள்ள ஒரு சிறிய நாட்டினால், அமெரிக்க ஏகாதிபத்தியம் தன் நவீன விமானப்படை கொண்டு நடத்தும் நாசகாரப் போரைத் தோற்கடிக்க ஒரு மக்கள் யுத்தத்தை நடத்த முடியும். அதற்குக் காரணம் நாட்டின் சரியான புரட்சிகர மார்க்கமும், தாய் நாட்டின் சுதந்திரத்துக்கும், விடுதலைக்குமாகப் போராட அது பூண்டுள்ள உறுதியும், மக்கள் சேனையையும், மக்களின் ஆயுதப்படைகளையும் அடிப்படையாகக் கொண்ட மக்கள் சக்தியின் துணையும், சர்வதேச அனுதாபமும் ஆதரவும் ஆகும்.**

அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிரான நமது மக்களின் தேசந்தழுவிய எதிர்ப்பு, தென் வியட்நாமில் தேசிய விடுதலைப் போர் வடிவத்தையும், வட வியட்நாமில் சோஷலிச ஆட்சியைப் பாதுகாக்கும் போர் என்ற வடிவத்தையும் எடுத்தது. இந்த எதிர்ப்புப் போரின் உண்மை நிலைகளும் அதில் பெற்ற மிக வளமான அனுபவமும், மக்களின் ஆயுதப்படைகளைக் கட்டி அனைத்து மக்களும் பங்கேற்கிற தேசப் பாதுகாப்பை வலுப்படுத்துதல் என்ற பிரச்சினைக்குச் சரியான தீர்வு காண நமக்கு உதவுகின்றன. வட வியட்நாமைப் பாதுகாத்து எதிர்ப்புப் போரை வெற்றிக்கு இட்



டுச் செல்வது குறுகியகாலத் திட்டம்; வியட்நாமியத் தாய் நாட்டின் சுதந்திரத்துக்கு ஒரு வலுவான பாதுகாப்பு வழங்குவது நீண்டகாலத் திட்டம்.

தென் வியட்நாமில் நம் மக்கள் நடத்தும் **புரட்சிப் போர்** பத்தாண்டுகளுக்கு முன்பு துவக்கப்பட்டதாகும். அது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் புதுக்காலனிய ஆக்கிரமிப்புப் போருக்கு எதிரான ஒரு **விடுதலைப் போராகும்.** நாடு முழுவதிலும் மக்களின் தேசிய ஜனநாயகப் புரட்சிக் கடமைகளை நிறைவேற்றி, சோஷலிச வட வியட்நாமின் பாதுகாப்புக்குத் துணைநிற்பதன் மூலம், சமாதானபூர்வமாக நாட்டை ஒன்றிணைப்பதற்காக நடத்தப்பட்ட போராகும்.

தென் வியட்நாமில் புதிய எதிரியான அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராக, புதியவகை ஆக்கிரமிப்புப் போருக்கு எதிராக, புதுக்காலனிய ஆக்கிரமிப்புப் போருக்கு எதிராக நமது சகோதரர்களாலும், போராளிகளாலும் போர் நடத்தப்பட்டது. அது புதிய நிலைமைகளில் நடத்தப்பட்ட போராகும். நமது மக்கள் அப்போதுதான் நாடு முழுவதிலும் ஆகஸ்ட் எழுச்சியை வெற்றிகரமாக நிறைவேற்றியிருந்தனர்; பிரெஞ்சுக்காரர்களுக்கு எதிரான எதிர்ப்புப் போராட்டத்தில் வெற்றிபெற்று பாதிநாட்டை விடுதலை செய்திருந்தனர்; வட வியட்நாம் ஒரு சோஷலிசப் புரட்சியை நடத்தி சோஷலிசத்தை நிர்மாணித்துக் கொண்டிருந்தது; அது நாடு முழுவதற்குமான வலுமிக்க தளப்பகுதியாகவும் சோஷலிச முகாமின் ஒரு உறுப்பினராகவும் ஆகிக் கொண்டிருந்தது. நமது புரட்சி தொடர்ந்து சகோதர சோஷலிச நாடுகளிலிருந்து முக்கியமான உதவிகளைப் பெற்றுவந்து கொண்டிருந்தது. சர்வதேச நிலைமை சாதகமானதாயிருந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. ஏனெனில் எதிர்ப்புரட்சிச் சக்திகளைவிட புரட்சிச் சக்திகள் வலிமைமிக்கவையாக இருந்தன. அவை அமெரிக்க ஏகாதிபத்தியத்தைத் தலைமையாகக் கொண்ட ஏகாதிபத்தியத்துக்கு எதிராகத் தொடர்ச்சியான தாக்குதலைத் தொடுத்துக் கொண்டிருந்தன.

இக் காரணங்களால் தென் வியட்நாமிலும் புரட்சிப் போர் துரிதமாக முன்னேறியது; அதன் வலிமை பெருகிற்று. மேலே கூறப்பட்ட வெவ்வேறு காலகட்டங்களில் நடத்தப்பட்ட தென் வியட்நாம் புரட்சிப்போர் நிலைமைகளில் **தென் வியட்நாம் மக்கள் விடுதலை ஆயுதப்படைகளில் வளர்ச்சி** ஏற்பட்டது. அதாவது நாடு முழுவதிலும் ஏககால எழுச்சி, 'விசேடப் போருக்கு' எதிரான யுத்தம், 'வரம்பு செய்யப்பட்ட போருக்கு' எதிரான யுத்தம், 'வியட்நாமிய மயமாக்கப்பட்ட போருக்கு' எதிரான மக்கள் யுத்தம் ஆகியவற்றில் இவ் வளர்ச்சி ஏற்பட்டது.

1959 - 60ஆம் ஆண்டுகளில் தென் வியட்நாமிலுள்ள நமது மக்கள் ஆயுதந்தாங்கி கிராமப்புறத்தின் பல இடங்களில் ஏககாலத்தில் எழுச்சியை நடத்தினர். இந்த எழுச்சிகளை நடத்திய சக்தி, **மக்களின் அரசியல் படையும்** அதற்குத் துணை நின்ற சிறு **ஆயுதத் தற்காப்புப் படையலகுகளுமாகும்.** இந்த அரசியல் படை 1945ஆம் ஆண்டுப் பொது எழுச்சிக்கு முன் மிகுந்த முயற்சியெடுத்துக் கட்டப்பட்டது. அது ஆகஸ்டுப் புரட்சியின் போதும், பிரெஞ்சுக் காரர்களுக்கு எதிரான எதிர்ப்புப் போராட்டத்தின் போதும் துரித வளர்ச்சியடைந்தது. நிகோ தின் தியம் ஆட்சிக்கு எதிராக நடத்தப்பட்ட கடுமையான போராட்டங்களின் முதலாண்டுகளில் இப்படை மேலும் வலுப்பட்டது. உயர்ந்த உளஉரத்தையும், உயரிய போராட்ட உணர்வையும், செழுமையான போராட்ட அனுபவமும் கொண்டிருந்தது. ஆழ



மான முரண்பாடுகளைக் கொண்டிருந்த பொம்மை அரசாங்கத்தின் பலவீனங்கள் வெளிப்படையாகத் தெரியவந்த போது, இச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு பல்வேறு பிரதேசங்களிலிருந்த மக்கள் தீரத்துடன் எழுந்து நின்று ஸ்தல எழுச்சிகளை நடத்தினர். அரசியல் படைகள் ஆயுதப்படைகளுடன் ஒருங்கிணைந்து இவ்வெழுச்சிகளை நடத்தின. இதில் **அரசியல் படைகள் பிரதான பாத்திரம் வகித்தன.** மத்திய அரசாங்கம் இன்னும் பல்லாயிரக்கணக்கான துருப்புகளை வைத்துக் கொண்டு ஈவிரக்கமற்ற பாசிஸ ஒடுக்குமுறை அமைப்பைப் பயன்படுத்திக் கொண்டிருந்த போதிலும் சக்திமிக்க ஏககால எழுச்சி இயக்கமானது பல பிரதேசங்களில் ஸ்தல அரசாங்கங்களைத் தூக்கியெறிந்தது. புதுக்காலனிய முறைகளைக் கொண்டு ஆதிக்கம் செலுத்தும் கொள்கை பரிதாபகரமாகத் தோற்றது.

தென் வியட்நாமை ஆக்கிரமிப்பதற்கான 'விசேடப் போரை' அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தொடுத்த போது, நமது மக்களின் ஏககால எழுச்சிகள் அங்கு ஒரு **விடுதலைப் போராக** வளர்ச்சியடைந்தன. நம் மக்கள் தென் வியட்நாமியப் புரட்சியினதும், புரட்சிப் போரினதும் வளர்ச்சியைப் பற்றிய விதிகளை முழுமையாகப் புரிந்துகொண்டனர். அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் புதுக்காலனிய ஆக்கிரமிப்புப் போரைக் கவனமாக ஆய்வு செய்தனர். தேசிய விடுதலை முன்னணியின் தலைமையின் கீழ், ஏககால எழுச்சிகளுடன் கூடவே தாம் துவங்கியிருந்த வலிந்த தாக்குதலைத் துரிதப்படுத்தினர். அவர்கள் **ஒருங்கிணைந்த அரசியல், ஆயுதப்படைகளின் எண்ணிக்கையை** அதிகரித்**தனர்; அரசியல் போராட்டம், ஆயுதப் போராட்டம் இரண்டையும் ஆழப்படுத்தினர்; அரசியல் நடவடிக்கை, ஆயுத நடவடிக்கை இரண்டையும் கொண்டு எதிரியைத் தாக்கினர். அதே சமயத்தில் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மலையகப்பகுதி, சமவெளிப்பகுதி, நகர்ப்பகுதி ஆகிய மூன்று பகுதிகளிலும் எதிரித் துருப்புகளுக்கிடையே கலகவேலை செய்தனர்.**

புரட்சிகர மக்களுக்கு ஒரு விரிந்த வலுவான அரசியல் படை இருந்ததன் காரணமாக, தென் வியட்நாம் மக்கள் விடுதலை ஆயுதப்படைகள் விரைவில் வளர்ச்சி பெற்றன. வெவ்வேறு ஸ்தலங்களில் **விடுதலைச் சேனையின்** படையலகுகள் கட்டப்பட்டன. தென் வியட்நாம் முழுவதற்குமான பிரதானப் படையின் படையலகுகள் கட்டப்பட்டன. எல்லா விடத்திலும் **கெரில்லாப் படைகளும், குடிப்படைகளும், தற்காப்புப் படைகளும்** கட்டப்பட்டன. விடுதலைக்கான ஆயுதப் படைகளின் மூவகைகள் படிப்படியாக உருப்பெற்று வந்தன. இந்த மக்களின் ஆயுதப்படைகள் பயன்படுத்திய ஆயுதங்கள் மிகவும் தரக்குறைவானவை; அவற்றில் பெரும்பாலானவை எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டவை அல்லது உள்ளூரில் தயாரிக்கப்பட்டவை ஆகும்.

கிராமப்புறம் எங்கனும் பல இடங்களில் **மக்கள் யுத்தம்** துரிதப்படுத்தப்பட்டது. அரசியல் போராட்டத்தையும், ஆயுதப் போராட்டத்தையும் நெருக்கமாக ஒருங்கிணைத்து, தென் வியட்நாம் சேனையும், மக்களும் தாக்குதல்களையும், எழுச்சிகளையும் நடத்தி, **கெரில்லாப் போரையும், பகுதி எழுச்சிகளையும்** துரிதப்படுத்தி பொம்மைப் படைகளை அழித்தனர். ஹெலிகாப்டரிலிருந்து எதிரி துருப்புகளை இறக்கும் உத்தியையும், கவச வண்டிகளில் துருப்புகளை ஏற்றிவரும் உத்தியையும் தோற்கடித்து, தளப்பகுதிகளை உருவாக்கினர். தன் இராணுவ ஆக்கிரமிப்பு நோக்கம் தடைபடாதிருப்பதற்காக எதிரி உருவாக்கிய செயற்கைக் கிராமங்களில் மூன்றில் ஒரு பகுதியைக் கலைத்து, பொம்மை மத்திய அரசாங்கத்தின் அடிப்படையையே ஆட்டங்காண வைத்தனர். பெரு நகரங்களும் உள்ளிட்ட நகர்ப்பகுதிகளில் போராட்ட இயக்கம் துரிதப்படுத்தப்பட்டு கிராமப்புற புரட்சி இயக்கத்துடன் ஒருங்கிணைக்கப் பட்டது. **பெரிய அரசியல் படையும், விரிவான மக்கள் ஆயுதப் படைகளும்** மிக முக்கிய பாத்திரம் வகித்தன. "'வியட்கொங்' வீரர்கள் கெரில்லாப் போர்க் கலையில் கைதேர்ந்தவர்கள்" என்பதை எதிரி கூட ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று.



போரின் தன்மை தொடர்ந்து நமக்குச் சாதகமாக மாறிக் கொண்டிருந்தது. ஆழமான உள் முரண்பாடுகளால் மென்மேலும் அலைக்கழிக்கப்பட்ட எதிரி தப்பிச் செல்லமுடியாத நிலைக்கு வந்து சேர்ந்தான். அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் "நடு ஆற்றில் குதிரைகளை மாற்ற வேண்டிய" கட்டாயத்துக்கு ஆளானார்கள். அதாவது அவர்கள் தம் கைக்கூலியான நிகோ தின் தியமை ஒழித்துக் கட்டினர்.

விடுதலைச் சேனையின் **இயங்கு கிரமப் படைகள்** தோன்றியதும், மக்கள் யுத்தம் மேலும் வளர்ச்சியடைந்தது. ஏராளமான துருப்புகளைக் குவித்து சண்டைகள் நடந்த பின் ஜியா (Bin Gia), டாங் சாய் (Dong Xoai), பா ஜியா (Ba Gia) ஆகிய இடங்களில் எதிரியின் கிரமப் படைகளின் பல படையலகுகள் முற்றுகத் துடைத்தெறியப்பட்டன. புரட்சிப் போர் புதிய வலிந்த தாக்குதல் திறனைப் பெற்றது.

அரசியல் படைகளும், ஆயுதப் படைகளும் நெருக்கமாக ஒருங்கிணைக்கப்பட்டதால், மக்களின் ஆயுதப்படைகளும், விடுதலைத் துருப்புகளும் நெருக்கமாக ஒருங்கிணைக்கப்பட்டதால், ஒரு புதிய சூழ்நிலைமை ஏற்பட்டது. பொம்மைச் சேனையின் துருப்புகளின் எண்ணிக்கை 5,50,000 ஆக உயர்ந்தது; ஆனால் விடுதலைப் படைகளின் எண்ணிக்கைப் பலம் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்கவில்லை. இப் படைகள் இப்போது தான் பெரும் எண்ணிக்கையி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org.

லான துருப்புகளைக் குவித்து சண்டைகளைச் செய்யத் துவங்கியிருந்தன. அப்படியிருந்தும் பொம்மைச் சேனை முழுவதும், பொம்மை அரசாங்கம் முழுவதும் ஆட்டம் கண்டிருந்தன. இதற்குக் காரணம் அப்போதுதான் போர்க்களம் புகுந்திருந்த கிரமப் படைகள் புகழ் ஈட்டியிருந்தன; மிகுந்த வலிந்த தாக்குதல் பலம் பெற்றிருந்தன; எதிரியை அச்சுறுத்தி, திணறடித்து, அழித்தொழிக்கும் ஆற்றல்களைக் கொண்டிருந்தன; தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்தி, வெற்றிகளை ஈட்டிக் கொண்டிருந்தன.

'விசேடப் போர்' என்ற போர்த் தந்திரத்தின் பங்கலோட்டுத்தனத்தைக் கண்ட அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள், இந்த நிலைமையைச் சமாளிப்பதற்காக தென் வியட்நாமுக்கு ஒரு பெரும் ஆக்கிரமிப்புப் படையை அனுப்பினர்.

இவ்வாறு 1960-65ஆம் ஆண்டுகளில் நிலவிய புதிய நிலைமைகளில், தென் வியட்நாம் புரட்சிப் போர், அரசியல் போராட்டத்திலிருந்து ஆயுதப் போராட்டமாகவும், ஆயுதப் போராட்டமும், அரசியல் போராட்டமும் இணைந்த போராட்டமாகவும் வளர்ந்தது; ஒரு ஆயுத எழுச்சி என்ற நிலையிலிருந்து விடுதலைப் போராகவும், விடுதலைப் போரும், ஆயுத எழுச்சியும் இணைந்த போராட்டமாகவும் வளர்ந்தது; கெரில்லாப் போர் என்ற நிலையிலிருந்து நேரடிச் சண்டையாகவும், கெரில்லாச் சண்டையும், நேரடிச் சண்டையும் இணைந்த போராட்டமாகவும் வளர்ந்தது. தென் வியட்நாம் மக்களின் விடுதலை ஆயுதப் படைகளும் கூட அரசியல் படைகளிலிருந்தே உருவாக்கப்பட்டன; போரின் போது, எழுச்சியின் ஆயுதமேந்திய தற்காப்புப் படையலகுகள், மூவகைப் படைகளாக வளர்ச்சியடைந்தன. அவை, தென் வியட்நாம் விடுதலைச் சேனையை உருவாக்கிய கிரமப்படைகளும், பிரதேசப் படைகளும், மக்களின் ஆயுதப் படைகளை



உருவாக்கிய குடிப்படைகள், கெரில்லாப் படைகள், தற்காப்புப் படை அமைப்புகள் ஆகியவையுமாகும். அரசியல் படைகளின் துணையுடனும் அவற்றோடு ஒருங்கிணைந்தும் தென் வியட்நாம் மக்களின் விடுதலை ஆயுதப்படைகள், அடித்தள மட்டங்களில் பொம்மை அரசாங்கத்தைத் தூக்கியெறிந்து மக்கள் அதிகாரத்தை வென்றெடுக்க மக்கள் அதிகாரத்தை வென்றெடுக்க மக்கள் நடத்திய பகுதி எழுச்சிகளிலும் அமெரிக்க ''ஆலோசகர்''களின் ஆணையின் கீழிருந்த பல்வேறுவகை பொம்மைத் துருப்புகளைத் தோற்கடிக்கத் தொடுக்கப்பட்ட இராணுவ வலிந்த தாக்குதல்களிலும் ஒரு இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பாத்திரம் வகித்தன.

தென் வியட்நாமில் ஏராளமான துருப்புகளை ஒட்டுமொத்தமாகக் குவிக்கவேண்டிய கட்டாயத்துக்கும், வியட்நாமைத் தாக்க தம் விமானப்படையைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்துக்கும் ஆளாகிய அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் ஆக்கிரமிப்பு வரலாற்றிலேயே மிகப்பெரிய, மிகக்கொடிய 'வரம்புசெய்யப்பட்ட போரைத்' தொடுத்தனர். அப்போது நமது மக்களும் நாடு முழுவதிலுமிருந்த அவர்களின் புரட்சிகர ஆயுதப்படைகளும் முன்னுவமை இல்லாத பாரதூரமான சவாலை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. எல்லா ஏகாதிபத்தியவாதிகளையும்விட அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தான் மிகவும் வலிமையானவர்கள்; முதலாளிய உலகில் மிகப்பெரும் பொருளாதார, இராணுவ சக்தி அவர்களிடம்தான் உள்ளது; மிக நவீனமான ஆயுதங்கள் தரித்த ஒரு பெரும் சேனை அவர்களிடம் உள்ளது. அவர்கள் தென் வியட்நாமை ஆக்கிரமிக்க பத்துலட்சம் துருப்புகளைத் திரட்டினர். இவற்றில் 50,000 அமெரிக்கத் துருப்புகள் இருந்தனர். பிறர் பொம்மைத் துருப்புகளும் அமெரிக்க சார்புத் துருப்புகளுமாவர். ஆயிரக்கணக்கான கோடி டாலர்களை அவர்கள் இப்போருக்காகச் செலவிட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டனர்; கோடிக்கணக்கான டன் குண்டுகளைப் பயன்படுத்தினர்; அணுஆயுதங்கள் தவிர, பிற அதிநவீன ஆயுதங்கள் அனைத்தையும், நவீனப்போர் முறைகள் அனைத்தையும் அவர்கள் பயன்படுத்தினர்.

அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்து தேசவிமோசனத்துக்காகப் போராடுமாறு தலைவர் ஹோ சி மின் விடுத்த புனித அறைகூவலுக்குச் செவிமடுத்து தமது வெல்லப் படமுடியாத வீரமரபுக்கேற்ற வகையில் வடக்கிலிருந்து, தெற்குவரையுள்ள நம்நாட்டு மக்களனைவரும் ஒன்றுபட்டு எழுந்து, தம்நாட்டையும், வீட்டையும் காக்கப்போரிட உறுதி பூண்டனர்; தம் புனிதமான தேசியக் கடமையையும் உன்னதமான சர்வதேசியக் கடமையையும் நிறைவேற்ற உறுதிபூண்டனர்.

நமது சேனையும், மக்களும் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளின் திட்டங்களையும், சக்திகளின் பலாபலத்தையும் சரியாக மதிப்பிட்டனர். எதிரியின் பலமான அம்சம், பலவீனமான அம்சம் ஆகிய இரண்டையும், அவனுக்குள்ள இடையூறுகள், முரண்பாடுகள் ஆகியவற்றையும் நாம் கணித்தோம். நமக்குள்ள அனுகூலங்களையும், இடையூறுகளையும், நமது வலிமையையும், நமது வலுவான நிலையையும் அறிந்திருக்கிறோம். இந்த அடிப்படையில் நமது சேனையும், மக்களும் ஐக்கியப்பட்டுள்ளனர். தமது வலிந்த தாக்குதல் போர்த்தந்திரத்தைத் தொடர்ந்து நடத்தி, பலமான ஆயுதம் தரித்துள்ள பெரும் எதிரிச் சேனையை எதிர்த்துச் சண்டையிட்டு அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளை முற்றுகத் தோற்கடிக்க அவர்கள் உறுதிபூண்டுள்ளனர்.

அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராக வியட்நாம் மக்கள் நடத்தும் தேசபக்த எதிர்ப்புப் போரானது, அமெரிக்க ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக உலக மக்கள் நடத்தும் போராட்டத்தின் முன்னணிப் பகுதியாயுள்ளது. பொது எதிரிக்கு எதிரான போராட்டத்தில் சோஷலிச நாட்டு மக்களும், உலக முழுவதிலுமுள்ள முற்போக்கான மக்களும் நம் மக்களோடு நெருக்கமாக ஐக்கியப்பட்டுள்ளனர். முற்போக்கான மனித குலத்திடமிருந்து நமக்குக் கிடைத்த ஆழ்ந்த அனுதாபமும், ஆதரவும், உதவியும், அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிரான தேசபக்தப் போரில் வெற்றியடைவதற்கு நமக்குத் துணைபுரிந்த தீர்மானகரமான காரணியாகும்.

தென் வியட்நாம் போர்க்களத்தில் அமெரிக்க ஆக்கிரமிப்புப் படை, பொம்மைத் துருப்புகள் ஆகியன அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களின் இரு போர்த்தந்திரப் படைகளாக இருந்தன. இவற்றில் அமெரிக்கத் துருப்புகள் தான் பிரதானப் படையாகும். இவை இரண்டையும் சார்ந்து நின்று, புரட்சிப் படைகளை - குறிப்பாக விடுதலைச் சேனையின் கிரமப் படையலகுகளை - ஒழித்துக்கட்டும் முயற்சியாக, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் ஒரு கடுமையான எதிர்த்தாக்குதல் தொடுத்தனர். அதே சமயம், நமது மக்களை அடிமைப் படுத்தி அவர்களைத் தம் இறுக்கமான கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காக 'சாந்தப்படுத்தும் திட்டம்' என்ற நயவஞ்சகத் திட்டத்தை தொடர்ந்து கடைப்பிடித்தனர். 'இராணுவ, அரசியல் முனைகள் இரண்டிலும் போர்', 'ஒட்டு மொத்தமான போர்' என்பனவற்றைக் கடைப்பிடித்தனர். ஈவிரக்கமற்ற இராணுவ நடவடிக்கைகளுடன் மோசடிமிக்க பொருளாதார, அரசியல் திட்டங்களையும், நயவஞ்சகமான உளவியல் போர் முறைச் சூழ்ச்சிகளையும் இணைத்துச் செயல் படுத்தினர்.

தென் வியட்நாம் மக்களும், சேனையும் தமது வலிந்த தாக்குதலை முன்னெடுத்துச் சென்று தமது வெற்றி நிலையைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தி, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் திட்டங்களேயும், சூழ்ச்சிகளேயும் முறியடிக்க தமது அரசியல் போராட்டத்தையும், ஆயுதப் போராட்டத்தையும் துரிதப் படுத்தினர். தென் வியட்நாம் மக்கள் விடுதலே ஆயுதப்படைகள் ஏராளமான துருப்புகள் ஈடுபடுத்தப்படும் பெரிய சண்டைகளேயும், கெரில்லாப் போரையும் முடுக்கிவிட்டன. அவை அமெரிக்கத் துருப்புகள், பொம்மைத் துருப்புகள், அமெரிக்க சார்புத் துருப்புகள் ஆகியவற்றை எதிர்த்து பெரிய, சிறிய, இரண்டுக்கும் இடைப்பட்ட இராணுவ நடவடிக்கைகளே ஒருங்கிணைத்தன. ஏராளமான எதிரித் துருப்புகளே அழித்து, பேரளவிலான போர்ச் சாதனங்களே நாசப் படுத்தினர். இவ்வாறு மக்களுக்கான அதிகாரத்தைக் கைப் பற்றுவதற்கான அரசியல் போராட்ட இயக்கத்திலும், எழுச்சிகளிலும் மிகுந்த துணேபுரிந்தனர். எதிரியைவிட எண்ணிக்கைப்பலம் குறைந்ததும் அவனேக் காட்டிலும் குறைந்த அளவே ஆயுத சாதன வசதிகள் கொண்டதுமான தென் வியட்நாம் விடுதலேப்படைகள் பின்வரும் இடங்களில் அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைகளுக்கு அதிர்ச்சி தரும் அடிகள் கொடுத்தன: மத்திய டிரங் போ (**Central Trung Bo**) விலுள்ள வான் துவாங் (**Von Tuang**), டே நிகுயென் (**Tay Nguyen**), கிழக்கு நாம் போ (**Nam Bo**), குவாங் திரி-துவா தியென் பிரதேசம் (**Quang Tri - Thua Thien**)... பிரதான விடுதலேப் படையின் அதிகரித்த அளவில் விரிவுபடுத்தப் பட்டு வந்த நடவடிக்கைகளும் பிரதேசப் படைகளின் கெரில்லா நடவடிக்கைகளும் எல்லாப் போர் அரங்குகளிலும் மேற்கொள்ளப்பட்டன. தீவிரமான அரசியல் போராட்ட இயக்கம் நகரங்களில் குறிப்பாக, டாணுங் (**Da Nang**), ஹுவெ (**Hue**) நகரங்களில் துவக்கப்பட்டது. அமெரிக்க ஆக்கிரமிப்புத் துருப்புகள் துவக்கத்தில் கொண்டிருந்த ஆக்கிரமிப்புத் தன்மையை விரைவில் இழந்தனர்; அவர்கள் எதிர்பாராத அடிகள் பெற்றனர்; தோல்விக்கு மேல் தோல்வி கண்டனர். 20,000 அமெரிக்கத் துருப்புகள் 1965-66 வறட்சிக் காலத்தில் தொடுத்த எதிர்த்தாக்குதல் தகர்க்கப்பட்டது; அவர்கள் கையாண்ட 'வியட்காங்கின் முதுகெலும்பை முறித்தல்', 'சாந்தப்படுத்தும் திட்டம்' ஆகியவற்றைப் போலவே, அவர்களின் 'தேடிப் பிடித்து அழிக்கும்' போர்த் தந்திரமும் தோல்வியடைந்தது. விடுதலேப் படைகள் திரி தியெனில் ((**Tri Thien**) போர்முனையை ஏற்படுத்தி எல்லா முனைகளிலும் தீவிரமான தாக்குதலேத் தொடர்ந்தனர். 40,000 அமெரிக்கத் துருப்புகளால் நடத்தப்பட்ட 1966-67 வறட்சிக்கால எதிர்த்தாக்குதல் மீண்டும் முறியடிக்கப்பட்டது. 'கிடுக்கித் தாக்குதல்', 'தேடிப்பிடித்து அழித்தல்', 'சாந்தப்படுத்துதல்' ஆகிய போர்த்தந்திர நடவடிக்கைகள் முற்றிலும் தோல்வியடைந்தன.

வட - தென் வியட்நாமில் அமெரிக்க ஆக்கிரமிப்புப் போரின் விஸ்தரிப்பு அதன் உச்சக்கட்டத்தில் தோல்வியைத் தழுவியபோது, தென் வியட்நாம் சேனேயாலும், மக்களாலும் **1968 வசந்த காலத்தில் தொடுக்கப்பட்ட பொது வலிந்த தாக்குதல்** இடி போல வெடித்துக் கிளம்பி, தென் வியட்நாமையும், அமெரிக்காவையும் குலுக்கிற்று. மக்கள் எழுச்சிகளோடு ஒருங்கிணைந்து தென் வியட்நாம் மக்கள் விடுதலே ஆயுதப்படைகள் நடத்திய இந்த ஈடிணையற்ற, ஆக்கபூர்வமான, போர்த்தந்திர ரீதியான தாக்குதல் எதிரியின் 'வரம்பு செய்யப்பட்ட போர்' என்ற போர்த்தந்திரத்துக்குத் தீர்மானகரமான அடிகள் கொடுத்து, போரின் போக்கில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க திருப்புமுனையை ஏற்படுத்தியது.

'வரம்பு செய்யப்பட்ட போருக்கு' எதிரான மக்கள் யுத்தத்தில் மேற்கொள்ளப்படவேண்டியிருந்த கடமை கீழ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமாறு: அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கு இராணுவத் தோல்வியை ஏற்படுத்த இராணுவப் போராட்டத்தைத் துரிதப்படுத்துதல்; இராணுவப் போராட்டத்தை அரசியல் போராட்டத்துடன் நெருக்கமாக ஒருங்கிணைத்தல்... இதை நிறைவேற்றுவதற்காக, தென் வியட்நாம் மக்கள் விடுதலைப் படைகள், தமது படைகளின் அளவையும் தரத்தையும் உயர்த்தின; அவற்றின் அமைப்மையும் ஆயுத சாதனங்களையும் இராணுவ அறிவையும் மேம்படுத்தின.

விடுதலைச் சேனையின் **கிரமப்படைகளில்** புதிய படைத்துறைகள் சேர்க்கப்பட்டன; வலிமை பெருக்கி வந்த இயங்கு சேனைக் குழுக்களாக அவை ஒழுங்கமைக்கப்பட்டன. **பிரதேசப்படைகள்** விரிவுபடுத்தப்பட்டு வலுப்படுத்தப்பட்டன. எல்லாப் போர்முனைகளிலும் **குடிப்படைளும், கெரில்லாப் படைகளும் தற்காப்புப் படைகளும்** துரிதமான, விரிவான வளர்ச்சியைப் பெற்றன. உயர்திறன் கொண்ட படையலகுகள் உருவாகின. ஆயுதப்படைகளின் ஆயுத சாதனங்கள் குறிப்பிடத்தக்க வகையில் செப்பமடைந்தன. இதன் விளைவாக, **மூவகையான ஆயுதப்படைகளும்** வெவ்வேறு அளவுகளில், எதிரியின் காலாட்படைத் துருப்புகளை அழிக்கக் கூடியனவாக மட்டுமன்றி டாங்கிகளையும், கவச வாகனங்களையும் அழிக்கக் கூடியனவையாகவும் எதிரி விமானங்களைச் சுட்டு வீழ்த்தக் கூடியவையாகவும் ஆயின. சண்டையில் ஒவ்வொரு கட்டத்திலும் பெறப்பட்ட அனுபவம் ஆய்வு செய்யப்பட்டது. ஊழியர்கள், போர் வீரர்கள் ஆகியோரின் உறுதியும் நம்பிக்கையும் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகப் போராடுகையில் தொடர்ந்து வலுப்பட்டு வந்தன. ஒழுங்கமைப்பதிலும் ஆணை செலுத்துவதிலும் ஊழியர்களின் திறமை மேம்பட்டுவந்தது. சேனை முழுவதும், மக்களும், விடுதலை ஆயுதப்படைகளின் மூவகையினரும் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களைத் தாக்கி பொம்மைத்துருப்புகளை அழித்தனர். தீரமிக்க அமெரிக்க எதிர்ப்புப் போராளிகளாக விளங்கினர்.



தென்வியட்நாம் விடுதலைச்சேனை, ஒருமக்கள் யுத்தத்தை நடத்தும்போது இயல்பாக வாய்க்கப்பெறும் சாதகமான போர்த்தந்திர நிலைமையால் பயனடைந்தது. ஆயுதப் போராட்டமும், அரசியல் போராட்டமும் இணைவதால் விளையும் பிரமாண்டமான சக்தியாலும் அது பயனடைந்தது. இச் சேனை மிகுந்த போராட்ட உணர்வுடன், போதுமான அளவுக்குத் துருப்புகளைப் பயன்படுத்தி அத்துருப்புகளுக்கு மக்களின் விரிவான ஆயுதப்படைகளின் துணையையும், மக்களின் பெரிய, சக்தி வாய்ந்த **அரசியல் சேனையின்** துணையையும் பெற்று, அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைகள், பொம்மைத் துருப்புகள், அமெரிக்க சார்புத் துருப்புகள் ஆகியவற்றுக்கு பலத்த அடிகள் கொடுத்து, அவர்களைத் தோல்வியுறச் செய்தது.

சண்டைக் களங்களில், விடுதலைச் சேனையின் கிரமப்படை தனது படைகளை மதியூகத்துடன் ஒன்று குவித்துத் தாக்குதலை நடத்தியது; ஒரு சிறுபடையைக் கொண்டு பெரிய எதிரிப் படையைத் தாக்கி அதனை அழித்தது; வெவ்வேறு படைத்துறைகளைச் சேர்ந்த படைகளையும் அல்லது ஒரே படைத்துறையைச் சேர்ந்த, சுயேச்சையாய்ச் செயல்படுகிற வெவ்வேறு படைகளையும் ஒருங்கிணைத்துப் போரை நடத்தக் கூடியதாகவும் விளங்கிற்று. சிறிய, நன்கு பயிற்றுவிக்கப்பட்ட படையலகுகளைப் பயன்படுத்தி, தென் வியட்நாம் விடுதலைச் சேனை எதிரிக்கு வேதனைமிக்க அபாயகரமான அடிகளைக் கொடுத்துள்ளது. அது ஏராளமான அமெரிக்கத் துருப்புகளை அழித்துள்ளது; பெருமளவு நவீனப் போர்ச் சாதனங்களை நாசப்படுத்திற்று; எதிரிக்குக் கடுமையான இழப்புகளை ஏற்படுத்திற்று. குறிப்பாக அமெரிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவ அதிகார அமைப்புகள், அமெரிக்க இராணுவ அதிகாரிகள், தொழில்நுட்ப வல்லுனர்கள், மிக நவீன அமெரிக்க விமானங்கள், தொழில்நுட்ப சாதனங்கள் ஆகிய வற்றுக்கு கடுமையான இழப்புகளை ஏற்படுத்திற்று. பிரதேசப் படைகளை ஆதாரமாகக் கொண்டு குடிப்படைகளும், கெரில்லாப் படைகளும், தற்காப்புப் படைகளும் கெரில்லாப் போர் முறைக்கு ஒரு புதிய உத்வேகத்தைத் தந்தன. அவை எளிய, ஓரளவு நவீனமான மற்றும் நவீன ஆயுதங்களைத் திறமையாகப் பயன்படுத்தி எதிரியை நிர்மூலமாக்குவதில் பல்வேறு முறைகளை வளர்த்தன. பல ஆக்கபூர்வமான, செயல்திறமிக்க மக்கள் யுத்த முறைகள் பிரயோகிக்கப்பட்டு வளர்க்கப்பட்டன. அவையாவன:- ஒன்று குவிக்கப்பட்ட துருப்புகளைக் கொண்டு தாக்குதல் நடத்துதல்; கெரில்லாத் திடீர்த் தாக்குதல்; எதிரிப் பின்புலத்தின் மீது தாக்குதல்; எதிரியின் தகவல் தொடர்பு மார்க்கங்கள் மீதும், நகரங்கள் மீதும் தாக்குதல்; போரையும் எதிரி அணிகளுக்கிடையே நடத்தப்படும் கலக வேலையையும் ஒருங்கிணைத்தல்.

ஒவ்வொரு பிரதேசத்திலும் மற்றும் தென் வியட்நாம் முழுவதிலும் இயங்கு படைகளுக்கும், ஸ்தலப் படைகளுக்குமிடையே ஒருங்கிணைப்பு இருந்தது. இதனால் இப்படைகளை அனுகூலமிக்க முறையில் நிறுத்திவைக்க முடிந்தது. இப் போர்த்தந்திரப் பாங்கு எல்லாப் போர்முனைகளிலும், குறிப்பாக இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த மூன்று வலயங்களிலும் (மலைப்பகுதி, சமவெளிப்பகுதி, நகர்ப்பகுதி ஆகியன - மொழி பெயர்ப்பாளர்) உள்ள மிக முக்கியமான பகுதிகளில், படைகள் ஒரே இடத்தில் நிலை கொள்ளுதல், இடம்பெயர்ந்து செல்லுதல் ஆகிய இரண்டையும் ஒருங்கிணைக்க வேண்டும். பிரதேசப் படைகளின் வலுவான படையலகுகள், விரிவான குடிப்படைகள், கெரில்லாப்



படைகள், தற்காப்பு அமைப்புகள் ஆகியன ஸ்தல ஆயுதப்படைகளில் அடங்கும். இந்த ஸ்தல ஆயுதப்படைகள் அரசியல் படைகளின் உறுதியான துணையுடனும், ஸ்தல அரசியல் படைகளுடன் நெருக்கமாக ஒருங்கிணைந்தும் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் ஒளிமிக்க வெற்றியீட்டின. ஒரு பரந்த நிலப்பரப்பில், அமெரிக்க, பொம்மை, அமெரிக்கச் சார்புப் படைகளைச் சிதறடித்தன; எல்லா இடங்களிலும் அவற்றை நகர முடியாமல் செய்து அவற்றைச் சுற்றிவளைத்துத் தாக்கி அழித்தொழித்தன; அவர்களது ஏராளமான போராயுதங்களை நாசம் செய்தன. அதே வேளையில் விடுதலைச் சேனையின் இயங்குபடைகள், வெவ்வேறு போர்முனைகளில் பெரிய அளவில் தம் துருப்புகளைக் குவித்து எதிரிக்கு பலத்த அடிகள் கொடுத்து, எதிரிப் படைகளின் பெரும் பிரிவுகளை அழித்தொழித்தன.

தென் வியட்நாமின் மக்கள்யுத்தத்தில், எதிரிகள் ஈவிரக்கமற்ற வகையில் தோற்கடிக்கப்பட்டனர். அவர்கள் சுற்றிவளைக்கப்பட்டு, அணிகள் துண்டிக்கப்பட்டு இடைவிடாது தாக்கப்பட்டு அழிக்கப்பட்டன. மிக நவீன ஆயுதங்கள் தரித்த பத்து லட்சத்துக்கும் மேற்பட்ட அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைகள், பொம்மைத் துருப்புகள், அமெரிக்கச் சார்புத் துருப்புகள் ஆகியன தாங்கள் நினைத்தது போல அத்தனை திறமையாகப் போரிட முடியவில்லை. அவர்களது பிரமாண்டமான சேனைகூட போதுமானவையாக இல்லை என்பது நிரூபணமாயிற்று. பலமிக்கவர்களாகத் தோற்றமளித்தவர்கள் பலவீனமானவர்களே என்பது நிரூபணமாயிற்று. அவர்கள் தாக்குதல் தொடுத்தனர். ஆனால் சரியான குறியிலக்கைத் தாக்க முடியவில்லை. தென் வியட்நாம் மக்களின் விடுதலை ஆயுதப்படைகள் அவர்களை மென்மேலும் அதிகரித்த அளவில் நிர்மூலமாக்கி வந்தன. அவர்களது படைகள் சிதறடிக்கப்பட்டன. அவர்களது வலிந்த தாக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல் திறன் தொடர்ந்து குறைக்கப்பட்டுவந்தது. மெல்ல மெல்ல அவர்கள் தற்காப்பு நிலை எடுக்கவேண்டிய கட்டா யத்துக்கு ஆளாயினர். கூடிய சீக்கிரம் போரை முடித்துக் கொள்ள விரும்பினர்; ஆனால் அதை நீடிக்குமாறு நிர்ப் பந்திக்கப்பட்டனர். அவர்களது பெரிய நவீன சேனை மென் மேலும் செயலற்ற நிலைக்குத் தள்ளப்பட்டது. அது அதி கரித்த அளவில் பெரும் இழப்புகளைச் சந்தித்து வந்தது. படிப்படியாக அது மிக வளர்ச்சியுற்ற மக்கள் புரட்சிகரப் போரில் தோற்கடிக்கப்பட்டு வந்தது. அதேசமயம், எதிரி விமானப் படையை நிலத்திலிருந்தே எதிர்த்துப் போரிடும் மக்கள் யுத்தத்தால் எதிரிகளின் நவீன விமானப் படைக்கும் கப்பற்படைக்கும் மரண அடிகள் கொடுக்கப் பட்டு வந்தன. நமது சேனையும் மக்களும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் பிரமாண்டமான இராணுவ யந் திரத்துக்கு எதிரான போரில் புகழ்மிக்க வெற்றிகளை ஈட் டினர். அவர்கள் அமெரிக்காவின் மிகப்பெரும் 'வரம்பு செய்யப்பட்ட' ஆக்கிரமிப்புப்போரை, அது நம்நாட்டில் மிக உச்சகட்டத்தில் இருந்தபோது, தோற்கடித்தனர்.

'வரம்பு செய்யப்பட்ட போர்' என்ற போர்த்தந்திரம் தோற்கடிக்கப்பட்டது. ஜான்சன் நிர்வாகம் போரைத் தணிக்க வேண்டியதாயிற்று; வட வியட்நாம் மீதான குண்டுவீச்சை நிபந்தனையின்றி நிறுத்த வேண்டியதா யிற்று; தென்வியட்நாமில் அமெரிக்கா தற்காப்பு நிலைக்குத் தள்ளப்பட்டது. இக்கட்டான நிலையிலிருந்து வெளியேறு வதற்காக அமெரிக்கத் துருப்புகளல்லாத பிற துருப்புகளை மட்டுமே போரில் ஈடுபடுத்தும் திட்டத்தை நடைமுறைப் படுத்திற்று.

அமெரிக்காவில் அதிகாரத்துக்கு வந்த விவஸ்தை கெட்ட, பிடிவாதமிக்க அரசியல் வாதியான நிக்சன், ஆக்கிரமிப்புப்போரை நீடிக்கவும், தென் வியட்நாமில்



அமெரிக்க நவகாலனிய ஆட்சியைக் கட்டிக் காத்து நமது மக்களைத் தொடர்ந்து அடிமைப்படுத்திவைக்கவும், போரை வியட்நாமியர் மயமாக்கும்' திட்டத்தை மேற்கொண்டான்.

'போரை வியட்நாமிய மயமாக்குதல்' என்ற போர்த் தந்திரம், புதிய முறைகளில் தொடரப்படும் நவகாலனிய ஆக்கிரமிப்புப் போரேயன்றி வேறல்ல; நிக்சன் கோட்பாடு என்று கூறப்படுவதை தென் வியட்நாமுக்கு எதிரான அமெ ரிக்க ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புப் போருக்குப் பிரயோகிப் பது தவிர வேறல்ல. இந்த பிற்போக்கான கோட்பாடு, எழுபதுகளில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் கடைப் பிடித்த புதிய உலகளாவிய போர்த்தந்திரமாகும். இது அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் வியட்நாமில் தோல்விக்கு மேல் தோல்வியைச் சந்தித்துக் கொண்டிருக்கும் போதும் உலகமுழுவதிலும் சக்திகளின் பலாபலம் அவர்களுக்குப் பாதகமாக மாறிய சமயத்திலும் தோன்றியதாகும். நிக்சன் கோட்பாடு என்பது உலக போலீஸ்காரன் பாத்திரத்தை அமெரிக்கா கட்டிக் காத்துக் கொண்டிருக்குமாறு செய் வதும் புதிய முறைகளையும் சூழ்ச்சிகளையும் கொண்டு உல கில் தனது நவகாலனியத்தைப் பதிப்பதுமாகும்: அதாவது அமெரிக்கா தன் பலத்தைச்சார்ந்து நிற்கும் போதே, சார்புநாடுகள், போருக்கு மேலும் அதிக ஆட்களையும் பொருட்களையும் வழங்குமாறு செய்வதாகும்.

போரை ''வியட்நாமிய மயமாக்கு''வதற்காக, அமெ ரிக்க ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களது கைக்கூலிகளும் அவர்களது ஈவிரக்கமற்ற 'சாந்தப்படுத்தும் திட்டத்தை' நிறைவேற்றுவதற்காக தங்கள் படைகளை ஒன்றுகுவித்த னர். சாந்தப் படுத்தும் திட்டம்' என்பது தென் வியட்நாமில் நமது மக்களை அடிமைப்படுத்துவதற்கான பிரதானமான போர்த்தந்திர நடவடிக்கையாகும். வியட்நாமியர்களே வியட்நாமியர்களை எதிர்த்துப் போரிடச்செய்வதும், போரைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டே போருக்கு ஊட்டாளிக்கச் செய்வதும், தங்களது அடிவருடிகளின் இரத்தத்தையும் அமெரிக்க டாலர்களையும் குண்டுகளையும் தங்கள் கீழ்த்தரமான நலன்களுக்கு சேவை புரியப் பயன்படுத்துவதும் தான் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளின் நயவஞ்சகத் திட்டமாகும். சைகோன் பொம்மைச் சேனையை ஒரு நவீன சேனையாகக் கட்டியெழுப்ப அவர்கள் கடும் பிரயத்தனம் செய்தனர். அதன் நோக்கம் தென்வியட்நாமில் அச்சேனையும் பிரதான இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த படையாகவும் இந்தோ சீனாவில் அதிர்ச்சிப் படையாகவும் செயல்பட வைப்பதாகும்; மேலும் தரைப் போரில் அமெரிக்கத் துருப்புகளைப் படிப்படியாக அகற்றிவிட்டு அந்த இடத்தில் நவீனப்படுத்தப்பட்ட சைகோன் சேனையைப் பயன்படுத்துவதாகும். நடுநிலை நாடான கம்போடியா மீதான படையெடுப்புக்கும் லாவோசில் போரைத் துரிதப்படுத்துவதற்கும் இந்தோசீனா முழுவதிலும் ஆக்கிரமிப்புப் போரை விஸ்தரிப்பதற்கும் நிக்சன் நிர்வாகம் வெட்கங்கெட்ட முறையில் உத்தரவுகள் பிறப்பித்தது. அமெரிக்கா இந்தப் போர்களை 'கம்போடிய மய' மாக்கவும், 'லாவோசிய மய'மாக்கவும் பிரயத்தனப்பட்டது; சைகோன் பொம்மைப் படைகளுக்கும், கம்போடியப் பொம்மைப் படைகளுக்குமிடையேயும், தாய்லாந்துப் பிற்போக்குவாதிகளுக்கும், லாவோசிய, கம்போடியப் பிற்போக்குவாதிகளுக்குமிடையேயும் ஒத்துழைப்பை ஊக்குவித்தது. இந்தோசீனர்களை, இந்தோசீனர்களுக்கு எதிராகவும் ஆசியர்களை, ஆசியர்களுக்கு எதிராகவும் பயன்படுத்தி பொம்மைப் படைகளுக்கிடையே ஒருவகைப் பிரதேசக் கூட்டணியை ஒழுங்கமைத்தது.

தமது வெற்றிகளை அடுத்து தென் வியட்நாம் சேனையும் மக்களும், தேசிய விடுதலை முன்னணியினதும் தென் வியட்நாம் குடியரசின் புரட்சிகரத் தற்காலிக அரசாங்கத்தினதும் தலைமையின் கீழ், புதிய கட்டத்தில் போரின் வளர்ச்சியின் தன்மைகளையும் விதிகளையும் நன்கு புரிந்துகொண்டு, எதிரியின் 'வியட்நாமிய மயமாக்கும்' போர்த் தந்திரத்தை முறியடிப்பதற்காக மக்கள் யுத்தத்தின் போர்த் தந்திரப் பாங்கான வலிந்த தாக்குதலைத் துரிதப்படுத்தினர். இராணுவ முக்கியத்துவமுடைய மூன்று வலயங்களிலும் தென் வியட்நாமிலுள்ள நமது சேனையும் மக்களும் கீழ்க்காணும் காரியங்களை மேற்கொண்டனர்: ஆயுதப் போராட்டத்தையும் அரசியல் போராட்டத்தையும் மேலும் ஆழப்படுத்தி அவற்றை நெருக்கமாக ஒருங்கிணைத்தனர்; எழுச்சியோடு சேர்த்துத் தாக்குதல்களையும், தாக்குதல்களோடு சேர்த்து எழுச்சிகளையும் நடத்தினர்; அதே சமயம் எதிரித் துருப்புகளிடையே கலக வேலையை முடுக்கிவிட்டனர். இக்காரியங்களின் நோக்கம் எதிரிப்படைகளை அழித்தொழிப்பதும் அவற்றைச் சிதைவுறச் செய்வதும், மக்களுக்கான அதிகாரத்தை வென்றெடுப்பதும், விடுதலைப் பிரதேசத்தை விரிவுபடுத்துவதும், எதிரியை முறியடிப்பதும் ஆகும்.

இந்தோ சீனாவில் பிரயோகிக்கப்பட்டு வந்த நிக்சன் கோட்பாட்டை முறியடிப்பதற்காக, நமது சேனையும் மக்களும் தமது எதிர்ப்புப் போரை சகோதர லாவோஸ், கம்போடியா ஆகியவற்றின் சேனைகளினதும் மக்களினதும் புரட்சிகரப் போராட்டத்துடன் ஒருங்கிணைத்தனர். தென் வியட்நாமியப் புரட்சிகரப் போரின் வலிந்த தாக்குதல் மூன்று இந்தோசீன நாடுகளின் மக்களது புரட்சிப் போரின் வலிந்த தாக்குதலாக வளர்ச்சி பெற்றது. இந்த மூன்று நாட்டு மக்களும் தோளோடு தோள்நின்று பொது எதிரியை எதிர்த்துப் போரிட்டனர். லாவோஸ் மக்களின் தேசபக்தப் போர் புதிய, ஒளிமிக்க வெற்றிகளை ஈட்டியது. கம்போடியப் புரட்சியில் ஒரு பெரும் முன்னேக்கிய பாய்ச்சல் ஏற்பட்டது.

போரை 'வியட்நாமிய மயமாக்குதல்' என்ற எதிரித் திட்டத்தை முறியடிக்கும் போக்கில் **தென் வியட்நாம் விடுதலைச் சேனை** புரட்சிப் போரின் புதிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, போதிய எண்ணிக்கையுள்ள துருப்புகளையும் மகத்தான போரிடும் ஆற்றல்களையும் கொண்டு தமது போர்த்திறனைப் பெரிதும் அதிகரித்தனர்; மென்மேலும் நவீன ஆயுதங்களைப் பயன்படுத்தினர்; தொழில் நுட்பக் கிளைகள் துரிதமாக வளர்க்கப்பட்டன; வெவ்வேறு படைகளை (தரைப்படை, விமானப்படை, கப்பற்படை ஆகிய வற்றை) ஒருங்கிணைத்து, ஒருமுகப்படுத்தப்பட்ட தாக்குதல்கள் தொடுக்கும் ஆற்றல் பெருக்கப்பட்டது. 1969 துவக்கத்தில் தென் வியட்நாம் விடுதலைச் சேனை பெற்ற வெற்றிகளின் போது அமெரிக்கத் துருப்புகளுக்கு ஏராளமான இழப்புகள் ஏற்பட்டன. விடுதலைச் சேனையின் வெற்றிகள் நிக்சன் ஆட்சியின் ஆரம்ப நாட்களில் ஆக்கிரமிப்பாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட பலத்த அடியாகும். 1970லிருந்து நிக்சன் கம்போடியாவுக்கும், லாவோசுக்கும் அமெரிக்கத் துருப்புகளை அனுப்பியதற்குப் பிறகு மூன்று இந்தோ சீன நாடுகளினதும் புரட்சிச் சேனைகள், வலுமிக்க கிரம சேனைப் படையலகுகளைப் பயன்படுத்தி எதிரிமீது அடுத்தடுத்து தாக்குதல்களைத் தொடுத்து, புகழ்மிக்க வெற்றிகளை ஈட்டின. வலுவான அமெரிக்க விமானப்படையின் துணையிருந்த போதிலும், ஆட்களையும் பொருட்களையும் அமெரிக்காவிலிருந்து பெற்றுவந்த போதிலும் அமெரிக்காவால் வழங்கப்பட்ட ஆயுத சாதனங்களை அதிகரித்த அளவில் பெற்றிருந்த போதிலும், பொம்மைப்படைகள் தோல்விக்கு மேல் தோல்வியைச் சந்தித்தன. வியன்டைன்,* நாம் பென்** (Vientiane, Phnom Penh) பொம்மைப் படைகள் பெரும்

* வியன்டைன் - லாவோசின் தலைநகர்

** நாம் பென் - கம்போடியத் தலைநகர்



இழப்புகளைச் சந்தித்தன. அது மட்டுமல்ல, 'போரை வியட்நாமிய மயமாக்கும்' போர்த் தந்திரத்தின் முதுகெலும்பாகவும் இந்தோசீனாவில் கடைப்பிடிக்கப்பட்ட நிக்சனின் கோட்பாட்டின் அதிர்ச்சிப் படையாகவுமிருந்த சைகோன்*** (Saigon) பொம்மைப்படைகளும் கடுந் தோல்வியைச் சந்தித்தன. மூன்று நாட்டு மக்களின் மகத்தான வெற்றிகள், குறிப்பாக தென் லாவோசிலுள்ள நெடுஞ்சாலை 9ல் பெறப்பட்ட புகழ்மிக்க வெற்றி, பெரும் போர்த் தந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாயின இவை. போரை 'வியட்நாமிய மயமாக்கும்' போர்த்தந்திரத்தையும் இந்தோசீனாவில் நிக்சன் கடைப்பிடித்த கோட்பாட்டையும் இராணுவ வழிமுறைகள் மூலம் தோற்கடிப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தந்தன.

தனது பிற்போக்குச் சேனைகளையும் இதர ஒடுக்குமுறைப் படைகளையும் விரிவாக்க எதிரி கடும் முயற்சிகள் செய்து வந்தான். இம் முயற்சிகளின் நோக்கம் மக்களைக் கட்டுப்படுத்தவும் கிராமப்புறத்தில் தனது 'சாந்தப்படுத்தும் திட்டத்தை' நடைமுறைப்படுத்தவும் இராணுவக் காவல் நிலையங்களின் அடர்த்தியான பின்னலமைப்பை கட்டியெழுப்புவது தான்: இச் சமயத்தில் நாட்டின் தனித்தனிப் பிரதேசங்களில் **மக்கள் யுத்தத்தின்** பாத்திரமும், **பிரதேச ஆயுதப் படைகளின்** பாத்திரமும் மென்மேலும் முக்கியத்துவம் வாய்ந்ததாயின. தென் வியட்நாம் கிராமப்புறத்தின் பரந்த பகுதிகளில் நமது சேனையும் மக்களும் ஆயுதப் போராட்டத்தையும் அரசியல் போராட்டத்தையும் நெருக்கமாக ஒருங்கிணைத்து 'சாந்தப்படுத்தும் திட்டத்தை' தகர்ப்பதற்காக ஒருமுகப்பட்ட மும்முனை வலிந்த தாக்குதலை முன்னெடுத்துச் சென்றனர். பிரதான படையின் வெற்றிகளால் மிகவும் ஊக்குவிக்கப்பட்டு, பிரதேசப் படைகளின் வலு

*** சைகோன் - தென் வியட்நாமின் தலைநகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான ஆதரவை மென்மேலும் பெற்று, குடிப்படையினரும் கெரில்லாக்களும் கீழ்க்காணும் முழக்கத்தை நடைமுறைப் படுத்தினர். ''ஊழியர்கள் மக்களைக் கவனித்துக் கொள்ளட்டும், மக்கள் நிலத்தைக் கவனித்துக் கொள்ளட்டும், கெரில்லாக்கள் எதிரிகளைக் கவனித்துக் கொள்ளட்டும்.'' அவர்கள் கெரில்லாப் போரை, அடித்தள மட்டத்திலிருந்த மக்கள் யுத்தத்தை மேலுமுயர்ந்த வளர்ச்சிக் கட்டத்துக்கு உயர்த்தினர்; முக்கியமான பிரதேச பிற்போக்குப் படைகளை நிர்மூலமாக்கி ஒழித்துக்கட்டி எதிரியின் காவல் நிலையங்கள் பலவற்றைக் கைப்பற்றினர். மக்களுக்கான அதிகாரத்தை வென்றெடுப்பதற்காகவும் தீய நபர்களை ஒழித்துக் கட்டுவதற்காகவும், எதிரியின் பிடிப்பைத் தகர்ப்பதற்காகவும், எதிரியின் 'குடிமக்கள் பாதுகாப்புப் படைகளைச்' சிதைப்பதற்காகவும் அடித்தள மட்டத்தில் பொம்மை ஆட்சியைத் தூக்கியெறிவதற்காகவும் அரசியல் போராட்ட இயக்கத்தையும் எழுச்சியையும் ஒருங்கிணைத்தனர். பிரதேச மக்கள் யுத்தமானது, எதிரி மேற்கொண்ட 'சாந்தப்படுத்தும் திட்டத்தைத்' தடுத்து நிறுத்தியது. கடும் தோல்வியைச் சந்தித்த எதிரி பின்வாங்கவேண்டிய கட்டாயத்துக்கு ஆளானான். விடுதலைச் சேனையின் கிரமப்படைகள் மகத்தான வெற்றிகளை ஈட்டிக் கொண்டிருக்கையில், பிரதேச மக்கள் யுத்தம் அதிகரித்த அளவில் ஆழப்படுத்தப்பட்டு வருகையில், தென் வியட்நாமிலுள்ள நகர்புற மக்களின் **அரசியல் போராட்ட இயக்கம்** அளவிலும் வீச்சிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பெற்றது. அது, புதிய பல்வேறு வகைப்பட்ட போராட்ட வடிவங்களை மேற்கொண்டது.

கடந்த மூன்று ஆண்டுகளாக நிக்சன் ஆட்சிக்கு வந்து 'போரை வியட்நாமிய மயமாக்குதல்' என்ற போர்த்தந்திரத்தை நடைமுறைப்படுத்தி வந்தபோது, தென் வியட்



நாமிலுள்ள நமது சேனையும் மக்களும் மகத்தான வெற்றிகளை ஈட்டினர். 1971ல் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களது கைக்கூலிகளும் தங்களது 'போரை வியட்நாமிய மயமாக்கும்' திட்டம் அடிப்படையில் நிறைவேறிவிட்டது என்று நினைத்தார்கள். ஆனால் அப்போது தான்-அவர்கள் எல்லா முனைகளிலும், நிக்சன் ஆட்சி கடும் முயற்சிகள் செய்திருந்த போதிலும் கூட-மிகக் கடுமையான தோல்விகளைச் சந்தித்தனர். நமது மக்களோ பிரமாண்டமான வெற்றிகளை ஈட்டினர். 'போரை வியட்நாமிய மயமாக்கும்' திட்டம் கடுமையான பின்னடைவைப் பெற்றது. இது வியட்நாமிய மயமாக்குதல் என்ற போர்த் திட்டமும், நிக்சன் கோட்பாடும், பல தீர்க்க முடியாத முரண்பாடுகளையும், நீக்க முடியாத பலவீனத்தையும் கொண்டிருந்தன என்பதையும் நிரூபிக்கிறது. நிக்சனின் 'வியட்நாமிய மயமாக்குதல்' என்ற போர்த்தந்திரம் ஒரு பிரமையே தவிர வேறல்ல. **அரசியல் துறையில்,** நமது மக்களுக்கும் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கும் இடையே உள்ள அடிப்படை முரண்பாடுகளை மூடிமறைப்பதற்காக சுதந்திரம், விடுதலை என்கிற நவகாலனியத் தூண்டிலிரையைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அவன் நம்பினான். அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராக நமது மக்கள் அனைவரும் நெருக்கமாக ஐக்கியப்பட்டிருந்த தருணத்தில் தான், மேலே சொல்லப்பட்ட முரண்பாடுகள் மிகவும் கடுமையாகி இருந்த அதே தருணத்தில் தான், எந்தவிதமான தேசிய உணர்வும் இல்லாதிருந்த அடிவருடிகளைக் கீழ்க்காணும் காரியங்களுக்குப் பயன்படுத்தலாம் என்று அவன் நம்பினான்:

1. வியட்நாமியர்களே வியட்நாமியர்களை எதிர்த்துச் சண்டையிடும்படிச் செய்யும் கொள்கையை நடைமுறைப் படுத்துதல்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களின் நலன்களுக்குச் சேவை புரிதல்...

**இராணுவத் துறையில்**, பத்து இலட்சம் அமெரிக்க மற்றும் பொம்மைத் துருப்புகளைக் கொண்டிருந்த அமெரிக்கா தோற் கடிக்கப்பட்டு, அமெரிக்கத் துருப்புகளை அது படிப்படியாக திரும்பப்பெற வேண்டியிருந்த போது, பலவீனத்தைப் பல மாகவும், தோல்வியை வெற்றியாகவும் மாற்றலாமென்றும் பொம்மைத் துருப்புகளை எழுந்து நிற்கச் செய்து அமெரிக்கத் துருப்புகளுக்கு அவர்களை மாற்றீடாக்கலாமென்றும் நிக்சன் நம்பினான். அந்நிய ஆக்கிரமிப்பை எதிர்ப்பதில் அசையாத உறுதி, தேசப்பற்று என்ற நீண்ட மரபைக் கொண்டிருந்த நமது மக்கள், தாம் ஈட்டியுள்ள வெற்றிகளின் காரணமாக பலம்பொருந்திய நிலையிலிருந்தனர்; தொடர்ந்து வலிந்த தாக்குதல் தொடுக்கும் நிலையிலிருந்தனர். இத்தகைய மக் களின் வீரமிக்க போராட்டத்தால் எதிர்க்கப்பட்ட நிலையில் நிக்சன் கோட்பாட்டுக்கான முக்கியமான சோதனையான 'வியட்நாமியமயமாக்கும் போர்த் திட்டம்' பரிதாபகரமாக தோற்றுப் போனது. நாடு முழுவதிலும் இருந்த நமது மக் கள், லாவோஸ், கம்போடியா ஆகியவற்றிலுள்ள சகோ தர மக்களோடு நெருக்கமாக ஐக்கியப்பட்டு, தங்களுடைய எதிர்ப்புப் போராட்டத்தை விடாமுயற்சியுடன் நடத்தி போரைத் துரிதப்படுத்தி, 'போரை வியட்நாமிய மயமாக் குதல்' என்ற போர்த் தந்திரத்தையும் இந்தோ சீனுவில் நிக்சன் கோட்பாட்டையும் தோற்கடிக்கவும் முழு வெற் றியை ஈட்டவும் உறுதி பூண்டன:

பின்னேக்கிப் பார்க்கும்போது, நாம் கீழ்க்கண்டவற் றைக் கூறலாம்:- தென்வியட்நாமியப் புரட்சிப்போரில் நமது மக்கள் இராணுவ மற்றும் அரசியல் போராட்டத் திலும், ஆயுதஎழுச்சி மற்றும் புரட்சிப்போரிலும், இராணுவ



ஒழுங்கமைப்பிலும் கடந்த தசாப்தங்களில் பெற்ற அனுப வத்தின் சாரத்தை ஆக்கபூர்வமாகத் தொகுத்துக் கொண்ட னர். தென்வியட்நாமின் புரட்சிகர வளர்ச்சியின் விதிகளை யும், புரட்சிகரச் செயல்முறைகளின் விதிகளையும், அமெரிக்க நவகாலனியம், அமெரிக்க நவகாலனியத்தின் ஆக்கிரமிப்புப் போர் ஆகியவற்றின் வளர்ச்சி விதிகளையும் பற்றி நன்கு அறிந்த நமது மக்களும் தென்வியட் நாமிலுள்ள சேனையும் இந்த அனுபவம் முழுவதையும் ஒரு உயர்ந்த மட்டத்துக்கு ஒரு புதிய சூழ்நிலைக்குக் கொண்டுவந்துள்ளனர். தென் வியட்நாமின் புரட்சிப்போரில் நமது மக்கள், அர சியல்படைகளை ஆயுதப்படைகளுடன் நெருக்கமாக ஒருங் கிணைத்தல், ஆயுதப்போராட்டத்தையும் அரசியல் போராட் டத்தையும். ஏககாலத்தில் நடத்துதல், எழுச்சியைப் போருடனும் போரை எழுச்சியுடனும் இணைத்தல் ஆகிய வற்றிலிருந்து பெறப்படும் தமது ஒட்டுமொத்த சக்தியை வளர்த்துக் கொண்டுள்ளனர். போரின் வளர்ச்சிக் கட்டம் ஒவ்வொன்றிலுமுள்ள திட்டவட்டமான நிலைமைக்கு ஏற்ப, தென் வியட்நாமிலுள்ள மக்களும் சேனையும் நெளிவுசுளி வுடனும் ஆக்கபூர்வமாகவும் ஆயுதப்படைகளையும் அரசியல் படைகளையும் ஒருங்கிணைத்தனர்; அமெரிக்க ஆக்கிரமிப்புப் போர் உச்சகட்டத்தில் இருந்தபோது கூட, நவகாலனிய ஆக்கிரமிப்புப் போரின் எல்லா வடிவங்களையும் அடுத் தடுத்துத் தோற்கடித்தனர்.

அமெரிக்க ஆக்கிரமிப்புக் கெதிரான, தேசிய விமோச னத்துக்கான எதிர்ப்புப்போர், பெரியஅளவில் மக்களைத் திரட்டுவதிலும் அவர்களை ஆயுதபாணியாக்குவதிலும் சாதனை புரிந்தது. தென் வியட்நாமின் மக்கள் ஜனநாய கத் தேசியப் புரட்சியில் கடைபிடிக்கப்பட்ட சரியான மார்க்கத்தை வழங்கும் மகத்தான ஆற்றலையும் வடவியட் நாமிலுள்ள சோஷலிச சமூக அமைப்பின் மேன்மையையும் சார்ந்துநின்று, நமது மக்கள், அரசியல் படைகளைக் கட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யமைத்துள்ளனர். இவை பல ஆண்டு கால போராட்டத்தில் பட்டுத்தேறியவை. மென்மேலும் சிறந்த முறையில் ஒழுங்கமைக்கப்பட்டு வருபவை மென்மேலும் அதிகரித்த தீவிரத்துடன் வளர்ந்துவருபவை. இந்த அரசியல்படைகளின் அடிப்படையில் நாம் முன்எப்போதையும் விட வலுவான **மக்களின் ஆயுதப்படைகளை** கட்டியமைத்துள்ளோம். இவைமக்களின் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட விரிந்த **ஆயுதப்படைகளையும்** தொடர்ந்து நவீனப் படுத்தப்பட்டு வரும் கிரமப் **புரட்சிச்சேனையையும்** கொண்டவை. இவை எதிர்ப்புப்போரின் வெவ்வேறு வளர்ச்சிநிலைகளில் சந்தித்த வெவ்வேறு போர்க்களங்களில் வெவ்வேறு பாத்திரங்களை வகித்துள்ளன . ஆனால் பொதுவாகச் சொன்னால், **தென் வியட்நாமில் நடந்த புரட்சிப்போரில், ஆயுதப்படைகளும் அரசியல் படைகளுமாகிய இரண்டுமே அடிப்படையானதும் தீர்மானகரமானதுமான போர்த்தந்திர பாத்திரத்தை வகித்திருக்கின்றன;** தென்வியட்நாமின் மக்கள் விடுதலை ஆயுதப்படைகளில், **விடுதலைச் சேனையானது கிரமசேனை, பிரதேசப்படைகள் ஆகியவற்றையும் குடிப்படைகள் கெரில்லாப்படைகள் தற்காப்புப்படைகள் என்பவற்றைக் கொண்ட மக்களின் ஆயுதப்படைகளையும் கொண்டு அமைந்திருந்தது.** இவை பெரிய போர்த்தந்திரப் பங்கை ஆற்றின, போரின் அடுத்துவந்த கட்டங்களில் இவை மென்மேலும் முக்கியமானவையாகி வருகின்றன.

வியட்நாமுக்கும். இந்தோ சீனாவுக்கும் எதிரான ஆக்கிரமிப்பும் போரில் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் பெற்ற தோல்வியானது அவர்களது ஆக்கிரமிப்புப்போர் வரலாற்றில் அவர்கள் சந்தித்தவற்றிலேயே மிகமோசமான தோல்வியாகும். அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் தேசிய விமோசனத்துக்காகவும் நம் மக்கள் நடத்திய போராட்டத்தில் பெறப்பட்ட மகத்தான வெற்றியானது,



பின்வரும் விஷயத்தை மெய்ப்பிக்கிறது: அதாவது, **ஏகாதிபத்திய சக்திகளிலேயே மிகப்பெரிய சக்தியாகிய அமெரிக்கா உள்ளிட்ட பெரிய ஏகாதிபத்திய சக்திகள் தொடுக்கும் நவகாலனிய ஆக்கிரமிப்புப் போரை எதிர்த்து, ஒரு சிறிய தேசம் தன் அனைத்து மக்களதும், தேசமனைத்தினதும் படைகளைத் திரட்டுவதும், அரசியல் - ஆயுதப்படைகளை நெருக்கமாக இணைப்பதும், புரட்சிச் சேனையுடன் மக்களின் ஆயுதப் படைகளை நெருக்கமாக இணைப்பதும், அரசியல் போராட்டம் - ஆயுதப் போராட்டம் ஆகியவற்றையும், ஆயுத எழுச்சி - புரட்சிப் போர் ஆகியவற்றையும் துவங்கி நடத்துவதும், இவ்வாறு அந்த ஆக்கிரமிப்பு ஏகாதிபத்திய சக்திகளைத் தோற்கடித்து வாகை சூடுவதும் நம் காலத்தில் சாத்தியம் தான்.**

★

கடந்த நாற்பதாண்டுகளாக நமது நாட்டில் நடந்து வரும் புரட்சிப் போராட்டம், ஆயுத எழுச்சியின் வளர்ச்சி, புரட்சிப் போர், மக்களின் ஆயுதப்படைகளின் வளர்ச்சி ஆகிய நிகழ்முறையை திரும்பிப் பார்க்கும்போது, நாம் நம் கட்சி பற்றியும் நமது வணக்கத்துக்குரிய தலைவர் ஹோ சி மின் பற்றியும் நமது மக்களைப் பற்றியும் நமது தேசத்தைப் பற்றியும் மிகுந்த பெருமிதம் கொள்கிறோம். நான் மேலே சொன்னது போல, நாட்டைக் கட்டிக்காப்பதற்காக எழுச்சி நடத்திய நாலாயிரமாண்டுக்கால நமது வரலாற்றில் இக் காலம் போல் நீண்ட காலம் தொடர்ந்து எழுச்சியில் நாம் இதற்கு முன் ஈடுபட்டதில்லை. குரூரமானதும், பழிபாவங்களுக்கு அஞ்சாததுமான உலகப் பொலிசாகவும், உலகிலேயே மிகப் பெரிய பொருளாதார, இராணுவ ஆற்றலைப் பெற்றுள்ள நாடாகவும் இருக்கிற அமெரிக்க ஏகாதி

பத்தியம் உள்ளிட்ட மூன்று மிருகத்தனமான ஆக்கிரமிப்பாளர்களை சில தசாப்தமேயாகிய குறுகிய காலத்துக்குள் நமது தேசம் அடுத்தடுத்து இக்காலத்தில் தோற்கடித்தது போல் நமது பாத்திரங்களையும் தழுவியிருக்கின்றன. ஒவ்வொரு நாளிலும் அவை மென்மேலும் உயர்ந்த மட்டத்தை எட்டின. ஆயினும் அவை எப்போதும் பின்வரும் **இரு அடிப்படைப் பகுதிகளின் சேர்க்கையாகவே** இருந்து வந்திருக்கின்றன.

1) கிரம சேனையையும் பிரதேச படைகளையும் கொண்ட **மக்கள் சேனை.**

2) விரிவான குடிப்படைகளும் தற்காப்பு அமைப்புகளும் கொண்ட **மக்கள் ஆயுதப்படைகள்.**

நம் நாட்டில் நடந்த எழுச்சிகளும், போர்களும் காட்டும் உண்மை என்னவென்றால், **அனைத்து மக்களையும் ஆயுதபாணியாக்குவது** என்பது பரந்துபட்ட மக்களை ஆயுதந் தரிக்கச் செய்து ஒரு மக்கள் சேனையை உருவாக்குவது என்பதாகும். மக்களின் ஆயுதப்படைகளைக் காட்டிலும் **மக்கள் சேனைக்கு** சில அனுகூலங்கள் உண்டு: அவை, வலுவான அமைப்பு, சிறந்த கட்டுப்பாடு, கவனமான பயிற்சி, வளர்ச்சி பெற்ற தொழில் நுட்ப சாதனங்கள், ஒன்றுபட்ட இராணுவ-அரசியல் தலைமை, மகத்தான போரிடும் ஆற்றல்கள், சண்டைக்குச் செல்ல உயர்ந்தபட்ச தயார் நிலை ஆகியன. மறுபுறம் **மக்களின் ஆயுதப்படைகளுக்கு** மக்கள் சேனையைக் காட்டிலும் சில அனுகூலங்கள் உண்டு: அப்படைகள் மக்களுடன் நெருங்கி ஒருங்கிணைந்திருப்பதாலும், மக்கள் சக்தியிலிருந்து நேரடி ஆதரவு பெற்றுக் கொள்வதாலும் இந்த அனுகூலம் கிட்டுகிறது. மேலும் அவை பலதரப்பட்ட ஆயுதங்களை உபயோகிப்பதும், எந்த விதமான இடத்திலும் நேரத்திலும் சண்டையிடத்தக்க



தான எண்ணற்ற சண்டைமுறைகளைத் தெரிந்துவைத்திருப்பதும் அவற்றுக்கு அனுகூலமாய் உள்ளன.

மக்களின் சேனையைக் கட்டும் அதே வேளை, மக்கள் திரளினரையும் **ஆயுதபாணிகளாக்குவது** என்பது **ஏககாலத்தில் முதுகெலும்பு போன்ற விரிவான படைகளான இயங்கு படையையும், இடம்பெயராப் படைகளையும்** உருவாக்குவதாகும். இவற்றைக் கொண்டே நவீன ஆயுத சாதனங்கள், உயர் இயங்கு திறன், பெரும் சுடுதிறன் ஆகியவற்றைப் பெற்றுள்ள பெரிய **ஆக்கிரமிப்பாளர்களைத்** தோற்கடிக்க முடியும். நாடு முழுவதற்கும் முதுகெலும்பு போன்ற இயங்கு படையையும் உருவாக்குவதுடன் ஒவ்வொரு பிரதேசத்துக்கும் முதுகெலும்பு போன்ற இயங்குபடையையும் உருவாக்கவும் வேண்டும். மூன்று போர்த்தந்திரப் பகுதிகளான மலையகங்கள், சமவெளிகள், கிராம, நகரப் பகுதிகள் ஆகியவற்றில் இடம்பெயராப் படைகளை நாம் கட்ட வேண்டும். நாடு முழுவதற்கும் முதுகெலும்பு போன்ற படையாகச் சேவை செய்யும் இயங்கு படையே **கிரம சேனையாகும்.** ஒவ்வொரு பிரதேசத்துக்கும் முதுகெலும்பு போன்ற இயங்கு படைதான் **பிரதேசப் படையாகும்.** ஆக, மக்கள் ஆயுதப் படைகள் **மூன்று வகைப் படைகளைக்** கொண்டுள்ளன:

1) கிரம சேனை;

2) பிரதேசப் படைகள்;

3) குடிப்படைகளும் தற்காப்புப் படைகளும்.

**கிரம சேனையும்,** பிரதேசப் படைகளும் சேர்ந்து **மக்கள் சேனையாக அமைகின்றன.** குடிப்படைகளும், தற்காப்புப் படைகளும் சேர்ந்து **மக்கள் ஆயுதப்படைகளாக** அமைகின்றன. தேச அளவில் கிரம சேனை, இயங்கு படையாக உள்ளது; பிரதேசப் படைகள், குடிப்படைகள், தற்காப்புப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைகள் ஆகியன இடம்பெயராப் படைகளாகும். பிரதேசப் படைகள், தற்காப்புப்படைகள், குடிப்படைகள் ஆகியவை சேர்ந்து பிரதேச மக்கள் ஆயுதப்படைகளாக அமைகின்றன. பிரதேச அளவில் பிரதேசப்படைகள் இயங்குபடைகளாகும். குடிப்படைகளும், தற்காப்புப் படைகளும், இடம்பெயராப் படைகளாகும். ஒரு பிரதேசத்தின் பிரதேசப் படைக்கும், குடிப்படை மற்றும் தற்காப்புப் படைகளுக்கும் உள்ள உறவானது, தேச அளவில் மக்கள் சேனைக்கும், மக்களின் ஆயுதப்படைகளுக்கும் உள்ள உறவைப் பிரதிபலிப்பதாக உள்ளது.

மக்கள் சேனையும், மக்கள் ஆயுதப்படைகளும் இணைந்த வடிவமே, அல்லது மாற்றிச் சொன்னால், மக்கள் ஆயுதப் படைகளும், மக்கள் சேனையும் இணைந்த வடிவமே, அனைத்து மக்களதும், நாடு முழுவதினதும், முழு தேசத்தினதும் ஆற்றலை முழுமையாய் கைகூடச் செய்வதற்கு மிகப் பொருத்தமான இராணுவ அமைப்பு வடிவமாகும். அரசியல் படைகளை, ஆயுதப்படைகளோடும் அரசியல் போராட்டத்தை, ஆயுதப் போராட்டத்தோடும் ஆயுத எழுச்சியை, புரட்சிப் போருடனும் இணைத்தல் என்பது நம் நாட்டில் புரட்சிகர வன்முறையின் அடிப்படை வடிவமாக இருக்கிறது. இது போலவே ஆயுதப்படைகளை, அரசியல் படைகளுடனும் ஆயுதப் போராட்டத்தை, அரசியல் போராட்டத்துடனும் இணைப்பதற்கும், எழுச்சியினதும், போரினதும் முறைகளையும், அனைத்து மக்களின் எழுச்சியினதும், மக்கள் யுத்தத்தினதும் இராணுவ அறிவையும் பிரயோகிப்பதற்கும், புரட்சிச் சேனையை மக்களின் ஆயுதப்படைகளுடன் இணைப்பது மிகப் பொருத்தமான இராணுவ அமைப்பாக இருக்கிறது.

மேற்குறிப்பிடப்பட்ட உண்மைகளும் அனுபவமும் நம்மைப் பின்வரும் முடிவுக்கு வரச் செய்கிறது: புரட்சிச்



சேனையை, மக்கள் ஆயுதப்படைகளுடனும் மக்கள் ஆயுதப் படைகளை, புரட்சிச் சேனையுடனும் இணைத்தல், மக்கள் ஆயுதப்படைகளின் மூவகைகளைக் கட்டுதல் என்பன, மக்கள் ஆயுதப்படைகளின் அமைப்பினதும் தொழிற்பாட்டினதும் விதிகளாக அமைகின்றன. இவை, பெரிய ஏகாதிபத்திய சக்திகளின் ஆதிக்கத்துக்கும் ஆக்கிரமிப்புப் போர்களுக்கும் எதிராகப் போராட வேண்டியிருக்கிற ஒரு சிறிய நாட்டின் அனைத்து மக்களும் சேர்ந்து நடத்தும் எழுச்சியிலும், மக்கள் யுத்தத்திலும், தேசப் பாதுகாப்பிலும், விடுதலைப் போரிலும், தாய்நாட்டைப் பாதுகாக்கும் போரிலும், மக்களனைவரும், முழு தேசமும், நாடு முழுவதும் ஈடுபடுவதில் தம் முழுமையான ஆற்றலை வெளிப்படுத்த அனுமதிக்கும் விதிகளாகும்.

புரட்சிகர மக்களை ஆயுதபாணியாக்குவதிலும், மக்கள் சேனையைக் கட்டுவதிலும் நமது கட்சியும், மக்களும் கொண்டுள்ள படைப்புத்திறன், பாட்டாளிவர்க்க இராணுவஅமைப்பு பற்றிய மார்க்சிய-லெனினிய ஆய்வுரையின் அடிப்படையிலிருந்தும் ஆயுதப்படைகளைக் கட்டுவதில் நம் முன்னோருக்கிருந்த அனுபவத்தின் தொடர்ச்சியினதும், வளர்ச்சியினதும் அடிப்படையிலிருந்தும் எழுவதாகும். நமது கட்சி நவீன பாட்டாளி வர்க்க இராணுவ விஞ்ஞானத்தை நம் சொந்த தேசிய மரபுடன் நன்கு இணைத்துள்ளது. நமது சகாப்தத்தின் புதிய சூழ்நிலைமைகளிலும் புதிய வரலாற்று நிலைகளிலும் நடத்தப்படும் நம் மக்களின் போராட்டத்திற்கு அவ் விஞ்ஞானத்தையும் மரபு அனுபவத்தையும் சரியாகப் பிரயோகிக்கிறது. எனவேதான் வியட்நாமியத் தொழிலாளி வர்க்கம் தேசத்தின் அதிகாரபூர்வ பிரதிநிதியாகியுள்ள இச் சகாப்தத்தில், கட்சியின் தலைமையின் கீழ் நம் நாட்டில் நடத்தப்படும் ஆயுத எழுச்சி, புரட்சிப் போர், தற்போதைய இராணுவ அமைப்பு ஆகியவற்றின் உயர்ந்த வளர்ச்சி கூட, நம் மக்களின் போராட்ட வரலாறு, மரபு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றின் இன்றியமையாததும் தர்க்கபூர்வமானதுமான வளர்ச்சியாகவே இருக்கிறது. கட்சியினுடையவும், தலைவர் ஹோ சி மின்னுடையவும் தலைமையின் கீழ், நம் மக்கள் அந்நிய ஆக்கிரமிப்புக்கெதிரான தம் வீரஞ்செறிந்த போராட்ட மரபைக் கட்டிக்காத்தும், அதைப் புகழ்பெற்ற வகையில் வளர்த்தும் உள்ளார்கள். தொழிலாளி வர்க்கக் கட்சியின் தலைமையின் கீழ் அனைத்து வியட்நாமிய மக்களும் நடத்திய எழுச்சியும், மக்கள் யுத்தமும் நமது நாட்டில் நடந்த ஆயுத எழுச்சி மற்றும் புரட்சிகரப் போரின் வளர்ச்சி எய்திய உச்சநிலையாகும். **அவை, புதிய சகாப்தமாகிய ஹோ சி மின் சகாப்தத்தில் அனைத்து வியட்நாம் மக்களும் நடத்திய எழுச்சியும், மக்கள் யுத்தமுமாகும்.**

மூன்று ஏகாதிபத்திய சக்திகளுக்கெதிரான போரில் நமது மக்கள் ஈட்டிய அடுத்தடுத்த வெற்றிகள், மனித வரலாற்றில் புதிய சகாப்தமான இச் சகாப்தத்தில் தொழிலாளி வர்க்கத்தின் கீழும் அவர்களின் மார்க்சிய - லெனினியக் கட்சியின் கீழும் நடத்தப்பட்ட **மக்கள் யுத்தத்தின் மகாவல்லமைக்கும், மக்கள் ஆயுதப்படைகளின் வெல்ல முடியாத ஆற்றலுக்கும்** சான்று பகர்வனவாயுள்ளன. இந்த மக்கள் ஆயுதப்படைகள், ஆயுதமேந்திப் போராடி தம்மை விடுவித்துக் கொள்ளவும் புதிய சமுதாயத்தை உருவாக்கவும் எழுந்த தொழிலாளி வர்க்கத்தின், பாட்டாளி மக்களின், ஒடுக்கப்பட்ட மனிதர்களின் புதுவகை இராணுவ அமைப்பாகும்.

தேசிய சேனையினதும், ஆயுதப்படைகளினதும் மகா பலம் பொருந்திய எழுச்சியாலும், தேசியப் போராலும் நமது முன்னோர் தேச சுதந்திரத்தை மீட்டெடுப்பதிலும், கட்டிக்காப்பதிலும் புகழ்மிக்க வெற்றி பெற்றனர். தம்மினும் வலியராகவும் ஆனால் தம்மைப் போலவே நிலப்பிரபுத்துவ ஆட்சியின் கீழேயே இருந்தவர்களும் உற்பத்திச்



சக்திகளிலும் தொழில்நுட்ப அடிப்படையிலும் தமக்குச் சமமான வளர்ச்சியே பெற்றிருந்தவர்களுமான எதிரிகளை அவர்கள் தோற்கடித்தார்கள். இன்றோ தொழிலாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் அனைத்து மக்களும் நடத்திய எழுச்சியினதும், மக்கள் யுத்தத்தினதும் புதிய ஆற்றலின் காரணமாக, கட்சிப் பதாகையின் கீழ் ஒன்றுபட்ட அனைத்து மக்களின் புதிய ஆற்றலின் காரணமாக, மக்கள் சேனையினதும், மக்கள் ஆயுதப்படையினதும் புதிய ஆற்றலின் காரணமாக, நமது கட்சியும், மக்களும் வரலாறு அவர்களிடம் ஒப்படைத்த பெரும் பொறுப்பை நிறைவேற்றுவதில் வெற்றி பெற்றுள்ளார்கள். எதிரியினும் குறைந்த பொருளாதார, பௌதீக, தொழில் நுட்ப மூலவளங்களையே பெற்றுள்ள சிறிய தேசத்தின் அனைத்து மக்களின் சக்தியை சார்ந்து நின்றும், புதிய ஆட்சியின் மேன்மையைச் சாதகமாக்கிக் கொண்டும் நம் கட்சியும், மக்களும் தம்மினும் கூடிய எண்ணிக்கையும், சாதனமும், நவீன ஆயுதமும், போர் முறைகளும் கொண்ட பெரிய ஏகாதிபத்தியச் சக்திகளின் ஆக்கிரமிப்புச் சேனைகளைத் தோற்கடித்துள்ளார்கள்.

இந்த மிக முக்கியமான போர்த்தந்திரப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, நமது கட்சியானது, **படைகளின் அமைப்புக்கும் பௌதீக - தொழில்நுட்ப அடிப்படைக்கும் இடையிலான இயங்கியல் உறவை, மனிதர்களுக்கும் ஆயுதங்களுக்கும் இடையிலான இயங்கியல் உறவை முழுமையாகப் புரிந்துகொண்டு அதற்கு சரியான முறையில் தீர்வு கண்டது.** இதைப் பற்றி மேலே விரிவாகப் பார்த்தோம். பொதுவாக போரில் நீதிக்காகப் போராடுவதும் எண்ணிக்கைப் பலமும், மிக நவீன ஆயுதங்களும், வளர்ச்சி பெற்ற பொருளாதாரத்தின் துணையும் கொண்டவையுமான சேனைகளே வெற்றி பெறுகின்றன. ஆனால் நமது நாட்டின் ஒரு பிரதான தன்மை என்னவெனில் எண்ணிக்கையிலும் சாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னத்திலும் தங்களை விட வலிய எதிரியை எதிர்த்து நமது தேசம் வெற்றிகளைக் குவித்திருக்கிறது. இன்றும் எதிரி மிக நவீனமான ஆயுதங்களையும் மிக வளர்ச்சிபெற்ற பொருளாதாரத்தின் உதவியையும் பெற்றிருக்கையில் நாமோ அவனளவுக்கு அவ்வகையான வலிமையற்றவர்களாயிருந்தும் வெற்றியே பெற்று வருகிறோம். இந்த ஒளிமிக்க வெற்றியின் ரகசியம், மனிதர்களை ஆயுதங்களுடன் உறவுபடுத்துவது எப்படி என்பதை நம் கட்சி அறிந்திருக்கிறது என்பதும், ஆயுதங்கள் மிக முக்கியமான ஒரு காரணியே என்றாலும் தீர்மானகரமான காரணி மனிதர்களே என்பதை அது உணர்ந்திருக்கிறது என்பதும் தான். புதிய சகாப்தத்தில் வாழும் வியட்நாமியப் போர்வீரன் புதிய அரசியல் உணர்வும், உயர்ந்த போர்க்குணமும் பெற்றிருக்கிறான். புதிய சமுதாய அமைப்பாகிய மக்கள் ஜனநாயக அமைப்பும் சோஷலிச ஆட்சியும் அனைத்து அம்சங்களிலும் மிகுந்த வீரியமும் மேன்மையும் கொண்டு விளங்குகிறது. புதுவகை இராணுவ அமைப்பானது நம் வரலாற்றில் முன்னெப்போதையும் விட ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிராக மிக அதிக அளவில் மனிதர்களை அணிதிரட்டுவதை அனுமதிக்கிறது. சேனை மற்றும் மக்கள் ஆயுதப்படைகளின் ஒருங்கிணைப்பு, மக்கள் ஆயுதப்படைகளின் இராணுவக் கலையை மேலும் வளர்த்துள்ளது; இது தீவிர புரட்சிகர உள்ளடக்கத்தையும் கடுமையாக வலிந்து தாக்கும் குணத்தையும் படைப்புத் திறனும் மூலச்சிறப்புடைய போர்முறைகளையும் கொண்டிருக்கிறது.

இப் புதிய தேர்ச்சிகளும் பண்புகளும் தான், நாம் ஆயுத சாதனங்களில் பலங்குறைந்தவர்களாயிருந்தும் கூட தேச முழுவதன் அதிகாரமும் மக்களின் ஆயுதப்படைகளும் வளர்ச்சி பெறுவதற்கான அடித்தளமாக அமைந்தன. இதன் விளைவாக தேசமுழுமையும் எழுச்சி பெற்ற போதும் அனைத்து மக்களின் ஆயுதப்படைகளும் பிரமாண்டமான



ஆற்றலைப் பெறுகின்றன; அதனால் எண்ணிக்கையிலும் ஆயுத சாதனங்களிலும் மேம்பட்ட அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளைப் போன்ற எதிரியை தோற்கடிக்க முடிகிறது. அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைகளையும் பொம்மைத் துருப்புகளையும் போல மிக நவீன ஆயுதங்களுடன் ஆக்கிரமித்த பத்து லட்சம் பேர் கொண்ட சேனையை நம் வரலாற்றில் இதற்கு முன் நாம் சந்தித்ததில்லை. அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளைப் போல மிகப் பெரிய பொருளாதார இராணுவ ஆற்றலைப் பெற்றிருந்த எதிரியை நம் மக்கள் இதுவரை ஒருபோதும் சந்தித்ததில்லை. ஆனால் நமது சேனையும் மக்களும் மென்மேலும் அதிகரித்த அளவில் பெரும் வெற்றிகளைப் பெற்று வருகிறார்கள். அவர்கள் முழு வெற்றியைப் பெறுவார்கள் என்பது உறுதி.

நமது மக்களின் ஆயுதப்படைகளின் இராணுவ வெற்றியானது, போரில் தீர்மானகரமான பங்காற்றுவது ஆயுதங்களும் தொழில் நுட்பமுமே என்ற முதலாளி வர்க்க இராணுவ சிந்தனையைத் தவிடுபொடி ஆக்கியுள்ளது. மனிதர்களே தீர்மானகரமான பங்காற்றுவோர் என்ற பாட்டாளி வர்க்க இராணுவ சிந்தனை சரியானது என்பதை அது மெய்ப்பிக்கிறது. முதலாளிய இராணுவ விஞ்ஞானத்தை விட பாட்டாளி வர்க்க இராணுவ விஞ்ஞானம் உயர்ந்தது என்பதை அது காட்டுகிறது. பெரிய ஏகாதிபத்திய சக்திகள், தாம் விரும்பியபடியெல்லாம் சிறிய தேசங்களை ஆட்டிவைக்கவும், ஆதிக்கம் செலுத்தவும், அடிமைப்படுத்தவும் தம் இராணுவ வலிமையைப் பயன்படுத்த முடிந்த காலம் நிச்சயமாக மலையேறி விட்டது.

பெரும் பொருளாதார இராணுவ ஆற்றலும், சிறந்த ஆயுத சாதனங்கள் பெற்றுள்ள பெரிய சேனைகளும் கொண்ட ஏகாதிபத்திய சக்திகளுக்கெதிரான எதிர்ப்புப் போரில், பெரிய நிலப்பரப்போ மக்கள் தொகையோ இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாததும் குறை வளர்ச்சிப் பொருளாதாரம் உடையதுமான சிறிய தேசமாகிய வியட்நாம் தேசம் பெற்ற பெரும் வெற்றி, தேசங்கள் அளவிற் சிறியவையாயினும், அவை நீதியான போர் தொடுக்குமாயின் அவற்றின் பலம் மகத்தானது என் பதற்கு ஆற்றல்மிக்க சான்ருகும். மேலும் அவ் வெற்றி அநீதியான ஆக்கிரமிப்புப் போர்களில் பெரிய ஏகாதிபத்திய சக்திகளுக்குள்ள ஆற்றல்களின் வரம்பை வெளிப்படுத்தி யுள்ளது. நமது சகாப்தத்தில் ஒரு சிறிய தேசமும் கூட, அது வைராக்கியத்துடன் ஒன்றுபட்டு நின்ருல், சரியான புரட்சி மார்க்கத்தைக் கடைப்பிடித்தால், எழுச்சி பெற்று போர் தொடுக்குமாறு மக்களனைவரையும் அணிதிரட்டவும், தேசப்பாதுகாப்பைக் கட்டி வலுப்படுத்தவும், சர்வதேச ஆதரவையும் உதவியையும் பெற்றுக்கொள்ளவும், அதனுல் முடியுமானுல், அத்தகைய தேசம் காலனிய ஆட்சியைத் தூக்கியெறிய முடியும்; முதன்மையான ஏகாதிபத்திய சக்தியான அமெரிக்கா உட்பட்ட பெரும் ஏகாதிபத்திய சக்திகளின் ஆக்கிரமிப்புப் போரைத் தோற்கடிக்கவும் முடியும். □



# IV

## புரட்சிகர மக்களை வலுவாகவும் விரிவாகவும் ஆயுதபாணியாக்குவதும், ஒரு நவீன கிரம மக்கள் சேனையைக் கட்டியெழுப்புவதும் அவசியமாகும்

நம் நாட்டின் இரு பகுதிகளிலும் நம் மக்களின் தேச விமோசனத்துக்காக அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்து நடக்கும் எதிர்ப்புப் போர் மகத்தான வெற்றிகளைப் பெற்றுள்ளது; இப்போது அது ஒரு தீர்மானகரமான கட்டத்தை அடைந்து கொண்டிருக்கிறது.

தென் வியட்நாம் போர்க்களத்தில் நிக்சன் நிர்வாகம் கடந்த ஆண்டுகளில் இராணுவ, அரசியல் துறைகளில் கடுமையான பின்னடைவைச் சந்தித்திருக்கிறது. இருந்தும், இன்றும் அது 'போரை வியட்நாமிய மயமாக்கும்' போர்த் தந்திரத்தை பிடிவாதமாகச் செயல்படுத்தி வருகிறது. அமெரிக்க சண்டைத் துருப்புகளைப் பெருமளவில் திரும்பப் பெற்றுக் கொண்ட அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் பொம்மைச் சேனையை ஆத்திர அவசரமாக வலுப்படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறார்கள். அதை அவர்கள் தென் வியட்நாமில் அமெரிக்கத் துருப்புகளுக்கு பதிலாகவும், இந்தோ சீன போர்க்களத்தில் அமெரிக்கத் தலைமைக்கும் மேற்பார்வைக்கும் கீழ் வைக்கப்படும் கூடுதல் படையாகவும் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் 'சாந்தப்படுத்தும் திட்டத்தை' முடுக்கி விட்டுள்ளார்கள். துடைத்தொழிப்புகளைச் செயல்படுத்துகிறார்கள்; மக்களைப் பட்டிகளில் அடைத்து வருகிறார்கள். நெருக்கமான இராணுவக் காவல் நிலையங்களின் தொகுதியை உருவாக்கி வருகிறார்கள். தென் வியட்நாம் முழுவதையும் ஒரு மிகப்பெரிய வதைமுகாமாக மாற்றி வருகிறார்கள். இப்படியெல்லாம் அவர்கள் செய்யக் காரணம் மக்களை இறுக்கமான கட்டுப்பாட்டில் அடக்கி வைக்கவும், புரட்சித் தளங்களை அழித்தொழிக்கவும், நம் நவ காலனிய ஆக்கிரமிப்புப் போருக்கான ஆட்பலத்தையும் மூலவளங்களையும் கவர்ந்து கொள்வதற்கும் அவர்கள் முயல்வது தான். சமாதானம், சுதந்திரம், நடுநிலை, தேசிய ஒற்றுமை, ஜனநாயக சுதந்திரம், வாழ்க்கைநிலை மேம்பாடு ஆகியவற்றைத் தென் வியட்நாமின் வெவ்வேறு தட்டு மக்கள் நாடுவதும் தேடுவதுமாகிய போக்கை நிர்த்தாட்சணியமாக ஒடுக்குவதன் மூலம் நிகுயன் வான் தியூ (Nguyen Van Thieu) பாசிசக் கும்பலை ஆட்சியில் இருத்திவைக்க மிகுந்த பிரயாசைப் படுகிறார்கள்.

வட வியட்நாமில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் போர் முயற்சிகளைப் பிடிவாதமாகத் தொடர்கிறார்கள். அவர்களின் விமானப் படைகள் தொடர்ந்து வேவுகள் நடத்துவதும் மக்கள் நெருக்கமுள்ள பிரதேசங்களில் குண்டுபொழிவதுமாக நம் மக்களுக்கெதிராக சொல்லொண்ணுக் குற்றங்கள் இழைக்கின்றன. நிக்சனும், லெயிர்டும் (Laird) விமானப் படை, கப்பற் படைகளைக் கொண்டு மீண்டும் நாசகாரப் போர் நடத்தப் போவதாக அச்சுறுத்தியிருக்கிறார்கள். இந்த அச்சுறுத்தலின் நோக்கம், நமது மகத்தான பின்புலத்தின் உதவி மகத்தான போர்முனைப் படைநிலைகளுக்குக் கிடைக்க விடாமல் தடுப்பதும், சோஷலிச வட வியட்நாமின் பொருளாதார இராணுவ ஆற்றலை அழிப்பதும் நமது மக்களின் போராட்ட மனவுறுதியைக் குலைப்பதுமாகும்.

லாவோசில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் 'விசேடப் போரை' உக்கிரப்படுத்தியுள்ளார்கள். லாவோ விடுதலை வலயத்தை முற்றாக அழிப்பதற்காக குண்டுபொழியும் விமானங்களைப் பயன்படுத்துகிறார்கள். 'போரை லாவோ மயப்படுத்துவதை' முடுக்கி விட்டுள்ளார்கள். செம்மையாக உதை வாங்கிய வியன்டைன் துருப்புகளையும் வாங்பாவோ கொள்ளைக்காரர்களையும் காப்பாற்றுவதற்காக பெரிய அளவில் தாய்லாந்துத் துருப்புகளைக் கொண்டுவருகிறார்கள். இந்த பொம்மைகளையும், கொள்ளையரையும் கொண்டு எதிர்த்தாக்குதல்கள் தொடுத்து, லாவோ புரட்சியின் வலிந்த தாக்குதலை மடக்கிவிடப் பார்க்கிறார்கள்.

கம்போடியாவில் 'போரை கம்போடிய மயமாக்குவதை' அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் முன்னெடுத்துச் செல்கிறார்கள். நாம் பென் பொம்மையாட்சியை ஆயுதபாணியாக்குகிறார்கள். பொம்மைச் சேனையை பலப்படுத்துகிறார்கள். 'சாந்தப்படுத்தும் திட்டத்தை' செயல்படுத்தி வருகிறார்கள். மக்களை தாம் நினைத்த இடங்களுக்குத் துரத்தி நெருக்கியடைக்கிறார்கள். அமெரிக்க விமானப்படை உதவியுடன் கூடிய நாம் பென் பொம்மைத் துருப்புகளைப் பாவித்து மக்களுக்கெதிராக குற்றத் தன்மையுள்ள இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். கம்போடிய மக்களை எதிர்ப்பதற்காக தாய்த் துருப்புகளை அனுப்புப்படி தாய்லாந்துப் பிற்போக்கு அதிகாரிகளை நிக்சன் நிர்வாகம் நிர்ப்பந்தித்து வருகிறது.

தோல்வியை நோக்கி தலைதெறிக்க ஓடிக்கொண்டிருந்த போதிலும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் நம் நாட்டுக்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெதிரான ஆக்கிரமிப்புத் திட்டங்களை கைவிடவில்லை என்பது தெளிவு. தென் வியட்நாமில் தமது நவ காலனிய ஆட்சியை நிறுவிவிடுவது, தென் கிழக்கு ஆசியாவில் உலகப் பொலிஸ்காரன் என்ற தமது பாத்திரத்தைப் பதித்துவிடுவது என்ற ஒரே குறியுடன் பிடிவாதமாக அவர்கள் போரை நீட்டிக்கொண்டு போகிருர்கள். இந்த நோக்கத்துடன் அவர்கள் நிக்சன் கோட்பாட்டின் படி 'பொறுப்புகளை பகிர்ந்து கொள்ளுதல்' என்ற யோசனையை முன்வைக்கிருர்கள். இதற்கு ஒரே அர்த்தம், அமெரிக்க ஏகபோக முதலாளிக் கும்பல்களின் கேவலமான நலன்களைப் பாதுகாக்க அமெரிக்கப் பணத்துடனும், ஆயுதங்களுடனும் மற்ற தேச மக்களின் ரத்தத்தையும் உபயோகித்துக் கொள்ளவேண்டும் என்பதேயாகும். எனவே இப்போதும் ஆக்கிரமிப்பாளன் அமெரிக்க ஏகாதிபத்தியம் தான் என்ற போதிலும், நமது மக்கள் யுத்தத்திலும் மூன்று இந்தோசீன நாடுகளின் மக்கள் யுத்தங்களிலும் போர்க்களத்தில் நிற்கும் யதார்த்தமான எதிர்த்தரப்புப் படைகள் சில மாற்றங்களைப் பெற்றுள்ளன. 'போரை வியட்நாமிய மயமாக்கும்' போர்த்தந்திரம் செயல்படுத்தப்படும் தற்போதையக் கட்டத்தில், **அமெரிக்காவுக்கு சேவகம் புரியும் பொம்மைத் துருப்புகள்,** அமெரிக்கரால் ஒழுங்கமைக்கப்பட்டு சாதனங்கள் வழங்கப்பட்டு பயிற்சி தரப்படுகின்றன; அவற்றின் நவீன படைகளுக்கும் படைத்துறைகளுக்கும் நவீன போர்முறை ஆயுத சாதனங்கள் அமெரிக்கரால் வழங்கப்படுகின்றன. பொம்மைத் துருப்புகள் அமெரிக்க விமான, கப்பற் படைகளின் உதவியையும், இராணுவ விநியோக உதவிகளையும் தாராளமாய்ப் பெறுகின்றன; **படிப்படியாக அவை ஆக்கிரமிப்புப் போர்த்தந்தி...ல் முதன்மைப் படையாக ஆகிவருகின்றன.** புரட்சிப் போரின் **போர்க்களத்தில் பிரதான எதிர்த்தரப்புப் படையாகி வருகின்றன.** நம் நாட்டின் வட பகுதியைத் தாக்க, பொம்மைத் துருப்புகளின் நவீன விமானப்படையையும், கப்பற் படையையும் மேலும் வலுவாக்க அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் முனைந்து வருகிருர்கள்.[42]



போர்க்களத்தின் இந்த பிரதான இலக்கை இனம் **கண்டுகொண்ட** நாடு முழுவதிலுமுள்ள நமது மக்கள், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளதும் அவர்களின் கையாட்களதும் ஆக்கிரமிப்புப் போரைத் தோற்கடிப்பதில் தீர்மானமாயிருக்கிருர்கள். **தென் வியட்நாம் மக்கள் விடுதலை ஆயுதப்படைகள்** மக்களின் அரசியல் படைகளுடன் **ஒருங்கிணைந்து** 'போரை வியட்நாமிய மயமாக்கும்' போர்த்தந்திரத்தின் 'முதுகெலும்பாகிய' சைகோன் பொம்மைத் துருப்புகளை அழித்தொழித்திருக்கின்றன; அல்லது 'எலும்பை' முறித்திருக்கின்றன. அதே போது அப் போர்த்தந்திரத்தின் ஆட் பல, சாதன பல மூலாதாரமாகிய 'சமாதானப்படுத்தும் திட்டத்தை' நொறுக்கியுள்ளன. வட வியட்நாமிலுள்ள **நமது மக்கள் ஆயுதப்படைகள்** அமெரிக்க விமானப்படையும் கப்பற்படையும் தொடுக்கும் தாக்குதல்களை முறியடிக்க வேண்டும். அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் அனைத்து மட்டுமீறிய இராணுவத் துணிகரச் செயல்களையும் தோற்றேடச் செய்யவேண்டும்; சோஷலிச வட வியட்நாமை நன்கு பாதுகாக்கவும் மகத்தான பின்புலம் ஆற்றவேண்டிய கடமைகளை நிறைவேற்றுவதில் பங்களிப்புச் செலுத்தவும் வேண்டும். இந்தோசீன போர்முனைகளுக்கான நிக்சன் கோட்பாட்டின் 'பிற்போக்குப் பொம்மைப் படைகளும் - அமெரிக்க விமானப்படையும்' என்ற வாய்ப்பாட்டைத் தோற்கடிக்கும் பொருட்டு லாவோஸ், கம்போடியா நாட்டு சகோதர மக்களுடன் நெருக்கமாக ஒருங்கிணைந்து செயல்படுதல் நம் மக்களின் கடனுகும்.

வடவியட்நாமில் சோஷலிசப் புரட்சியையும் சோஷலிச நிர்மாணத்தையும் தொடருவதிலும், தென் வியட்நாமில் மக்கள் ஜனநாயக' தேசியப் புரட்சியை நிறைவு செய்வதிலும் அமைதியான முறையில் தேசத்தை ஒன்றுபடுத்துவதிலும் நமது மக்களுக்குப் பல இடையூறுகள் நேரும். ஆனல் இறுதியில் நாம் வெற்றி பெறுவது நிச்சயம். அவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரமான உடனடிப் பணிகளை மட்டுமல்ல, புரட்சியின் வளர்ச்சியினூடே எந்த சந்தர்ப்பத்திலும் எழும் எவ்விதப் பணிகளையும் நிறைவேற்றத்தக்கதாக நமது மக்கள் இராணுவ அமைப்பு விளங்க வேண்டும். அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களின் கையாட்களும் தோற்கடிக்கப்பட்ட பின்னரும் இத்தகைய வலிமையும் தயார்நிலையும் தொடர வேண்டும். வட வியட்நாம் மக்கள் ஆயுதப்படைகள், சோஷலிச வட வியட்நாமைப் பாதுகாப்பதற்கும் ஏகாதிபத்தியவாதிகளாலும் அவர்களின் கைக்கூலிகளாலும் தொடுக்கப்படும் அனைத்து ஆக்கிரமிப்பு, நாசவேலைகளையும் முறியடிப்பதற்கும் வேண்டிய வலிமை பெற்றிருக்க வேண்டும். வட வியட்நாம் மக்கள் ஆயுதப்படைகள் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் திறமையான கருவியாய்ச் செயல்படவும் அனைத்து அம்சங்களிலும் வட வியட்நாமைப் பலமிக்க தாக்கி, நாட்டை மீண்டும் ஒன்றுபடுத்துவதற்கான போராட்டத்தின் ஆற்றல்மிக்க தளமாக அதை ஆக்க உதவவும் வேண்டும். தென் வியட்நாமின் விடுதலை ஆயுதப் படைகள் புரட்சியின் வெற்றிகளைப் பத்திரப்படுத்திக் கொள்ளவும், தென் வியட்நாமின் சுதந்திரத்தையும் நடுநிலைமையையும் கட்டிக்காக்கவும், ஏகாதிபத்தியவாதிகளதும் எதிர்ப்புரட்சிக் கும்பலதும் அனைத்து சதித்திட்டங்களைத் தோற்கடிக்கவும், புரட்சியின் வளர்ச்சிக்குத் தன் பங்களிப்பைச் செலுத்தவும், சமாதானமும், ஒற்றுமையும், சுதந்திரமும், ஜனநாயகமும், மிகுவளமும் நிரம்பியதான வியட்நாமை உருவாக்கவும் தக்க வலிமை பெற்றிருக்க வேண்டும்.

இந்த நூலின் முதல் அத்தியாயத்தில் சொன்னது போல் தென் கிழக்காசியாவின் மிக முக்கியமான இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் நம் நாடு அமைந்துள்ளது. எனவே வியட்நாம் நூற்றாண்டுகளாகக் கொடிய ஆக்கிரமிப்பாளர்களின் இலக்காக இருந்து வந்துள்ளது. சில தசாப்தங்களுக்குள் நமது நாடு அடுத்தடுத்து மூன்று ஏகாதிபத்



திய சக்திகளைத் தாக்கி வெற்றி பெற்றுள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியம் தோற்கடிக்கப்பட்டு விட்டாலும் சர்வதேச ஏகாதிபத்தியம் நம் நாட்டுக்கெதிராக சூழ்ச்சிகளை செய்வதை நிறுத்திவிடாது. நமது தேசம் சுதந்திரத்தையும் விடுதலையையும் பேணுவதாகும். நாம் சமாதானத்தை நேசிக்கிறோம். நம் நாட்டை நிர்மாணிக்கவும் நம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை அனைத்து அம்சங்களிலும் மேம்படுத்தவும் நமக்கு சமாதானம் தேவை. எனவே சமாதானத்தையே நாம் விரும்புகிறோம். ஆனால் நாம் எப்போதும் மிக விழிப்போடிருக்க வேண்டும். நாம் அரசியல், பொருளாதாரம், தேசப் பாதுகாப்பு ஆகிய துறைகளில் பலத்துடன் விளங்க வேண்டும். பொருளாதார நிர்மாணத்துக்கும் தேசப் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கும் இடையில் நெருங்கிய ஐக்கியம் நிலவ வேண்டும். எந்த நிலையிலும் நமக்கு வலுவான தேசப் பாதுகாப்பு - அதற்கான பலமிக்க ஆயுதப்படைகள் - அவற்றில் வலுவான, நிலையான சேனையும் விரிவான மக்கள் ஆயுதப்படைகளும் இருக்க வேண்டும். அப்போது தான் நாம் நம் மக்களின் அமைதியான உழைப்பைப் பாதுகாக்க முடியும். எந்த ஆக்கிரமிப்பாளனுக்கும் எதிராகத் தாய்நாட்டைக் காக்க வெற்றிகரமான போர் நடத்த தயாராயிருக்க முடியும். உள்நாட்டு நாசவேலைக்காரர்களிடமிருந்து அரசதிகாரத்தைக் காத்துக் கொள்ள முடியும்.

நம் நாடு ஒன்றுபடுத்தப்பட்டபின், நீண்டகாலப் போக்கில், நிலைமையில் பெரிய மாறுதல்கள் ஏற்படும். வியட்நாம் பலமும் வளமுமிக்க தேசமாக மாறும். அங்கு சில தசாப்தங்களில் நவீன விவாயம், நவீன தொழில்துறை, முன்னேறிய பண்பாடும், அறிவியலும், மக்கள் தொகை 5 கோடி முதல் 7 கோடி பேராக வளர்ச்சி என்ற நிலை ஏற்பட்டு விடும்... வலுவான தேசியப் பாதுகாப்பைக் கட்டுவதற்கான அரசியல் அடிப்படை நம் மக்களிடம் உண்டு: எந்த ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளனுக்கெதிரான போரிலும் வெற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றியை உத்திரவாதம் செய்யும் முறையில், தரமான மக்கள் சேனையைக் கட்டவும் புரட்சிகர மக்களை ஆயுதபாணிகளாக்கவும் கூடியவர்களாய் நாம் இருக்கிறோம்.

நம் நாட்டின் பாதுகாப்புக்காக இன்று நாம் நடத்தும் போரும் சரி, அல்லது எதிர்காலத்தில் போர் மூண்டால் அதுவும் சரி, எப்போதும் நமது போர் **நமது மண்ணில் நமது தற்காப்புக்காக நடக்கும் நீதியான போராகவே** இருக்கிறது. இதன் விளைவாக, எதிரியைத் தோற்கடிக்க பெரும்பாலும் அனைத்து மக்களும் நாடு முழுவதும் தேசம் முழுவதும் படையாய் ஆகிவிட முடிகிறது. தாய்நாட்டுப் பாதுகாப்புக்கான எதிர்காலப் போரின் சூழ்நிலை சந்தர்ப்பங்களிற் பல நம் காலப் போரினை ஒத்ததாகவே இருக்கலாம்: உதாரணமாக புவியியல் நிலைமைகள்; நம்மினும் பெரிய படையை எதிர்த்துப் போரிட வேண்டிய நிலை முதலியன. நம் நாட்டை ஆக்கிரமிக்க வரும் எதிர்கால எதிரி நிச்சயம் நம்மினும் வலியவனாகவே இருப்பானாதலின் பெரும்படையை எதிர்த்து சிறு படை போராட வேண்டிய தேவை இன்று போல் அன்றும் நமக்கு எழும். அதில் ஒருவேளை எதிரிக்கும் நமக்கும் சக்திகளின் பலாபலங்கள் வேண்டுமானால் மாறுபடலாம். புவியியல் நிலைமைகளைப் பொறுத்தவரை, நமது மக்களின் ஓயாத உழைப்பினால் தொடர்ந்த மாற்றங்கள் நிகழுமாயினும், அடிப்படையில் அவை நீண்ட காலத்துக்கு மாறாமலே இருந்துவரும். தாய்நாட்டைக் காப்பதற்கான இன்னொரு போர் வெடித்தால், அது நமது தேசத்தின் பின்வரும் புவியியல் சூழ்நிலைமைகளில் தான் நடைபெறும்: சிறிய நாடு, ஒடுங்கி நீண்ட நிலப்பரப்பு, பெரிதும் மலைப்பகுதி, ஏராளமான ஆறுகளால் கூறுபட்ட சமவெளி, சில ஆயிரம் கி. மீ. நீளக்கரை, வெப்பமண்டலப் பருவ நிலை...

இக் காரணங்களால் நாம் பின்வரும் முடிவுக்கு வரலாம்: **தாய்நாட்டைக் காப்பதற்கும் விடுதலை பெறவும் போர்**



**கள் தொடுப்பதிலும், இராணுவ அமைப்பைக் கட்டுவதிலும் இன்றும் அன்றும் நாம் மிகுதியான அனுபவத்தைச் சுவீகரித்திருக்கிறோம்.** சோஷலிச விடு வியட்நாம், சுதந்திரமானதும் நடுநிலையானதுமான தென் வியட்நாம், வருங்கால ஒன்றுபட்ட வியட்நாம் ஆகியவற்றின் அனைத்து மக்களும், மக்கள் ஆயுதப்படைகளும் **புதிய சூழ்நிலை சந்தர்ப்பங்களில்** தேசப் பாதுகாப்பைக் கட்டியமைக்க **மேற்சொன்ன அனுபவத்தைப் பயன்படுத்தவும் வளர்த்துக்கொள்ளவும் கூடியவர்களாயிருக்கிறோம்.** தாய்நாட்டைக் காப்பதற்கான நமது வருங்காலப் போர் மிகவும் வளர்ச்சிபெற்ற மக்கள் யுத்தமாக இருக்கும். எண்ணிக்கைப் பலம், ஒவ்வொரு செயல்பாட்டுக் களத்திலும் அனைத்து மட்டங்களிலும் உள்ள ஊழியர்களதும் போர்வீரர்களதும் வளர்ச்சி நிலை, சாதனை, தொழில் நுட்ப, அமைப்பு வகை ஆற்றல்கள், போரிடும் முறை, போர்த் திறன் போன்ற அனைத்து அம்சங்களிலும் அன்று நமது மக்கள் ஆயுதப்படைகள் முனைப்பான முன்னேற்றம் பெற்றிருக்கும்.

தற்போதைக்கு, அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களை முற்றாகத் தோற்கடித்தல் என்ற நமது வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற, அரசியல், பொருளாதார, தேசப் பாதுகாப்புத் துறைகளைப் பொதுவாகப் பலப்படுத்துவது என்ற அடிப்படையில், நமது மக்கள் **வலுவான அரசியல் படைகளையும் வலுவான ஆயுதப்படைகளையும்** பெற்றிருக்க வேண்டியுள்ளது. அனைத்து மக்களையும் ஆயுதபாணியாக்குவது என்ற கட்சி மார்க்கத்தை நாம் முழுமையாக கிரகித்துக் கொள்ள வேண்டும். **மிக வலிமையான, விரிவான மக்கள் ஆயுதப்படைகளையும் வலுவான, சிறந்த மக்கள் சேனையையும் ஒருசேரக் கட்டிவளர்க்கப் பாடுபட வேண்டும்.** எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எதிரியைத் தோற்கடிக்க மக்களனைவருடனும் சேர்ந்து கொள்ளக்கூடிய முறையில் இராணுவ தளத்தில் நமது மக்களின் படைகளை உயர்ந்தபட்சமான அளவில் அணிதிரட்டவும் வளர்க்கவும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென் வியட்நாமில் சேனையும் மக்களும் 'போரை வியட்நாமிய மயமாக்கும்' அமெரிக்கப் போர்த்தந்திரத்தைத் தோற்கடிப்பதற்காக ஏக காலத்தில் ஆயுதப் போராட்டமும் அரசியல் போராட்டமும் நடத்தி வருகிறார்கள். ஆயுதப் போராட்டத்தை அரசியல் போராட்டத்துடனும், இராணுவ வலிந்த தாக்குதலை எழுச்சியுடனும், ஒருமுகப்பட்ட தாக்குதல்களைக் கெரில்லாத் தாக்குதல்களுடனும், எதிரித் துருப்புகளை அழித்தொழிப்பதை மூன்று போர்த்தந்திர வலயங்களிலும் மக்களதிகாரத்தை விரிவுபடுத்துவதுடனும் நெருக்கமாக இணைத்து, ஒவ்வொரு களத்திலும் புரட்சிப் போரைச் சீராக முன்னெடுத்துச் செல்கிறார்கள். போரிடும் அதே வேளை அவர்கள் இராணுவ அரசியல் படைகளை வளர்த்து வருகிறார்கள்; செயலூக்கத்துடன் விடுதலை வலயத்தை விரிவுபடுத்தியும் பலப்படுத்தியும் வருகிறார்கள். போரிடும் போதே பலம் மிகுந்தோராகி வருகிறார்கள்.

தென் வியட்நாம் குடியரசின் தற்காலிகப் புரட்சி அரசாங்கமும், தென் வியட்நாம் விடுதலை ஆயுதப்படைகளின் உயர் தலைமையும் குறிப்பிட்டது போல மக்கள் ஆயுதப் படைகளை தீவிரமாகவும் பரவலாகவும் வளர்த்தெடுக்கும் அதே வேளை விடுதலைச் சேனையை தலைசிறந்ததும் வலுமிக்கதுமான சேனையாகக் கட்டியமைக்க வேண்டும்; விடுதலை ஆயுதப்படைகளின் மூன்று வகைகளைப் பலப்படுத்த வேண்டும். இதுவே இக் காலத்தில் தென் வியட்நாமின் ஆயுதப் படைகளை பலப்படுத்துவதன் அடிப்படை உள்ளடக்கமாகும்.

போர்க்களத்தில் அமெரிக்க, பொம்மைப் படைகள் போர்த்தந்திர ரீதியான தற்காப்பு நிலைக்குப் பின்வாங்கி வருகின்றன; நாட்டின் மேல்மட்டம் முதல் கீழ்மட்டம் வரை இரக்கமற்ற ஒடுக்குமுறையும், அடக்குமுறை யந்திரமும் கொண்டு அவை மக்கள் மேல் அநாகரிகமான பாசிசக் கொள்கையைப் பிரயோகித்து வருகின்றன. இந்நிலைகளில் தென் வியட்நாமிய மக்கள் தாம் கட்டி விரிவுபடுத்தி வரும் அரசியல் சேனையுடன், மக்கள் ஆயுதப்படைகளிலும் துரித வளர்ச்சி ஏற்படப் பாடுபட்டு வருகிறார்கள். போர்த்தந்திர முக்கியத்துவமுடைய மூன்று வலயங்களிலும், குடிப் படைகள், கெரில்லாப் படைகள், தற்காப்புப் படைகள் ஆகியவற்றை மும்முரமாய்க் கட்டி வருகிறார்கள்.

'போரை வியட்நாமிய மயமாக்கும்' திட்டத்தை இராணுவ ரீதியில் தோற்கடிப்பதற்காக ஒருமுகப்பட்ட தாக்குதல்கள் தொடுப்பதில் அணைத்து முயற்சிகளையும் ஒன்றுபடுத்திக் கொள்வதற்காக, கெரில்லாப் போர்முறையை ஒரு உயர்ந்த மட்டத்துக்குக் கொணரும் தேவை வளர்ந்து வருகிறது. அப்போது அதற்கிணையாக கெரில்லாப் படைகளும் தற்காப்புப் படைகளும் தீவிரமான, விரிவான வளர்ச்சி பெறவேண்டிய தேவையும் வளர்கிறது. இத் தேவையானது, வலிந்த தாக்குதலுக்கும் எழுச்சிக்குமான மக்கள் இயக்கத்தை முடுக்கி விடுவதற்கும், ஒருமுகப்பட்ட மும்முனைத் தாக்குதல் மூலம் 'சாந்தப்படுத்தும் திட்டத்தை' தகர்ப்பதற்கும் உள்ள தேவையுடனும் இணைந்துள்ளது. மக்களதும் கெரில்லாக்களதும் ஆயுதப்படைகள் பிரதேசப் படைகளைத் தம் ஆதாரமாகக் கொண்டு, படைப்புத்திறனும் நெளிவு சுளிவுகளும் கொண்ட முறைகளைப் பயன்படுத்தி, தம் நிலத்தைக் கைவிடாமல் வெற்றி கொள்வதற்கும், எதிரியைக் கண்ட இடத்தில் தாக்குவதற்கு வசதியாகவும் அரசியல் படைகளுடன் நெருக்கமாக ஒருங்கிணைந்து கொள்ள வேண்டும். அவை சாத்தியப்பட்ட இடமெல்லாம் எதிரியை அழித்தொழித்து நிர்மூலமாக்கும்; அவனைச் சிதறடிக்கும்; நகரவிடாமல் சுற்றி வளைக்கும்; அவன் படைகளைப் பிரித்துவிடும்; கேந்திர நிலைகளில் அதிர்ச்சித் தாக்குதல்கள் தொடுக்கும்; எதிரியின் இராணுவ விநியோகத்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளங்களை நாசமாக்கும். நீர், நிலத் தொடர்பு வழிகளைத் துண்டிக்கும். இவ்வாறு எதிரியின் இராணுவ நடவடிக்கைகளைத் தோற்கடிப்பதில் பங்காற்றும்; மக்களைப் பட்டியிலடைக்க, எதிரி துடைத்தொழிப்புகள் மேற்கொள்வதை மட்டுப்படுத்தும்; நமது அரசியல் தளங்களைப் பாதுகாக்கும்; கிராமப்புறத்திலுள்ள பொம்மை ஒடுக்குமுறை யந்திரத்தையும் ஸ்தலப் பிற்போக்கு ஆயுதப்படைகளையும் உடைத்து நொறுக்கும் அல்லது அடியோடு ஒழிக்கும்; எதிரி இராணுவ நிலையங்களைத் தகர்க்கும். அவை எதிர்ப்புப் போரின் ஆற்றலை அனைத்து அம்சங்களிலும் காத்து வளர்க்கும்; 'வியட்நாமியரே வியட்நாமியரை எதிர்த்துப் போராடும்படி செய்வது', 'போரைக் கொண்டே போரை வளர்ப்பது' ஆகிய அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் துர்நோக்கங் கொண்ட திட்டத்தைத் தோற்கடிக்கும்.

தென் வியட்நாமில் நமது மக்களின் நீண்ட புரட்சிப் போரில் புரட்சி முன்னேற முன்னேற, மக்களின் ஆயுதப் படைகள் இடைவிடாமல் முக்கியமான பங்காற்றி வருகின்றன. எங்கெல்லாம் மக்களின் அரசியல் தளங்கள் அமைகின்றனவோ அங்கெல்லாம் மக்களின் ஆயுதப்படைகள் உருவாகின்றன. தொழிலாளி - விவசாயி கூட்டணி என்ற அடிப்படையின் மீது தொடர்ந்து விரிவடைந்து வரும் புரட்சிகர அரசியல் சேனை உருவானதிலிருந்து, தென் வியட்நாமிய மக்கள், மக்களின் ஆயுதப்படைகளை எண்ணிக்கையிலும் தரத்திலும் வலுப்படுத்துவதிலும் தம் தேவைகளுக்கேற்ற அமைப்பு வடிவங்களை அவற்றுக்கு வழங்குவதிலும் முனைந்து வருகிறார்கள். இதனால் தென் வியட்நாமில் மலையிலும், சமவெளியிலும், கிராமங்களிலும், நகரங்களிலும், விடுதலை வலயத்திலும், தற்காலிகமாய் தாம் நிலை கொண்டுள்ள வலயத்திலும் என எங்கணும் எதிரிக்கெதிராக போராடும் ஆயுதப்படைகள் இருக்கின்றன. இந்த ஆயுதப்படைகள் மக்களின் அரசியல் படைகளுடன் சேர்ந்து ஒவ்வொரு பிர



தேசத்திலும், ஒட்டுமொத்த போர்க்களத்திலும் ஒரு பெரும் படையாக அமைகின்றன.

மக்களின் அரசியல், ஆயுதப்படைகளின் துணையுடன், தென் வியட்நாமிய சேனையும், மக்களும் ஒரு **பெரியதும் வலுவானதுமான** விடுதலைச் சேனையைக் கட்ட முனைந்துள்ளனர். விடுதலைச் சேனையில் கிரம சேனையும், பிரதேசப் படைகளும் அடங்கும். இதைக் கட்ட வேண்டிய தன் தேவை, **கெரில்லாப் போர்முறைக்கு இணையாக கிரமப் போர்முறையை வளர்ப்பதற்கான** இராணுவப் போராட்டத்தை தீவிரப்படுத்தும் தேவையுடன் இணைந்துள்ளது. விடுதலைச் சேனை அமைக்கும் தேவையானது இராணுவ ரீதியில் எதிரியைத் தோற்கடிக்கும் தேவையுடன், அரசியல் போராட்டத்துடன் இணைந்து எதிர்ப்புப்போரை இறுதி வெற்றி பெறச் செய்வதற்கான தேவையுடன் இணைந்துள்ளது.

**விடுதலைச் சேனையின் கிரமப் படையலகுகள்** எண்ணிக்கை அளவிலும், அதைவிட பண்பளவிலும் சாதனை அளவிலும் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. அவசியமான துறைகள் அனைத்தும் அதில் உள்ளன. அவை சிறந்த இராணுவ விநியோக வசதிகளுடன் கூடிய வலுவான உயர்ந்த இயங்கு சேமப்படையையும் பலமான பௌதீக தொழில்நுட்ப அடித்தளத்தையும் பெற்றுள்ளன. வெவ்வேறு துறைகளில் இருந்து வெவ்வேறு அளவிலும் வெவ்வேறு காரணங்களோடும் வந்து இணைந்த படையலகுகளைப் பயன்படுத்தி நடவடிக்கைகளை நிறைவேற்றுவதில் மென்மேலும் திறமை பெற்றுள்ளன. தென் வியட்நாம் போர்க்களத்தில் கிரமப் போர்முறை சீராக வளர்ச்சி பெற்று வருகிறது. மென்மேலும் அதிகரித்துவரும் விசையுடனும் திறத்துடனும் விடுதலைச்சேனையின் கிரமத் துருப்புகள் சைகோன் ஆயுதப்படைகளின் முக்கியமான பகுதியை அழித்தொழித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளன. பெரிய எதிரிப் படையலகுகளை அவை துடைத்தெறிந்துள்ளன. எதிரியின் பாதுகாப்புப் படைநிலைகளைத் தகர்த்துள்ளன. அவர்களின் போர்முறைகளைக் கண்காணித்து மட்டுப்படுத்தியுள்ளன. விடுதலை வலயத்தை விரிவுபடுத்தி கூடுதலாக பெரும் வெற்றிகள் பெற்றுவருகின்றன. பொம்மை ஆயுதப்படைகளைத் தோற்கடித்து விடுதலைச் சேனையின் கிரமப்படைகள் பெற்ற மகத்தான வெற்றிகள் பொம்மைச் சேனையினதும் பொம்மை நிர்வாகத்தினதும் முழுக்கட்டமைப்பிலும் அதன் உளஉரத்திலும் தீவிர பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. ஆக்கிரமிப்புப் போரைத் தொடுப்பதில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கிருந்த மனவுறுதி மீது பலத்த சம்மட்டி அடியை வழங்கியுள்ளன. மக்களின் அரசியல் போராட்டத்துக்கும் எழுச்சி இயக்கத்துக்கும் பலத்த ஆதரவு ஈந்துள்ளன. எதிரி அணிகளிடையே மனமாற்றம் ஏற்படுத்தும் வேலைக்கு விரிவான சாத்தியங்களை ஏற்படுத்தியுள்ளன. இவ்வகையில் அவ்வெற்றிகள் சக்திகளின் பலாபலத்தை மாற்றுவதிலும் போரின் போக்கை நம் தரப்புக்கே மென்மேலும் சாதகமாகும்படி செய்வதிலும் முக்கியப் பங்காற்றியுள்ளன.

விடுதலைச் சேனையின் **பிரதேசப் படைகளின்** அலகுகள், வலுப்படுத்தப்படுகின்றன. இதன் காரணமாக அவற்றால் குடிப்படைகளுடனும் கெரில்லாப் படைகளுடனும் சேர்ந்து பிரதேசங்களில் மக்கள் யுத்தத்தின் முதுகெலும்பாகச் செயல்பட முடியும்; கெரில்லாப் போர், மக்கள் எழுச்சி ஆகியவற்றின் தரத்தை மென்மேலும் உயர்த்த முடியும்; அமெரிக்கப் பொம்மையாட்சியின் 'சாந்தப்படுத்தும் திட்டத்தை' உடைத்து நொறுக்க முடியும்; அதே போது 'போரை வியட்நாமிய மயமாக்கும்' திட்டத்தை இராணுவ வழிகளில் தோற்கடிக்க ஒருமுகப்பட்ட தாக்குதல்கள் தொடுப்பதில் கிரமப்படைகளுடன் திறம்பட ஒத்துழைக்கவும் முடியும். ஒவ்வொரு மாவட்டமும் மாகாணமும் அல்லது நகரமும், நல்ல ஒழுங்கமைப்பும் போதிய எண்ணிக்கையும் கொண்ட படையலகுகளும் பல்வேறுவிதச் சண்டை முறைகளில் நன்கு பயிற்றுவிக்கப்பட்டுள்ள தேவையான தொழில்நுட்ப படையலகுகளையும் கொண்டிருக்கும் வகையில் பிரதேசப் படைகள் கட்டப்பட்டு வருகின்றன. பிரதேசப் படைகள் மிகப்பலம் வாய்ந்தவையாகவும் நன்கு பயிற்றுவிக்கப்பட்டவையாகவும் இருக்க வேண்டும். அவை நன்கு போராடவும் மக்களின் ஆதரவை எப்படி வென்றெடுப்பது என்பதைத் தெரிந்திருக்கவும் வேண்டும். தேவைக்கேற்ப தம் படைகளை ஒருங்குதிரட்டியும் பிரித்துப் பரவலாக்கியும் செயல்படும் பிரதேசப் படைகள், பிரதேசங்களில் மக்கள் யுத்தத்தின் வலுவான கரமாய் விளங்குகின்றன. குடிப்படைகளுடனும் கெரில்லாப் படைகளுடனும் நெருக்கமாக ஒருங்கிணைந்து தென் வியட்நாமின் பிரதேசப் படைகளின் பல படையலகுகள், எதிரியின் பாவோ அன் (பாதுகாப்பு), தான் வி (குடிப்படை) படைகளை அழித்தொழித்தன. சங்கிலித் தொடராக இருந்த இராணுவ நிலையங்களைத் துண்டித்தொழித்தன. மக்களை அடைத்து வைப்பதற்காக எதிரி உருவாக்கிய குக்கிராமங்களையும், மக்கள் அடைத்து வைக்கப்பட்டுள்ள பிரதேசங்களையும் உடைத்தெறிந்தன. அரசியல் போராட்டத்துக்கும் மக்கள் எழுச்சிகளுக்கும் பலத்த ஆதரவு தந்திருக்கின்றன. அதே போது ஒரு பிரதேசத்தில் விடுதலைச் சேனையின் பிரதானப்படை ஒன்று செயல்படும்போது அதனுடன் நன்கு ஒருங்கிணைந்து செயல்பட்டிருக்கின்றன.

தற்போது தென் வியட்நாம் போர்க்களத்தில் பல பிரதேசங்களும் மாகாணங்களும், மக்கள் யுத்த மார்க்கத்தையும், அனைத்து மக்களையும் ஆயுதபாணியாக்கும் மார்க்கத்தையும், முழுமையாகப் புரிந்துகொண்டு அதைத் தீர்க்கமாகவும், ஆக்கபூர்வமாகவும் பிரயோகித்தும் உள்ளன. இப்பிரதேசங்களும் மாகாணங்களும் வலுவான விரிவான அர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியல் படைகளைக் கட்டுவதில் வெற்றி பெற்றது மட்டுமல்ல; பெரியதும் வலுவானதுமான குடிப்படைகளும் கெரில்லாப் படைகளும் பலமான பிரதேசத் துருப்புகளும் உள்ளிட்ட வலுவான பிரதேச ஆயுதப்படைகளைக் கட்டுவதிலும் வெற்றி பெற்றுள்ளன. இந்த பிரதேச ஆயுதப்படைகள் ஒரு பிரதேசத்தில் இயங்கும் எதிரியை எதிர்த்து ஒளிமிக்க போர் தொடுக்கத்தக்க பெரும் போர்க்குணம் கொண்டவையாகும். இதன் காரணமாக பிரதேசங்களில் மக்கள் யுத்தமும் வலிந்த தாக்குதல் மற்றும் எழுச்சி இயக்கங்களும் மேலும் வளர்ச்சி பெற்றிருக்கின்றன; படிப்படியாக எதிரிகளின் 'சாந்தப்படுத்தும் திட்டத்தையும்' மக்களை ஒன்று கூட்டி ஓரிடத்தில் அடைத்து வைப்பது, இளைஞரை சேனையில் சேர நிர்ப்பந்திப்பது போன்ற அவர்களின் திட்டங்களையும் தோற்கடித்திருக்கின்றன. புரட்சியின் ஆற்றலை எல்லாச் சமயங்களிலும் காத்து வளர்த்திருக்கின்றன.

தென் வியட்நாமில் நடக்கிற புரட்சிப் போரின் அனுபவங்கள், **புரட்சியின் அனைத்துக் கடமைகளிலும் மக்களே அதற்குத் திடமான அடிப்படையாய் அமைகிறார்கள்** என்பதை நிரூபிக்கின்றன. **மக்களின் அரசியல் படைகளே ஆயுதப்படைகளின் திடமான அடித்தளமாகும். மக்களின் ஆயுதப்படைகளே புரட்சிச் சேனையின் திடமான அடிப்படையாகும்,** எனவே புரட்சிப் போருக்குக் கணிசமான படைகளை உறுதிசெய்து கொள்ள மக்கள் யுத்தத்தின் மகத்தான ஆற்றலை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள **புரட்சிக்கான அரசியல் சேனையைக் கட்டப் பாடுபடுதல் அவசியமாகும். அதன் அடிப்படையில் மக்கள் திரள் ஆயுதப்படைகளும் புரட்சிச் சேனையும் அடங்கிய மக்கள் ஆயுதப்படைகளைக் கட்டவும் ஆயுதப்படைகளின் மூன்று வகைகளைப் போதிய அளவில் வளர்க்கவும், எல்லாப்போர்க்களங்களிலும் போர்த்தந்திர ரீதியான வலுத்தாக்குதலுக்காக அப் படைகளைத் தக்க இடங்களில் பரப்பி நிறுத்தவும், ஒருமுகப்பட்ட நடவடிக்கைகளை**



**கெரில்லாப் போர் முறையுடனும் ஆயுதப் போராட்டத்தை அரசியல் போராட்டத்துடனும் எதிரித் துருப்புகள் மத்தியிலான கலக வேலையுடனும் நெருக்கமாக இணைக்கவும் பாடுபடுதல் அவசியமாகும்.** இவ்வாறு செய்வதன் மூலம் மட்டும் தான், பொம்மைச் சேனையை அழித்தொழிக்கவோ சிதைக்கவோ 'சாந்தப்படுத்தும் திட்டத்தைத்' தகர்க்கவோ, 'போரை வியட்நாமிய மயமாக்கும்' போர்த்தந்திரத்தை மட்டுப்படுத்தவோ காலப்போக்கில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் ஆக்கிரமிப்புப் போரை முற்றாகத் தோற்கடிக்கவோ வேண்டி படைகளை இணைப்பதற்கான அதிகபட்ச சாத்தியம் கிட்டும்.

சிறப்பாக இன்று அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் 'போரை வியட்நாமிய மயமாக்கும்' போர்த்தந்திரத்துக்கு மாறியுள்ள நிலையில், 'வியட்நாமியரையே வியட்நாமியருக்கு எதிராகப் போரிட வைக்கும்' அரசியல் சூழ்ச்சியை நடைமுறைப்படுத்திவரும் நிலையில், ஆக்கிரமிப்புப் போரைத் தொடர ஒரு கருவியாகப் பயன்படுத்த பிரதானப் படையும் பிரதேசப் படைகளும் கொண்ட பொம்மைச் சேனையைக் கட்ட முனைந்துவரும் நிலையில், மக்கள் ஆயுதப்படைகளை ஒழுங்கமைப்பது பற்றிய விதியைப் பிரயோகிப்பதில் தேர்ச்சி பெறுவது அதீத முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

**நமக்கு ஒரு மகத்தான அரசியல் படையும் வலுமிக்க ஆயுதப்படைகளும் இருக்க வேண்டும்; வலுவானதும் விரிவானதுமான மக்கள் ஆயுதப்படைகளும், உயர்ந்த தரமும் எண்ணிக்கைப் பலமும் கொண்ட விடுதலைச்சேனையும் இருக்க வேண்டும், பலமானதும் பெரியதுமான குடிப்படைகளும் தற்காப்புப் படைகளும், ஆற்றல்மிக்க பிரதேசப் படைகளும் இருக்க வேண்டும், இவற்றைக் கொண்டுதான் நாம், வலுவானதும் விரிவானதுமான ஸ்தலப்படைகளையும் அதே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது ஒரு மிகப் பலம்வாய்ந்த இயங்கு கிரம சேனையையும் அமைக்க முடியும். இரண்டு படைகளையும், ஆயுதப்படைகளின் மூன்று வகைகளையும், நெருக்கமாக ஒருங்கிணைத்துச் செயல்பட்டும், புரட்சிப் போரில் தம் போர்த்தந்திரப் பங்கைச் சிறப்புற ஆற்றியும், ஆயுதப் போராட்டத்தையும் அரசியல் போராட்டத்தையும், கிரமப் போர்முறையையும் கெரில்லாப் போர்முறையையும் முடிவின்றி உயர்ந்த மட்டத்துக்கு வளர்த்துக் கொண்டும் வரும் நமது தென் வியட்நாம் நாட்டினரும் போராளிகளும் நிச்சயமாக பொம்மைச் சேனையைத் தோற்கடிப்பர்; பொம்மையாட்சி நிர்வாகத்தைத் தூக்கியெறிவர்; 'போரை வியட்நாமிய மயமாக்கும்' போர்த்தந்திரத்தை முற்றாக முறியடித்து, தேச விமோசனத்துக்காக அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்து நடத்தும் போராட்டத்தை இறுதி வெற்றிக்குக் கொணர்வர்.

தென் வியட்நாமில் இன்னும் ஆக்கிரமிப்புப் போரை நீட்டித்துச் செல்லும் நிக்சன் நிர்வாகம், இந்தோ சீன முழுவதும் போரை விரிவுபடுத்தும் நிக்சன் நிர்வாகம் வட வியட்நாமுக்கெதிரான தன் போர் நடவடிக்கைகளை பிடிவாதமாக உக்கிரப்படுத்தியிருக்கிறது. மகத்தான போர்முனைக்குத் துணைநிற்கும் மகத்தான பின்புலமாகவும், நாடு முழுவதிலும் புரட்சியின் பலம் வாய்ந்த தளமாகவும் இருக்கும் சோஷலிச வட வியட்நாமுக்கு எதிராக நிகழ்காலத்திலும் வருங்காலத்திலும் தொடுப்பதற்காக மோசமான பல சூழ்ச்சித் திட்டங்களை அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தீட்டி வளர்த்து வருகின்றனர். எனவே வட வியட்நாமில் நாமனைவரும் மக்கள் ஆயுதப்படைகளைக் கட்டியெழுப்ப தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொள்ள



வேண்டியிருக்கிறது. அப்படைகள் அனைத்து மக்களுடன் சேர்ந்து அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களை முற்றாகத் தோற்கடிக்கும். நிகழ்காலத்திலும் வருங்காலத்திலும் சோஷலிச வட வியட்நாமை வலுவாகப் பாதுகாக்கும்.

வட வியட்நாம் அரசியல், பொருளாதாரத் துறைகளிலும் தேசப் பாதுகாப்புத் துறையிலும் மிக வலிவுடன் விளங்க வேண்டும். எனவே நாம் சோஷலிசப் புரட்சியையும் சோஷலிச நிர்மாணத்தையும் முன்னெடுத்துச் செல்ல முயற்சி எடுக்க வேண்டும். மக்களின் அரசியல், தார்மீக ஒற்றுமையைத் தொடர்ந்து அதிகரிக்க வேண்டும். பொருளாதாரத்தையும் பண்பாட்டையும் கட்டிவளர்க்க வேண்டும். அதன் அடிப்படையில் அனைத்து மக்களைக் கொண்டும் தேசப் பாதுகாப்பைக் கட்டி வலுப்படுத்தவும் பொருளாதார வளர்ச்சியுடன் தேசப் பாதுகாப்பை நெருக்கமாக ஒருங்கிணைக்கவும் வேண்டும். மத்தியப் பொருளாதாரத்தையும் பிரதேசப் பொருளாதாரத்தையும் தன்னுட் கொண்ட ஒரு வலுவான பொருளாதாரத்தைக் கொண்டு மட்டுமே நாம் வலுவான தேசியப் பாதுகாப்பைப் பெற்றிருக்கவும் தேச அளவிலும் பிரதேச அளவிலும் மக்கள் யுத்தத்தைத் தொடுக்கவும் முடியும். நாம் எந்த நிலையிலும் நடமாட்டச் சுதந்திரத்தைப் பெற்றிருக்கும் வகையில் எப்போதும் போரிடத் தயாராயிருக்கவும், எல்லா அம்சங்களிலும் நம் நாட்டை ஆயத்தமாய் வைத்திருக்கவும் வேண்டும்.

எந்த சந்தர்ப்பத்திலும் நமது மக்களின் இராணுவ அமைப்புக்கான பின்வரும் விதியை நாம் மனதில் கொண்டிருக்க வேண்டும்: அனைத்து மக்களையும் ஆயுதபாணியாக்குவதும் புரட்சிகர மக்களை ஆயுதபாணியாக்குவதும் அதே சமயம் மக்கள் சேனையைக் கட்டுவதும் மக்கள் சேனையை மக்கள் ஆயுதப்படைகளுடனும், மக்கள் ஆயுதப்படைகளை மக்கள் சேனையுடனும் இணைப்பதும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன கிரம மக்கள் சேனையைக் கட்ட நாம் பெருமுயற்சி மேற்கொள்வதும் அதே சமயம் பலமானதும் விரிவானது மான மக்களின் ஆயுதப்படைகளை வளர்ப்பதும் மக்கள் ஆயுதப்படைகளின் மூன்று வகைகளான கிரமப்படை, பிரதேசப் படைகள், குடிப்படைகளும் தற்காப்புப் படைகளும் ஆகிய வற்றைப் பலப்படுத்துவதும் வேண்டும். மக்கள் ஆயுதப் பொலிஸ் படைகளை நாம் மேலும் வலுப்படுத்த வேண்டும். நமக்கு பலமிக்க நிலையான சேனையும் அதே போது மிக வலுவான சேமப்படையும் வேண்டும்.

பாதுகாப்பு நடவடிக்கையில் நாம் தொடர்ந்து கண்டிப்பான முறையில் செயல்பட வேண்டும். மக்கள் ஆயுதப் படைகளைக் கட்டுவது சம்பந்தமாகவும் அனைத்து மக்களைக் கொண்டும் தேசப் பாதுகாப்பை வலுப்படுத்துவது சம்பந்தமாகவும் அரசினால் பிரகடனப்படுத்தப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளையும் விதிமுறைகளையும் நாம் படிப்படியாக வலுப்படுத்த வேண்டும். நமது நாட்டின் வருங்கால வளர்ச்சிகளுக்கு ஏற்ப இப்போதிருக்கிற கொள்கையையும் விதிமுறைகளையும் மாற்றவும் வேண்டும். ஊழியர்களைப் பயிற்றுவிப்பதற்கு மிகுந்த முக்கியத்துவம் தரப்பட வேண்டும். ஏனெனில் ஆயுதப்படைகளைக் கட்டுவதிலும் தேசப் பாதுகாப்பைப் பலப்படுத்துவதிலும் அவர்கள் மிக முக்கியப் பங்காற்றுவர். நாம் வட வியட்நாம் முழுவதிலும் ஒவ்வொரு பிரதேசத்திலும் ஆயுதப்படைகளுக்கான பௌதீக, தொழில் நுட்ப, இராணுவ விநியோக அடித்தளங்களைப் படிப்படியாக வலுப்படுத்த வேண்டும்.

முதலாவதாக நமது சேனையை உண்மையிலேயே புதிய வகையான மக்கள் புரட்சிச் சேனையாக, நம் நாட்டின் சூழ்நிலைகளுக்குத் தகுந்த நவீன கிரம சேனையாகக் கட்டியமைப்பதைத் துரிதப்படுத்துவது அவசியமாகும். இச் சேனை மக்களின் இராணுவ அமைப்பின் முதுகெலும்பாக விளங்க



வேண்டும்; அப்போதுதான் அது நம் அன்புத் தாய்நாட்டுக்கும் புரட்சியின் சாதனைகளுக்கும் பலமான பாதுகாப்பு வழங்கும்; நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் வரும் எந்த ஆக்கிரமிப்பாளனையும் தோற்கடிக்கும்; கட்சியாலும் மக்களாலும் ஒப்படைக்கப்படும் போர்க் கடமைகளையும், பொருளுற்பத்திக் கடமைகளையும், வேறெந்தக் கடமைகளையும் நிறைவேற்ற முடியும்.

நிகழ்காலத்திலும் வருங்காலத்திலும் நாம் தொடர்ந்து வியட்நாம் மக்கள் சேனையை நவீன கிரம சோஷலிச சேனையாகக் கட்டவேண்டும். இது கிரமப் படையாலும் பிரதேசப்படைகளாலும் ஆனதாகவும், போதிய எண்ணிக்கைப் பலமும் உயர்ந்த போராற்றல்களும் கொண்ட நிலையான படையையும், பெரிய, நன்கு ஒழுங்கமைந்த, நன்கு பயிற்றுவிக்கப்பட்ட சேமப் படையையும் கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

நமது சேனை உண்மையாகவே புரட்சிகரமானதாகவும் உண்மையிலேயே மக்கள் சேனையாகவும் நவீன தரைப் படை, விமானப்படை, கப்பற்படை கொண்ட மிக நவீனமான படையாகவும் இருக்க வேண்டும்.

நமது தரைப்படை தேவையான அனைத்து படைத் துறைகளையும் கொண்டதாயிருக்க வேண்டும். அதிகரித்து வரும் முக்கியமான போர்க்கடமைகளுக்கு உகந்த கட்டமைப்பும் அளவும் கொண்டதாகவும், பெருமளவு சுடுதிறன் கொண்டதாகவும், நமது தேசத்தின் எல்லாவித நிலப்பகுதிகளிலும் எல்லாவிதப் பருவநிலைகளிலும் விரைந்து இயக்கக் கூடிய நேர்த் தாக்குதல் படை கொண்டதாகவும் போர்க்களத்தில் வெற்றியை ஈட்டுவதில் தீர்மானகரமான பங்காற்றக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

நமது விமானப்படை எந்த ஆக்கிரமிப்பாளனின் விமானப்படையிலிருந்தும் நம் தாய்நாட்டின் ஆகாயத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்குமளவில் பெரிதாகவும், ஆக்கபூர்வப் போர்முறைகளும் உயர்ந்த போராற்றல்களும் இணைந்ததாகவும் விளங்கி வரும்படி மேற்கொண்டும் வலுப்படுத்தப்பட வேண்டும். ஒருங்கிணைந்த நடவடிக்கைகளில் தரைப்படையோடும் கப்பற்படையோடும் அது நெருக்கமாக இணைந்து செயல்படுவதாய் இருக்க வேண்டும்.

நமது கப்பற் படையும் போதிய அளவு பெரிதாகவும் மிக உயர்ந்த போராற்றல்களைக் கொண்டதாகவும் தொடர்ந்து முன்னேறிவரும் அமைப்பையும் மென்மேலும் நவீனமாகி வரும் சாதனங்களையும், நீர் வழிகளிலும் கடலிலும் போரிடுவதற்கான பொருத்தமான முறைகளையும் பெற்றுள்ளதாகவும் விளங்குமாறு வலுப்படுத்தப்பட வேண்டும். அப்போது தான் நமது நீண்ட கடற்கரையையும் நமது நாட்டின் ஏராளமான நீர்வழிகளையும் நாம் காக்க முடியும். **எக்காலத்திலும் நமது சேனை உண்மையாகவே புரட்சிகர மக்கள் சேனையாக விளங்க வேண்டும்** என்பது முதன்மையானதாகும். சேனையைக் கட்டுவது பற்றிய நமது கட்சியின் கோட்பாட்டில் இக் கொள்கை அடிப்படை முக்கியத்துவம் உடையதாகும். இதனை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நாம் தொடர்ந்து மனதில் கொள்ள வேண்டும்.

புரட்சிச் சேனையின் போராட்ட பலம் என்பது பின் வரும் காரணிகள் இணைந்த பலமாகும்: அதன் புரட்சிகர உணர்வு; அதிகாரிகளதும் ஆட்களதும் போர்க்குணம்; சேனையின் அறிவார்ந்த ஒழுங்கமைப்பு; அதன் தொழில் நுட்ப சாதனங்களின் வளர்ச்சி நிலை; ஆட்களின் தொழில் நுட்ப, நடைமுறைத் தந்திர வளர்ச்சி நிலை; விஞ்ஞான, இராணுவக் கலையின் வளர்ச்சி நிலை; சேனையதிகாரிகளின் தலைமை... இந்த பலமானது, ஆட்கள்-ஆயுதங்கள், அரசியல்-தொழில் நுட்பம், இராணுவ விஞ்ஞானம்-பேருபாயங்கள், சித்தாந்தம்-அமைப்பு ஆகியவற்றுக்கிடையே உள்ள இயங்கியல் உறவிலிருந்து விளைவதாகும்.



சேனையின் போராட்ட பலத்துக்கான காரணிகள் மிக முக்கியமான பங்காற்றுகின்றன என்பதையும் அவை மிக நெருக்கமான பரஸ்பர உறவு கொண்டுள்ளன என்பதையும் தத்துவம் நடைமுறை ஆகிய இரண்டும் வெளிப்படுத்தியுள்ளன. ஒவ்வொரு காரணியும் முழுமையாக வளர்க்கப்பட்டு மற்ற காரணிகளுடன் நெருக்கமாக இணைக்கப்படும் போது மட்டுமே சேனை அதிகபட்ச போராட்ட பலமுடையதாக விளங்க முடியும்.

சேனையானது போர்க்குணமில்லாமலோ உளஉரங் குறைந்தோ இருக்குமானால், ஆக்கபூர்வப் புரட்சியாற்றலோ செயலூக்கமுள்ள சண்டை உணர்வோ அல்லது பௌதீக, தொழில்நுட்பச் செயல்பாட்டுக் காரணிகளின் பலத்தை ஊக்குவிப்பதற்கான எந்தவித அடிப்படையோ அதில் காணப்படாது... ஒரு சேனையிடம் போர்க்குணம் குறைந்து காணப்படுமானால், அது நன்கு ஒழுங்கமைக்கப்பட்டு சாதனங்கள் வழங்கப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டிருந்தாலும் கூட எளிதாகத் தோற்கடிக்கப்பட்டுவிடும். அதற்காக வெறும் உளஉர உயர்வு மட்டுமே வெற்றியைத் தந்துவிடாது. சேனையில் உயர்ந்த உளஉரம் இருந்து தொழில் நுட்ப சாதனங்கள் மோசமாயிருந்தாலோ, இராணுவ அமைப்பு செம்மையாயில்லாவிட்டாலோ, செயல்பாட்டு முறைகள் பிழையாக இருந்தாலோ, வெறும் உளஉரத்தைக் கொண்டே அது பெரும் சக்தியை உருவாக்கிவிட முடியாது. ஏனெனில் அந்நிலையில் உளஉரம் என்ற காரணி முழுமையான முறையில் வளர்ந்திருக்கவோ, போர்க்களத்தில் எதிரியை நசுக்கிவிடக்கூடிய மகத்தான பௌதீக சக்தியாக அதை மாற்றவோ முடியாது.

உளஉரம் என்ற காரணி போரில் ஏற்படுத்தக்கூடிய பெரும் தாக்கத்தை வலியுறுத்தும் முகமாக லெனின் கூறியதாவது:- ''எந்தப் போரிலும் வெற்றி பெறுவதென்பது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க்களத்தில் தம் சொந்த இரத்தத்தைச் சிந்துமாறு மக்களைக் கிளர்ந்தெழச் செய்கிற மனோநிலையைப் பொறுத்திருக்கிறது.''[48] மேலும் அவர் கூறியதாவது:- மிகச் சிறந்த சேனைகளும் கூட, புரட்சிகர இலட்சியத்துக்கு உண்மையாகவே தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ள மனிதர்களும் கூட, அவர்கள் போதிய அளவில் ஆயுதபாணியாக்கப்படாமல், உணவு முதலானவை வழங்கப்படாமல், நன்கு பயிற்றுவிக்கப்படாமல் விடப்பட்டால், எதிரியால் உடனடியாக அழித்தொழிக்கப்பட்டு விடுவர்.''[44]

எனவே நமது சேனையின் போராட்ட பலத்தைப் பற்றி பரிசீலிக்கையில் மேற்சொன்ன காரணிகளுக்கிடையேயுள்ள இயங்கியல் உறவை நாம் கிரகித்துக் கொள்ளவேண்டும். பௌதீக, தொழில்நுட்பக் காரணியை மட்டுமே தீர்மானகரமானது என வலியுறுத்தி அரசியல், உளஉரக் காரணியைக் குறைத்து மதிப்பிடுவது பிழை என்பது வெளிப்படை. அதற்கு மாறாக பௌதீக அடிப்படையிலிருந்து பிரித்து வெறும் உளஉரக் காரணியை மட்டும் வலியுறுத்துவதும் சரியல்ல. புரட்சிச் சேனையின் போராட்ட பலத்துக்குக் காரணமாகும் காரணிகளின் முக்கியத்துவத்தை வரையறுக்கும் போது, நாம் **மிக அடிப்படையான காரணி அரசியல்-உளஉரக் காரணியாகும்** எனக் கொள்கிறோம். **புரட்சிகர இலட்சியம், சண்டையின் இலக்கு, போரின் அரசியல் நோக்கம், அதிகாரிகளதும் ஆட்களதும் போர்க்குணம் என்பவை சம்பந்தமாக சேனை கொண்டுள்ள உணர்வே உளஉரம் எனப்படுவதாகும்.** ஒரு போரில் ''மக்கள் அதன் இலட்சியங்களையும் நோக்கங்களையும் உள்ளபடி உணர்ந்திருப்பதே மகத்தான முக்கியத்துவமுடையதும் வெற்றியை உத்திரவாதம் செல்வதுமாகும்.''[45] புரட்சிச் சேனையின் அதிகாரிகளும் ஆட்களும் தம் வர்க்க, தேசிய நலன்கள் பற்றிய ஆழ்ந்த உணர்வு பெற்றதுமே, சுதந்திரம், விடுதலை, சோஷலிசம் ஆகியவற்றுக்கான போராட்டத்தில்



தம்மை தியாகம் செய்யத் தயாரானதுமே, எதிரியை வெற்றி கொள்ளும் ஒரே அபிலாசையுடனும் தீர்மானத்துடனும் போருக்குச் சென்றதுமே, அவர்கள் மகத்தான ஆற்றலும் பலமும் பெற்றுவிடுகிறார்கள். மிக எளிய நிலையிலிருந்து துவங்கி, நம் காலத்தின் மிகக் கொடிய ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களைக் கூட தோற்கடிக்க முடிகிற அளவுக்கு வளர்ந்துள்ள நமது சேனையின் போராட்டத்தினதும் வளர்ச்சியினதும் வரலாறு, லெனினின் துணிபுரைக்கு எடுப்பான சான்றாக விளங்குகிறது.

ஆயுதப் போராட்டம், வர்க்கப் போராட்டத்தினதும், தேசியப் போராட்டத்தினதும் வன்முறை வடிவமாகும். ஆயுதப் போராட்டத்தின் ஒரு சிறப்புப் பண்பு. அது இரத்தஞ் சிந்தும் தியாகங்களை இன்றியமையாததாக்கியது என்பதாகும். எனவே புரட்சிகர சேனைக்கு, போராடுவதில் அசைக்க முடியாத மனவுறுதியும் மிக உயர்ந்த தன்னல மறுப்பு மனநிலையும் இருக்க வேண்டும். அப்போது தான் அனைத்து சோதனைகளுக்கும் தாக்குப் பிடிக்கவும் போரின் அனைத்து சிரமங்களையும் இடர்ப்பாடுகளையும் கடந்து நிற்கவும் ஆயுதங்களை மிகச் சிறப்பான முறையில் பயன்படுத்தவும் நடவடிக்கை முறைகளை ஆக்கபூர்வமாகக் கையாளவும், எதிரியை வென்றடக்கத் தக்கதாக இராணுவ அமைப்பை வளர்த்து மேம்படுத்தவும் அச் சேனையால் முடியும்.

கட்சியின் சரியான தலைமையின் பயனாகவும், நீடித்ததும் கடினமிக்கதும் வன்முறையானதுமான புரட்சிப் போராட்டத்தில் தாங்கிக் கொண்ட சிரமங்கள், சண்டைகளின் பலனாகவும் நமது சேனை மிக வலுவான **புரட்சித் தன்மையையும் அரசியல் சீலத்தையும் மிக உயர்ந்த போர்க்குணத்தையும்** அடைந்துள்ளது. இது, வியட்நாமியத் தொழிலாளி வர்க்கத்தினதும், தேசத்தினதும், நம் காலத்தினதும் சிந்தனையையும் வளர்ச்சியையும் உணர்வையும் சரியாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிபலிக்கிறது. இது, கட்சியினதும் மக்களதும் புரட்சிகர இலட்சியத்துக்கு முற்றான விசுவாசம் காட்டுவதில் அடங்கியுள்ளது; தாய்நாட்டின் சுதந்திரத்துக்காகவும் விடுதலைக்காகவும் போராடுவதில் கொண்ட அசைக்கமுடியாத தீர்மானத்திலும், 'நாட்டை இழந்து அடிமைப்படுவதிலும் அனைத்தையும் தியாகம் செய்வதே மேல்' என்ற எண்ணத்திலும், நாட்டின் மீதும் சோஷலிசத்தின் மீதும் கொண்ட தணியாத காதலிலும், உண்மையான பாட்டாளி வர்க்க சர்வதேசிய உணர்ச்சியிலும் அது அடங்கியுள்ளது. போராடி வெல்ல வேண்டும் என்ற வைராக்கியத்திலும் எதிரியைத் தாக்கி அழித்தொழிக்க வேண்டும் என்ற திடசித்தத்திலும் தீரமிக்க போர்க்குணத்திலும் புதுமைத் தேட்ட உணர்விலும் அற்புதமான சமயோசித உணர்விலும் ஐக்கிய உணர்விலும் ஒருங்கிணைப்புணர்விலும் கண்டிப்பான அமைப்புணர்விலும், ஒழுங்குணர்விலும் அது அடங்கியுள்ளது. சக நாட்டவர் மீதும் தோழர்கள் மீதும் கொள்ளும் தீர்க்கமான அன்பிலும், ஏகாதிபத்தியவாதிகள் மீதும் அவர்களின் கைக்கூலிகள் மீதும் ஒடுக்குமுறை மீதும் சுரண்டல் மீதும் கொள்ளும் ஆழ்ந்த வெறுப்பிலும் அது அடங்கியுள்ளது. இவ்வுணர்வு மிக உயர்ந்த புரட்சிகர விழிப்புணர்வாகும். இந்த உணர்வு, எந்த சந்தர்ப்பத்திலும் வர்க்கத்துக்கும் தேசத்துக்கும் எதிரான அனைத்து எதிரிகளின் திட்டங்களையும் சூழ்ச்சிகளையும் கண்காணித்தபடி இருக்கும். இந்த அரசியல் சீலத்தையும் இந்த ஒளிமிகு உணர்வையும் பற்றி தலைவர் ஹோ சி மின் பின்வருமாறு மதிப்பிட்டிருக்கிறார்:- 'நமது சேனை கட்சிக்கு விசுவாசமானது; மக்களுக்குத் தன்னை அர்ப்பணித்துள்ளது. தாய்நாட்டின் சுதந்திரத்துக்காகவும் விடுதலைக்காகவும் சோஷலிசத்துக்காகவும் தன்னலமற்றுப் போரிட ஆயத்தமாயிருக்கிறது. எந்தப் பணியையும் அது நிறைவேற்றுகிறது; எந்த இடையூறையும் அது வெல்கிறது; எந்த எதிரியையும் அது தோற்கடிக்கிறது; இதில்தான் நமது சேனையின் அளவற்ற பலம்



அதன் போராட்ட ஆற்றலின் ஊற்று காணக்கிடைக்கிறது. இது தற்காலத்திலும் வருங்காலத்திலும் நம் சேனையைக் கட்டுவதற்கும் போராடுவதற்கும் வழிகாட்டும் விலைமதிப்பற்ற செல்வமாக விளங்கும். நமது சேனையைக் கிரமமானதாகவும், நவீனமானதாகவும் கட்டும் போது, இந்த விலைமதிப்பற்ற செல்வத்தைப் பேணி வளர்க்கவும் இந்த நற்குணங்களை ஆழமாக வேரூன்றிய பண்புகளாக மாற்றிக் கொள்ளவும் வரவிருக்கும் தலைமுறைகள் எல்லாவற்றிலும் வியட்நாம் மக்கள் சேனையின் சீரிய மரபுகளாக இவற்றைச் செரித்துக் கொள்ளவும், நாம் தொடர்ந்து உறுதி எடுத்துக் கொள்கிறோம்.'

வியட்நாமில் தம் ஆக்கிரமிப்புப் போரை நீடிக்கவும் இந்தோ சீனா முழுவதிலும் அதை விஸ்தரிக்கவும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் மேற்கொண்டுள்ள பிடிவாதமான முயற்சிகளை முன் எப்போதையும் விட அதிகமாக நமது சேனை எதிர்கொண்டுள்ளது. இந்நிலையில் நமது சேனை தன் தன்னல மறுப்புக் குணத்தையும் ஆபத்துகள், தியாகங்கள் பற்றி அஞ்சாமையையும் அதிகரித்துக் கொள்ள வேண்டும். அமெரிக்க ஆக்கிரமிப்புக்கெதிரான தன் தேசபக்தப் போரை விடாமுயற்சியுடன் தீவிரப்படுத்த வேண்டும். மக்கள் சேனையின் பாத்திரத்தையும் தாக்கத்தையும் செயல்பாட்டையும் முழு அளவில் வெளிப்படுத்த வேண்டும்.

சேனையின் புரட்சித் தன்மையைத் தொடர்ந்து வலுப்படுத்துவதற்கு, சேனையின் அரசியல் நிர்மாணம் பற்றிய லெனினியக் கொள்கைகளை எப்போதும் மனதிலிருத்தி அவற்றைக் கண்டிப்பான முறையில் பிரயோகிக்க வேண்டும். இவை நமது சேனையின் சீரிய மரபாகி உள்ளன. அக்கொள்கைகளாவன:-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேனையின் மீது கட்சியின் முற்றான, நேரடியான, ஒட்டுமொத்த தலைமையை உறுதிப்படுத்துக. இது மிக அடிப்படையான கொள்கையாகும்.

கட்சியின் அமைப்பையும் அரசியல் வேலையின் முறையையும் வலுப்படுத்துக; சேனைக்குள் செய்யப்படும் அரசியல் வேலையைத் தொடர்ந்து வலுப்படுத்துக;

கட்சி மார்க்கம், அதன் புரட்சிக் கடமைகள், ஆணைகள், கோட்பாடுகள் ஆகியவற்றைத் தழைக்கச் செய்வதில் மிகுந்த கவனம் செலுத்துக. சேனையின் அரசியல் அறிவு அதன் தேசிய, வர்க்க உணர்வு, போராடவும் வெல்லவும் அதற்குள்ள மனவுறுதி ஆகியவற்றை மேம்படுத்துக;

கட்சியின் இராணுவ மார்க்கம், இராணுவ சிந்தனை, மக்கள் யுத்தத்தின் இராணுவ விஞ்ஞானம், இராணுவக் கலை ஆகியவற்றை சேனை முழுமையாகப் புரிந்து கொள்ளச் செய்வதற்கு அதிக முக்கியத்துவம் தருக;

தலைமையேற்றல், வழிநடத்தல், ஒழுங்கமைத்தல் ஆகிய திறன்களுடன் கூடியதும் கட்சியின் புரட்சி இலட்சியத்துக்கு முழுக்க விசுவாசமானதுமான ஊழியர் சேனையொன்றைப் பயிற்றுவிக்க;

புரட்சிச் சேனைக்குள் ஜனநாயகத்தைப் பரவலாக்குக; உருக்குப் போன்ற சுய ஒழுங்கைப் பலப்படுத்துக;

சேனைக்கும் கட்சிக்கும் இடையில், சேனைக்கும் புரட்சிகர அதிகாரத்துக்கும் இடையில், சேனைக்கும், மக்களுக்கும் இடையில் நல்ல உறவுகளை; நிறுவுக நமது சேனைக்குள்ளும், நமது சேனைக்கும் சகோதர நாடுகளின் சேனைகள் மற்றும் மக்களுக்கும் இடையிலும் நல்ல உறவுகள் நிறுவ வேண்டும்.



**கட்சி சம்பந்தமாக** நமது சேனை எப்போதும் கட்சி மார்க்கத்தின் மீதும் தலைமை மீதும் முழு நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. கட்சித் தலைமைக்கு முழு மனதுடன் கீழ்ப்படிகிறது. அனைத்து கட்சி மார்க்கங்கள், ஆணைகள், கோட்பாடுகள் ஆகியவற்றையும் கண்டிப்பான முறையில் செயல்படுத்துகிறது. அதன் மார்க்கங்கள், கோட்பாடுகள், நிலைபாடுகள் அனைத்தையும் காக்கப் போராடுகிறது. தன்னிடம் ஒப்புவிக்கப்பட்ட அனைத்துக் கடமைகளையும் வெற்றிகரமாக நிறைவேற்றுகிறது.

**புரட்சியதிகாரம் சம்பந்தமாக,** நம் சேனை அதற்கு மிகுந்த மரியாதை செலுத்துகிறது. புரட்சிகர அதிகாரத்தைக் காக்க தான் பூண்டுள்ள உறுதியை வெளிப்படுத்துகிறது. அரசு அங்கங்களுடன் நெருக்கமாக இணைந்து பணியாற்றுகிறது. அரசின் அனைத்து மார்க்கங்கள், ஆணைகள் கோட்பாடுகள் மற்றும் சட்டங்களைக் கண்டிப்பான முறையில் நிறைவேற்றுகிறது.

**மக்கள் சம்பந்தமாக,** நமது அதிகாரிகளும் ஆட்களும் ஈடுபாட்டுடன் மக்களுக்குச் சேவை செய்கிறார்கள்; அவர்களை மதிக்கிறார்கள்; அவர்களுக்கு உதவுகிறார்கள். மக்கள் நலன்களைக் காக்க தன்னலமின்றிப் போராடுகிறார்கள். மக்களின் ஒழுங்கைக் கண்டிப்பான முறையில் மதிக்கிறார்கள்.

**தமக்கிடையிலான உள்உறவுகளைப் பொறுத்தவரை,** நமது அதிகாரிகளும் ஆட்களும் உயர்ந்த ஒற்றுமையுணர்வு, ஒருமுகச் சிந்தனை, செம்மையான இசைவு, பரஸ்பரப் பரிவு, நன்மை தீமைகளைச் சமமாகப் பகிர்ந்து கொள்ளுதல், அமைப்புக்கு எளிதில் கீழ்ப்படியும் குணம், தம் மேலதிகாரிகளின் அனைத்து கட்டளைகள், அறிவுரைகள், தீர்மானங்களைக் கண்டிப்பான முறையில் அனுசரித்தல், சேனையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து நிரந்தர விதிகள், விதிமுறை விதிகள், ஆணைகள் ஆகியவற்றை நிறைவேற்றுதல் ஆகிய பண்புகளைக் கொண்டுள்ளார்கள்.

சகோதர நாடுகளின் சேனைகளுடனும் மக்களுடனும் கொண்டுள்ள வெளி உறவுகளைப் பொறுத்தவரை நமது சேனை எப்போதும் உண்மையான பாட்டாளி வர்க்க சர்வதேசிய உணர்வை உயர்ந்த அளவில் காட்டி வருகிறது. பொது எதிரியுடன் நடக்கும் போரில் அனைத்துத் தியாகங்களையும் இடர்ப்பாடுகளையும் ஏற்றுக் கொள்கிறது. சகோதர நாடுகளின் சேனையுடனும் மக்களுடனும் நேர்மையுடன் ஒன்றுபடுகிறது. சகோதர நாடுகளின் புரட்சி இலட்சியத்தைத் தனது சொந்த இலட்சியமாகவே எப்போதும் கருதி நடந்து கொள்கிறது.

கட்சித் தலைமையின் பலத்தையும் செயல்திறனையும் உயர்த்த, கட்சியின் அரசியல் இராணுவ மார்க்கத்தைப் பற்றிய புரிதலின் அளவை நாம் உயர்த்தவேண்டும்; சேனையில் கட்சியமைப்புகள், கட்சி ஊழியர்கள், கட்சி உறுப்பினர்கள் ஆகியோரின் செயல்பாட்டுத்திறனை உயர்த்தவேண்டும்; கட்சியால் ஒப்படைக்கப்படும் அனைத்து அரசியல், இராணுவ கடமைகளை நிறைவேற்றத் தக்கதாக மக்கள் சேனையை கிரம நவீன சேனையாக கட்டும் தேவையைப் பூர்த்தி செய்வதும் அவசியம். சேனையை அரசியல், சித்தாந்த வழியில் கட்டுவதுபற்றி நமது கட்சி மிகுந்த அனுபவத்தைச் சேகரித்திருக்கிறது. பிரதானமாக காலாட் படையைக் கொண்டதும் மற்ற படைத்துறைகள் ஓரளவே உள்ளதுமான சேனையைக் கட்டுவதில் அதற்கு சிறப்பனுவம் உண்டு. நமது நாட்டின் குறிப்பான நிலைமைகளுக்குத் தக்க நிகழ்காலத்திலும் வருங்காலத்திலும் பல படைகளையும் படைத்துறைகளையும் கொண்டிருக்கும் படியான கிரம, நவீன மக்கள் சேனையைக் கட்டுவதில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதில் நமது கட்சி வீறு நடைபோடுகிறது. எனவே நமது நாட்டில் கிரம நவீன மக்கள் சேனையைக் கட்டி நடத்துவதன் விதிகள்பற்றிய உறுதியான புரிதலைப் பெறுவதற்காகவும், ஒரு முன்னேறிய வியட்நாமிய இராணுவ விஞ்ஞானத்தை நிறைவாக உருவாக்குவதில் அவ்விதிகளைச் சரியாகப் பிரயோகிக்கவும், நாம் மேற்கொண்டும் ஆய்வுகள் செய்யவேண்டும் இது இன்றைய முக்கியமான பணிகளில் ஒன்றாகும். அப்போதுதான் இன்று அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடிக்கவும், வருங்காலத்தில் நம் தாய்நாட்டைக் காக்கவும் முடியும். இந்த அடிப்படையில் இருந்துதான் கட்சியின் இராணுவ மார்க்கத்தையும், ஒரு கிரம நவீன புரட்சிச் சேனையைக் கட்டுவதில் அதன் மார்க்கத்தையும் நாம் செம்மைப் படுத்தவும் செழுமைப்படுத்தவும் பின் அதை உறுதிப்படுத்தவும் வேண்டும்.

நமது சேனையின் புரட்சித் தன்மையைப் பலப்படுத்தும் அடிப்படையில், அதை ஒரு கிரம, நவீன சேனையாக மாற்றுவதை நாம் தீவிரப்படுத்த வேண்டும். ஓரளவு செம்மையும் ஒழுங்கமைப்பும் பெற்றுவிட்ட சேனை, இயல்பாகவே கிரமசேனையாய் மாறும் தன்மையைக் கொண்டுள்ளது. கடந்த காலத்திலும், நம் நாட்டில், பிற நாடுகளில் போலவே, கிரம சேனையைக் கட்டும் பிரச்சினை முன்வைக்கப்பட்டு தீர்க்கப் பட்டிருக்கிறது. ஒரு சேனை எவ்வளவுக்கு நவீனமாகிறதோ அவ்வளவுக்கு அதை மத்தியப்படுத்தும் தேவை தவிர்க்க முடியாததாகிறது. அதைக் கிரமப்படுத்தும் பிரச்சினை மிக அவசரமானதாகி விடுகிறது.

நம்மினும் வலிய எதிரியுடன் மோதும்போது, எந்த நேரத்திலும் துணிச்சலான காரியங்களில் ஈடுபட நாம் தயாராயிருக்க வேண்டும் என்று லெனின் கூறினர். இன்று





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையாள்வதற்கு மென்மேலும் சிக்கல் வாய்ந்தனவாகியிருக்கிற நவீன சாதனங்களையும் தொழில் நுட்பங்களையும் ஒரு சேனை பயன்படுத்துகிறது; நவீன (போர்) நடவடிக்கைகளுக்கு மிக நெருக்கமான, நெளிவு சுளிவான ஒருங்கிணைப்பு தேவைப்படுகிறது; இந்த நிலைமையில் உயர்ந்தபட்ச மத்தியத்துவம் இன்றேல் சிந்தனையும் செயலும் ஒன்றுபடுவது சாத்தியமில்லாமல் போய்விடும். அத்தகைய மத்தியத்துவம் இல்லாவிட்டால், பரந்த நிலப்பரப்பில் இயங்கும் பத்தாயிரக் கணக்கான அல்லது இலட்சக்கணக்கான மனிதர்கள் போர்க்களங்களின் வளர்ச்சிகளுக்குத்தக ஆணைதரும் ஒரே ஒன்றுபட்ட தலைமையைக் கொண்டிராவிட்டால், தம் சண்டை முறைகளில் துரித மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியாமல் போகும். நவீனப் போரில் போர்க் கடமைகளை நிறைவேற்ற முடியாமல் போகும்.

**ஒரு சேனையைக் கிரமமாக்குவதற்கு நிரந்தர விதிகள், விதிமுறைகள், ஆணைகள் ஆகியவை மூலம் ஒரேபடித்தான அமைப்பாக அதை மாற்ற வேண்டும்.** அப்போது தான் அதன் நடவடிக்கையை ஒரே சீராக்கவும், அதன் ஒழுங்கமைந்த, மத்தியப்பட்ட, விஞ்ஞான ரீதியான தன்மையை வலுப்படுத்தவும், உறுதியானதும் ஒரே நோக்கமுடையதுமான செயலையும், போரின் போது சேனையின் பல்வேறு பகுதிகளிடையில் நெருங்கிய ஒருங்கிணைப்பையும் பெறுவதைச் சாத்தியமாக்கவும் முடியும். நிரந்தர விதிகள், விதிமுறைகள், ஆணைகள் ஆகியவற்றை உருவாக்கிச் செயல்படுத்தும் போக்கில்' கிரமப்படுத்தல் நடைமுறையாகிறது.

சுரண்டும் வர்க்கங்களின் சேனைகளைப் போலவே புரட்சிச் சேனையும் கிரம சேனையாக்கப்பட வேண்டும். ஆனால் இவ்விரண்டுக்கும் இடையிலான அரசியல் தன்மை எதிரும் புதிருமாய் இருப்பதால், இந்த நிகழ்முறை அதன் இலக்கிலும், உள்ளடக்கத்திலும், முறைகளிலும் முற்றிலும் வித்தி



யாசமான முறையிலேயே நடைபெறும். சுரண்டும் வர்க்கங்களின் சேனைகளின் இலக்கு அவற்றின் பிற்போக்கு அரசியல் நோக்கங்களுக்கு சேவை புரிவதே ஆகும். இச் சேனைகளின் அனைத்து நிரந்தர விதிகளும் விதிமுறைகளும் அச் சேனைகளின் எதிர்ப் புரட்சிகர இயல்பையும் சேனைகளுக்குள் இருக்கிற ஏற்றத்தாழ்வான உறவுகளையும் பிரதிபலிக்கின்றன. இந்த நிரந்தர விதிகளும், விதிமுறைகளும் மேலிருந்து திணிக்கப்பட்ட இறுகிய கட்டுப்பாட்டை அடிப்படையாய்க் கொண்டவையாகும்; ஆணைகளுக்குக் குருட்டுத்தனமாகக் கீழ்ப்படிந்தாக வேண்டும். புரட்சிகரக் கிரம சேனையைக் கட்டுதல் என்ற விடயம் இதற்கு நேர்மாறானது. புரட்சியின் உன்னதமான அரசியல் குறிக்கோள்களுக்குச் சேவை செய்வது தான் இச் சேனையின் இலக்காகும். இதன் அனைத்து நிரந்தர விதிகளும் விதிமுறைகளும் சேனையின் புரட்சிகர இயல்பையும் புதிய வகைச் சேனையைக் கட்டுதல் பற்றிய சீரிய கோட்பாடுகளையும் பிரதிபலிக்கின்றன. இந்த நிரந்தர விதிகளுக்கும் விதிமுறைகளுக்கும் அடிப்படையாக இருப்பன: அதிகாரிகளதும் ஆட்களதும் அரசியல் உணர்வு; அவர்களது சுய ஒழுங்கு; இவற்றை நடைமுறைப் படுத்துவதில் அவர்கள் காட்டும் முன்முயற்சியும் உற்சாகமும். இந்த சீரிய அரசியல் அடிப்படையே புரட்சிகரக் கிரம சேனையை சுரண்டும் வர்க்கங்களின் சேனையைக் காட்டிலும் மேம்பட்டதாக்குகிறது.

கடந்த ஆண்டுகளில் சேனை விதிமுறைகளை நாம் பிரகடனம் செய்தும் திருத்தியமைத்தும் செம்மைப்படுத்தியும் வந்தது, நமது சேனையைக் கட்டுவதில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இராணுவ சேவை, அதிகாரம் பெற்ற, அதிகாரம் பெறாத அதிகாரிகளின் படைத்துறையும் இராணுவப் படித்தரங்களும் பற்றிய ஒழுங்குமுறை விதிகள், உள் அமைப்பு, இராணுவ அமைவு, இராணுவப் பொலிஸ், இராணுவ ஒழுங்கு, போர்முறை விதிகள், பொது ஊழிய

ரின் பணி, அரசியல் வேலை, இராணுவ விநியோகம் ஆகியவை சம்பந்தமான விதிகள்... மத்தியத்துவத்தை உறுதிப்படுத்தவும், சேனையின் கிரமத் தன்மையைத் தீவிரப் படுத்தவும், அதன் போரிடும் ஆற்றலை உயர்த்தவும் உதவியுள்ளன. இந்த விதிகளும், விதிமுறைகளும் நமது சேனையின் புரட்சிகர இயல்பை மென்மேலும் உண்மையாகப் பிரதிபலிக்கின்றன. அவை நமது கட்சியின் இராணுவச் சிந்தனை, அதன் இராணுவ மார்க்கமும் இராணுவக் கலையும், நமது சேனையினதும் நாட்டினதும் குறிப்பான சூழ்நிலைக்கிசைந்த முறையில் சேனையைக் கட்டுவது சம்பந்தமான அதன் கொள்கைகள் ஆகியவற்றின் பிழம்புருவாக அமைகின்றன. விதிகளில் தேவையான சேர்க்கைகளையும் திருத்தங்களையும் செய்து கொள்வதில் போரின் அனுபவங்கள் நமக்கு உதவியுள்ளன; விதிமுறைகளை வகுத்தளிப்பதில் மிகுந்த அனுபவத்தை வழங்கியுள்ளன. சதா மாறி வரும் சூழ்நிலைமையின் அடிப்படையிலும், தன்னை உருவாக்கிக் கொண்டு போராடும் நமது சேனையின் கடமையின் அடிப்படையிலும் நின்று, நாம் தற்போது வருங்காலத்திலும் கிரம சேனையை அமைக்கும் பணியில் மேலும் நல்ல கருவியாய்ப் பயன்படும் படியாக இவ்விதிமுறைகளைத் தொடர்ந்து ஆய்வதும் வளர்ப்பதும் அவசியமாகும். இந்த முறை நமது சேனையின் பின்வரும் அனைத்து நடவடிக்கைகளையும் தழுவ வேண்டும். அவை:-

சேனையைக் கட்டுதல், தேசப் பாதுகாப்பைப் பலப்படுத்துதல் என்ற கடமையில், கட்சி, அரசு ஆகியவற்றின் பொதுவான கொள்கைகளையும் வழிகாட்டுதலையும் பிரதிபலிக்கும் முக்கியமான விதிமுறைகள், இவை நமது சேனையின் மீதும் அனைத்து மக்கள் மீதும் சட்டத்துக்குள்ள அதிகாரத்தைப் பெற்றிருக்கும்.

சேனை, அதன் படைகள், துறைகள் ஆகியவற்றை நிறுவுவதும் அவற்றுக்கு சாதனங்கள் வழங்குவது பற்றிய



துமான விதிகள். இவை சேனையமைப்பை ஒன்றிணைப்பதற்கான அடிப்படைகளாக விளங்க முடியும்.

உள் விவகாரங்கள், இராணுவ அமைவு, இராணுவ பொலிஸ், இராணுவ ஒழுங்கு பற்றிய விதிமுறைகள். இவை கிரம சேனையின் அமைப்புக்கான அடிப்படைகளாக அமைவன.

சேனை, அதன் படைகள், படைத்துறைகள் ஆகியவற்றின் போர்முறை விதிகள். இவை ஆட்கள், பிரிவுகள், சேனைப்படைக் குழுக்கள், ஆகியவற்றின் அடிப்படையான நடவடிக்கை முறைகளை வரையறுக்கும் தன்மை உடையன.

அலுவலர்களின் பணி, அரசியல் வேலை, இராணுவ விநியோகம், கல்வி, பல்வேறு கிளைகளின் பிற கடமைகள் ஆகியவை பற்றிய ஆணைகள்.

விதிகளும் விதிமுறைகளும் எவ்வளவு விரிவானவையாக இருந்தாலும் அவை நடைமுறையில் எழும் அனைத்துத் தேவைகளையும் தழுவியதாய் அமைய முடியாது என்பது நம் கருத்து. விதிமுறைகள் சேனையின் நடவடிக்கைகளுக்கு ஒரு அடிப்படையான திசைவழியைத் தருகின்றன; அவ்வளவே. எல்லா கால இடச் சூழ்நிலையிலும் எழும் எல்லாப் பிரச்சினைகளையும் அவற்றால் தீர்த்துவிடமுடியாது. எனவே விதிமுறைகளைக் கண்டிப்பாய் அமுல்படுத்துவதை வலியுறுத்தும் அதே போது, நாம் அதிகாரிகள் மற்றும் ஆட்களின் புதுமை நாட்டத்தையும் சமயோசித புத்தியையும் மங்கவிடாதபடி இடைவிடாமல் அவற்றைத் தூண்டிவிட வேண்டும். பழகிச் சலித்த விடைகளையும் யந்திரத் தனமான சிந்தனைமுறையையும் தவிர்க்க வேண்டும்.

விதிமுறைகளின் உள்ளடக்கம், சேனையின் அனுபவத்தையும், குறிப்பிட்ட கால இடச் சூழலில் ஒரு சேனையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியமைக்கும் தேவைகளையும் அதன் போர்த்தேவை களையும் பிரதிபலிக்கின்றது. நமது சேனையைக் கட்டிய மைக்கும் நடைமுறையும் அதன் போர் அனுபவமும் பல் வேறு துறைகளில் அதற்கிருக்கும் ஆற்றல்களும் அதே போல எதிரியின் ஆற்றல்களும் இராணுவ விஞ்ஞானங்க ளும் இடைவிடாது வளர்ச்சி பெற்று வருகின்றன. எனவே விதிமுறைகளுக்குப் புதிய வீரியம் சேர்க்கவும், அவற்றை அனைத்து நடைமுறை நடவடிக்கைகளிலும் சேனைக்கு மேலும் திறம்மிக்க வழிகாட்டியாக்கவும் விதிமுறைகளைத் தொடர்ந்து திருத்தியும் வளர்த்தும் வரவேண்டும்,

இந்த விதிகளையும் விதிமுறைகளையும் வரைந்து அவற் றைப் படிப்படியாய்ச் செம்மைப்படுத்தும் அடிப்படையில், நாம் அவற்றைக் கறாராக அமுல்படுத்துவதற்காக சேனைக் குள் கல்விப் பணியைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும், விதிகள், விதிமுறைகள் ஆகியவற்றை நடை முறைப்படுத்துவது என்பது எல்லாவற்றுக்கும் முதலாவ தாக, அதிகாரிகள், ஆட்கள் ஆகியோரது ஒழுங்கமைப்பு உணர்வையும் ஒழுங்கையும் சார்ந்திருக்க வேண்டும். அடுத்து அது மெல்லமெல்ல நடைமுறை ஒழுங்காக மாற் றப்பட்டு, புதிய பழக்கமாகிவிட வேண்டும். அவை நவீன உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழிலாளி வர்க்கத்தின் பழக் கங்களாயிருக்க வேண்டும். சிதறிக் கிடப்போரும், முறைப் படுத்தப்படாத கைத்தொழில் உற்பத்தியில் ஈடுபடுவோரு மான சிறு உற்பத்தியாளர்களின் பழக்கங்களாயிருக்கக் கூடாது.

கிரம சேனையை விரைவாகக் கட்டுவதற்குத் தேவை யானது சேனையின் ஒழுங்கமைப்புணர்வு, ஒழுங்கு ஆகிய வற்றை உயர்த்துவது தான். 'செஞ்சேனையின் கிரமத் தன் மையையும் சண்டைத் திறனையும் உயர்த்துவதில், கண்டிப் பான இராணுவக் கட்டுப்பாட்டை உருவாக்குவதும்,



அனைத்து ஆணைகளையும் தீர்மானங்களையும் முழுமையாக நிறைவேற்றச் செய்வதும் அதிமுக்கியமானவையாகும்' என்று லெனின் வலியுறுத்தினர். லெனின் குறிப்பிட்டது போல் 'சேனையில் மிகத் தீவிரக் கட்டுப்பாட்டொழுங்கு நிலவ வேண்டும்.'[46] "(சேனையின்) மேலிருந்து கீழ் வரை உள்ள அனைத்து ஆணைசெலுத்தும் அங்கங்களையும், எப் பாடுபட்டேனும் போர் ஆணைகளை நிறைவேற்றி முடிக்கும் பலம் வாய்ந்த உருக்குக் கரங்களாக நாம் மாற்ற வேண் டும்".[47]

நமது சேனையின் கட்டுப்பாடு, புரட்சிச் சேனை தனக் குத் தானே விதித்துக் கொள்ளும் கறாரான சுயகட்டுப்பா டாகும். இந்தக் கட்டுப்பாடு தொழிலாளி வர்க்க சேனை யின் புரட்சித் தன்மையையும் அச் சேனையைக் கட்டி யமைப்பதற்கான சித்தாந்த, ஸ்தாபனக் கொள்கைகளை யும் பிரதிபலிக்கிறது. இது ஒரு உண்மையான உருக்குக் கட்டுப்பாடாகும்; புதியவகை கட்டுப்பாடாகும்; சுரண்டும் வர்க்கங்களின் சேனைகள் எதுவும் அறிந்திராத உண்மையி லேயே உறுதியான கட்டுப்பாடாகும்.

கட்சித் தலைமையின் கீழும், சேனையைக் கட்டிப் போராடும் நீண்ட நிகழ்முறையின் போதும், நம் சேனை புரட்சிகரக் கட்டுப்பாட்டு என்ற சீரிய மரபைப் பெற்றிருக் கிறது. இந்தக் கட்டுப்பாட்டு மரபு எப்போதும் நமது சேனை யின் அனைத்து வெற்றிகளுக்கும் முக்கியமான காரணியாக இருந்து வந்திருக்கிறது.

இருப்பினும் இந்தக் கட்டுப்பாட்டின் வலுவான அம்சங் கள் மட்டுமே உள்ளன என்று சொல்ல முடியாது. ஒரு பிற் பட்ட விவசாய நாட்டில் சோஷலிசத்தைக் கட்டும் முதல் படிகளில் நமது சேனை தோன்றி வளர்ந்திருக்கிறது. எனவே இங்கே சமூக வாழ்க்கையின், மனித வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் சிறு உற்பத்தியாளர் மனோபாவம் இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுத்தமாக உள்ளது. மேலும் நம் சேனை நீடித்த புரட்சிப் போர் என்ற நெருப்பில் புடம் போடப்பெற்றுள்ளது; ஒன்றுமில்லா நிலையிலிருந்து துவங்கி கெரில்லாப் போர் முறையைப் பின்பற்றுவதாய் வளர்ந்து பின் கிரமப் போர் முறைக்கு வளர்ந்துள்ளது; பல போர்க்களங்களில் செயல்பட்டுள்ளது; மிகக் கடுமையானதும் இக்கட்டானதுமான நிலைமைகளில் பல தசாப்தங்களாகப் போரிட்டுள்ளது... எனவே நம் அதிகாரிகளும் ஆட்களும் அவர்களின் அடிப்படையான நல்ல குணாம்சங்களுடன், நவீன சேனையின் உயர்ந்த ஒழுங்கமைப்புக்கு ஒவ்வாத எண்ணங்களையும் பழக்கங்களையும் வாழ்க்கை முறைகளையும் இன்னமும் பெற்றிருக்கிறார்கள். அமைப்பிலும் ஆயுத சாதனங்களிலும் ஏற்பட்டுள்ள புதிய வளர்ச்சிகளுக்கிசைந்த மிக உயர்ந்த இராணுவக் கட்டுப்பாட்டு நிலையை இன்னும் நாம் எட்டவில்லை. இன்னும் நாம் நமது சேனையைக் கட்டிப் போராடுவதில் மென்மேலும் கடினமாகிவரும் சிக்கலான பணிகளுக்கு முழுமையாக நம்மைத் தகவமைத்துக் கொள்ளவில்லை.

எனவே நாம் ஒரு நவீன கிரம சேனைக்கு இருக்க வேண்டிய கட்டுப்பாட்டின் தேவையையும் நவீன சேனை ஆற்ற வேண்டிய **பாத்திரத்தையும்** நம் சேனைக்குள் ஆழமாகப் பதியச் செய்ய தொடர்ந்து முயல வேண்டும். சேனை முழுவதும் அனைத்து விதிமுறைகளையும் கண்டிப்பாய் அனுசரிக்கவும், மேலதிகாரிகளின் அனைத்து ஆணைகளையும் உத்திரவுகளையும் முழுமையாக நிறைவேற்றவும் செய்வதற்காக சேனையின் அமைப்பிலும், சேனையின் நிர்வாகத்திலும் ஒரு அடிப்படை மாற்றத்தை நாம் கொணர்ந்தாக வேண்டும்.

மக்கள் சேனையை, புரட்சிச் சேனையை எப்படி கிரம சேனையாக மாற்றுவது என்பதே நாம் எதிர்கொண்டுள்ள பிரச்சினை. எனவேதான் இந்த மாற்றத்தைச் செய்யும்



போது, நாம் அதிகாரக் குவிப்புக்கும் ஜனநாயகத்துக்கும் இடையிலான உறவு, கட்சிச் செயற்குழுவின் தலைமைக்கும் படைத்தலைவரின் பாத்திரத்துக்கும் இடையிலான உறவு, அதிகாரிகளுக்கும் ஆட்களுக்கும் இடையிலான ஐக்கியம், மேல் நிலையிலிருப்பவர்களுக்கும் கீழ் நிலையிலிருப்பவர்களுக்கும் இடையிலான ஒட்டுறவு ஆகியவற்றின் பிரச்சினைகளைத் திருப்திகரமான முறையில் தீர்க்க வேண்டும். சித்தாந்த வேலையை அமைப்பு வேலையுடன் நெருக்கமாக இணைக்க வேண்டும். கல்வி புகட்டுதலைத் தீவிரப் பயிற்சியுடனும் நிர்வாகத்துடனும் நெருக்கமாக இணைக்க வேண்டும். தொண்டு மனப்பான்மையைக் கடமையுணர்வுடன் இணைக்க வேண்டும். நீதியான வெகுமதிகளையும் தண்டனைகளையும் அளிக்க வேண்டும். நிர்வாகம், ஒழுங்கு, விதிமுறைகளின் படி ஒழுகுதல் என்பவற்றில் அனைத்து அதிகாரிகளுக்கும் ஆட்களுக்கும் இடையில் பொறுப்புணர்வு, கூட்டுத் தலைமை உணர்வு ஆகியவற்றை வளர்க்க வேண்டும். இவ் விடயத்தில் அதிகாரிகளும் அவர்களின் அமைப்பு மற்றும் நிர்வாக நிலையும் முன்னுதாரணமாகத் திகழ்வது, மிக முக்கியத்துவம் உடையதாகும்.

கிரமப்படுத்துவதுடன், நமது **சேனையை நவீனப்படுத்துவதிலும்** நாம் தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டும். நமது மக்கள், சோஷலிசத்தையும், பெரிய அளவிலான சோஷலிச உற்பத்திக்கான பௌதீக, தொழில் நுட்ப அடிப்படையையும் கட்டத் துவங்கியுள்ள காலத்தில், குறிப்பாக, உலக விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் மிக உயர்ந்த வளர்ச்சிநிலை எய்தி சேனைகளின் சாதனங்களிலும் தொழில் நுட்பங்களிலும் பெரிய, துரித மாற்றங்கள் ஏற்படுத்தியுள்ள இன்றைய நிலையில் நமது சேனையின் போராட்ட பலத்தை உயர்த்துவதற்கு, சேனையை நவீனப்படுத்துவது ஒரு அடிப்படையான தேவையாகும். நவீனப்படுத்தலின் மூலம், நமது சேனை எந்த ஆக்கிரமிப்பாளனுக்கும் எதிரான போரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரித்த சாதன, தொழில்நுட்பத் திறனுடையதாய் விளங்க முடியும்.

நவீனப்படுத்துதல் என்றால், **சேனையின் சாதனங்களையும் தொழில்நுட்பத்தையும் தொடர்ந்து மாற்றுவதற்கும், தொழில்நுட்பப் படைகளினதும் படைத்துறைகளினதும் வளர்ச்சியை ஏற்படுத்துவதாகும். அதிகாரிகளும் ஆட்களும் புதிய போராயுதங்களையும் போர்முறைகளையும் சிறந்த முறையில் பயன்படுத்த முடிவதாகும். மேலும் நவீன தேசப் பாதுகாப்புத் தொழில்துறையைக் கட்டுவதும், நவீன தகவல் தொடர்பு அமைப்பை விரிவுபடுத்துவதும்** இதில் அடங்கும். இவை நவீனப் போர்முறையின் சூழலில் சேனை நன்கு இயங்க அத்தியாவசியம். சிறந்த அரசியல் தன்மையுடனும் நல்ல விஞ்ஞான ரீதியான அமைப்புடனும், நவீனத் தொழில்நுட்பமும் சாதனங்களும் சேரும்போது நமது சேனையின் போர்த்திறன் அளவு கடந்து பெருகும். **மக்கள்** சேனையிலுள்ள புதிய மனிதன், தீவிர தேசபக்தி, முழுமையான சோஷலிச உணர்வு, உயர்ந்த ஒழுங்கமைப்பு, ஒழுங்குணர்வு மற்றும் நவீன இராணுவ அறிவு ஆகியவற்றைக் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும்.

கடந்த ஆண்டுகளில் வட வியட்நாமில் சோஷலிசத்தைக் கட்டுகையில் நடத்தப்பட்ட தொழில்நுட்பப் புரட்சியின் சாதனைகளைச் சார்ந்து நின்றும், சகோதர சோஷலிச நாடுகளின் உதவியுடனும், முன்னெப்போதையும் விட பலமான பௌதீக, தொழில்நுட்ப அடித்தளத்தை நமது சேனை இன்று பெற்றிருக்கிறது. நமது காலாட்படைகளிடம் மிக நவீன ஆயுதங்கள் உள்ளன. நமது சேனையின் படைகளும் படைத்துறைகளுமான தரைப்படை, விமானப்படை, கப்பற்படை, பீரங்கிப்படை, விமானவீழ்த்திப் பாதுகாப்புப்படை, கவசப் படையலகுகள், பொறியியலாளர் படையலகுகள், இரசாயன (முறியடிப்பு) படையலகுகள், சமிக்ஞைத்துறை, போக்குவரத்துத்துறை ஆகியன நவீன ஆயுதங்களையும் சாதனங்களையும் தரித்துள்ளன. படையினதும், படைத்துறைகளினதும் வளர்ச்சியுடன் கூடவே தொழில்நுட்பத் தளங்களின் அமைப்பு உருவாகியிருக்கிறது. வியட்நாமியப் போர்க்களத்தின் குறிப்பான சூழ்நிலைகளில் நவீன ஆயுதங்களையும் போர் முறைகளையும் பயன்படுத்துவதில் நமது அதிகாரிகளும் ஆட்களும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளனர். பிரெஞ்சு ஆதிக்கத்துக்கு எதிரான எதிர்ப்புப் போரின் இறுதிக் கட்டங்களிலிருந்து நமது சேனை நவீனப்படுத்துவதில் பெரிய பாய்ச்சல்களை நிகழ்த்தி வந்துள்ளது. அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிரான தேசபக்தப் போரில் நமது சேனை பெற்ற பெரும் வெற்றிகளை, சாதன, தொழில்நுட்பங்களில் ஏற்பட்ட புதிய வளர்ச்சிகளிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது.

இருப்பினும் இவையெல்லாம் முதல் அடிவைப்புகளே. நமது முகாமிலும் உலகிலும் உள்ள பல நாடுகளின் சேனைகளுடன் ஒப்பிடும்போது, நமது சேனையின் நவீனப்பாட்டின் அளவு தாழ்ந்த நிலையிலேயே உள்ளது. நமது சேனைக்கும் எதிரிக்கும் இடையில் இன்றும் ஆயுத சாதன தொழில்நுட்ப வகையில் ஒரு பொருத்தமின்மை காணப்படுகிறது. அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்த நமது தற்போதைய தேசபக்தப் போருக்கும் வருங்காலத் தேசப் பாதுகாப்புக்கும் மேலும் அதிக நவீனத்துவத்துக்கான கடும் முயற்சிகள் தேவைப்படுகிறது. இதுவே நமது சேனையினதும் மக்களதும் விருப்பமும் கடமையும் ஆகும்.

**குறிப்பிட்ட சூழ்நிலைகளுக்கும் நமது நாட்டின் தேசப் பாதுகாப்பின் தேவைகளுக்கும் பொருந்திய முறையில்** நவீன சேனையைக் கட்டுதல் வேண்டும். எனவே கட்சியின் அரசியல், பொருளாதார, இராணுவ மார்க்கங்களை நாம் உறுதியாகப் பிடித்தொழுக வேண்டும். நமது நாட்டின் மூல





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளங்கள், சிறப்புச் சூழ்நிலைகள் ஆகியவற்றையும் எதிரியின் தன்மைகள், நமக்கும் அவனுக்கும் இடையிலான சக்தியின் பலாபலங்கள் ஆகியவற்றையும் மக்கள் யுத்தத்தின் இராணுவக் கலை, உலக இராணுவ விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சித் திசை ஆகியவற்றையும் புரிந்துகொண்டு, நமது சேனையை நவீனப்படுத்துவது சம்பந்தமான பிரச்சினைகளுக்கு ஆக்கபூர்வமான தீர்வு காண வேண்டும்.

நாம் நம் சேனையின் சாதன தொழில்நுட்பங்களில் தொடர்ந்து மேம்பாடுகள் செய்துகொண்டே செல்ல வேண்டும். அப்போது தான் அது ஓரளவுக்கோ முழு அளவுக்கோ நவீனமாக விளங்கமுடியும்; தன் சுடுதிறன், தாக்குதிறன், இயங்குதிறன் ஆகியவற்றை அதிகரித்துக் கொள்ள முடியும். இதனைச் சாதிக்க, நமது பொருளாதாரம் நன்கு வளர்ச்சி பெற்றாக வேண்டும். அதுவே நமக்கு அடித்தளமாகும். மேலும் நமது சேனையின் நவீனப்படுத்தலை விரைவுபடுத்த சகோதர சோஷலிச நாடுகளின் உதவியை நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

நம் காலத்தில் நவீன சேனை, பல படைகளும் படைத்துறைகளும் உள்ளடங்கியதாக இருக்க வேண்டும். எனவே நாம் நமது தேவைகளுக்குப் பொருத்தமான படைகள் மற்றும் படைத்துறைகளைச் சரிவிகித அளவில் அமைத்துக் கொள்ள வேண்டும். தற்போதும் வருங்காலத்தில் ஒப்பீட்டு நோக்கில் ஒரு நீண்ட காலத்துக்கும் தரைப்படைகளே வியட்நாம் மக்கள் சேனையின் பிரதான படையாய் இருந்துவரும். தரைப்படையில் காலாட்படையே பிரதான படைத்துறையாயிருக்கும். பீரங்கிப்படையே முதன்மையான சுடுதிறனாகும். நாம் தொடர்ந்து நமது விமானப்படை, விமானவீழ்த்திப் பாதுகாப்புப் படையலகு, கப்பற்படை, கவசப் படையலகுகள், பொறியியல் படையலகுகள், சமிக்ஞைப் படை



யலகுகள், இரசாயன (முறியடிப்பு) படையலகுகள், போக்குவரத்துப் படையலகுகள் ஆகியவற்றை வலுப்படுத்த வேண்டும். நமது சேனையின் நிர்வாக அமைப்பில் தொழில்நுட்பப் படைகளும் படைத்துறைகளும் கூடுதல் விகிதாச்சாரம் பெறும்படியாக நாம் போரிடும் படைத்துறைகளையும் துணைப் படைத்துறைகளையும் அறிவார்ந்த முறையில் தொடர்ந்து நிறுவ வேண்டும்; நவீனப் போர்முறையின் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளில், அவற்றின் தாக்கத்தை உயர்த்தவேண்டும். எதிரி, மரபு ஆயுதங்களைப் பயன்படுத்தினாலும் சரி இரக்கமற்ற முறையில் அணுஆயுதங்களை உபயோகித்தாலும் சரி, நமது சேனை அவனைத் தோற்கடிக்க ஆயத்தமாக இருக்க வேண்டும்.

நவீன சேனை, போரில் தன் முழுத்தாக்கத்தையும் செலுத்துவதற்காக சிறந்த தொழில்நுட்பமும் சிறந்த தகவல் தொடர்பு வசதிகளும் பெற்றிருக்க வேண்டும். எனவே, தேசியப் பாதுகாப்பின் தேவைகளுக்கும் பொருளாதாரத்தின் தேவைகளுக்கும் இடையிலும், அரசின் பின்புலத்தைக் கட்டுவதற்கும் சேனையின் பின்புலத்தைக் கட்டுவதற்கும் இடையிலும் உள்ள நெருங்கிய ஒருங்கிணைப்பின் அடிப்படையில், நாம் தேசப் பாதுகாப்புத் தொழில்துறையையும் தகவல் தொடர்பு அமைப்பையும் கட்டியமைப்பதைத் துரிதப்படுத்த வேண்டும். இவை நமது சேனையின் போர்த் தேவைகளுக்கும் நமது நாட்டின் குறிப்பான நிலைமைகளுக்கும் பொருந்தியதாயிருக்க வேண்டும்.

இந்த தேசியப் பாதுகாப்புத் தொழில்துறை சகலவிதமான பழுதுபார்ப்பு வேலைகளையும் செய்யக் கூடியதாயிருக்க வேண்டும். உதிரிப்பாகங்களையும் கூடுதல் பாகங்களையும் உற்பத்தி செய்யக்கூடியதாகவும் இவ்வாறு நடைமுறைத் தந்திரத்தின் தேவைகளுக்கேற்ப போர்ச்சாதனங்களை மேம்படுத்துவதாகவும் இருக்கவேண்டும். அதேபோது நம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிடமுள்ள வசதி வாய்ப்புகளைப் பயன்படுத்தி சிலவகை ஆயுதங்களையும் போர்ச்சாதனங்களையும் அது உற்பத்தி செய்துதர முயலவேண்டும். சாலைகள், ரயில் பாதைகள், நீர், விமான வழிகள் உள்ளிட்ட தொடர்பு வழிகளின் அமைப்மை நாம் தொடர்ந்து விரிவுபடுத்த வேண்டும். இராணுவ முக்கியத்துவமுள்ள தொடர்பு மார்க்கங்களை பொருளாதார முக்கியத்துவமுள்ள தொடர்பு மார்க்கங்களுடன் நெருக்கமாக இணைக்க வேண்டும். மத்தியத் தகவல் தொடர்பு வழிகளை ஸ்தலத் தகவல் தொடர்பு வழிகளுடன் நெருக்கமாக இணைக்க வேண்டும். இவ்வாறு எந்த சந்தர்ப்பத்திலும் நவீன சேனை இயங்குதிறன் கொண்டிருப்பதற்கு நாம் பங்காற்ற முடியும்.

சேனையை நவீனப்படுத்துவது என்பது ஒரு நீண்ட நிகழ்முறை. சோஷலிசத்துக்கான பௌதீக தொழில்நுட்ப அடிப்படைகளைக் கட்டுவதில் வளர்ச்சி பெறுவதையே அது சார்ந்துள்ளது, எனவே பொருளாதார-பண்பாட்டு வளர்ச்சித் திட்டங்களின் நெருங்கிய ஒருங்கிணைப்பின் அடிப்படையில் **சேனையை நவீனப்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டம்** ஒன்று நமக்கு இருக்கவேண்டும். அப்போது தான் ஊழியர்களைப் பயிற்றுவிப்பது, விஞ்ஞான, தொழில்நுட்ப ஆய்வு; அடிப்படையான நிர்மாண வேலைகள் போன்றவற்றின் அடிப்படைத் திசைவழியையும் இலக்குகளையும் நாம் வரையறுக்க முடியும். அதேபோது குறிப்பிட்ட இலக்குகளில் ஈடுபடுவதற்கான குறுகிய கால திட்டங்களும் வேண்டும். இவ்வாறு நமது சேனையைப் படிப்படியாக முன்னேற்றிச் செல்லலாம்.

மக்கட் சேனையில் கிரம சேனையும் பிரதேசப் படைகளும் அடங்கும். மக்கள் யுத்தத்தில் பிரதேசப் படைகளுக்கு மிக முக்கியமான போர்த்தந்திரப் பங்குண்டு. எனவே நாம் மக்கள் சேனையைக் கட்டும் அதே சமயம், **இரண்டிலும் சமமாக பெருங்கவனம்** செலுத்த வேண்டும்.



கட்சியின் சரியான கொள்கை காரணமாக, அமெரிக்க ஆக்கிரமிப்புக்கெதிரான தேசபக்தப் போரில் பிரதேசப் படைகள் அமைப்பிலும், சாதனங்களிலும், சண்டைத் திறன், தலைமைத்திறன் போன்றவற்றிலும் புதிய வளர்ச்சிகளுக்கு உட்பட்டன... சிறப்பாக எதிரியின் நாசகாரப் போரில் ஈடுபட்டிருந்த விமானக் காவல்படைகள், பீரங்கிப் படைகள், பொறியியல் படைக்குழுக்கள், போன்றவற்றை எதிர்த்துப் போரிட்ட படைகளில் மேற்சொன்ன வளர்ச்சிகள் ஏற்பட்டன... பல மாகாணங்கள், நகரங்கள், மாவட்டங்கள், தொழில்துறை வலயங்களில் விமானவீழ்த்திப் படையலகுகள் இருந்தன. அவை பல அமெரிக்க விமானங்களையும், பீரங்கிப் படையலகுகளையும் சுட்டுவீழ்த்தின. பீரங்கிப் படையலகுகள் அமெரிக்கப் போர்க்கப்பல்களுக்குத் தீயிட்டன. பதுங்குகுழி வெட்டும் படையலகுகள் (**Sappers' Units**) போக்குவரத்து வழிகளை திறந்து வைத்திருந்தன. காலாட்படையலகுகள் எதிரியின் அதிரடிக் குழுக்களை விரைந்து ஒழித்துக்கட்டி திருப்திகரமான முறையில் தம் போர்க்கடமைகளை நிறைவேற்றின. புதிய போராட்ட பலத்துடன், பிற ஆயுதப்படைகளுடன் சேர்ந்து, பிரதேசப் படைகள் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் அனைத்து இராணுவ சாகச முயற்சிகளையும் குலைக்கவும் நாட்டைக் காக்கவும் தயாராகி வந்தன. பிரெஞ்சு ஆக்கிரமிப்புக்கு எதிரான எதிர்ப்புப் போரின் கடைசிக் கட்டத்தில் இருந்த கிரமச்சேனையுடன் ஒப்பிடும்போது, இப்போதுள்ள பிரதேசப் படைகள் சில துறைகளில் மிகுந்த வளர்ச்சி பெற்றுள்ளன என்பது தெளிவு. இது அப்பிரதேசங்களில் மக்கள் யுத்தத்தின் வலுவை அதிகரிக்க உதவியுள்ளது. பிரதேசப் படைகளை வலுப்படுத்துவது, அவற்றுக்குத் தேவையான படைத்துறைகளை வழங்குவது, அநேக நவீன ஆயுத சாதனங்களை அவற்றுக்கு அளிப்பது, இவ்வாறு **அவற்றைப் படிப்படியாய் கிரம நவீன சேனையாக்குவது** என்று எடுத்த முடிவு சரியென்பதை மேற்சொன்ன **உண்மை காட்டுகிறது**.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் சேனையைக் கட்டுவதற்கென மேலே சொன்ன கோட்பாடுகள் மற்றும் திசைவழிகளின் அடிப்படையிலேயே பிரதேசப் படைகளைக் கட்டுவதும் மேற்கொள்ளப்பட வேண்டும். இருப்பினும் பிரதேசப் படைகளின் போர்க் கடமை, செயல்பாட்டின் தன்மை, நடவடிக்கை முறைகள் ஆகியன கிரமசேனைகளுக்குச் சற்று மாறுபட்டுள்ளதாலும் பிரதேசப் படைகளின் செயல்பாடு ஸ்தலத்துடனேயே தொடர்புபடுத்தப்பட்டுள்ளதாலும், **மக்கள் சேனையைக் கட்டுவதற்கான கோட்பாடுகளையும் திசைவழிகளையும் நாம் பிரதேசப் படைகளின் தேவைக்கு ஏற்ற முறையிலேயே** பிரயோகிக்க வேண்டும். பிரதேசப்படை கலைக்கப்படுவது, ஒவ்வொரு பிரதேசத்தின் தனித்தன்மைகள், அதன் இராணுவ நிலை, அதன் போர்க்கடமை, அதன் ஆட்பலம், பொருளாதார ஆற்றல்கள், அதன் ஸ்தல அமைப்பு விபரம், அப்பிரதேசத்தில் எதிரியின் நிலை போன்ற காரணிகளின் அடிப்படையில் அமைய வேண்டும். ஒவ்வொரு மாகாணம், நகரம், மாவட்டம், தொழில்துறை வலயம் .. ஆகியவற்றிலும் அவற்றின் பிரதேசப் படைகளின் அளவு, அமைப்பு, சாதனநிலை, போர்முறை என்பன கிரமசேனையை ஒத்து அமைய முடியாது; அல்லது ஒரு பிரதேசத்துக்குரிய கோட்பாடுகளும் திசைவழியும் மற்றப் பிரதேசங்களுக்கும் பொருந்தும் என்றும் சொல்ல முடியாது.

கிரமசேனையின் விடயத்திலும் கூட, நாம் அதனைகிரமப் படுத்தவும் நவீனப்படுத்தவும் செய்யும்போது, போர்க்கடமைகளின் தனித்தன்மைகள் வெவ்வேறு போர்க்களங்களில் செயல்படும் வெவ்வேறு படைகளின் நடவடிக்கை முறைகள் ஆகியவற்றில் போதிய கவனம் செலுத்தவேண்டும். அப்போதுதான் சேனையின் உள்ளடக்கம், அமைப்பு, சாதனம், துருப்புகளின் வாழ்முறை ஆகியவற்றை மிகப் பொருத்தமான முறையில் வரையறுத்துக் கொள்ளவும் எல்லாச் சமயங்களிலும் ஒரே மாதிரியான



யந்திரத்தனமான முயற்சிகளைக் கடைப்பிடிப்பதைத் தவிர்த்துக் கொள்ளவும் முடியும்.

பிரதேசப்படைகளைக் கிரமப்படுத்தும் போது, ஸ்தலத்தின் குறிப்பான நிலைமைகளிலும் தனித்தன்மைகளிலும் மேலும் அதிக கவனம் செலுத்துவது அவசியம். கிரமப்படுத்துதல் திட்டவட்டமானதாகவும், ஐக்கியம் மற்றும் மத்தியத்துவத்தின் அவசியத்தைப் பிரதிபலிக்கின்ற அதே போது பல்வேறு பிரதேசங்களுக்கிடையிலான தவிர்க்க இயலாத வேறுபாடுகளைப் பிரதிபலிப்பதாகவும் இருக்கவேண்டும். ஸ்தலத்தின் தனித்தன்மைகளையே சார்ந்து நின்று, ஐக்கியம் மற்றும் மத்தியத்துவத்தின் தேவைகளையும், அமைப்புணர்வையும் ஒழுங்குணர்வையும் பிரதேசப்படைகளில் சேனை விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதையும் புறக்கணிப்பது மிகப்பெரிய தவறாகும். அதே போல ஐக்கியத்தையும் மத்தியத்துவத்தையும் ஒரேபடித்தான யாந்திரீக முறையில் நடைமுறைப்படுத்துவதும் தவறுதான். நவீனப்படுத்தலை நோக்கிய பாதையில், நாம் அதன் திட்டவட்டமான தேவைகளை வரையறுத்துக் கொள்ளவேண்டும். பொருத்தமான ஆயுத சாதனங்களைத் திறம்படப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நவீன ஆயுத சாதனங்களை ஓரளவே நவீனமானவற்றுடனும் எளிமையானவற்றுடனும் நெருக்கமாக இணைத்துக் கொள்ள வேண்டும். ஸ்தலத்துக்குப் பொருந்திவராத அதிநவீன ஆயுதங்கள் பயனற்றவையே என்பதை அனுபவம் கூறுகிறது; பொருத்தமான சாதனங்களோ அவ்வளவு நவீனமானதல்லாவிடினும் பெரிய விளைவை ஏற்படுத்துவன. **பிரதேசப்படைகளை, பிரதேசங்களில் ஆயுதப் போராட்டத்தின் தாக்குதல் படையாகவும் அதன் முதுகெலும்பாகவும்** கொண்டு அதற்குத் தரப்படும் கடமைகள் அனைத்தையும் வெற்றிகரமாய் நிறைவேற்றுவதும் எதிரியைத் தோற்கடிப்பதுமே, பிரதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேனையைக் கட்டுவதற்கான கோட்பாடுகளை நடைமுறைப் படுத்துவதில் நமது குறிக்கோள்களாகும்.

தற்போது வடவியட்நாமிலுள்ள மாகாணங்கள், நகரங்கள், தொழில்துறை வலயங்கள் என்பன கணிசமான நிலப்பரப்பும், சில இடங்களில் 10 - 20 இலட்சம் மக்கள் தொகையையும் கொண்டதாக உள்ளன. மத்தியத் திட்டத்தின் கீழான பொருளாதாரத்தின் வளர்ச்சியுடன் கூடவே, நமது கட்சி பிரதேசப் பொருளாதாரங்களின் வளர்ச்சி, மாகாணங்களையும் நகரங்களையும் தொழில் வலயங்களையும் கட்டுதல், மென்மேலும் வலுவான பொருளாதார அலகுகளாக அவற்றை ஆக்குதல் ஆகிய வளர்ச்சியையும் ஆதரிக்கிறது. ஒவ்வொரு ஸ்தலத்திலும் பொருளாதாரத்தைத் தேசப்பாதுகாப்புடன் நாம் நெருக்கமாக இணைக்கவேண்டும். எல்லாத் துறைகளிலும் பலம்வாய்ந்த மாகாணங்கள், நகரங்கள், தொழில்துறை வலயங்கள் ஆகியவற்றைக் கட்ட வேண்டும். இவை அப்பிரதேசத்தில் மக்கள் யுத்தத்துக்கான அடிப்படையான போர்த்தந்திர அலகுகளாக இருக்கும். சோஷலிசப் புரட்சியின் வெற்றியும், ஒவ்வொரு பிரதேசத்திலும் வட வியட்நாம் முழுவதிலுமே சோஷலிசத்தைக் கட்டுவதும், பிரதேசப்படைகளை எல்லாத் துறைகளிலும் கட்டிவளர்க்க மென்மேலும் அதிகரித்த சாத்தியங்களை உருவாக்கியிருக்கிறது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அனைத்து இராணுவ சாகச முயற்சிகளையும் குலைக்கவும், சோஷலிச வடவியட்நாமைக் காக்கவும், மகத்தான போர்முனைக்த மகத்தான பின்புலம் செய்ய வேண்டிய கடமையை நிறைவேற்றவும் பிரதேசங்கள் தம் பங்களிப்பைச் செலுத்துவதற்காக பிரதேசங்களில் இராணுவ வேலைகளை முடுக்கிவிடும் தேவை எழுகிறது. இதனை எதிர்கொள்ளும் நாம், **பிரதேசப் படைகளைக் கட்டுவதைத் தீவிரமாய்**



**முன்னெடுக்க வேண்டும். பிரதேசப் படைகளில் கணிசமான எண்ணிக்கையுள்ள** நிரந்தரப்படை இருப்பதுடன், வலுவான, **நன்கு ஒழுங்கமைந்த,** நன்கு பயிற்றப்பட்ட சேமப்படைகளும் இருக்கவேண்டும். தேவை ஏற்படுகையில் பிரதேசப் படைகள் துரிதமாய்ப் பெருக்கமடைய இவை உதவும். நம்மிடம் வலுவான காலாட்படையலகுகள் இருக்கவேண்டும்; மேலும் நவீனமானதும் ஓரளவு நவீனமானதுமான ஆயுத சாதனங்களைக் கொண்டதும், நன்கு பயிற்றப்பட்டதும், ஆக்கபூர்வப் போர்முறை, உயர் இயங்குதிறன், அசாதாரண போராட்ட பலம் ஆகியவற்றைக் கொண்டதுமான தேவையான படைத்துறைகளும் இருக்க வேண்டும். பிரதேசப்படைகள் கிரமப்போர் முறையிலும் கெரில்லாப் போர் முறையிலும் பிரமாதமான திறமைபெற வேண்டும். அவை குடிப்படைகளுடனும் தற்காப்புப் படையலகுகளுடனும் நெருக்கமாக ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். அதே சமயம் எதிரியை நிர்மூலமாக்கி ஸ்தலங்களைக் காப்பாற்ற கிரம சேனையுடன் ஒருங்கிணைய ஆயத்த நிலையில் நிற்க வேண்டும்.

ஒவ்வொரு ஸ்தலத்தின் சூழ்நிலைமைகளுக்கும் போராட்டத் தேவைகளுக்கும் தகவமைந்த வலுவான பிரதேசப்படைகளின் உதவியாலும், மக்கள் ஆயுதப் பாதுகாப்புப் படையலகுகளுடன் நெருக்கமாக ஒருங்கிணைந்த, வலுவானதும் எங்கும் நிறைந்ததுமான குடிப்படைகள் மற்றும் தற்காப்புப் படையலகுகளின் உதவியாலும், சோஷலிச வட வியட்நாமிலுள்ள **மக்கள் பிரதேச ஆயுதப்படைகள்**, புதியதும் அசாத்தியமானதுமான போராட்ட பலத்தைப் பெறும்; இதனால் ஸ்தலங்களில் மக்கள் யுத்தம் புதியதும் மகத்தானதுமான சாத்தியப்பாடுகளைப் பெறும்.

பொதுவாக பிரதேச இராணுவப் பணியையும் குறிப்பாக பிரதேச இராணுவப் படைகளையும் வளர்த்தெடுப்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிகரமாக்க வேண்டுமானால், பிரதேச இராணுவப் பணியின் மீது எல்லா மட்டங்களிலும் கட்சி செயற்குழுக்களின் தலைமையை வலுப்படுத்துவதிலும், பிரதேச இராணுவ அங்கங்களை வலுப்படுத்துவதிலும் பிரதேச இராணுவ ஊழியர் படையை உருவாக்குவதிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு ஸ்தலத்தின் இராணுவக் கடமைகளையும் நிறைவேற்றுவதற்கும், பிரதேசங்களின் இராணுவ வேலையைத் தீவிரப்படுத்துவதில் ஸ்தலக் கட்சி செயற்குழுக்களுக்கு பொது அலுவலர் குழுவாய் இருந்து உதவுவதற்கும் பிரதேச இராணுவ அங்கங்கள் பலப்படுத்தப்பட வேண்டும். அவை பிரதேசப் படைகளைக் கட்டிப் போராடுவதில் வழிகாட்டியாக இருக்கவும் தலைமை ஏற்கவும் வேண்டும். பிரதேசங்களில் மக்கள் ஆயுதப்படைகளுக்கு அவை வழிகாட்ட வேண்டும்.

நாம் பிரதேச இராணுவப் பணியின் மீதான தலைமையின் தரத்தை உயர்த்த வேண்டும்; பிரதேசங்களில் தேசப் பாதுகாப்பின் தற்கால வருங்காலத் தேவைகளுக்கு இணையாகவும் பிரதேசப் பொருளாதார நிர்மாணம் மற்றும் வளர்ச்சியின் அதிகரித்துவரும் பேராற்றல்களுக்கு இணையாகவும் இத் தலைமையின் தரம் உயர்த்தப்பட வேண்டும்.

சேனையானது, நவீன சாதன, தொழில்நுட்பங்களில் தேர்ச்சி பெறவும் இராணுவக் கலையின் கோட்பாடுகளை முழுமையாகப் புரிந்துகொள்ளவும், அவற்றைத் திறமையாக நடைமுறைப்படுத்தவும் உயர்ந்த போராட்டத் திறனைப் பெற்றிருக்கவும் செய்வதற்காக, இராணுவப் பயிற்சி தருவதில் போதிய அக்கறை காட்டப்பட வேண்டும். சமாதான காலத்திலும் போர்க்காலத்திலும் சேனையைக் கட்டுவதில் இது மிக முக்கியமான நடைமுறையொழுங்கு ஆகும். இது ஒரு சேனையின் போர்ப்பண்பையும் இராணுவ ஆயத்த



நிலையையும் உயர்த்துவதற்கான தீர்மானகரமான பிரச்சினைகளில் ஒன்றாகும்.

பயிற்சியானது எதிரியைத் தோற்கடிப்பதையே குறியாகக் கொண்டுள்ளதால் ஒவ்வொரு கட்டத்திலும் இருக்கக் கூடிய இராணுவக் கடமைக்கும் மார்க்கத்துக்கும், இராணுவக் கலையின் தேவைக்கும், எதிரியும் நாமும் அக்கட்டத்தில் எந்த நிலையில் இருக்கிறோமோ அந்த நிஜமான நிலைமைகளுக்கும் பொருத்தமானதாக பயிற்சியானது திருத்தியமைக்கப்பட வேண்டும். பின்வரும் கொள்கைகள் நம்மில் ஆழமாய் ஊறியிருக்க வேண்டும்:- போரில் தேவைப்படும் எல்லா விடயத்தைப் பற்றியும் சேனைக்குக் கற்றுத்தரப்பட வேண்டும்; போராட்ட மனவுறுதியில், அமைப்புணர்வில், ஒழுங்குணர்வில், போர் நடத்தையில், உத்தியில், நடைமுறைத்தந்திரத்தில், உடல்பலத்தில்... சேனைக்கு முழுமையான பயிற்சி தரப்பட வேண்டும்; இந்த ஒட்டுமொத்தப் பயிற்சியின் தரத்தை உயர்த்தி உண்மையான போர் நிலைமைகளுக்கு அதனைத் தொடர்புபடுத்த வேண்டும். அதிகாரிகளிடமும் ஆட்களிடமும் அவர்களின் அனைத்து போர்க் காரியங்களிலும் வலிந்த தாக்குதல் உணர்வு, மனவுறுதி, துணிவு, சமயோசித புத்தி ஆகியவற்றை ஊக்குவிக்க வேண்டும்.

நமது சேனையின் நடவடிக்கை பற்றிய சிந்தனையையும் இராணுவக் கலையையும் முழுமையாகக் கற்றுத் தேர்ச்சி பெறுவது மூலம், நவீனப் போர்முறையின் தேவைகளுக்கு நம்மை தகவமைத்துக் கொள்ள முடியும். இதற்கு நாம், அனைத்து நவீன சாதனங்களையும் நுட்பங்களையும் நம் அதிகாரிகளும் ஆட்களும் நன்கு புரிந்துகொண்டு செம்மையாய் பயன்படுத்தும்படி அவர்களைப் பயிற்றுவிக்க வேண்டும். நடவடிக்கை பற்றிய கோட்பாடுகளையும் நடைமுறை தந்திரக் கோட்பாடுகளையும் அமைப்பு மற்றும் தலைமை நடத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துதல் பற்றிய கோட்பாடுகளையும் புரிந்துகொண்டு பல்வேறு படைகளதும் படைத்துறைகளதும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளில் அவற்றைத் திறமையாகப் பிரயோகிக்க அவர்களைப் பயிற்றுவிக்கவேண்டும். நாம் பல போர் முறைகளிலும். நமது சேனைக்குப் பயிற்சி அளிக்கவேண்டும். வலிந்து தாக்குவதிலும் தற்காப்பதிலும், இயங்கு போர்முறையிலும் முற்றுகைப் போர்முறையிலும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளிலும், தனித்துச் செயல்படும் நடவடிக்கைகளிலும் அதற்குப் பயிற்சி தரவேண்டும். பல்வேறு அளவிலும் பல்வேறு பிரதேசங்களிலும் வெவ்வேறு பருவ நிலைகளிலும் சந்தர்ப்பங்களிலும் சண்டையிட அவர்களுக்குக் கற்றுத் தரவேண்டும். எதிரி மரபு ஆயுதங்களைப் பயன்படுத்தினாலும், இரக்கமற்ற முறையில் அணுஆயுதங்களை அல்லது இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தினாலும், அவனைத் தோற்கடிக்க நமது படை தயாராயிருக்க வேண்டும்.

நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதில் வெற்றிபெற வேண்டுமானால் நமது சேனை அதன் முழுக் கட்டமைப்பிலும் பலமுள்ளதாய் விளங்கவேண்டும். மேலிருந்து கீழ்வரை, தலைமையகங்களிலிருந்து கீழ்மட்டப் படையலகுகள் வரை எல்லா மட்டங்களிலும் எல்லாக் கிளைகளிலும் பிரிவுகளிலும் அது பலமுள்ளதாய் விளங்கவேண்டும். எனவே நாம் ஒவ்வொரு ஆளுக்கும், பிரிவுக்கும், சேனைக்குழுவுக்கும், ஒவ்வொரு தலைமை அங்கத்துக்கும், போர்ப் படையலகுக்கும் உதவிப் படையலகுக்கும் திருப்திகரமான முறையில் பயிற்சியளிக்க வேண்டும். அதிகாரிகளையும் தலைமை அங்கங்களையும் பயிற்றுவிப்பதில் நாம் சிறப்புக் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும். வலுவானதும் பக்குவப்பட்டதுமான அடிப்படைப் படையலகுகளை நாம் உருவாக்க வேண்டும்.

எதிரியின் ஒட்டுமொத்த சூழ்நிலை எப்படி மாறிவருகிறது என்பதை நம் சேனை தொடர்ச்சியாக அறிந்துவரும்



படி நாம் செய்தல் வேண்டும். நமது சேனை எந்த நிலையிலும் எதிரியின் புதிய நடவடிக்கைத் திட்டங்களைப் பிசுபிசுத்துப் போகச்செய்யத் தயார் நிலையில் இருக்கவேண்டும். நமது சேனையின் வளமான போரனுபவங்களைக் கற்றறிவதிலும் ஆக்கபூர்வமாக அவற்றை வளர்த்தெடுப்பதிலும் நாம் தனிக்கவனம் செலுத்தவேண்டும். அதே சமயம் சகோதர சோஷலிச நாடுகளின் சேனைகளின் அனுபவத்திலிருந்தும் நமக்கு வேண்டியதைக் கற்றுக்கொள்வது அவசியம்.

போர்க்காலத்திலும் சரி, சமாதானக் காலத்திலும் சரி, நம் வெற்றிகள் பற்றி செருக்கடைவதும், நம் இராணுவக் கலையைப் புறக்கணிப்பதும் மிக ஆபத்தானது. எனவே நாம் பயிற்சியை இராணுவ விஞ்ஞானத்தைப் பயில்வதுடன் நெருக்கமாக இணைத்தல் வேண்டும். இடைவிடாமல் நமது இராணுவக் கலையை செம்மைப்படுத்திச் செல்லுதல் வேண்டும். நமது பயிற்சி அனுபவத்தைத் தொகுத்துக் கொள்வதிலும் அதன் உள்ளடக்கத்தையும் முறைகளையும் மேம்படுத்துவதிலும் மிக அதிக அக்கறை செலுத்துதல் வேண்டும். இதன் மூலம்தான் நமது சேனை தன் அற்புதமான இராணுவக்கலையிலும் எதிரியைத் தோற்கடிப்பதற்கான மகத்தான சண்டையிலும் தொடர்ச்சியான முன்னேற்றங்களைக் காண முடிந்தது.

கிரமமானதும் நவீனமானதுமான மக்கள் சேனையைக் கட்டும் பணியை நிறைவேற்றுவதில் எழும் ஒரு அடிப்படையான பிரச்சினை, ஒவ்வொரு துறையிலும் திறமையும் பலமும் வாய்ந்த அதிகாரிகளின் படைக்குழுவை அமைக்கும் பிரச்சினையாகும்.

இந்த அதிகாரிகளின் படைக்குழுவானது உயர்ந்த தரமும் போதிய எண்ணிக்கையும் கொண்டிருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்சிக் கடமையின் அதிகரித்துவரும் தேவைகளை அது சமாளிக்க வேண்டும். நமது சேனையின் தொடர்ந்த வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் முறையில். ஏராளமான சேம அதிகாரிகளையும் மாற்று அதிகாரிகளையும் கொண்ட திடமான மையக்கருவாய் அப்படைக்குழு விளங்கவேண்டும். இந்த அதிகாரிகள் படைக்குழு அனைத்து வகையான ஊழியர்களைப் போதிய அளவில் கொண்டிருக்க வேண்டும். இதில் தலைமை தாங்கும் ஊழியர்கள், வழிநடத்தும் ஊழியர்கள், தொழில் முறை ஊழியர்கள், தொழில்நுட்ப ஊழியர்கள் எல்லாம் இருப்பர். பொது அலுவல் ஊழியரும், அடிப்படை நிலை ஊழியரும் இருப்பர்; கிரமசேனை ஊழியரும், பிரதேசசேனை ஊழியரும் நிரந்தரசேனை ஊழியரும் சேமப்படை ஊழியரும் இருப்பர். இக்குழுவானது சமாதானகாலம் போர்க்காலம் இரண்டிலும் நிகழ்காலம் வருங்காலம் இரண்டிலும் நமது சேனையின் பல்வேறு படைகளும் படைத்துறைகளும் கொண்டிருக்கும் தேவைகளைப் பூர்த்தி செய்யும்.

இத்தகைய ஒரு அதிகாரிகள் படைக்குழுவை அமைக்க, முதன்முதலில் நாம் **ஊழியர்கள் பற்றிய கட்சி மார்க்கத்தில்** தேர்ச்சி பெற்று அதனைக் கண்டிப்பான முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும். இது தொழிலாளி வர்க்க ஊழியர்கள் பற்றிய கட்சி மார்க்கமாகும். அதிகாரிகள் படைக்குழுவில் தொழிலாளி வர்க்கத் தன்மை, இந்த மார்க்கத்தின் அடிப்படை உள்ளடக்கங்களில் ஒன்றாகும். இந்த வர்க்க உள்ளடக்கப் பிரச்சினை எந்த அளவுக்குத் தீர்க்கப்பட்டுள்ளது அல்லது தீர்க்கப்படவில்லை என்பது, நமது சேனையின் புரட்சிகர இயல்பினைப் பேணி வளர்ப்பதையும் எல்லா சந்தர்ப்பங்களிலும் சேனை உறுதியோடும் மாறாத் தன்மையோடும் இருப்பதையும், அதன் புரட்சிகர வலிந்த தாக்குதல் உணர்வும் தீர உணர்வும் ஆகியவற்றை உணர்த்துவதையும் பெரிதும் பாதிக்கிறது. எல்லாச் சந்தர்ப்பத்திலும் நாம் ஊழியர் பற்றிய கட்சி மார்க்கத்தைக் கிரகித்துக்



கொண்டு. புரட்சியின் ஒவ்வொரு வளர்ச்சிக்கால கட்டத்திலும் அதன் வர்க்கத் திசைவழியையும் அரசியல் அளவுகோலையும் கண்டிப்பான முறையில் நெறிப்படுத்த வேண்டும். வர்க்கங்களும் போர்களும் சேனைகளும் உள்ளவரை. ஆயுதப் படைகளின் அதிகாரிகள் படைக்குழுக்களின் வர்க்கத் தன்மை என்ற பிரச்சினையை எந்த நிலையிலும் புறக்கணித்து விடக்கூடாது என்ற கோட்பாட்டை நாம் எப்போதும் மனதிலிருத்தி இருக்க வேண்டும்,

புரட்சிகர, கிரம, நவீன சேனையின் ஊழியர்கள் என்ற முறையில் நமது அதிகாரிகள் **உறுதியான அரசியல் நிலைப்பாடு, உயர்ந்த அரசியல், இராணுவ தொழில்முறை, தொழில்நுட்ப, வளர்ச்சித் தரம், தொடர்ந்து அதிகரித்துச் செல்லும் பண்பாட்டுத் தரம்** ஆகியவற்றைப் பெற்றிருக்க வேண்டும். **கட்சி முன்வைக்கும் போர்க்கடமைகளையும் பிற பொறுப்புகளையும் திறம்பட நிறைவேற்றுவதன்மூலம் அதிகாரிகள் இப்பண்புகளை உருவாக்கிக்கொள்ள வேண்டும்.**

முதன்முதலாக, நமது அதிகாரிகள் கட்சிக்கும் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர இலட்சியத்துக்கும் பொதுவுடைமைக் குறிக்கோளுக்கும் முழு விசுவாசமாயிருக்க வேண்டும். தீவிர தேசபக்தியில் தோய்ந்தவர்களாகவும் மக்களுக்கும் தேசத்துக்கும் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்களாகவும் இருக்கவேண்டும். அவர்களிடம் முழுமையான புரட்சி உணர்வும் பலமான புரட்சிகர வலிந்த தாக்குதல் உணர்வும், போராடி வெல்லும் மனவுறுதியும், எதிரிமேல் ஆழமான வெறுப்பும் இருக்கவேண்டும். அவர்கள் தீவிரமாய்ப் போரிடவும், அயராமல் வேலைசெய்யவும் வேண்டும். உயர்ந்த அளவு அமைப்புத்திறன், ஒழுங்குணர்வு பெற்றிருக்க வேண்டும். நல்ல போர்ப்பாணி, வேலைப்பாணி; இன்னல்களையும் தியாகங்களையும் எதிர்ப்படும்போது தன்னலமறுப்பு; எந்த சந்தர்ப்பத்திலும் எல்லாவிதப் பொறுப்புகளையும் நிறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்றி முடிப்பதற்கான தைரியம், வைராக்கியம். சம யோசிதப்புத்தி புதுமைத்தேட்டம் ஆகிய பண்புகள் அவர் களிடம் இருக்கவேண்டும்.

அரசியல், இராணுவ, விஞ்ஞான, தொழில்நுட்ப, பொருளாதாரத் துறைகளில் ஆழ்ந்த அறிவும் பரிச்சயமும் பெற நமது அதிகாரிகள் முனையவேண்டும். அத்துடன் தலைமையேற்கவும் வழிநடத்தவும் ஒழுங்கமைக்கவும் வேலை செய்யவும் அவர்களுக்குத் திறன் வேண்டும். போரையும் சேனையையும் பற்றிய மார்க்சிய-லெனினியக் கோட்பாடு கள், கட்சியின் அரசியல், இராணுவ மார்க்கம், அதன் இராணுவ விஞ்ஞானம், நமது தேசத்தின் மரபு, போரனு பவங்கள் ஆகியவற்றை அவர்கள் கடும்முயற்சி எடுத்துக் கற்றுத்தேற வேண்டும். தம் எதிரியை ஆழமாகப் புரிந்து கொள்ள அவர்கள் முயலவேண்டும். சகோதர சோஷலிச நாடுகளின் அனுபவங்களில் இருந்து தேர்ந்தெடுத்தும், ஆக்கமுறையிலும் கற்றுக்கொள்ள வேண்டும். அதேபோது உலகின் இராணுவ விஞ்ஞானத்தின் புதிய சாதனைகளைப் புரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் தம் பண்பாடு, அறிவி யல், தொழில்நுட்பத் தரத்தையும், ஆட்களை நிர்வகிப்பது, பயிற்றுவிப்பது, தலைமை தாங்குவது, வழிநடத்துவது; பல்வேறு படைகள், படைத்துறைகளின் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை ஒழுங்கமைப்பது ஆகிய திறன்களையும் வளர்த்துக் கொள்ள விடாமுயற்சியுடன் முனையவேண்டும்.

ஒரு நவீன கிரம மக்கள் சேனையைக் கட்டியமைக்கும் பணிக்கு, **தொழில்நுட்பத்தில் வல்லுனர்களும் அரசியலில் நம்பகரமானவர்களுமான ஊழியர்களைக் கொண்ட ஒரு படைக்குழு** நமது கட்சிக்குத் தேவைப்படுகிறது. இக்குழு நவீன சாதனங்கள் மற்றும் தொழில்நுட்பங்களைப் பயன் படுத்துவதிலும், நிர்வகிப்பதிலும், மேம்படுத்துவதிலும், புதியன கண்டுபிடிப்பதிலும் ஒரு மையப்படையாகச் செயல் படவேண்டும். இந்தத் தொழில்நுட்ப ஊழியர்களின் படைக் குழுவில், நடுத்தர, உயர்தர, ஊழியர்கள், தலைமைப் பொறியியலாளர்கள், ஆய்வுப் பணியாளர்கள் போன்று, அவசியமான அனைத்துக் கிளைகளையும் பல தரப்பட்ட தொழிற்பிரிவுகளையும் சார்ந்தவர்கள் இடம்பெற்றிருக்க வேண்டும். அவர்கள் நவீன விஞ்ஞானத்தையும் தொழில் நுட்பத்தையும் கற்றுத்தேற வேண்டும். நமது சேனையின் தொழில்நுட்பப் பிரச்சினைகளுக்குத் திருப்திகரமான தீர்வு காண, தாம் கற்றதை ஆக்கபூர்வமாய்ப் பிரயோகிக்கவேண் டும். அதேபோது நம் நாட்டில் விஞ்ஞானத்தையும் தொழில்நுட்பத்தையும் கட்டிவளர்க்கவும் அவர்கள் பங்க ளிப்புச் செய்ய வேண்டும்.

நமக்கு **ஆய்வுப் பணியாளர் படையும்** இருக்கவேண் டும். இவர்கள் மார்க்சிய-லெனினியம், இராணுவ விஞ்ஞா னம், புரட்சியின் நடைமுறை, நம் நாட்டில் புரட்சிப்போர் ஆகியவற்றில் நல்ல அறிவு பெற்றிருக்க வேண்டும். இவர் கள் இராணுவக் கோட்பாடு, இராணுவ விஞ்ஞானம் ஆகிய வற்றின் வளர்ச்சி சம்பந்தமாக ஆய்வுப் பணிசெய்யும் மூல அங்கமாக விளங்க வேண்டும்.

மக்கள் சேனையின் ஊழியர்கள் பற்றிச் சொல்லும்போது நாம் **சேம அதிகாரிகள் படை** பற்றிக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. சேம அதிகாரிகளின் முக்கியமான பாத்திரம், போரில் சேனையின் சேமப்படை எடுக்கும் நிலையுடன் நேர டியாகத் தொடர்புடையதாகும். இதனால் தான் கிரமப்படை யின் ஊழியர் படையைக் கட்டியமைப்பதில் கவனம் செலுத்தும் அதேபோது, சேம ஊழியர்களின் படையை உருவாக்குவதற்கும் நாம் முக்கியத்துவம் தரவேண்டும். இவர்கள் உயர்ந்த தரமும் போதிய எண்ணிக்கைப் பல மும் உடைய வலுவான படையாக அமைந்திருக்க வேண் முழுமையானதும் சரிவிகிதமுடையதுமான கட்டமைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையதாயிருக்க வேண்டும். எந்தக்கட்டத்திலும் சேனையை அல்லது அதன் எந்தக் கிளைகளையும் துறைகளையும் விரிவாக்கும் தேவையை எதிர்கொள்ளத் திறனுள்ளதாக அப்படை அமைந்திருக்கவேண்டும். சேனையில் இருந்து கலைக்கப்பட்டு அனுப்பப்பட்டுவிட்ட படையாட்கள் அல்லது சிவில் துறைகளுக்கு மாற்றப்பட்டுவிட்ட படையாட்கள் ஆகியோருக்கான அமைப்பு பற்றி அதிக சிரத்தை எடுத்துக் கொள்ளவேண்டியது அவசியம். அதேபோது சேமஊழியர்களுக்கான பொருத்தமான பயிற்சித்திட்டத்தை தேர்ந்து கொள்வதும் அரசின் பல்வேறு கிளைகளிலும் துறைகளிலும், தொழிற்சாலைகளிலும், பள்ளிகளிலும், மக்கள் ஆயுதப்படைகளிலும், பெயர்ப்பதிவு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு, அணிதிரட்டுதல் ஆகிய முறையைத் திறம்பட நடத்துவதும் அவசியமானதாகும்,

புரட்சியின் வளர்ச்சிபற்றிய விதியும் புரட்சிகர ஆயுதப் படைகளின் விதியும், நமது கட்சி, அனுபவசாலி அதிகாரிகளை இளம் அதிகாரிகளுடன் நெருக்கமாக இணைக்கவேண்டியது தேவை என்கின்றன. அனுபவசாலியான அதிகாரிகளை மேம்படுத்த நாம் ஊக்கமாய் வேலை செய்யும் அதே சமயம். சண்டையாலும் உழைப்பாலும் உரமேறிப் போயிருக்கிறவர்களும், உயர்ந்த புரட்சிக் குணங்களும் திடமான ஆற்றல்களும் கொண்டவர்களும், சேனையில் நீண்டகாலம் சிறப்பான சேவை புரிந்தவர்களும் ஆன இளம் ஊழியர்களைப் பயிற்றுவித்து மேம்படுத்தி தைரியமாக அவர்களைப் பதவி உயர்த்துவதற்கும் நாம் மிகுந்த பிரயாசைகள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

சேனை ஊழியர்களின் படையைக் கட்டுவதில் நாம் பின்வருவன போன்ற பல நடவடிக்கைகளையும் இணைக்க வேண்டும்: போர்ப்பயிற்சி, தொழிற்பயிற்சி, பள்ளியில் பெறப்பட்ட பயிற்சியும் வளர்ச்சியும், தற்போது



அவர்கள் இருக்கும் வேலையில் பெறப்படும் பயிற்சியும் வளர்ச்சியும் போன்றன அவை. தற்போதும், வருங்காலத்திலும் கூட, **சேனைப்பள்ளிகள்** மிகமுக்கியமான பங்காற்றும். சேனைப் பள்ளிகளை நாம் வலுப்படுத்தி விரிவுப்படுத்தவேண்டும், இவற்றில் பயிற்சி நிறுவனங்கள். இராணுவக் கல்லூரிகள், பல்வேறு படைகள், படைத்துறைகள் மற்றும் இராணுவ வலயங்களின் முழுநேர, பகுதிநேரப் பள்ளிகள் ஆகியன அடங்கும்.

கிரம, நவீன, மக்கள் சேனையைக் கட்டுவதுடன் கூடவே, **எண்ணிக்கைப் பலமும் ஆற்றலும் மிக்க படையாக மக்கள் ஆயுதப்படைகளை வளர்த்தெடுப்பதில் நாம் பெரு முயற்சி** எடுத்துக்கொள்ள வேண்டும், **கிராமம், நகரம் முழுவதிலும் குடிப்படைகளையும் தற்காப்புப் படைகளையும்** நாம் விரிவுப்படுத்த வேண்டும். அவற்றை மிகப்பெரிய படையாக ஆக்கவேண்டும். இவை தொடர்ந்து, கூடிவரும் தரமும் போர்ப்பலமும் கொண்டனவாயிருக்க வேண்டும். மேலும் சோஷலிசத்தைக் கட்டுவதில் நம்நாட்டின் அனைத்தும் தழுவிய வளர்ச்சிக்கும் மக்கள் யுத்தத்தில், தற்போதைய நிலையில் சோஷலிசத் தாய்நாட்டைக் காப்பதற்கான போரில், சதா அதிகரித்துச் செல்லும் போரின் தேவைக்கும் பொருத்தமானதாக இருக்கவேண்டும்;

பிரதேசங்களைக் காப்பதற்காக அனைத்து மக்களும் தொடுக்கும் போராட்டத்தின் முதுகெலும்பாக விளங்கும் அளவுக்கு இப்படை பலமானதாக இருக்கவேண்டும்; பிரதேசப் பொருளாதார வளர்ச்சியின் அதிர்ச்சிப்படை என்ற அதன் பாத்திரத்துக்கு முழுமையாக இடம் தருவதாக இருக்கவேண்டும். மக்கள் சேனையின் பலம்மிக்க சேமப் படையாக அது விளங்கவேண்டும், அனைத்து மக்களின் தேசப் பாதுகாப்புக்கும் மக்கள் யுத்தத்துக்கும் ஆதாரமானதும் ஆற்றல் மிக்கதுமான அடிப்படையாக இப்படை ஆக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். மக்கள் சேனையுடன் சேர்ந்து, இப்படை சோஷலிச அரசுக்கான பலம்வாய்ந்த ஆயுதப்படையாக அமைய வேண்டும். இது தற்போதைய அமெரிக்க ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களையும் வருங்காலத்தில் ஆக்கிரமிக்கக் கூடிய மற்ற எதிரிகளையும் தோற்கடிக்கும் திறனுள்ளதாக அமையவேண்டும். கட்சியாலும் மக்களாலும் ஒப்படைக்கப்படும் எந்தப் பொறுப்பையும் நிறைவேற்றத் திறனுள்ளதாக அமைய வேண்டும். அப்போது தான் புரட்சியின் ஆதாயங்களை உறுதியாய்ப் பேணவும் தாய்நாட்டின் இறைமை, பிரதேச ஒற்றுமை, பாதுகாப்பு ஆகியவற்றைக் காக்கவும் முடியும்.

போர்க்காலம், சமாதான காலம் ஆகிய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மக்கள் ஆயுதப்படைகளை கட்டுவதை மும்முரப்படுத்துவது, நம் மக்களின் **உயர்ந்த, புரட்சிகர விழிப்புணர்வின் ஒரு, ஒருமுகப்பட்ட வெளிப்பாடாகும்.** அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிரான தற்போதைய தேசபக்தப் போரில், சோஷலிச வட வியட்நாமைக் கட்டிக்காக்கவும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் அனைத்துப் போர்த் திட்டங்களையும் நடவடிக்கைகளையும் தோற்கடிக்கவும் மக்கள் ஆயுதப் படைகளை எல்லா சந்தர்ப்பங்களிலும் மும்முரமாய்க் கட்டி வருவது அவசியமாகும். வருங்காலத்தில், அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான நீடித்ததும் தீவிரமானதுமான எதிர்ப்புப் போர் வெற்றிகரமாய் முடிவு பெறும் போது, நமது மக்கள் முழுமையான சுதந்திரத்தையும், விடுதலையையும் மீண்டும் அடைந்து அமைதியான சூழ்நிலைகளில் தேச நிர்மாணத்தை ஆரம்பிக்கும் போது, கிரம ஆயுதப்படைகள் குறைக்கப்படக்கூடிய சூழ்நிலையிலும், மக்கள் ஆயுதப்படைகளைக் கட்டுவதில் நாம் மிகுந்த அக்கறை செலுத்த வேண்டியே இருக்கும். ஏனெனில் அப்போதுதான் எந்தவிதமான நிலைமைகளையும் எதிர்கொள்ள ஆயத்தமாயிருக்க முடியும். நாம் பொருளாதார நிர்மா



ணத்தை தேசப்பாதுகாப்புடனும், தேச நிர்மாணத்தை, தாய்நாட்டைக் காப்பதற்கான ஏற்பாடுகளுடனும் நெருக்கமாக ஒருங்கிணைக்க வேண்டும்,

நமது அரசின் இராணுவ யந்திரத்தின் இரண்டு அடிப்படைப் பகுதிகளில் ஒன்று மக்கள் ஆயுதப்படைகள் என்பது நம் எல்லாருக்கும் தெரிந்ததே. மக்கள் ஆயுதப்படைகளின் மூன்று வகைகளில் ஒன்று குடிப்படைகளும் தற்காப்புப் படைகளும் ஆகும். கட்சியின் புரட்சிகர ஆயுத அமைப்பு என்ற வகையில், குடிப்படைகளும் தற்காப்புப் படைகளும், புரட்சிகர ஆயுதப்படைகளைக் கட்டுவதற்குரிய அதே மார்க்கங்கள், நிலைபாடுகள், பொதுக்கோட்பாடு ஆகியவற்றின் வழியில்தான் கட்டப்பட வேண்டும். இது நிலைப்பாடு, கொள்கை பற்றிய பிரச்சினை. எனவே இதனைப் பிசகின்றி அனுசரிக்க வேண்டும். உற்பத்தியுடன் தொடர்பு கொண்ட ஆயுதபாணி அமைப்பு என்ற முறையிலும் ஏககாலத்தில் சேனையாகவும் மக்களாகவும் இருக்கின்றன என்ற முறையிலும் குடிப்படைகளும் தற்காப்புப் படைகளும் கிரம ஆயுதப் படையைச் சேர்ந்தன அல்ல. கிரம ஆயுதப்படைகள் பிரதானப் படையிலிருந்தும் பிரதேச சேனையிலிருந்தும் வேறுபடுத்திக் காணத்தக்கவை. குடிப்படைகள், தற்காப்புப் படைகள், மக்கள் சேனை ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை நன்கு புரிந்துகொள்வதன் மூலம் மட்டுமே, நாம் மக்கள் ஆயுதப்படைகளைக் கட்டுவதை முன்னெடுத்துச் செல்லமுடியும். குடிப்படைகளதும் தற்காப்புப் படைகளதும் போர்த்தந்திர முக்கியத்துவமுள்ள பாத்திரத்துக்கு முழு வாய்ப்பளிக்க முடியும்.

**குடிப்படைகளும் தற்காப்புப் படைகளும் மக்களின் பரந்துபட்ட ஆயுதப்படைகளாகும். இவைகளே பாட்டாளி வர்க்க அரசின் இராணுவ அமைப்புக்கு மிக ஒருமுகப்பட்ட, நேரடியான மக்கள்திரள் தன்மையைக் கொடுக்கின்றன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத் தன்மை, ஏங்கெல்ஸ் முன்னறிந்து கூறியது போல் தொழிலாளி வர்க்கத்தின் விமோசனத்திலிருந்து வளர்வதாகும். இந்த ஆயுதப்படையே அரசியல் படைகளுடன் மிக நெருக்கமானதும் மிக நேரடியானதுமான தொடர்பு கொண்டுள்ளது. அதன் போரிடும் பலம் அது செயல்படும் ஸ்தலத்து மக்களின் பலத்திலிருந்து நேரடியாக எழுகிறது. அதனால்தான் குடிப்படைகளையும் தற்காப்புப் படைகளையும் கட்டும்போது அதன் எண்ணிக்கைப் பலத்தை விரிவுபடுத்துவதும் அதன் ஸ்தல அரசியல் படையின் உயர்ந்த பட்சப் பங்கேற்பை திரட்டுவதும் மிக முக்கியமானதாகும்.

**குடிப்படைகள் தற்காப்புப் படைகள் ஆகிய ஆயுதப் படைகள் உற்பத்தியிலிருந்து விலகி நிற்பவையல்ல. உற்பத்தியைக் காக்கவும், ஸ்தல மக்களின் உயிரையும் உடமைகளையும் காப்பதற்காகவும் அவை உற்பத்தியிலும் சண்டையிலும் நேரடிப்பங்கு வகிக்கின்றன.** குடிப்படைகளும் தற்காப்புப் படைகளும் மேற்கொள்ளும் சகல இராணுவ நடவடிக்கைகளும் ஸ்தலத்தின் உற்பத்தி, பொருளாதார, பண்பாட்டு நடவடிக்கைகளுடன் நெருக்கமாகப் பிணைந்துள்ளன. அவை தம் பலத்தை உற்பத்தி அமைப்பின் ஒட்டுமொத்த பலத்திலிருந்து பெற்றுக்கொள்கின்றன. கிராமப்புறத்தில் குடிப்படைகளும் தற்காப்புப் படைகளும் கொண்டிருக்கிற பலம் கூட்டுறவுப் பண்ணைகளின் பலத்துடன் நெருக்கமாகச் சம்பந்தப்பட்டுள்ளது. நகரங்களிலும் தொழில்துறை மையங்களிலும் அவற்றின் பலம் தொழிற்சாலைகள், நிறுவனங்கள், நிர்மாணக் களங்கள் போன்றவற்றின் ஒட்டுமொத்த பலத்திலிருந்து பிரிக்கமுடியாதபடி உள்ளது. அதனால்தான் குடிப்படைகளையும் தற்காப்புப் படைகளையும் கட்டும்போது, நாம் எப்போதும் **உற்பத்தித் தேவைகளை சண்டைத் தேவைகளுடனும் பொருளாதாரத் தேவைகளை தேசப்பாதுகாப்புத் தேவைகளுடனும் நெருக்கமாக இணைக்க வேண்டும்.** இந்தக் கோட்பாட்டிலிருந்து நழுவிச் செல்லும் எந்த முயற்சியும்,



திறம்பட்ட குடிப்படைகளையும் தற்காப்புப்படைகளையும் கட்டுவதை அசாத்தியமாக்கிவிடும். தற்காப்புப் படைகளின் போரிடும் பலத்தைப் போக்கடித்து விடும்.

**குடிப்படைகளும் தற்காப்புப் படைகளும் அடித்தளத்துடனும் ஸ்தலத்துடனும் மிக நெருக்கமாகவும் நேரடியாகவும் இணைந்துள்ள ஆயுதப்படையாகும்.** அடித்தளமட்டத்தில் மக்களாட்சியின் பிரதான வன்முறைக் கருவியாய் அவை உள்ளன. ஒவ்வொரு ஸ்தல, கீழ்மட்டப் பகுதியின் குறிப்பான சூழ்நிலை சந்தர்ப்பங்களில், ஸ்தல கட்சி அமைப்பால் அவை ஒழுங்கமைக்கப்பட்டு வழிநடத்தப்பட்டுக்கட்டியமைக்கப்படுகின்றன. அந்த ஸ்தலத்திலேயே தோன்றி வளர்ந்து சண்டையிடுகின்றன. ஒரு குடிப்படை அல்லது தற்காப்புப்படையின் சண்டைத்திறன், தன் அடித்தளப் பகுதியிலேயே தன் சொந்த ஸ்தலத்திலேயே சண்டை மற்றும் உற்பத்திக் கடமைகளை ஆற்ற அதற்குள்ள திறனில் பளிச்சிடுகிறது. குடிப்படைகளையும் தற்காப்புப் படைகளையும் கட்டும்போது ஒவ்வொரு ஸ்தலத்திலும் கீழ்மட்டப்பகுதியிலும் இருக்கும் சண்டை மற்றும் உற்பத்தித் தேவைகளிலிருந்தும் கடமைகளிலிருந்தும் துவங்கி மேற்செல்வது அவசியமாகும்; அந்தந்த ஸ்தலம் மற்றும் அடித்தளப் பகுதியின் அரசியல், பொருளாதார, இராணுவ, புவியியல் நிலைகளில் நடத்தப்படும் நடைமுறையிலிருந்து துவங்கி மேற்செல்வது அவசியமாகும். அப்போதுதான், பொருத்தமான வழிகாட்டல்களையும் நடவடிக்கைகளையும் வகுத்துக் கொள்ளவும் ஒரேபடித்தான, யந்திரத்தனமான மனோபாவங்களைத் தவிர்த்துக் கொள்ளவும் முடியும்,

**குடிப்படை மற்றும் தற்காப்புப் படைகளின் முதன்மையான சண்டைமுறை, சிதறலான, சிறு கெரில்லாவகை செயல்பாடுகளில், மக்களைச் சார்ந்தும் நிலத்தைக் கைவிடாமலும் தம் உற்பத்தித் தளத்திலும் வசிப்புப் பகுதியிலுமே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து கொண்டு, எதிரியை எதிர்த்துச் சண்டையிடுவதாகும். அவை சிறுசிறு எதிரிப் படையலகுகளைத் தாக்கித் துடைத்தொழித்தும், ஸ்தல மக்களின் உயிரையும் உடைமையையும் நேரடியாகப் பாதுகாத்தும் இடையருது எதிரிப்படையை நிர்மூலமாக்கி வருகின்றன. எனவேதான் குடிப்படைகளையும் தற்காப்புப் படைகளையும் கட்டும்முறை, பிரதானப் படையையும் பிரதேசச் சேனையையும் கட்டும் முறையை நகல் செய்வதாக இருக்கமுடியாது. பிரதானப் படைகளும் பிரதேசப் படைகளும் ஒருமுனைப் படுத்தப்பட்ட ஆயுதப்படைகள் ஆகும். அவை தத்தமக்குரிய பகுதியில் ஒருமுனைப்பட்ட கிரமமான போர்முறைப்படிச் செயல்படுவனவாகும்.

தற்போது வடவியட்நாமில் இருக்கக்கூடிய குடிப்படைகளும் தற்காப்புப் படைகளும் தொடர்ந்து பலப்பட்டும் வளர்ந்தும்வரும் சோஷலிச அமைப்பின் அடிப்படையில் கட்டப்படுகின்றன. எனவே உற்பத்தி உறவுகள், வர்க்கக் கட்டமைப்பு போன்றன பற்றிய விளக்கங்களின் அடிப்படையில் சோஷலிச அமைப்பின் தனித்தன்மைகள் பற்றிய ஆழமான புரிதல் நமக்கு இருக்கவேண்டும். அப்போது தான் அரசியல் ரீதியாகவும், தார்மீக ரீதியாகவும், அமைப்பு ரீதியாகவும் புதிய சமூக அமைப்பு மேன்மை பெற்றதாக விளங்க முழுவாய்ப்பளிக்க முடியும்; பௌதீக, தொழில்நுட்ப அடித்தளங்களாலும், தொழிலாளி வர்க்கத்திலிருந்தும், கூட்டுறவுப் பண்ணை விவசாயிகளிலிருந்தும் உதயமாகும் புதிய மனிதனின் அனைத்து தழுவிய வளர்ச்சியாலும் கிடைக்கப்பெறும் புதிய திறன்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும்; அப்படிப் பயன்படுத்திக் கொண்டால்தான் குடிப்படைகளையும் கட்டுவதைத் தீவிரமாய் முன்னெடுத்துச் செல்லமுடியும்.

முதன்முதலாக, குடிப்படையினதும் தற்காப்புப் படையினதும் எண்ணிக்கைப் பலத்தை பிரதேச அளவுக்கு விரிவு



படுத்துதல் அவசியமாகும். மக்கள் ஆயுதப்படைகளைக் கட்டும் பணியில் இது நிரந்தரமாகத் தேவைப்படும் ஒரு காரியமாகும். லெனின் சொன்னுர்: 'புரட்சியின் வெற்றி, புரட்சியைக் காக்க எழும் பாட்டாளி வர்க்க மக்களின் எண்ணிக்கையையும் விவசாய மக்களின் எண்ணிக்கையையும் பொறுத்திருக்கிறது.'[48]

சோஷலிச அமைப்பின் மேன்மையைச் சார்ந்து நிற்கும் நாம், பரந்துபட்ட மக்களை ஸ்தலப் போராட்ட அமைப்புகளிலோ, துறைகளிலோ ஒழுங்கமைத்துக் கொள்ள முழுத்திறன் பெற்றவர்களாய் இருக்கிருேம். மேலும் குடிப்படைகளிலும், தற்காப்புப் படைகளிலும் உறுப்பினராயிருப்போரின் வீதாச்சாரம் மக்கள் தொகையில் மேலும் கூடுதலாகுமாறு உயர்த்தவும் நாம் முழுத்திறன் பெற்றிருக்கிருேம். இதனுல் குடிப்படைகளும் தற்காப்புப் படைகளும் உண்மையாகவே பரந்துபட்ட பாட்டாளி மக்களின் இராணுவ அமைப்பாகி வருகின்றன. இளைஞர் முதியோர், ஆண் பெண் வேற்றுமையின்றி அனைத்து மக்களுக்கும் அவசியமான, பொருத்தமான அளவில், பொதுவான இராணுவக் கல்வி அளித்து அவர்களை இராணுவ ரீதியில் தயார்ப்படுத்துவதென்பதே நமது கொள்கையாகும். இதன்மூலம் அவர்கள் நாட்டைக் காக்க ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து சண்டையிடுவதில் பங்குபெற வேண்டும் என்ற ஆவலைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும். ஆக்கிரமிப்பாளர்கள் நமது நாட்டுக்கெதிராக முழு ஆக்கிரமிப்புப் போர் தொடுக்குமளவு கல்நெஞ்சராகிப் போவார்களானுல், சில ஆயிரம் அல்லது பல்லாயிரம் போரின் எதிர்ப்பையல்ல, பல லட்சக் கணக்கான மக்களின் எதிர்ப்பை, நமது மக்கள் அனைவரின் எதிர்ப்பை சந்திக்க நேரிடும் என்ற நிலையை நாம் உருவாக்க வேண்டும். மலைகள் முதல் சமவெளிகள்வரை உள்நாடு முதல் கடற்கரை வரை கிராமங்கள் முதல் நகரங்கள் வரையுள்ள அனைத்து மக்களும் ஒரே சக்தியாய்

எழுந்து, மக்கள் சேனையுடன் நன்கு ஒருங்கிணைந்து, தத்தம் இடங்களில் உறுதியாய் நின்று, எந்த இடத்திலிருந்தும், கைக்குக் கிடைத்த எவ்வித ஆயுதங்களையும் உபாயங்களையும் கொண்டும் தொடுக்கக்கூடிய யுத்தத்தை எதிரி சந்திக்க நேரிடும் என்ற நிலையை நாம் உருவாக்க வேண்டும்.

ஆனால் சோஷலிச அமைப்பில் மக்களின் ஆயுதப் படைகளின் பலம் அவற்றின் எண்ணிக்கைப் பலத்தில் மட்டுமல்ல, அவற்றின் தரத்திலும் அடங்குகிறது. அவர்களது ஒழுங்கமைப்பு உணர்வு; அவர்களின் ஆயுத சாதனங்களின் வளர்ச்சி, நடவடிக்கை முறைகளின் வளர்ச்சி, எல்லாவற்றுக்கும் முதலாக **அவர்களின் தார்மீகப் பலம்,** ஆகியவை தான் மக்களின் ஆயுதப்படைகளுக்குள்ள பலத்துக்கான காரணிகளாகும். இதற்குத்தான், புரட்சிகர ஆயுதப்படைகளைக் கட்டுவது பற்றிய கட்சிக்கொள்கையை நன்கு உட்கிரகித்துக் கொள்வது அவசியம் என்றும் குடிப் படைகளையும் தற்காப்புப் படைகளையும் கட்டுவதில் அவற்றைப் பிரயோகிப்பது அவசியம் என்றும் சொல்லுகிறோம். குடிப்படை, தற்காப்புப் படைகளின் கட்சித் தலைமையைப் பலப்படுத்தவும் தீவிரப்படுத்தவும் நாம் அயராது உழைக்க வேண்டும். அரசியல் வேலைக்கு சிறப்பான முக்கியத்துவம் வழங்க வேண்டும். குடிப்படை, தற்காப்புப்படை ஆகியவற்றின் அமைப்பைப் பொறுத்து கடைப்பிடிக்க வேண்டிய வர்க்க மார்க்கத்தையும் அரசியல் அளவுகோலையும் நன்கு கற்றுத்தேற வேண்டும். இது, குடிப்படையையும் தற்காப்புப்படையையும் கீழ்மட்டத்தில் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் திறமையானதும் நம்பகமானதுமான கருவியாக வைத்திருக்க அவசியமாகும். குடிப்படைகள் மற்றும் தற்காப்புப் படைகளின் அரசியல் உணர்வின் அளவு, உழைக்கும் மக்களின் அரசியல் உணர்வின் அளவிற்கு நேர்விகிதத்திலேயே இருக்கும். குடிப்படைகளதும் தற்காப்புப் படைகளதும் அரசியல் சித்தாந்தக் கல்வி, ஸ்தலத்திலும் கீழ்மட்டத்திலும் உள்ள அனைத்து உழைக்கும் மக்களின் அரசியல் சிந்தாந்தக் கல்வியிலிருந்து பிரிக்க முடியாதவாறு இணைந்திருக்கிறது. இக்கல்வி புகட்டுவதை, கட்சி அமைப்பு, பல்வேறு மக்கள் அமைப்புகள், அரசு அலுவலகங்கள், ஸ்தல உற்பத்தித் தளங்கள், இராணுவ அங்கங்கள் ஆகியன இணைந்து செயல்படுத்த வேண்டும். குடிப்படைகளுக்கும் தற்காப்புப் படைகளுக்கும் தரவேண்டிய கல்வியின் உள்ளடக்கத்தைப் பொறுத்தவரை, ஒவ்வொரு குடிமகனுக்கும் கற்பிக்க வேண்டிய பொது விஷயங்களுடன், பொதுவாக புரட்சிகர ஆயுதப்படைகளின் கடமைகள் பற்றியும் குறிப்பாக குடிப்படை மற்றும் தற்காப்புப் படைகளின் கடமைகள் பற்றியும் போதிப்பது அவசியமாகும். அக்கல்வி, ஸ்தலத்திலுள்ள இராணுவக் கடமை பற்றி தெளிவாகப் புரியச் செய்ய வேண்டும். படைகளின் புரட்சிகர விழிப்புணர்வையும் நாட்டுக்காகப் போராடும் மனவுறுதியையும் தூண்டிவிட வேண்டும். கிராமங்களிலும், குக்கிராமங்களிலும், தெருக்களிலும், கூட்டுறவுப் பண்ணைகளிலும், தொழிற்சாலைகளிலும் மக்களின் உயிரையும் உடமையையும் காக்கப் போராடும் ஆயத்த உணர்வையும், எதையும் தாங்கும் தியாக உணர்வையும் அக் கல்வி உயர்த்த வேண்டும். இவ்வாறு மக்கள் அதிகாரத்தைப் பாதுகாக்கவும், ஸ்தலத்தைக் காப்பாற்றவும், நாட்டின் பாதுகாப்பு மற்றும் நிர்மாணத்தின் கூட்டுப்பொறுப்பாளிகள் தாங்கள் என்ற உணர்வை அவர்களில் வளர்க்கவும் அக்கல்வி உதவவேண்டும்.

அமைப்பு விடயத்தைப் பொறுத்தவரை, கிராமங்களிலும் கூட்டுறவுப் பண்ணைகளிலும், குடிப்படைகளையும் கெரில்லாப் படைகளையும் கட்டுவதிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும். மேலும் நகரங்களிலும், தொழில்துறை மையங்களிலும், நிர்மாணக் களங்களிலும், அரசுப் பண்ணைகளிலும், பொது அலுவலகங்களிலும், பள்ளிகளிலும் தற்காப்புப்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைகளையும் தற்காப்பு சண்டைப் படையலகுகளையும் கட்டுவதில் கவனம் செலுத்த வேண்டும். சோஷலிச நிர்மாணத்தின் வளர்ச்சி முன்னேறி வருகையில் தொழில்துறை மையங்களும், புதிய பொருளாதார மையங்களும் மென்மேலும் முக்கியமானவையாக மாறி வருகின்றன. இதற்குச் சமமாக, மக்கள் தொகையில் தொழிலாளிகள், ஊழியர்கள், அரசு ஊழியர்கள், நகரத் தொழிலாளிகள் ஆகியோரின் விகிதாச்சாரங்கள் இடையருது அதிகரிக்கின்றன. அதேபோது கிராமங்களிலும் ஆழமான மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. உற்பத்தி உறவுகளில் விவசாயக் கூட்டுறவுகள் மென்மேலும் பலம்பெற்று வருகின்றன. அவற்றின் பௌதீக, தொழில்நுட்ப அடிப்படை பலம்பெற்றுவருகிறது. கூட்டுறவுப் பண்ணை விவசாயிகள் வர்க்கம் மென்மேலும் முதிர்ச்சி மெற்றுவருகிறது. இந்தச் சூழ்நிலை தற்காப்புப் படைகள் மற்றும் குடிப்படைகளின் மென்மேலும் முக்கியம் பெற்றுவரும் அளவைத் தீர்மானிக்கிறது; அதே போது **குடிப்படைகளைக் கட்டுவதுடன் கூடவே தற்காப்புப் படைகளையும் கட்டும் தேவைக்கு** அது முக்கியத்துவம் சேர்க்கிறது. வடவியட்நாமின் நகர்ப்புறத் தொழிலாளி வர்க்கத்தினதும் உழைக்கும் மக்களதும் பொதுவான வளர்ச்சியையும் போராட்ட பலத்தையும் தற்காப்புப் படைகள் சரியாகப் பிரதிபலிக்க வேண்டும். அதுபோலவே சோஷலிசக் கிராமப்புறம், கூட்டுறவுப்பண்ணை விவசாயி வர்க்கம் ஆகியவற்றின் பொதுவான வளர்ச்சியையும் போராட்ட பலத்தையும் குடிப்படையானது சரியாகப் பிரதிபலிக்க வேண்டும்.

நமது நாடு மலைப்பிரதேசங்களும், சமவெளிகளும், உள்நாடும் கரைப்பகுதியும் கொண்டது. நம் நாட்டில் பரந்த கிராமப்புறமும் நகரங்கள் தொழில்துறை மையங்கள் ஆகியவையும் உள்ளன. ஒவ்வொரு பிரதேசமும் அரசியல், பொருளாதார, தேசப்பாதுகாப்புத் துறைகளில் தனக்கேயுரிய முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. நிலவியலில், மக்கள் தொகையில், பழக்கவழக்கங்களில் தனக்கேயுரிய தனித்தன்மைகளையும், மற்ற பிரதேசங்களிலிருந்து தனக்கேயுரிய மாறுபாட்டையும் பெற்றிருக்கிறது. **மக்களின் ஆயுதப் படைகளைக் கட்டுவதற்குப் பொருத்தமான கடமைகளையும் திசைவழிகளையும்** வகுத்துக் கொள்ள நாம் பிரதேசங்களின் தனித்தன்மைகளை அடிப்படையாகக் கொள்ளுதல் வேண்டும். மலைப்பிரதேசம், சமவெளிகள், கரைப்பகுதிகள், பின்னிலம், கிராமங்கள், நகரங்கள், தொழில்துறை மையங்கள், போர்த்தந்திர தொடர்பு மார்க்கங்கள் ஆகிய வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறுவித கொள்கைகளும் திசைவழிகளும் பிரயோகிக்கப்படவேண்டும்.

இந்த வழியில் மட்டுமே, எந்த ஸ்தலத்திலுமுள்ள குடிப்படைகளும் தற்காப்புப்படைகளும், ஆட்பலம், ஆயுத சாதனம், விநியோகம் ஆகிய தேவைகளுக்கு தம் பகுதியில் கிடைக்கும் பிரத்யோகமான மூல வளங்களை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும். இவ்வாறு ஒவ்வொரு ஸ்தலத்துக்குமுரிய சிறப்பு நிலைகளில் போரிடுவதிலும் போருக்கு உதவுவதிலும் திறமைபெற்ற, பக்குவப்பட்ட ஸ்தலப் படையலகுகளைக் கட்டமுடியும். இவை, கீழ்மட்ட அளவில் மக்கள் யுத்தம் தீவிர வளர்ச்சி பெறுவதற்கான ஈட்டிமுனையாகவும் ஸ்தலப் பொருளாதாரத்தைக் கட்டிவளர்ப்பதில் அதிர்ச்சிப்படையாகவும் செயல்படும்.

குடிப்படைகளுக்கும் தற்காப்புப்படைகளுக்கும் இராணுவக் கடமைகளும், உற்பத்திப் பொறுப்புகளும் ஒப்படைக்கப்படுகின்றன; அல்லது அரசுயந்திரத்தின் செயல்பாட்டின் ஒவ்வொரு அம்சத்தையும் சேர்ந்த பிறகடமைகளும் ஒப்படைக்கப்படுகின்றன. எனவே, குடிப்படைகளையும் தற்காப்புபடைகளையும் கட்டும்போது, நாம் மக்களின் உற்பத்தி நடவடிக்கை, வேலை, கல்வி, வாழ்க்கை முறை ஆகிய




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றின் திட்டவட்டமான நிலைமைகளை முழுக்கக்கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்; உற்பத்திக் குழுக்கள், கூட்டுறவுப் பண்ணைகள், தொழிற்சாலைகள், நிர்மாணத்தளங்கள் அரசுப் பண்ணைகள், அரசுஅலுவலகங்கள், பள்ளிகள், கம்யூன்கள், கிராமங்கள், தெருவட்டாரங்கள் போன்ற உற்பத்தித் தளங்களைச் சார்ந்து இயங்கவேண்டும். இந்தமுறையில் மட்டுமே சமாதானகாலத்திலும் போர்க்காலத்திலும் எல்லா சந்தர்ப்பங்களிலும் குடிப்படைகள் மற்றும் தற்காப்புப் படைகளின் நடவடிக்கைகளை சண்டை, உற்பத்தி வேலை ஆகியவற்றுடன் நெருக்கமாக இணைப்பதை உறுதிசெய்ய முடியும்.

தேசியப் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளிலும் சமூகவாழ்வின் பிறதுறைகளிலும் இருக்கிறதும் சதா அதிகரித்து வருவதுமான திறமைகளை நாம் முற்றுமுழுமையாக உபயோகித்துக் கொள்ளவேண்டும். இத்துறைகள் அனைத்திலும் நாம் குடிப்படைகளையும் தற்காப்புப்படைகளையும் அறிவுபூர்வமான முறையில் ஒழுங்கமைத்துப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்; அதன்மூலம் நாம் அதன்போராட்டத் திறமையை உயர்த்தவும், அதன் போராட்டத் தயார்நிலைமையையும் போரில் அது தரும் ஆதரவையும் உறுதி செய்து கொள்ளமுடியும். அமெரிக்க நாசகாரப் போரை எதிர்த்து நடத்தப்பட்ட போரின் போது, அநேக நகரங்களிலும், தொழில்துறை மையங்களிலும், நிலத்திலும் நீரிலும், பொறியியல்துறை, கட்டுமானம், ஆற்றுவழித் தொடர்பு, அஞ்சல் துறை, மருத்துவத்துறை போன்ற பல்வேறு துறைகளிலும் பல்வேறு தற்காப்பு அமைப்புகள் உருவாகியிருந்தன. ஒவ்வொரு துறையிலும் காணப்படும் தொழில்நுட்ப, சிறப்புத் திறன்களை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்வது எப்படி என்பதை நாம் அறிந்து கொண்டால், நாம் குடிப்படைகளையும் தற்காப்புப்படைகளையும் வெவ்வேறு பணி



களைக்கொண்ட வெவ்வேறு வகைகளாகப் பிரித்துக் கொள்ள முடியும். இதன் அடிப்படையில் அவற்றைச் சரியான முறையில் கட்டுவதற்கான திசைவழியை வகுத்தளிக்கவும் அவற்றுக்கிடையிலான சரியான ஒழுங்கமைப்பையும் அறிவார்ந்த வேலைப் பங்கீட்டையும் பயன்படுத்திக் கொள்ளவும் முடியும் என்பதை அனுபவம் காட்டியுள்ளது. இம்முறையில் மக்கள் ஆயுதப்படைகள் ஒரு புதிய, மிகப்பெரிய ஆற்றலைப் பெறும். நவீனப்போரின் புதிய தேவைகளை நிறைவுசெய்யக் கூடியதாகவும், பிரதேச சேனையோடும், கிரமசேனையோடும் திறம்பட இணையக் கூடியதாகவும், மக்கள் சேனையின் பல்வேறு படைகளிலும் படைத்துறைகளிலும் ஏற்படும் இழப்புக்களை ஈடு செய்யக் கூடியதாகவும் அமையும்.

ஆயுதசாதனங்களைப் பொறுத்தவரை, போரின் தேவைகளிலிருந்தும் வெவ்வேறு வகையான நிலவமைப்புகளின் தேவைகளில் இருந்து துவங்கிய நாம் படிப்படியாக, பொருத்தமானதும் ஓரளவு நவீனமானதுமான ஏராளமான ஆயுதசாதனங்களும் போர்சாதனங்களும் கொண்டுள்ளதாகக் கெரில்லாப்படைகளையும் போரிடும் தற்காப்புப்படைகளையும் மாற்றவேண்டும் என்ற முடிவுக்கு வருகிறோம். அதேபோது புராதனமானதும், செப்பம் செய்யப்பட்டதுமான ஆயுதங்களையும் வளர்த்தெடுக்க வேண்டிய அவசியத்தையும் கவனித்துக்கொள்கிறோம். வடவியட்நாமில் தொழில்நுட்பப் புரட்சியின் குறிக்கோள், சோஷலிசத்துக்கான புதிய பௌதீக, தொழில்நுட்ப, அடிப்படையைக் கட்டுவதும் கைத்தொழிலை இயந்திரத் தொழிலாக மாற்றுவதும் ஆகும். நம்மிடம் இருப்பதை பயன்படுத்திக் கொள்ளுதல், என்ற நமது முழக்கம், கடந்த காலத்தில் இருந்தது போன்ற அதே உள்ளடக்கத்தைக் கொண்டதாக இன்று இல்லை. முன்பு இம்முழக்கப்படி, குடிப்படைகளுக்கும் தற்காப்புப் போர்களுக்கும் புராதன ஆயுதங்களே முதன்மையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுதங்களாக இருந்தன. இன்றோ அப்படைகள் மென் மேலும் நவீனத் தொழில்நுட்பத்தைத் தழுவிவருகின்றன. ஸ்தலங்களுக்குப் புதிய ஆயுதங்கள் கிடைத்திருப்பதால், ஸ்தலங்களில் இருக்கிற நவீனமான அல்லது ஓரளவு நவீனமான ஆயுதங்களை முழுமையாகப் பயன்படுத்தி குடிப் படை, தற்காப்புப்படை ஆகியவற்றின் மையப்படைகளுக்கு சாதனமளிப்பதற்கு நாம் உரிய கவனம் செலுத்த வேண்டும். இருப்பினும் எவ்வழியிலும் நாம் புராதன அல்லது செப்பம் செய்யப்பெற்ற ஆயுதங்களையும் சாதனங்களையும் அலட்சியம்பண்ணி விடக்கூடாது. நமது நாட்டின் நீண்ட போர் அனுபவத்தில் தெளிவாக வெளிப்பட்டிருப்பதுபோல் புராதன, செப்பம்பெற்ற ஆயுதசானங்கள் மிக பயனுள்ளதாகவும் மிகப்பெரிய சக்தியாகவும் பயன்பட்டிருக்கின்றன. எதிரியைப் பலவடிவங்களிலும், கற்பனைத்திறன்கூடிய வழிகளிலும் அழித்தொழிப்பதற்கு அவை உதவியுள்ளன. நம் சொந்தப் பிரதேசத்தில் தற்காப்புப் போர் நடைபெற உதவின. மேலும் எந்த நாடும் அது என்னதான் தன் தொழில் துறையில் வளர்ச்சி பெற்றிருந்தாலும், மக்கள் அனைவரையும் ஆயுதபாணியாக்கிவிட முடியாது. அதனால் தான் மக்கள் ஆயுதப்படைகளின் மையப்படைக்கு புதியதும் ஓரளவு அதிநவீனமான ஆயுதசாதனங்கள், உபாயங்களை வழங்கும் அதேபோது, பெரும்பான்மை மக்கள் எதிரியை எதிர்த்துச் சண்டையிட புராதனமானதும் செப்பம் பெற்றதுமான ஆயுதங்களையும் சாதனங்களையுமே இன்னும் தரிக்கச் செய்யவேண்டியுள்ளது. அன்றேல் பரந்து பட்ட அனைத்து மக்களையும் ஆயுதபாணியாக்கும் பிரச்சினையில் சிக்கல் ஏற்படும்.

**குடிப்படைகளிலும் தற்காப்புப் படைகளிலும் சிறப்புக் கிளைகளாக அமையும் தொழில்நுட்ப அணிகள், குழுக்கள் அல்லது அலகுகள் ஆகியவற்றைக் கட்டிவளர்ப்பதை**



தொடர்ந்து முடுக்கிவிடுவது அவசியமாகும். இது, நவீனப் போர்முறைச் சூழலில் குடிப்படைகளதும் தற்காப்புப்படைகளதும் ஆயுத சாதனங்கள் இடையறாது மேம்படுத்தப்பட்டும் வலுப்படுத்தப்பட்டும் வருகிறபோது, நமது மக்கள் சோஷலிசத் தொழில்மயமாக்கத்தையும் சோஷலிசத்தின் பௌதீக தொழில்நுட்ப அடிப்படைகளைக் கட்டுவதையும் மும்முரப்படுத்தி வருகிற இக்காலத்தில், குடிப்படைகள் மற்றும் தற்காப்புப் படைகளின் சண்டைத்திறனை உயர்த்துவதில், தர்க்கரீதியான வளர்ச்சி நடவடிக்கையாகும்.

அமெரிக்க நாசகாரப் போரை எதிர்த்துப் போர் நடத்திய ஆண்டுகளில் குடிப்படைகளிலும் தற்காப்புப் படைகளிலும் பல விமானவீழ்த்தி யந்திரத் துப்பாக்கிப் படையலகுகள், பீரங்கிப்படை, தரைப் பீரங்கிப்படை, பொறியியல் படை, தொடர்புசாதனப்படை, ரசாயன எதிர்ப்புப் போர்ப் படையலகுகள் நமது கட்சியின் சரியான கொள்கையின் விளைவாக தோன்றின. சில சண்டைப் படையலகுகளில் பீரங்கிகள் இருந்தன. சிலவற்றில் நவீன ஆயுதங்கள் இருந்தன. குடிப்படை மற்றும் தற்காப்புப் படைகளின் சண்டைத் திறமையும் அவற்றின் போர்ச்சேவைத் திறனும் குறிப்பிடத்தக்க அளவு முன்னேறியுள்ளது, பல இடங்களில் குடிப்படைகளும் தற்காப்புப் படைகளும் தாமே பல அமெரிக்க விமானங்களைச் சுட்டு வீழ்த்தின. அமெரிக்கப் போர்க் கப்பல்களுக்குத் தீயிட்டன, எதிரியின் அதிரடிக் குழுக்களை விரைந்து நிர்மூலமாக்கின. நவீனமானதும் ஓரளவு நவீனமானதுமான பல ஆயுத சாதனங்களைத் திறமையாய் இயக்கின. நவீன அமெரிக்க குண்டுகளையும் நில, நீர்க்கண்ணிகளையும் கண்டுபிடிப்பதிலும் அவற்றைச் செயல்படாமல் செய்வதிலும் மிக முக்கியமான பங்களிப்புச் செய்தன. அவை சாலைகள், பாலங்கள், விமானத்தளங்கள் பிற இராணுவக் கட்டுமானங்களைக் கட்டவும் பழுதுபார்க்கவும் செய்தன, அது மட்டுமல்ல, விமான வீழ்த்தி அலகுகள், ஏவுகணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலகுகள், தகவல் தொடர்பு அலகுகள், பொறியியல் கப்பற்படை அலகுகள் ஆகியவற்றுக்கு சில நவீன தொழில்நுட்ப சாதனங்களையும் அவை உற்பத்தி செய்துதந்தன. இந்த அனுபவமானது எதிரியை எதிர்த்துப் போராடவும், போருக்குச் சேவை செய்யவும் பல்வேறு நவீன ஆயுத சாதனங்களை நல்லபடி பயன்படுத்திக் கொள்ள, சோஷலிச வட வியட்நாமின் குடிப்படைகளும் தற்காப்புப்படைகளும் முழுத்திறன் பெற்றிருந்தன என்ற உண்மையை உறுதிப்படுத்துகிறது. நம் மக்களின் பண்பாட்டுத்தரமும், தொழில்நுட்பத்தரமும், அமைப்புத்தரமும் உயர உயர அதற்கிணையாய் மேற்படி திறனும் அதிகரித்துவரும். கலைக்கப்பட்டு வீட்டுக்கு அனுப்பப்பட்டவர்களும் அல்லது சிவில் துறைகளுக்கு மாற்றப்பட்டவர்களுமான ஆட்களைக் கொண்ட ஒரு படையும் நமக்குண்டு என்பது மேற்கண்ட உண்மைக்கு வலுகூட்டுவதாயுள்ளது. இவை நாடு முழுவதிலும் மக்கள் ஆயுதப்படைகளின் முதுகெலும்பாகி வருகின்றன. மக்கள் சேனையின் பல்வேறு படைகளிலும் படைத்துறைகளிலும் பணியாற்றிய பல அதிகாரிகளும் ஆட்களும் இதில் அடங்குவர்.

குடிப்படை மற்றும் தற்காப்புப் படைகளும், அனைத்து மக்களும் இராணுவப் பயிற்சி பெறச் செய்வதில் நாம் பெருங் கவனம் செலுத்த வேண்டும். நமது போர் நடத்தும் முறைகள், நமது இராணுவக் கலை, போரின் வெவ்வேறு நிலைமைகளில் ஸ்தலங்களில் எழும் சண்டையின் தேவைகள் களத்திலுள்ள நமது எதிரிகள் நம்மிடமுள்ள அமைப்பு மற்றும் சாதனங்கள் குடிப்படைகளினதும் தற்காப்புப் படைகளினதும் உற்பத்தி நடவடிக்கைகள் அவற்றின் வேலை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மிக விரிவான ஆய்வுகள் செய்வது அவசியமானது. பயிற்சித் திட்டத்தின் மிகப் பொருத்தமான உள்ளடக்கத்தையும் குடிப்படைகளுக்கும் தற்காப்புப் படைகளுக்குமான பயிற்சிமுறையையும் தீர்மானிப்ப



தற்காக இந்த ஆய்வுகள் செய்யப்பட வேண்டும். இப் பயிற்சியின் நோக்கம் கீழ்க்கண்டவையாக இருக்க வேண்டும்:- குடிப்படைகளும் தற்காப்புப் படைகளும் வலிந்த தாக்குதல் உணர்வைப் பெறுதல்; அவை நவீன சூழலில் சண்டைக்கான வழிகாட்டுதல்களையும் கெரில்லாப் போர் நடத்தும் முறைகளையும் நன்கு புரிந்து கொள்ளுதல் ஒவ்வொரு ஸ்தலத்திலுமுள்ள சண்டைத் தேவைகளுக்கு ஒத்ததான, உயர்ந்த தொழில்நுட்ப, நடைமுறைத் தந்திர வளர்ச்சி மட்டத்தை அடைதல். குடிப்படைகளும் தற்காப்புப் படைகளும் தம் ஸ்தலத்தைப் பற்றிய செவ்விய அறிவு பெற்றிருப்பதையும், சுயேச்சையாகப் போராட மிகுந்த திறன் பெற்றிருப்பதையும் ஸ்தலத்தில் இயங்கும் பிற ஆயுதப்படைகளுடன் நெருங்கி ஒருங்கிணையும் திறன் பெற்றிருப்பதையும் நாம் உறுதி செய்யவேண்டும், குடிப்படைகளுக்கும் தற்காப்புப் படைகளுக்குமுரிய இராணுவப்பயிற்சித் திட்டம், அவற்றின் உற்பத்தி நடவடிக்கைகளுடன் இணைக்கப்பட வேண்டும். சாத்தியப்படும் போதெல்லாம் நாம் குடிப்படையினதும் தற்காப்புப்படையினதும் போரிடும் ஆற்றல்களையும், போருக்குச் சேவை செய்வதில் அவற்றின் திறனையும் உயர்த்துவதை அவற்றின் உற்பத்தி மற்றும் தொழில்நுட்ப உத்திகளை உயர்த்துவதுடன் இணைக்க வேண்டும். நமது குடிப்படைகளும் தற்காப்பு படைகளும் எதிரியுடன் சண்டையிடும் முறையை, நாம் ஒரு கலையாகவும் நமது இராணுவ விஞ்ஞானத்தின் முக்கியமான உள்ளடக்கமாகவும் சிரத்தையுடன் மதிக்க வேண்டும். அவ்வாறே நாட்டின் இரு வலயங்களிலும் நடந்துள்ள மக்களின் ஆயுதப்படைகளின் போராட்ட அனுபவங்களைத் தொகுத்துக் கொள்வதில் நாம் உரிய கவனம் செலுத்தவேண்டும். நம் நாட்டின் மக்கள் ஆயுதப்படைகள் எதிரியை எதிர்த்துப் போரிடும் கலையை இடையறாது உருவாக்கி வளர்க்கும்படியாக நாம் நம் ஆய்வுகளை நடத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிப்படை, தற்காப்புப் படைகள், சேமப்படை ஆகியவற்றுக்குப் பயிற்சியளிப்பதற்கு இணையாக **கட்சிக்கு இராணுவக் கல்வி அளிப்பதற்கும் மக்களிடையே பொதுவான இராணுவக் கல்வியை முனைந்து பரப்புவதற்கும் முக்கியத்துவம்** தரவேண்டும். பல நூற்றாண்டுகளான சுதந்திர காலத்தில் நாட்டின் பாதுகாப்புக்காக தேசத்தின் இராணுவ மரபுகளை வளர்ப்பதற்கு நமது முன்னோர் பல்வேறு போட்டிகள் நடத்தி வந்தனர். இராணுவக் கலை சார்ந்த போட்டிகள், மல்யுத்தப் போட்டிகள் விற் போட்டிகள் போன்றன மக்கள் தம் இராணுவக் கலையை உயர்த்திக் கொள்ள ஊக்குவித்தன. இன்று நாம் இம் மரபைத் தொடரவேண்டும், வரவிருக்கும் ஆண்டுகளில் நாம் மக்களின் தேசப்பாதுகாப்புணர்வை உயர்த்துவதற்காகவும் இராணுவத் தரத்தை மேம்படுத்தவும், அனைத்து மக்களிடையிலும் இராணுவ மரபுகளை வளர்ப்பதற்காகவும் மக்களிடையே பொதுவான இராணுவக் கல்வியைப் பரப்புவோம். இராணுவ விளையாட்டு இயக்கம், உடற்பயிற்சி இயக்கம் ஆகியவற்றை நாம் தீவிரமாக வளர்க்க வேண்டும். நம் கால நிலைகளில் நம் நாட்டின் மக்கள் யுத்தத் தேவைகளுக்கு ஒத்ததாகும் விதத்தில் மேலும் வளமான உள்ளடக்கத்தை அவற்றுக்கு உரித்தாக்க வேண்டும். வெவ்வேறு வயதினருக்கும், பெரும்பான்மையாக இளைஞருக்கும் இளம் பெண்களுக்கும் பொருத்தமான பலதரப்பட்ட வடிவங்களில் மக்களிடையே **இராணுவ அறிவை விரிந்த அளவில் பரப்புதல் அவசியமாகும்.** அதேபோது இராணுவக் கல்விக்கும், ஆயவுக்கும் உதவக்கூடிய விமானமோட்டுதல், தகவல் தொடர்பு, இரசாயன ஆய்வு ஆகியவற்றுக்கான வெகுஜன அமைப்புகளைப் படிப்படியாய் வளர்க்கவேண்டும். அதே சமயம் மக்கள் அமைப்புகளுக்கும் சேனைப்படையலகுகளுக்கும் இடையில் **சகோதர உறவுகளை நிறுவும் இயக்கத்தை** முடுக்கிவிட வேண்டும்.

நவீன கிரமசேனைக்கு நன்கு ஒழுங்கமைந்ததும் வலுவானதுமான சேமப்படை கட்டாயம் இருக்க வேண்டும்.



மக்களின் ஆயுதப்படைகள், மக்கள் சேனையின் வற்றாத சேமப்படைகளாகும். **சேமப்படையைக் கட்டி நிர்வகிப்பது** தலையாய முக்கியத்துவம் உடையதாகும். ஏனெனில் போர்க்களத்தில் சேனைக்கு ஏற்படும் ஆள்நட்டத்தை இப்படையே ஈடுசெய்கிறது; சமாதான காலத்தில் எல்லாவிதமான எதிர்பாரா நிலைமைகளையும் சமாளிக்க நாட்டை ஆயத்தம் செய்கிறது. இந்த சேமப்படையை எண்ணிக்கையிலும் தரத்திலும் நன்கு ஒழுங்கமைக்க வேண்டும். அப்போது தான் படையை விரிவுபடுத்தும் தேவையை நிறைவுசெய்யவும் மக்கள் சேனையின் படைகள், படைத்துறைகள், காலாட்படை ஆகியவற்றில் ஏற்படும் ஆள்நட்டத்தை ஈடுசெய்யமுடியும். சேனையிலிருந்து கலைக்கப்பட்ட அல்லது சிவில் துறைகளுக்கு மாற்றப்பட்ட ஆனால் இன்னும் சேமப்படையில் பணியாற்றத் தகுதியுள்ளவர்களாய் இருக்கும் படையாட்களைப் பதிவு செய்து சேமப்படைகளைக் கட்டி நிர்வகிப்பதற்கான சிறப்பான கோட்பாடுகள், முறைகள் மற்றும் திட்டங்களை நாம் வகுத்தளிக்க வேண்டும். தேவைப்படும்போது மக்களின் ஆயுதப்படைகளின் பலத்தைப் பழைய நிலைக்குக் கொண்டுவரவும் மேலும் அவற்றை விரிவுபடுத்தவும் இராணுவப் பயிற்சிகளுக்கும் ஆள்திரட்டலுக்கும் திட்டங்கள் வகுத்துக்கொள்ளவேண்டும். சேமப்படையின் அதிகாரிகளும் ஆட்களும் எப்போதும் நவீன சேனையினதும் நவீன விஞ்ஞானத்தினதும் வளர்ச்சியுடன் இணைந்து செல்லும்படி **பொருத்தமான பயிற்சித் திட்டத்தை** நடைமுறைப்படுத்துவது அவசியமாகும். பிரதேச ஆயுதப்படைகளின் மையப்படை என்ற தம் பாத்திரத்தை சிறப்புற ஆற்றவும் அவசியம் எழுமானால் சேனையில் பணியாற்றவும் அவர்களுக்கு முழுவாய்ப்பு கிடைக்க அத்திட்டம் உதவுவதாயிருக்க வேண்டும். அரசு ஊழியர்களிடையிலும் கல்லூரி மாணவர்களிடையிலும் ஒரு சேமப்படையை உருவாக்கி, பயிற்சியளித்து நிர்வகிப்பதில் நாம் குறிப்பான கவனம் செலுத்த வேண்டும். வருங்காலத்தில் எந்தக் கிளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் அல்லது எந்த ஸ்தலத்தில் உள்ள எந்த சேமப்படை இன்னின்ன இராணுவக் கிளையிலும் துறையிலும் ஏற்படும் ஆள்நட்டத்தையும் அல்லது இன்னின்ன ஆயுதப்படையில் ஏற்பட்டுள்ள ஆள்நட்டத்தையும் ஈடுகட்டும் என்பதை நாம் எளிதில் தீர்மானிக்க கூடியவர்களாக வேண்டும். உதாரணமாக, கட்டுமாணத் துறைக்குள் இராணுவப் பொறியியல் சேமப்படை அலகுகள் அமைக்கப்பட வேண்டும்; அஞ்சல்-தந்தித் துறையில் சமிக்ஞை சேமப்படை அலகுகள்; பொதுநலத் துறையில் மருத்துவ சேமப்படை அலகுகள்; ஆறு, கடல் ஆகியவற்றிலும் கடலோர, ஆற்றோரப் பகுதி மக்களிடையிலும் இயங்கும் பொருளாதாரத் துறைகளுக்குள் கடற்படைச் சேம அலகுகள் அமைக்கப்பட வேண்டும். இவ்வாறு, ஒரு படையலகுக்குப் புதிதாக ஒதுக்கிவிடப்படும் அதிகாரிகளும் ஆட்களும் அவர்கள் எந்த இராணுவப் படைக்கு அல்லது படைத்துறைக்கு ஒதுக்கப்படுகிறார்களோ அவற்றின் நுட்பங்களையும் சிறப்புப் பணிகளையும் விரைவில் கற்றுத் தேறமுடியும். பிற்பாடு ஒரு சேமப்படையாள் கலைக்கப்பட்டு தான் முன்பிருந்த சிவில் அலுவலுக்குத் திரும்பும் போது, அவன் தன் பணியிடத்தில் மக்கள் ஆயுதப்படைகளின் மையக்கருவியாய் அமைவான். உற்பத்தியை ஊக்குவிக்கவும் தன் வேலைத்திறனை உயர்த்தவும் தன் தொழில் நுட்பத் திறன்களையும் சிறப்பு அறிவையும் முழுமையாகப் பயன்படுத்தக் கூடியவனாயிருப்பான். சண்டையிலும் நிர்மாணத்திலும் தேசப்பாதுகாப்பிலும் பொருளாதாரத்திலும், போர்க்காலத்திலும், சமாதான காலத்திலும் இது மிகப் பயனுள்ளதாகும்.

நமது கட்சியின் கண்ணோட்டத்தில் மக்களை ஆயுதபாணியாக்குவது என்பது பரந்துபட்ட மக்களை ஒழுங்கமைப்பது, கற்பிப்பது, பயிற்றுவிப்பது, சாதனமளிப்பது மட்டுமல்ல, **அரசியல், பொருளாதாரம், தேசப்பாதுகாப்பு என்ற எல்லா அம்சங்களிலும் பின்புலத்தைச் செயலூக்கத்துடன்**



**கட்டுவதும், கீழ் மட்டத்திலும், ஸ்தலங்களிலும் மக்கள் யுத்தத்துக்கான திடமான தளமமைப்பதும்** ஆகும்.

வட வியட்நாமிலும் அதன் ஒவ்வொரு ஸ்தலத்திலும் மக்கள் யுத்தத்தின் பின்புலத்தின் பலம் சோஷலிச நிர்மாணத்தில் நம் மக்கள் பெறும் வெற்றிகளைப் பொறுத்திருக்கிறது. அதனால்தான், ஒரு வலுவான பின்புலத்தைக் கட்ட நாம் மூன்று புரட்சிகளை நிறைவேற்றவும் அரசியல் ரீதியில் பரதேசங்களை வலுப்படுத்தவும், பொருளாதார ரீதியில் வலுப்படுத்தவும், இராணுவ ரீதியில் வலுப்படுத்தவும் செயலூக்கமுள்ள முறையில் நம்மாலியன்ற வரை பாடுபடவேண்டியுள்ளது.[49] பிரதேசப் பொருளாதாரத்தைக் கட்டுவதை ஊக்குவிக்கும் அதே நேரம், **பொருளாதார நிர்மாணத்துக்கான தேவைக்கும் தேசப்பாதுகாப்பை அனைத்துத் துறைகளிலும் பலப்படுத்தும் தேவைக்கும் இடையில் நெருங்கிய ஒருங்கிணைப்புக்கான திட்டங்களையும்** நாம் வைத்திருக்க வேண்டும். அத்துறைகளாவன: விவசாயம், தொழில், தகவல் தொடர்பு, போக்குவரத்து, அஞ்சல்-தந்தித் துறை, சுகாதாரம், பண்பாட்டுத்துறைகள், கட்டுமாணத் துறை...

**சண்டைக் கிராமங்கள், சண்டைத் தெரு வட்டாரங்கள், சண்டைப் பகுதிகள்** ஆகியவற்றைக் கட்டுவதையும் **அவற்றை ஒரு ஒட்டுமொத்தமான அமைப்பாக ஆக்குவதையும்** விரைவுபடுத்துவது அவசியம். இது, போர்க்காலத்தில் ஏற்படும் எல்லாவிதமான எதிர்பாரா நிகழ்வுகளையும் சந்திக்க எப்போதும் ஆயத்த நிலையில் இருக்கும் பொருட்டும், அதே போது சமாதான காலத்தில் உற்பத்திச் செயல்பாடுகளுக்கும் மக்களின் வாழ்க்கைக்கும் தேவையான வசதிகளை உறுதிப்படுத்திச் செல்லும் பொருட்டுமேயாகும். இவை, நமது மூன்றுவகை ஆயுதப்படைகளுக்கான திடமான வலிந்த தாக்குதல் மற்றும் தற்காப்பு நிலைகளாயிருக்க வேண்டும்; ஒரு உக்கிரமான போரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்நிலைகளில் எதிரியை எதிர்த்துப் போராடுவதற்கும் அதே போது உற்பத்தியைத் தொடர்வதற்கும் பயன்படும் உறுதியான தளங்களாக இருக்க வேண்டும்.

எதிரி அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவானேயானால் நேரிடக்கூடிய எந்த விளைவுகளுக்கும் எதிரான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். சண்டைக் கிராமங்களையும் சண்டைக் கம்யூன்களையும் சண்டைத் தெரு வட்டாரங்களையும் கட்டுவது ஒரு **பரந்து விரிந்த அடிப்படையில்** செய்யப்படவேண்டும். நம்மிடம் ஒரு வலுவான கட்சியமைப்பு, மக்களின் வல்லமைமிக்க ஒரு அரசியல் படை, பலம்வாய்ந்த இராணுவ, தற்காப்புப் படைகள் ஆகியன இருக்க வேண்டும். சண்டை நடக்கும் நிலஅமைப்புகளை மேம்படுத்த திட்டங்கள் வேண்டும். பிரதேச ஆயுதப்படைகளுக்கும் அதேபோல அனைத்து மக்களுக்கும் இராணுவ நடவடிக்கைத் திட்டங்களையும் பயிற்சித் திட்டங்களையும் வகுத்துத்தர வேண்டும். அடித்தள மட்டத்தில் மக்கள் யுத்தத்தின் உண்மையாகவே வலுவான அரணாக இருக்கும்படி ஒவ்வொரு குக்கிராமத்தையும் ஒவ்வொரு கிராமத்தையும் ஒவ்வொரு தெரு வட்டாரத்தையும் மாற்ற அனைத்து மக்களும் பங்கேற்கும் தேசப் பாதுகாப்பின் போர்த்தந்திர அலகாக ஒவ்வொரு மாகாணத்தையும் மாற்றவும் பயனுள்ள ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

மக்கள் ஆயுதப்படைகளைக் கட்டுவதில், ஸ்தல மட்டத்தில் கட்சித் தலைமையை வலுப்படுத்துவதோடும் பிரதேச இராணுவ அமைப்பின் வழிகாட்டலோடும், தலையாய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சினை, **மக்கள் ஆயுதப் படைகளுக்கும் குடிப்படைகளுக்கும் தற்காப்புப் படைகளுக்கும், வலுவானதும் நம்பகமானதுமான ஒரு ஊழியர் படையைக்** கட்டுவதாகும். இந்த ஊழியர் படையானது, மக்கள் ஆயுதப்படைகள் அளவிலும் தரத்திலும், அமைப்பிலும்



சாதனத்திலும், சண்டைமுறைகளிலும்... தொடர்ந்து வளர்ச்சிபெற உதவ வேண்டும். மேலும் தேசப்பாதுகாப்பை வலுப்படுத்துவதும் அடித்தள மட்டத்தில் மக்கள் யுத்தத்தை நடத்துவதுமாகிய சிக்கலான மிகப் பெரிய பணிக்கும் உதவிட வேண்டும்.

குடிப்படை மற்றும் தற்காப்புப் படையின் ஊழியர்கள் உற்பத்தியிலிருந்து விலகிவிடாத இராணுவ ஊழியர்களாவர். ஏககாலத்தில் உற்பத்திப் பணியையும் இராணுவப் பணியையும் செய்பவர்கள் ஆவர். கீழ்மட்டத்தில் உற்பத்திச் செயலுடனும் மக்களின் வாழ்வுடனும் நெருங்கி இணைந்து நின்று உழைப்போரும் போரிடுவோரும் ஆவர். அவர்களின் தரம் பற்றி நாம் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும், குடிப்படைகளுக்கும் தற்காப்புப் படைகளுக்குமான ஊழியர் படையைக் கட்டுவதில் **வர்க்கத் திசைவழி அரசியல் அளவுகோல்கள்** ஆகியவற்றுக்குள்ள முக்கியத்துவம் பற்றிய ஆழ்ந்த புரிதல் நமக்கு இருக்க வேண்டும். புரட்சிகர ஆயுதப்படைகளின் அனைத்து ஊழியர்களுக்கும் இருக்க வேண்டிய பொதுவான அரசியல் தகுதிகளுடன், கட்சியின் அரசியல் மார்க்கங்களையும் கடமைகளையும் ஸ்தலத்தின் அரசியல், பொருளாதார, இராணுவக் கடமையையும் குடிப்படை-தற்காப்புப் படைகளின் ஊழியர்கள் நன்கு கிரகித்துக் கொண்டவர்களாய் இருக்கவேண்டும். கட்சிச் செயற்குழுவின் அனைத்துத் தீர்மானங்களுக்கும் ஸ்தல நிர்வாகத்தின் உத்திரவுகளுக்கும் உயர் இராணுவ அங்கங்களின் அனைத்துக் கட்டளைகளுக்கும் ஆணைகளுக்கும் கீழ்ப்படிந்து ஒழுக உறுதிபூண்டவர்களாக இருக்கவேண்டும். அவர்களுக்கு அவசியமான அளவு இராணுவ அறிவும் ஸ்தலத்தின் அரசியல் பொருளாதார பண்பாட்டு சூழ்நிலை பற்றிய முழுமையான புரிதலும், அடித்தளத்தின் சூழ்நிலை பற்றிய முழுமையான அறிவும் இருக்கவேண்டும். இராணுவக் கடமைகளை பொருளாதாரக் கடமை போன்ற பிற கடமைக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுடன் திறமையாக ஒருங்கிணைக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். இராணுவ விவகாரங்களில் வழிகாட்டுவதில் ஸ்தல கட்சிச் செயற்குழுவுக்கு உதவும் திறனும் தலைமை ஏற்று வழிநடத்தும் திறனும், சேனை கட்டுதல், போராடுதல், போரில் உதவுதல், போர்முனைக்குத் தேவையானவற்றை வழங்குதல் மக்களிடையே அடிப்படை இராணுவ அறிவைப் பரப்புதல், சேமப்படையைக் கட்டுதல், பின்புலம் பற்றியும் தத்தம் ஸ்தலங்களில் தேசப்பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான பிற நடவடிக்கைகள் பற்றியுமான கொள்கையை நடைமுறைப்படுத்துதல் ஆகிய திறன்களும் இருக்க வெண்டும்.

ஸ்தலங்களில் நடக்கும் புரட்சி இயக்கங்கள் மூலமாகவும் சண்டையிடுதல், வேலை செய்தல் ஆகிய நடைமுறை மூலமாகவும் ஊழியர் படைகளை சிறந்த ஆண் பெண்களை நாம் தேர்ந்தெடுக்கலாம். இந்தத் தேர்வும் ஸ்தலங்களில் கட்சி கட்டுவதுடனும் மக்கள் அமைப்புகளைக் கட்டுவதுடனும் இணைக்கப்பட வேண்டும். ஊழியர்கள் தம்மிடையே அறிவார்ந்த வேலைப்பிரிவினையைச் செய்துகொள்வது அவசியம். மேலும் தாம் பொறுப்பேற்ற பகுதிகளில் தம் தரத்தை மேம்படுத்துவதற்கும் அனுபவங்களைத் திரட்டிக் கொள்வதற்கும் ஸ்தலங்களுக்குள் அனைத்துக் கடமைகளையும் நிறைவேற்றுவதில் தம் முழுத்திறமையையும் காட்டுவதற்கும் அதை வளர்த்துக் கொள்வதற்கும் தகுந்த சூழலை செயலூக்கத்துடன் உருவாக்கிக் கொள்வதும் அவசியமாகும்.

குடிப்படைகள், தற்காப்புப் படைகள் ஆகியவற்றின் துரித விரிவாக்கத்திலிருந்து, அரசியல், சித்தாந்தம், அமைப்பு, சாதனம், பயிற்சி, பின்புலத் தளத்தைக் கட்டுதல், ஊழியர்களைப் பயிற்றுவித்தல் போன்ற அனைத்துத் துறைகளிலும் அவற்றின் தரத்தைத் தொடர்ந்து உயர்த்துவது வரை - முன்பந்தியில் கூறிய கடமைகளை நன்கு



புரிந்துகொண்டு திருப்திகரமாய் நிறைவேற்றுவதன் மூலம், நாம் நம் வணக்கத்துக்குரிய தலைவர் ஹோ சி மின்னின் போதனையை பயன்மிக்க முறையில் செயல்படுத்தலாம். ஹோ சி மின் சொன்னார்:- ''**ஒவ்வொரு குடிமகனும் ஒரு தீரமிக்க போராளி ஆக வேண்டும். ஒவ்வொரு கிராமமும் அல்லது தெரு வட்டாரமும் ஒரு அரணாக வேண்டும். ஒவ்வொரு கூட்டுறவுப் பண்ணையும் தொழில் நிறுவனமும் மக்கள் யுத்தத்தின் விநியோக அடித்தளம் ஆகவேண்டும். இங்ஙனம் நாம் நம் நாடு முழுவதையும் ஒரு பெரும் போர்க்களமாக மாற்றி எந்த ஆக்கிரமிப்பாளனையும் துடைத்தெறிய முடியும்.**''

மிக மிருகத்தனமான ஆக்கிரமிப்புப் படைகளாகிய அமெரிக்க ஏகாதிபத்தியப் படைகளை எதிர்த்து வெற்றிகரமான, வீரமிக்க, ஆக்கபூர்வமான போர் நடத்திய நமது மக்கள், புதிய சமூக அமைப்பைக் கட்டுவதற்காக படைபலமிக்க உழைப்பை வழங்கும் நமது மக்கள், வியட்நாமியத் தாய்நாட்டின் சுதந்திரம், விடுதலை, சோஷலிசம் என்ற சகாப்தத்தில், தம் தேச வரலாற்றின் மிகப் பெருமிதமடையத் தக்க காலகட்டத்தில் வாழ்கிறார்கள்.

தேச விமோசனத்துக்காக அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்து நடக்கும் தற்போதைய எதிர்ப்புப்போர், அந்நிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக நமது தேசம் நடத்திய புகழ்மிக்க எதிர்ப்புப்போரின் முழு வரலாற்றையும் நமக்கு நினைவூட்டுகிறது. அவற்றை நாம் நியாயமான பெருமையுடனும் மிக உயர்ந்த பொறுப்புணர்வுடனும் நினைவுகூர்கிறோம். குறிப்பாக டிரான் வம்சத்தின் கீழ் நம் மக்கள் நடத்திய மகத்தானதும் வெற்றிகரமானதுமான எதிர்ப்பினைக் கூறலாம். அன்று நம் மக்கள் யுவான் மங்கோலிய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இவர்கள் பழங்காலத்தில் நமது மக்களின் மிகக் கொடூரமான எதிரிகள்; மத்திய காலத்தில் மனித குலத்தின் மிக இரக்கமற்ற ஆக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரமிப்பாளர்கள்; ஆசியாவையும் ஐரோப்பாவையும் துவம்சம் செய்து பல தேசங்களை ஜெயித்து உலகப் படத்திலிருந்து அவற்றின் பெயர்களை இல்லாமல் செயதவர்கள். நமது மக்கள் தம் புனிதமான தேசியக் கடமையை வெற்றி மகிழ்வுடன் நிறைவேற்றினர்; யுவான் மங்கோலியப் பேரரசின் வீழ்ச்சிக்குக் கட்டியங் கூறினர். அந்த காலத்தில் அந்நிய ஆக்கிரமிப்புக் கெதிராய் பிற நாடுகளும் தேசங்களும் நடத்திய போராட்டத்துக்கு தமது மதிப்பிற்குரிய பங்களிப்பைச் செய்தனர்.

இன்று மாபெரும் ரஷ்ய அக்டோபர் புரட்சியால் துவக்கி வைக்கப்பட்ட மனித வரலாற்றின் புதிய சகாப்தத்தில், நம் நாட்டின் ஹோ சி மின் சகாப்தத்தில், நமது மக்கள் நம் கட்சியின் தலைமையின் கீழ் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிட்டார்கள். இன்னும் அந்த புகழ் மிக்க, வெற்றிமிக்க எதிர்ப்புப் போரை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த அமெரிக்க ஏகாதிபத்தியமோ நவீன வரலாற்றில் நம் தேசத்தை ஆக்கிரமித்தவற்றில் மிக மிருகத்தனமானதும் மிக வலியதுமாகும். மேலும் மனித குலத்தின் முதல் எதிரியுமாகும். தேசவிமோசனத்துக்கான, அமெரிக்க எதிர்ப்புப் போர், வீரஞ்செறிந்த வியட் மக்கள் அந்நிய ஆக்கிரமிப்புக்கு எதிராக நடத்திய போர்களில் எல்லாம் மிகப் புகழுக்குரியதும் மிகப் பெரியதும் ஆகும், இந்த எதிர்ப்புப் போர் இன்று அமெரிக்க ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான உலக மக்கள் இயக்கத்தின் போர் முனைப் படை நிலைகளாக, குவிமுனையாகப் பார்க்கப்படுகிறது.

நமது மக்கள் நமது புனித தேசிய கடமையையும், நமது உன்னதமான சர்வதேசக் கடப்பாட்டையும் முழுக்க உணர்ந்திருக்கிறார்கள். நாம் அமெரிக்க ஆக்கிரமிப்பாளரை முற்றாகத் தோற்கடிக்கவும், தென் வியட்நாமை விடுவிக்கவும், வட வியட்நாமைப் பாதுகாக்கவும், மீண்டும் தேசத்தை அமைதியான முறையில் ஒன்றுசேர்க்கவும் வேண்டிய மனவுறுதியும் பலமும் கொண்டவர்களாக உள்ளோம். இது அமெரிக்க ஏகாதிபத்திய நவகாலனியத்தின் வீழ்ச்சி என்ற வரலாற்று நிகழ்முறையை நோக்கிய திருப்புமுனையைக் குறிக்கிறது. உலகம் முழுவதன் மக்களின் புரட்சிப் போராட்டத்திற்கு, மதிப்புமிக்க பங்களிப்பைச் செய்கிறது.

13ஆம் நூற்றாண்டிலும் 20ம் நூற்றாண்டிலும், மற்றும் நம்மிலும் வலியனவும் பெரியனவுமான அந்நிய ஆக்கிரமிப்புப் படைகளை எதிர்த்துப் போரிட்டு வென்று வாழ்ந்து வளர்ந்த நமது முழுவரலாற்றிலும் நமது மக்கள் பெற்ற வெற்றியின் உண்மையான இரகசியம் வருமாறு: நாம் **அனைத்து மக்களின் தேசபக்தியைச்** சார்ந்து நின்றோம். **நாடு முழுவதும் தன் ஆற்றலை முழுமையாய் வெளிக்கொணர முழு வாய்ப்பளித்தோம். முழு தேசத்தையும் எழுச்சி பெறுமாறு அணிதிரட்டினோம். எதிர்ப்புப் போரில் நாடு முழுவதன், அனைத்து மக்களின் முன்முயற்சிகளையும் இணைத்தோம். சேனையையும் மக்களின் ஆயுதப்படைகளையும் மையப்படையாகக் கொண்டு அனைத்து மக்களின் எழுச்சியையும் மக்கள் யுத்தத்தையும் நடத்தினோம்.**

13ம் நூற்றாண்டில் வாழ்ந்த டிரான் குவாக் துவான் என்ற தளபதியின் கருத்தாகிய 'முழுதேசமும் படைகளில் சேருதல்' என்பதும், அவரது 'ஒவ்வொருவரும் ஒரு போர் வீரனாதல்' என்ற கொள்கையும் காலப் போக்கில் வளர்ந்து வளமான புது உள்ளடக்கத்தையும், புதுப்பண்பையும், வளர்ந்துவரும் பலத்தையும் பெற்றது. இன்று அது தலைவர் ஹோ சி மின்னின் மகத்தான இராணுவ சிந்தனையில் தன் உச்சத்தைத் தொடுகிறது. ''அனைத்து மக்களையும் ஒன்றுபடுத்துதல்'', ''நாடு முழுவதும் சேர்ந்து ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து சண்டையிடல்'', ''தேசத்தில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 கோடியே 10 இலட்சம் மக்களும் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக் கெதிராக 3 கோடியே 10 இலட்சம் தீரப் போராளிகளாக ஆதல்'' என்பதில் ஹோ சி மின்னின் இராணுவ சிந்தனை அடங்குகிறது.

இக் காலத்தில் நம் மக்கள் நமது கட்சியின் அரசியல், இராணுவ மற்றும் சர்வதேச மார்க்கத்தால் வழிநடத்தப் படுகிறார்கள். நமது கட்சி நீதியானது, சுயேச்சையானது, இறையாண்மை கொண்டது, ஆக்கத்திறன் கொண்டது. நம்மிடம் ஒரு முன்னணி சமூக அமைப்பும், தொடர்ந்து பெருகிவரும் அரசியல், தார்மீக, தொழில்நுட்ப, பௌதீக சக்தியும் உண்டு. மேலும் சோஷலிச முகாமின் பிறநாடுகளின் ஊக்கமான உதவி நமக்கு இருக்கிறது. மனித குலத்தின் அனைத்து முற்போக்கான பிரிவுகளும் நமக்கு பரிவும் ஆதரவும் காட்டுகின்றன. புதிய சகாப்தத்தில் **அனைத்து மக்களதும் நாடு முழுவதினதும் முழு தேசத்துடையதும் தீவிர ஐக்கியப்பாட்டின் வெல்லமுடியாத பலம்** நமக்கு இருக்கிறது. இப்பலம் **தொழிலாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் உள்ள தொழிலாளி விவசாயி கூட்டணியின் அடிப்படையில்** அமைந்தது. நாம் வல்லமை வாய்ந்த அரசியல் படைகளும் ஆயுதப்படைகளும் கொண்டுள்ளோம். நம் மக்களின் ஆயுதப்படைகள் ஒரு கிரம நவீன மக்கள் சேனையையும், பலமான விரிவான மக்கள் ஆயுதப்படைகளையும் கொண்டவை. நாம் நம் புனிதமான தேசியக் கடமையையும் உன்னதமான சர்வதேசக் கடப்பாட்டையும் வெற்றிகரமாய் சாதிப்போம் என்பதில் உறுதியாயிருக்கிறோம்.

'தேசமுழுவதும் படைகளில் சேர்வது', 'ஒவ்வொருவனும் ஒரு போர்வீரனாதல்', 'அனைத்து மக்களின் ஒற்றுமை', 'நாடு முழுவதும் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக சண்டையிடல்', 'மக்கள் அனைவரையும் ஆயுதபாணியாக்கல்', 'சேனையை மக்கள் ஆயுதப்படைகளுடன் இணைத்தல் என்ற மார்க்கத்தில் 'சேனையை ஒழுங்கமைத்தல்' என்ற சிந்தனை **வியட்நாமிய இராணுவச் சிந்தனையின்** மூலச்சிறப்புள்ள அம்சமாகும். இந்த இராணுவச் சிந்தனையைக் கொண்டு ஒரு சிறிய நாடு சுதந்திரத்துக்கும் விடுதலைக்குமான தன் நீதியான போரில் பெரிய ஆக்கிரமிப்பாளர்களை தோற்கடிக்க முடிந்தது.



'அனைத்து மக்களையும் ஆயுதபாணியாக்கல், மக்கள் சேனையை மக்களின் ஆயுதப்படைகளுடனும் மக்களின் ஆயுதப்படைகளை மக்கள் சேனைக்கு அடித்தளமாக்குதல், மக்கள் சேனையை மக்களின் ஆயுதப்படைகளின் மையப் படையாக்குதல், மக்கள் ஆயுதப்படைகளின் மூன்று வகைகளைக் கட்டுதல்' என்ற கொள்கை, பொதுவாக நமது கட்சியின் இராணுவ மார்க்கத்திலும், குறிப்பாக மக்கள் ஆயுதப்படைகளைக் கட்டுவதற்கான கோட்பாட்டிலும் மிக முக்கியமான பகுதியாகும். நம் கால வியட்நாமிய இராணுவ விஞ்ஞானத்தின் மிக முக்கியமான பகுதியாகும். அமைப்பு பற்றிய இக்கொள்கையைத் தீர்மானித்து ஒரு மகத்தானதும் மூலச்சிறப்புள்ளதுமான சாதனையாகும்; அது நமது கட்சிக்கும் மக்களுக்கும் ஒரு பெரும் வெற்றியாகும். பொதுவாக புரட்சிப் போராட்டத்திலும் குறிப்பாக ஆயுதப் போராட்டத்திலும் ஒரு முறை நாம் சரியான மார்க்கத்தைத் தேர்ந்து கொண்டால், அமைப்பு பற்றிய பிரச்சினைக்கு சரியான தீர்வை மேற்கொள்வது வெற்றியை ஈட்ட தலையாய முக்கியத்துவமுடையதாகும் என்பதை அனுபவம் காட்டியிருக்கிறது.

இராணுவ அமைப்பு பற்றிய இக்கொள்கை ஒரு தேசத்தின் அனுபவக் களஞ்சியத்தில் இருப்பவற்றில் ஒரு மதிப்பு மிக்க ஆயுதமாகும். குறிப்பாக ஆக்கிரமிப்புக்குட்பட்டு அடிமைப்பட்டுக்கிடந்து, பின் எழுச்சிபெற்று காலனியத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் எதிராக தேசிய சுதந்திரம் ஜனநாயகம், சமூக முன்னேற்றம் ஆகியவற்றுக்காக வெற்றிகரமாக போராடும் சிறிய தேசங்களுக்கு மேற்படி கொள்கை மதிப்புமிக்கதாகும், எந்த சந்தர்ப்பத்திலும் இந்த கொள்கையை உறுதியாய் கைக்கொள்ள வேண்டும். சமூக யதார்த்தங்கள், போர் வளர்ச்சி விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சி ஆகியவற்றை நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். சகோதர சோஷலிச நாடுகள், உலகின் பிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசங்கள், ஆகியவற்றின் அனுபவங்களிலிருந்து ஆழமாகவும் அதே சமயம் நமக்கு வேண்டியவைற்றையும் கற்றுக் கொள்ளவேண்டும். நமக்கும் எதிரிக்கும் இடையில் நடக்கும் கசப்பான போராட்டத்தில் நாம் எப்போதும் திட்டவட்டமான வரலாற்று நிலைமையையும் ஒவ்வொரு கட்டத்தின் சூழ்நிலைகளையும் அடிப்படையாகக்கொள்ளவேண்டும். அந்த அடிப்படையில் நின்று கட்சி இராணுவ மார்க்கத்தையும் இராணுவ அமைப்பின் கோட்பாடுகளையும் நடைமுறைப் படுத்தவேண்டும். நடைமுறைகளில் நாம் புதுமைத்தேட்டத்தையும் வளர்ச்சியையும் விடாது ஊக்குவிக்கவேண்டும். பழைமை வாதத்திலும் மமதையிலும் அழுந்திப்போகக் கூடாது. ஒரேபடித்தான, யந்திரத்தனமான மனோபாவங்கள் போன்றவற்றைத் தவிர்க்கவேண்டும். அப்போதுதான் நமது மக்கள் அனைவரின் போர்ப்பலத்தை அதிகரிக்க முடியும். வியட்நாம் மக்கள் யுத்தத்தைத் தீவிரமாக வளர்த்தெடுக்க முடியும். வியட்நாமியத் தாய் நாட்டின் தேசப் பாதுகாப்பை நிலையாக வலுப்படுத்திச் செல்லமுடியும். வியட்நாம் மக்களின் மென்மேலும் வல்லமை பெற்று வரும் ஆயுதப்படைகளைக் கட்டியெழுப்ப முடியும்.

சமாதானமும் ஒருமைப்பாடும், சுதந்திரமும் ஜனநாயகமும், வளமும் நிறைந்த வியட்நாமைக் கட்டுவதற்கான அமெரிக்க எதிர்ப்பு தேசபக்தப்போரில் முன்னேறிச் சென்று முழுவெற்றியை ஈட்டுவதென்று நமது மக்களும் தேசமும் சங்கல்பம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

- ☐ நமது மூதாதையர் நம்மிடம் ஒப்படைத்துச் சென்ற இவ் வழகிய தேசத்தை, நமது மக்கள் என்றென்றும் பாதுகாப்பர்!
- ☐ நமது அன்புக்குரிய வியட்நாமியத் தாய்நாட்டின் சுதந்திரத்தை நம் மக்கள் என்றென்றும் கட்டிக்காப்பர்!



# அடிக்குறிப்புகள்

## REFERENCES


1. "Letter to Engels", February 27, 1861. Marx - Engels, *Selected Correspondence,* Progress Publishers, Moscow; p. 123.
2. F. Engels : Preface to the "Civil War in France", K. Marx - F. Engels, *Selected Works*, Su That Publishers, Hanoi 1962, Vol. I, pp. 756 - 757.
3. F. Engels : Preface to "The Civil War in France", op. cit. p. 758.
4. F. Engels : "Anti - Durhing", *Su That* Publishers, Hanoi 1959, p. 286.
5. Marx - Engels : "Address of the Central Committee to the Communist League", *Selected Works,* Vol I. Foreign Languages Publishing House, Moscow 1958, p. 113.
6. K. Marx : "The Class Struggle in France", Vol. I, Foreign Languages Publishing House Moscow 1958, p. 161.
7. K. Marx - F. Engels : *Selected Works,* German Edition, Book VII, part I, p. 134.
8. K. Marx, "The Civil War in France", K. Marx - F. Engels *Selected Works*, Vol. I, Foreign Languages Publishing House, Moscow 1958, p. 519.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. K. Marx : "The Civil War in France" op. cit. p. 519.

10. F. Engels "The Defeat of the Piedmontese", F.Engles, V. Lenin, J. Stalin : *On People's War, Su That* Publishers, Hanoi 1970, p. 27.

11. F. Engels : "The Defeat of the Piedmontese", op. cit, p. 27.

12. Ibid, p. 29.

13. F. Engels : "The Defeat of the Piedmontes", op. cit. p. 155.

14. F. Engels : "Persia and China" *Marx on China,* Lawrence and Wishard, London 1965, p. 48-49.

15. "Military Programme of Proletarian Revolution", V. I. Lenin, *Collected Works*, Vol. 23, Progress Publishers, Moscow 1964 pp. 80-81.

16. V. I. Lenin, "The Armed Forces and the Revolution", *Collected Works*, Vol. 10, Progress Publishers, Moscow 1965, p. 56.

17. V. I. Lenin : "The Armed Forces and the Revolution", op. cit., p. 39.

18. V. I. Lenin : *Collected Works*, Russian text, 3rd eddition, Vol. 24. p. 750.

19. V. I. Lenin, *Collected Works*, French text, les Editions Sociales, Paris and Foreign Languages Publishing House, Moscow, 1958, Vol. 26. p. 484.

20. V. I. Lenin, *Collected Works*, French text, op. cit., Vol. 26, p. 484.

21. Tran Quan Tuan "Testament" : *Quoc Gia Tinh Luc.*

22. A general under the Tran dynasty.



23. *Kham Dinh Viet Su Thong Giam Cuong Muc,* (Texts and Comments on the Viet National History by Imperial Order), Book 6.

24. *Hau Han thu* (History of the Late Han)

25. *Dai Viet Su Ky Toan Thu* (Complete History of Dai Viet) : the early Ly Period.

26. Phan Huy Chu : *Lich Trieu Hien Chuong Loai Chi.* RulesandRegulations of Different Dynasties Classified by Categories) *Binh Che Chi* (Military System).

27. Nguyen Trai : *Binh Ngo Dai Cao* (Proclamation of Victory over the Ngo).

28. Nguyen Trai : *Binh Ngo Dai Cao* (Proclamation of Victory over the Ngo).

29. Appeal of the Tay Son.

30. Old name for Hanoi.

31. Nguyen Hue : *Address to Officers and Men in Thanh Hoa.*

32. President Ho Chi Minh,

33. Communique of the party Central Committee of January 1931. Party Military Documents, People's Army Publishing House Hanoi, 1969, p, 61.

34. *Party Military Documents* 1930 - 45, People's Army Publishing House, Hanoi 1969, p. 113 - 120.

35. Created during the Nam Ky uprising of November 1940.

36. "Political Report", Congress Documents, Published by the Viet Nam Workers Party Central Committee, Hanoi, 1960, Vol. 1, pp. 145-146.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. J. Stalin, *Problems of Leninism, Su That* Publishing House, Hanoi, 1959, p. 88.
38. "Insurrection in the Army and the Navy," K. Marx, F. Engels, V. Lenin, J. Stalin : *Military Essay*, People's Army Publishing House, Hanoi, 1964, p. 72.
39. F. Engels : "Introduction" of "The Class Struggles in France", Marx - Engels, *Selected Works*, Vol. I, Foreign Languages Publishing House, Moscow, 1958, pp. 130 - 131.
40. Party Central Committee's Directives on the Entire People's Participation in the Resistance War, December 22, 1946.
41. Congress Documents published by the Viet Nam Worker's Party Central Committee, Hanoi, 1960, Vol. I, p. 190.
42. This article was written in March 1972 (Ed)
43. Lenin, COLLECTED WORKS, Vol. 31, Progress Publishers, Moscow, 1966, p. 137.
44. Lenin, COLLECTED WORKS, Vol. 27, Progress Publishers, Moscow 1965 p. 76.
45. Lenin, COLLECTED WORKS, Vol. 31, Progress Publishers, Moscow 1966, p. 137.
46. Lenin, COLLECTED WORKS, Russian edition, Political Literature State Publishing House, Fourth edition, 1950 - Vol. 29, p. 226.
47. Lenin, MILITARY CORRESPONDENCE (1917-1920) Military Puplishing House, Soviet Defence Ministry 1956, p. 30.
48. Lenin, *Articles and Speeches on Military Problems,* People's Army Publishing House, Hanoi, 1970, Vol. I, p. 351.
49. The revolutions in relation of production, the technical revolution, and the cultural and ideological revolution. (Ed.)

*D*

| | |
|---|---|
| படைப்பிரிவு | detachment |
| படையமைவு | formation |
| படைவகுப்பு | regiment (ஒவ்வொரு படைவகுப்பும் பல பட்டாளங்களைக் கொண்டது. ஒவ்வொரு குறிப்பிட்ட படைவகுப்புக்கும் அதற்கேயுரிய மரபு உண்டு. அதன் படைவீரர்கள் அவர்களுக்கேயுரிய சீருடைகள் அணிந்திருப்பர்) |
| படைவரிசை | column |
| படைவீடுகள் | barracks |
| பாதுகாப்புப்படை | defense force |
| பிரதேச-ம் | region-al |
| பிளாட்டூன் | platoon (பிளாட்டூன் என்பது கம்பெனியின் உட்பிரிவு. லெப்டினன்ட் அந்தஸ்துள்ளவர் இதற்குத் தலைவர்) |
| பின்புலம் | rear |
| போர்முனை | front |
| போர்முனைப்படைநிலை | front line |
| போர்த்தந்திரம் | strategy |
| போரிடும்/சண்டைக் குழுக்கள் | combat groups |
| மரபுப்போர் | conventional war |
| மார்க்கம் | line |
| மிகுதிறன் (படையலகு) | elite (unit) |
| மூதல்தரப்படை | crack force |
| முன்புலம் | front |
| மையப்படை | core |
| வலயம் | zone |
| வலிந்துதாக்குதல் நிலை | offensive |
| விமான எதிர்ப்புப் பாதுகாப்புப் படை | air defence force |
| விமான வீழ்த்தி-(ப்படை) | anti aircraft (force) |
| வியூகம் | formation |
| ஸ்தல-ம் | local-ity |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிப்படை — militia
குழல்விட்டம் — calibre
கூலிப்படைகள் — mercenaries
கொள்கை — policy
சுடுதிறன் — firepower
செயல்தந்திரம் — tactics
சேம அதிகாரிகள் — reserve officers
சேமப்படை — reserve force
சேனை — army
சேனைப்பிரிவு — division
தத்துவம் — theory
தற்காப்புநிலை — defensive
தற்காப்புப் படை — self defence force
தாக்குதல் — attacks
திடீர்த்தாக்குதல் — raid
துருப்புகள் — troops
தேசிய விடுதலை முன்னணி — national liberation front
நிலையம் (காவல்) — post
நிலையான சேனை — standing army
நேர்த்தாக்குதல் — assault
நேரடி எதிர்த்தாக்குதல் — counter assault
பட்டாளம் — battalion (பல கம்பெனிகள் சேர்ந்தது ஒரு பட்டாளம். இது ஒரு படை வகுப்பு [regiment] அல்லது பிரிகேடின் பகுதியாகும்)
படை — force
படைகள் (முப்-) — arms [of the army]
படைக்குழு-க்கள் — corps
படைத்துறைகள் — services [of the army]
படைநிலை — line (ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டுள்ள இராணுவக் காவல் நிலையங்கள், பதுங்குகுழிகள் முதலியவற்றின் தொடர்வரிசை)





அணிகள் — ranks
அதிர்ச்சிப்படைகள் — shock forces
அதிரடிப்படைகள் — commandoes
ஆய்வுரை — thesis
ஆயுதப்படைகள் — armed forces
இடம்பெயராப் படை — stationary force
இயங்கு கிரமப்படை — mobile regular force
இயங்கு போரிடும் குழுக்கள் — mobile combat groups
இயங்குதிறன் — mobilty
இராணுவ-ம் — military
இராணுவ விநியோகம் — logistics (ஆயுதப் படைகளுக்கு வேண்டிய ஆயுதங்கள், சாதனங்கள், உணவு, உடை முதலிய பொருட்களையும் ஆட்களையும் வழங்குதல், அவற்றைப் பகிர்ந்தளித்தல்; இப் பொருட்களும், ஆட்களும் சேதமடைந்தால் அவற்றை ஈடு செய்தல்)
உளஉரம் — morale
ஊழியர்கள் — cadres
எதிர்த்தாக்குதல் — counter attack / counter offensive
எதிர்ப்புப் போர் — resisdance (war)
எதிர்பாராத் தாக்குதல் — surprise attacks
எழுச்சி — insurrection
கம்பெனி — company (காலாட்படைப் பட்டாளத்தின் உட்பிரிவு. இதற்கு காப்டன் அல்லது மேஜர் இதற்குத் தலைவர்.)
கலகவேலை — agitation
காவலர் (படை) — guards
கிரம சேனை — regular army



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியட்நாம் இராணுவ அமைப்பு

- கிரம நிலையான சேனை (Regular Army)
  - கிரமப் படை (Regular Force)
  - பிரதேசப் படைகள் (Reginal Forces)
- மக்கள் ஆயுதப்படைகள் (Armed Forces of the Masses)
  - குடிப் படைகள் (Militia)
  - கெரில்லாப் படைகள் (Guerilla Forces)
  - தற்காப்புப் படைகள் (Self Defence Forces)

**குறிப்பு:** கிரம சேனையின் கிரமப்படை என்பது தேசம் முழுவதிலும் எந்த இடத்துக்கு வேண்டுமானாலும் அனுப்பப்படக் கூடியது. பிரதேசப் படையோ அந்தந்தப் பிரதேசத்துக்குள் மட்டுமே செயல்படக் கூடியது. ஆனால் ஒரு பிரதேசத்துக்குள் எந்த இடத்துக்கு வேண்டுமானாலும் அனுப்பப்படக் கூடியது. தேசம் முழுவதையும் எடுத்துக் கொண்டால் கிரமப்படை என்பது இயங்குபடை (Mobile Force) ஆகவும் பிரதேசப் படைகள் என்பன இடம்பெயராப் படைகளாகவும் (Stationary Forces) இருக்கின்றன. ஒரு பிரதேசத்தை மட்டும் எடுத்துக் கொண்டால் பிரதேசப்படை என்பது இயங்குபடையாக (அதாவது ஒரு பிரதேசத்தின் எந்தப் பகுதிக்கு வேண்டுமானாலும் அனுப்பப்படக் கூடியதாக) உள்ளது. குடிப்படை, கெரில்லாப்படை, தற்காப்புப்படை என்பன ஒரு குறிப்பிட்ட பிரதேசத்துக்குள் குறிப்பிட்ட ஸ்தலம், கிராமம், தொழில் நிலையம் ஆகியவற்றுக்குள் மட்டுமே செயல்படக்கூடிய இடம்பெயராப் படைகள் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தொழிலாளி - விவசாயித் தற்காப்புப் படைக் குழுக்கள் கொரில்லாப் படையோ, செஞ்சேனையோ ஆகமாட்டா. செஞ்சேனையையோ, கொரில்லாப் படையையோ நினைத்த நேரத்தில் உருவாக்கிவிட முடியாது. நாம் எவ்வளவு பலவீனமாய் இருந்தபோதிலும், புரட்சிகர எழுச்சிக்கான வேலையை மக்களிடையே துவங்கியவுடன் தற்காப்புப்படைகளைக் கட்ட வேண்டும். கட்சிக் கிளைகள், இளைஞர் கழகம், புரட்சிகர மக்கள் சங்கங்கள் போன்றன இருக்கிற எந்தத் தொழில் துறையும், ஊரும் தற்காப்புப் படையின்றி இருக்க அனுமதிக்கக் கூடாது.

மக்களுக்கு இராணுவப் பயிற்சி கொடுத்து அவர்களை ஆயுதபாணியாக்கும் போது, கண்மூடித்தனமாக செயல்படும் போக்கையும், ரைபிள்களையும், கைக்குண்டுகளையும் தயாரிக்கும் போது, உழைக்கும் மக்களிடையே அன்றாட அரசியல் வேலை செய்வதைப் புறக்கணிக்கும் போக்கையும் கடுமையாக எதிர்த்துப் போராட வேண்டும்."

ஆய்வகம்
தமிழீழம்

இந்திய விலை ரூபா 16.00
இலங்கை விலை ரூபா 25.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org